வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்

சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)



வெளியீடு: ஜேர்மனி தமிழ் கல்விச் சேவை

வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்

சந்திரகௌரி சிவபாலன்
(கௌசி)

தலைப்பு : வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்

பதிப்புரிமை : திருமதி சந்திரகௌரி சிவபாலன்

வெளியீட்டாளர் : ஜேர்மனி தமிழ் கல்விச் சேவை

ஆசிரியர் : திருமதி சந்திரகௌரி சிவபாலன்

அளவு : 125mm x 165mm

தாள் வகை : Ivory Paper 80gsm

வெளியிடும் ஆண்டு : 2018

அச்சுப்பதிப்பு : அன்றா பிறிண்டேர்ஸ்
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0094 222 8929

பிரதிகள் : 150

ISBN No : 978-955-7377-49-0

பக்கம் : 224

ஓர் ஐரோப்பிய வாழ்வியல் தரிசனம்

பேராசிரியர் துரை மனோகரன் எம்.ஏ, பிஎச்.டி
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை



இந்நூல் எப்போதோ வெளிவந்திருக்க வேண்டும். இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதாக நான் ஒப்புக்கொண்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. ஒவ்வொரு முறையும் இன்று எப்படியாவது அணிந்துரை எழுதியே தீர்வது என்று நினைத்துக்கொண்டால், சொல்லி வைத்த மாதிரி ஏதாவது ஒரு முக்கிய வேலை வந்து குறுக்கிட்டுவிடும். அதேவேளை, சந்திரகௌரியின் பொறுமை என்னை ஆச்சரியப்படுத்தும். ஆயினும், இம்முறை எப்படியேனும் எழுதி முடித்தே தீர்வது என்று உறுதி எடுத்துக் கொண்டேன்.

சந்திரகௌரி 1980களின் முற்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் எனது மாணவியாகக் கற்றவர். அவர் ஒரு திறமை வாய்ந்த மாணவி என்பதை, ஆரம்பத்திலேயே அவதானித்துக் கொண்டேன். அவருக்குக் கற்பித்துக்கொண்டிருந்த காலத்திலே நான் எனது கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக இந்தியா செல்லவேண்டி ஏற்பட்டது. அதற்குப் பின்னர் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்படவில்லை. எனினும், பல்கலைக்கழகத்தில் அவரோடு தமிழ் சிறப்புக்கலை பயின்று, பின்னர் கண்டி திருத்துவக் கல்லூரியில் ஆசிரியராக இருக்கும் எனது இன்னொரு மாணவரான இரா. சிவலிங்கத்திடம் சந்திரகௌரியைப் பற்றி விசாரிப்பேன். பல்கலைக்கழகக் கல்வியை முடித்த பின்,

சந்திரகௌரி ஆசிரியையாகக் கடமையாற்றினார். அதன் பின், ஆசிரிய ஆலோசகராகவும் விளங்கினார். காலப்போக்கில் புலம் பெயர்ந்து, ஜேர்மனிய வாசியாகிவிட்டார்.

எனது மாணவர்களில் சிலர் சிறந்த எழுத்தாளர்களாகவும் விளங்குகின்றனர். அவர்களில் ஒருவர், சந்திரகௌரி சிவபாலன். ஏற்கனவே ஒரு நாவலையும், முக்கோண முக்குளிப்பு என்ற கட்டுரைத் தொகுப்பினையும் அவர் வெளியிட்டுப் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். ஜேர்மன் மண்ணில் கலை இலக்கியச் சேவைகளை இயன்றவரை அவர் புரிந்து வருகிறார். புலம்பெயர் எழுத்தாளராக இருந்துகொண்டு, தமது எழுத்தாற்றலையும், பேச்சாற்றலையும், செயலாற்றலையும் சிறப்புற வெளிப்படுத்தி வருகின்றார். அவரது இத்தகைய பணிகளுக்குப் பின்னணியில் இருந்துகொண்டு, அவருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிவரும் அவரது கணவர் சிவபாலனும், மகள் மெனூஷாவும் எமது பாராட்டுக்கு உரியவர்கள்.

சந்திரகௌரி சிவபாலன் (கௌசி) இந்நூல் வாயிலாக ஒரு கதைத் தொகுதியினை வெளிக்கொணர்கிறார். முக்கோண முக்குளிப்பு என்ற நூலின் "விதைத்ததை விளக்குகிறேன்" என்ற அவரது முன்னுரையில் அவர் குறிப்பிட்டுள்ளவை, அவரது இயல்பைக் காட்டப் போதுமானவை. "நான் பார்க்கும் விடயங்கள் என்னைத் தொல்லை கொடுக்கும். போனால் போகிறது என விட்டுவிட முடியாது என் மனதுள் சிக்கித் தவிக்கும் சிந்தனைகள் சிறகு விரிக்க, ஆலாவாய்ப் பறந்து தேடி, சிந்தனைக் கருவியுள் போட்டு பழுது பார்த்து உங்கள் உள்ளத்து வெளிச்சத்திற்கு இந்நூல் மூலம் நெய் ஊற்றுகின்றேன். இது எனக்கான தெளிவு மட்டுமல்ல உலகத்துக்கான தெளிவு" என்று அவர் கூறியுள்ள வரிகள், அவரைச் சரியாக இனம் காட்டுகின்றன.

சந்திரகௌரியின் இக்கதைத்தொகுதி, அவர் வாசகர்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பிய பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகிறது. ஒருவகையில் புலம்பெயர்ந்தோரின் ஐரோப்பிய வாழ்வியல் தொடர்பான அவரது உள்ளக் குமுறல்களின் வெளிப்பாடாக இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள கதைகள் அமைந்துள்ளன என்றும் கூறலாம். ஐரோப்பிய வாழ்வியல் புலம்பெயர்ந்தோருக்கு வழங்கியுள்ள சுதந்திரம், எந்த அளவுக்கு அந்த மக்களால் துர்ப்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதைக் கணிசமான கதைகள் காட்டுகின்றன. அதேவேளை, ஐரோப்பிய வாழ்வியல், இக்கதைகள் சிலவற்றில் இடம்பெறும் சில பாத்திரங்களின் வக்கிர உணர்வுகளுக்குத் தீனி போடுகிறதா என்ற கேள்வியும் எழுகின்றது. ஐரோப்பிய வாழ்வியலின் தாக்கத்தினால் ஏற்படும் விளைவுகளைப் பழகிப்பார் பிடிக்கவில்லையா? இருக்கிறது இன்னும் ஒன்று, அப்பா என்னவானார்?, சீர்கெட்ட வாழ்வு, மதிவதனி ஏன் மதி இழந்தாள்? ஆகிய கதைகள் உணர்த்துகின்றன. பழகிப்பார்... என்ற கதையில், புலம்பெயர்ந்து சென்று, ஐரோப்பிய வாழ்வியலுக்குப் பழகிப்போன ஒரு குடும்பத்தின் கதை கூறப்படுகிறது. பேரின்பத்தின் மனைவி சகுந்தலா, அவர்களின் மகள் வசந்தி. அம்மாவின் சொற்படி, வசந்தி தனக்கு வரனாக இலங்கையில் இருந்து ராமை வரவழைக்கிறாள். அதேவேளை, தன்னை நம்பி வந்த ராமை விலக்கிவிட்டு, சபேஷ் என்பவனுடனும் பழகுகிறாள். தனது கணவன் பேரின்பம் நோயாளியாகிவிட, தாய் சகுந்தலா ருத்ரா என்பவனோடு ஊர் சுற்றுகிறாள். காரில் போகும்போது, "அப்பாவுக்குப் போன் பண்ணிப் பாருங்கோ" என்று மகள் சொன்னபோதும் தாய் கேட்கவில்லை. இந்தக் கதையில் தாயும், மகளும் தறிகெட்டு நடப்பது காட்டப்படுகிறது. ஐரோப்பிய வாழ்வியல் அவர்களை இந்நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பது கதையில் உணர்த்தப்படுகிறது.

அப்பா என்னவானார்? என்ற கதையில் இரத்தினம் – நிவேதா தம்பதிகள் இடம்பெறுகின்றனர். மனைவி நிவேதா கணவன் இரத்தினத்துக்குப் பல கட்டளைகளை இடுகிறாள். வீட்டுச் சலவை இயந்திரத்தை அவர் பாவிக்கக் கூடாது. வீட்டுத் தொலைக்காட்சியைப் பார்க்கக் கூடாது. வீட்டுத் தொலைபேசியைப் பயன்படுத்தக் கூடாது. தனது படுக்கையில் அவர் படுக்கக் கூடாது என்பன அவை. தாயும், பிள்ளைகளும் இரத்தினத்தை வீட்டை விட்டுத் துரத்தியும் விடுகின்றனர். நண்பனின் ஆலோசனைப்படி அவர் தனித்து வாழ்கிறார். பிள்ளைகள் தாய்க்குத் தெரியாமல் அப்பாவைப் பற்றி அறிய முயல்கின்றனர். ஜேர்மன் பொலிஸ் உதவியுடன் அவர் தனித்து வாழ்ந்த வீடு திறக்கப்படுகிறது. அவர் உயிர் பிரிந்து மூன்று நாட்களாகிவிட்டன என்கிறார், வைத்தியர். புலம்பெயர் நாடுகளில் சில பெண்கள் நடந்துகொள்ளும் போக்கினை இக்கதை காட்டுகின்றது.

புலம்பெயர் வாழ்வில் மனைவி, பிள்ளைகளால் அனாதையாக்கப்பட்ட இன்னொருவரின் கதை. சீர்கெட்ட வாழ்வு. ஒரே வீட்டில் வாழ்ந்து வந்த போதிலும், கணவன் மனைவிக்குள் நல்ல உறவு இல்லை. கணவன் தீபன் காலமாகி ஒரு நாளாகியும், அதைத் தெரிந்துகொள்ளாது. அவன் மனைவி அதே வீட்டில் வாழ்ந்து வருகிறாள். அவனது நண்பன் விசாகனே அவனது நிலையறிந்து, காவல்துறைக்கு அறிவித்து, சடலத்தை மீட்டு, ஆவன செய்கிறான். புலம்பெயர் நாடுகளில் பெண்களின் போக்கினையும், ஆண்கள் நிலையினையும் இவை போன்ற கதைகள் உணர்த்துகின்றன.

மதிவதனி ஏன் மதி இழந்தாள்? என்ற கதை, ஐரோப்பிய வாழ்வியல் முறைகளுக்கு அடிமைப்பட்ட ஒரு கணவனின் செயல். எப்படி அவனது மனைவியின் பெண்மையையும், பெருமையையும் குலைத்து

விடுகிறது என்பதைக் காட்டுகிறது. தவறு நடந்த பின்னர், அது தனது தவறினாலேயே நடந்தது என்பதை உணராமல், மனைவியைக் கணவன் ஒதுக்கி வைத்து விடுகிறான். ஐரோப்பிய வாழ்வியலில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளை இக்கதை காட்டுகிறது.

சில மனிதர்களின் மிருகத்தனமான போக்கினை உணர்த்தும் கதையாக மிருகமாகும் மனிதர்கள் விளங்குகிறது. பேரப்பிள்ளையின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாட்டுக்கு வந்திருந்த தாத்தாவே ஒன்றும் அறியாத பேரப்பிள்ளையைத் தாயாக்கிவிட்டுத் தாய்நாடு திரும்பிவிட்டார். ஒரு தாத்தாவின் வக்கிர உணர்வு, அவரது பேரப்பிள்ளையையே சீரழித்துவிடுகிறது. சிறந்த முறையில் படைக்கப்பட்ட கதை இது. இத்தகைய தாத்தாக்கள் பற்றி இலங்கைத் தினசரிகளிலும் செய்திகள் வருவதுண்டு.

பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைக் காட்டும் கதைகள் சிலவும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. வெள்ளை உடைக்குள் கரையும் பருவம், படி தாண்டிய பொழுது என்பன அத்தகையவை. திருமணமாகாத முதிர்கன்னி ஒருத்தியைப் பற்றிய கதை, வெள்ளை உடைக்குள் கரையும் பருவம். வைத்தியரான ஒருத்தி, பெற்றோரின் சொல்லைக் கேட்டு, தனக்கு ஒரு வாழ்வையே அமைத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டாள். அவளது தோழி, அவளின் தகுதிக்குக் குறைந்த மணமகனையாவது அவளுக்கு மணம் முடித்து வைக்காவிட்டால், அவள் மனநோயாளியாகிவிடுவாள் என்பதைப் புரிந்துகொள்கிறாள். படி தாண்டும்போது இளம் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் படி தாண்டிய பொழுது என்ற கதை உணர்த்துகிறது. வீட்டில் கட்டுப்பாட்டோடு வளர்க்கப்பட்ட மிருதுளா, ஒரு நிகழ்ச்சியில் சந்தித்த பவனோடு தானாகவே முகப்புத்தகம் மூலம் தொடர்பு கொள்கிறாள்.

கயவனான அவன், அவள் பெண்மையை அழிக்கிறான். வாழ்வில் ஏமாற்றப்பட்ட அவள், காலப்போக்கில் இளம் பெண்களைத் தவறான வழிகளில் செல்லாது தடுக்கும் முயற்சியில் ஈடுபடுகிறாள் என்பதாகக் கதை நகர்கிறது. பெண்கள் தொடர்பான எச்சரிக்கை உணர்வினை இக்கதைகள் தருகின்றன.

தாய்மை உணர்வு என்பது தனித்துவமானது. அத் தாய்மை உணர்வினைப் பிரதிபலிக்கும் சில கதைகளும் இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. முடிவைச் சொல்லிவிடு, மனதின் மாறாட்டம், மதிப்பெண், புலம் பெயர்விலோர் பாசம் ஏங்குகிறது போன்ற கதைகள் அத்தகையவை. இளம் தம்பதியினரான மதனும், சிந்துவும் குழந்தைப்பேறு கிட்டாத நிலையில், ஒரு முயற்சியைச் செய்கின்றனர். சிந்துவின் கருமுட்டையும், மதனின் விந்தணுவும் லிசி என்னும் போலந்துக்காரியின் கருப்பையில் இணைந்து, பிள்ளை உருவாகின்றது. தங்கள் குழந்தை தங்களுக்குக் கிடைக்கப்போகிறது என்ற ஆனந்தத்தில் இருந்த அவர்களுக்கு ஏமாற்றமே ஏற்படுகிறது. அதனோடு தொடர்பான பிரச்சினைகள் கதையில் தொடர்கின்றன.

மதிப்பெண் என்னும் கதை, இன்னொரு வகையில் தாய்ப்பாசத்தை வெளிப்படுத்துகிறது. ஆழ்மனத்தில் பாசத்தைப் பூட்டி வைத்துவிட்டு, அடுத்தவர் போல் தன் பிள்ளையும் ஆகவேண்டும் என்ற வெறித்தனமான ஆசையினால் தன் பிள்ளையைத் தண்டித்த தாய், பிள்ளை நோய் வாய்ப்பட்டபோது பெரிதும் வருந்துகிறாள்.

புலம்பெயர்விலோர் பாசம் ஏங்குகிறது என்ற கதை, தாய் மனத்தைச் சரியாகப் படம் பிடித்த வேறு ஒரு கதை. மருமகளை மகள் போல் நடத்தும் ஒரு தாயை அற்புதமாக இக்கதை சித்திரிக்கிறது. மருமகளை மகள் போல் நடத்தினாலும், அவளின் தகாத நடத்தை, மாமியாரை

எடுத்தெறிந்து நடக்கும் இயல்பு தொடர்ந்த வண்ணமே இருந்தன. மருமகளின் போக்குகளைத் தன் மகனிடமே தெரிவிக்காத இயல்பு கொண்டவள், அந்தத் தாய். வைத்தியசாலையில் படுத்திருக்கும்போதும் மருமகள் மீது பாசம் கொண்டவளாகவே அவள் விளங்குகிறாள்.

சிறுவர் உளவியலை இனங்காட்டும் சில கதைகளும் இத்தொகுதியில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மாமரத்தில் மாங்கனியே பெறமுடியும், பிள்ளைப் பிராயத்திலே, பரீட்சையும் திறமையும் முதலானவை அத்தகையவை. பிள்ளைகளை, அவரவருக்கு இயல்பான திறமைகளை வளர்க்கும்படி விடவேண்டும். தங்கள் விருப்பங்களைப் பெற்றோர் அவர்கள் மீது திணித்து, அவர்களைச் சித்திரவதைப்படுத்தக் கூடாது என்ற நோக்கை, மாமரத்தில் மாங்கனியே பெறமுடியும் என்ற கதை தெரிவிக்கிறது. பிள்ளைப்பராயத்திலே என்னும் கதை, இக்காலத்துச் சிறுபிள்ளைகள் எதனைப் பற்றியும் துணிந்து கேள்விகள் கேட்பார்கள். அவர்களது சுதந்திரத்தை மதிக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. பரீட்சையும் திறமையும் என்ற கதை, பரீட்சை தொடர்பாகத் தாமரை என்ற மாணவிக்கு ஆசிரியை கூறிய அறிவுரைகளைக் கொண்டுள்ளது.

இத்தகைய கதைகளோடு மேலும் சில கதைகளை உள்ளடக்கிய தாக இத்தொகுதி விளங்குகிறது. அவற்றுள் ஒரு சில கதைகள் உருவகப் பாணியில் அமைந்தவை. மொத்தமாக இக்கதைகள் அனைத்தையும் நோக்கும்போது, வாழ்வியல் யதார்த்தத்தைச் சமூக விமர்சனம் கலந்து வெளிப்படுத்தும் முயற்சியைக் காணமுடிகிறது. இவற்றைச் சந்திரகௌரி சிறுகதைகளாக அன்றிச் சிறிய கதைகளாகவே எழுதியுள்ளார். வேகமான வாழ்க்கை ஓட்டத்தில் வாசகரை அதிகமாகச் சிரமப்படுத்தக்கூடாது என்ற நோக்கில், அவர் இவற்றைச் சிறிய

கதைகளாகப் படைத்துள்ளார் என்று தோன்றுகின்றது. ஆயினும், அவரது எழுத்தாற்றலும், யதார்த்தப் பண்பும் கதைகளை ஆர்வத்தோடு படிக்கத் தூண்டுகின்றன.

இந்நூலைப் படிக்கப்போகும் வாசகரைப் பொறுத்தவரை, அவர்களுக்குப் புலம்பெயர்ந்தோரின் ஐரோப்பிய வாழ்வியல் பற்றிய ஒரு வெட்டுமுகத்தோற்றத்தையும், தரிசனத்தையும் இக்கதைகள் தரும் என்று எதிர்பார்க்கலாம். அதேவேளை, புலம்பெயர் எழுத்தாளர் ஒருவரின் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகவும் இந்நூல் முயற்சியை நோக்க முடிகிறது. கதாசிரியை சந்திரகௌரி, ஐரோப்பிய வாழ்வியலில் தாம் கண்ட, கவனித்த அனுபவங்களைக் கதை வடிவில் தந்திருக்கிறார். அதேவேளை, ஐரோப்பிய வாழ்வியல் தொடர்பான ஓர் எச்சரிக்கை உணர்வையும் இந்நூல் வாசகருக்கு வழங்குகிறது.

சந்திரகௌரி சிவபாலன் (கௌசி) எதிர்காலத்தில் மேலும் பல நூல்களைத் தமிழ் உலகுக்கு வழங்கவேண்டும். பொதுவாக அவரது ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு விதமாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இனிவரும் நூல்களும் அவ்வாறே அமைய வாய்ப்பிருக்கிறது. அவரது எழுத்து முயற்சிகள் மேன்மேலும் உயர்ந்து, சிறந்து விளங்க எனது நல்வாழ்த்துக்கள்!

No.52 Summerfield
Balagolla,Kengalla
Sri Lanka.
15.11.2017

ஒரு வாசகனின் வாக்குமூலம்

வி.ஜீவகுமாரன்



உலக நாடுகளுக்கு அமெரிக்கா ஒரு பெரியண்ணன் நிலையில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு இருப்பது போல தமிழ் இலக்கியத்துக்கும் அதன் தர நிர்ணயங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் பரவலுக்கும் கூட தமிழ்நாடு பெரியண்ணனாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பது உண்மை.

மறைந்த பேராசிரியர்கள் திரு.கைலாசபதியையும், திரு.சிவத் தம்பியையும் அவர்களின் இலக்கியக் கோட்பாடுகளையும் தமிழ் நாட்டில் ஏற்றுக் கொண்ட பல்கலைக்கழகங்களும் உண்டு – மறு தலிக்கும் எழுத்தாளர்களும் உண்டு.

இந்த இலக்கிய சந்தைக்குள் புதிதாக வந்து புகுந்ததுதான் புலம் பெயர்ந்தோர் இலக்கியம்.

தொழில் வசதிகள் அல்லது பொருளாதாரத் தேடல்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் எவரும் தம் சுயங்களை இலகுவில் இழந்து விடுவதில்லை. அவர்கள் தம் வருட விடுப்பில் தம் தாயகங்களுக்கு சென்று கொண்டே இருக்கின்றார்கள்.

ஆனால் பெருமளவில் அகதியாக அல்லது குறைந்தளவு நிரந்தர வதிவிட அனுமதி பெற்றுச் செல்பவர்கள் தங்கள் சுயங்களை இழந்தும் அவர்கள் பிள்ளைகளுக்கு அந்தந்த நாட்டின் மொழியே

தாய்மொழி யாக ஏற்றும் வாழும் போது ஏற்படும் கலாசாரச் சிக்கல்களை வெளிப்படுத்திய இலக்கிய வடிவங்களை இந்தப் புலம்பெயர் இலக்கியம் தன் உள்ளடக்க மாகிக் கொண்டது.

இதனையே காலம் சென்ற திரு.எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) இந்தியாவில் தனது மித்ரா பதிப்பகத்தை நடாத்திக் கொண்டிருந்த காலத்தில் "பத்தாயிரத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களே தமிழ்ப் படைப்புக்கு தலைமை தாங்குவார்கள்" என்று சபை முன்னே வைத்த ஒரு கருத்து தமிழ்நாட்டு இலக்கியப் பரப்பில் ஏற்படுத்திய தாக்கங் களை அறிந்தோர் அறிவர்.

அனைத்து புலம்பெயர் நாடுகளில் இருந்தும் பல ஆரோக்கிய மான படைப்புகள் வரத் தொடங்கிய பொழுது தான் அன்று அவர் முன் வைத்த உண்மையை உலகம் உணரத் தொடங்கியது மட்டுமில்லாது "புலம் பெயர் இலக்கியம்" என்பது இன்று மிக அதிகளவில் பேசு பொருள் ஆகியுமிருக்கிறது.

பல எழுத்தாளர்கள் இந்த தளத்தில் மிகத் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவ்வகையில் ஏற்கனவே ஒரு நாவல், கட்டுரைத் தொகுப்பின் மூலம் அறிமுகமாகிய ஜேர்மனியைச் சேர்ந்த திருமதி சந்திரகௌரி சிவபாலன்(கௌசி) எமக்கு முன்னே வைப்பது தான் இந்தச் சிறுகதைத் தொகுப்பு.

இலக்கிய உலகில் சுமார் பத்து வருடங்களாக அறிமுகமாகிய என்னுள் 60 வருடமாக ஒரு வாசகன் இருக்கின்றான். அந்த வாசகனின் இத்தொகுப்பினூடு பயணப்பட்ட பொழுது கண்ணில் பட்டவைகளே இந்த பதிவு.

எனது வாசகியான சகோதரி கௌசிக்கு நானும் வாசகனாகி இந்தச் சிறுகதைத் தொகுப்பிற்கு எனது ஆசியுரையை வழங்கியிருக்கின்றேன்.

ஒன்பது ரூபாய் நோட்டுப் போல செல்லாக்காசாகிப் போன "அப்பா என்னவானார்"....

நாங்களே வீசும் முகநூல் வலையினுள் நாமே அகப்பட்டுக் கொள்ளும் "அவள் நினைத்தாளா இது நடக்குமென்று"...

ஒரு ஆணை ஆணாக மதிப்பதற்கு அவனது தொழிலைக் கொண்டே அவனை அளக்க முற்பட்டு அவனையே மரணத்துள் தள்ளி விடும் "ஆணே உன் கதி இதுதானா? ...."

மீண்டும் பட்டமும் படிப்பும் தான் ஒருவனின் அல்லது ஒருத்தியை அளக்கும் அளவுகோலாகும் "இப்படியும் ஒரு பெண்ணா?..."

கெட்டும் பட்டணம் செல் என்பது போல தெரிந்தும் தெரிந்தும் மீண்டும் மீண்டும் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு ஆசைப்பட்டு தம் வாழ்வினை இழக்கும் "உதிர்ந்த ரோஜா"....

காகம் கொத்திக் கொண்டு செல்லும் வடையாக திடீர் மரணங்கள் வந்து உயிர்களைத் தூக்கிச் செல்லும் "எது நிஜம்"...

முகம் இழந்த புலம் பெயர்ந்தவர்கள் போல முகம் இழந்த போலி உறவுகள் பற்றிய "எனக்காக ஓர் தாய் ஏங்கியிருக்க என் இதயம் சிரித்திருக்கும்"....

மனிதர்களை மட்டும் கதை மாந்தர்களாகக் கொள்ளாது வீட்டினுள் வந்து மாட்டிக் கொள்ளும் "ஒரு குளவியின் அலறல்"....

ஒரு சிறுகதையில் கவிதை பற்றிய ஆராய்ச்சியை நடாத்தும் "கவிதை பாடலாம்"...

"எங்கள் கலாசாரம்" என்ற கீழைத்தேய நாட்டுக் கலாசாரத்தில் இருந்து "என் கலாசாரம்" என்ற வடிவினுள் வந்த பின்பு எங்கள் பிள்ளைகளே எங்களுக்கு ஓதும் சிவமந்திரமாகும் "காத்திருப்பு"...

ஐரோப்பிய நாடுகளின் அழகியலே கால மாற்றம் என்பதுதான். அவ்வகையில் இலையுதிர்காலம் மனிதனுக்கு கொடுக்கும் நம்பிக்கையான "காலம் வரக் கூடி வரும்"....

ஐரோப்பாவின் பலம் சுயசிந்தனைக்கான தளம் என்றால் அதன் சாபம் சுயவாழ்வு என்பது சிலவேளை மரணம் வரை இட்டுச் செல்லும் என்பதனை உறுதிப்படுத்தும் "சீர் கெட்ட வாழ்வு"...

கையில் உள்ள காசைப் பார்த்து பார்த்து தொலைபேசிக் காலம் போய் இலவசமாக மணிக்கணக்காக கதைக்கும் வசதிகள் வாழ்வினை சிதறடிக்கும் என்பதை கண்கூடாகக் காட்டும் "சுகம் விசாரித்தல்".....

மீண்டும் மீண்டும் பிள்ளைகள் வாழ்வில் தலையிடும் புலம் பெயர்ந்த பெற்றார்களும் பிள்ளைகளும் களமாடும் "தலையீட்டைத் தவிர்க்க"....

வாழ்வில் கீறல்கள் ஏற்படுவது இயற்கை. அதனைப் பிளவு படாமல் காப்பதே நல்ல தாம்பத்தியம். இந்த சுருதி பேதம் இவை மாறும் பொழுது "தவறுகள் தண்டிக்கப்படலாம், திருத்தப்படலாம், தண்டனையே வாழ்வானால்"....

கல்வி என்பது வாழ்க்கையின் உயரத்திற்கு எடுத்துச் செல்வதற்குப் பதிலாக அதிலும் அது நடத்தும் பரீட்சைக்கு பயந்து வாழ்க்கையே பரீட்சைக்கு உள்ளாகும் "தாமரை ஏன் தயங்குகின்றாள்"....

புதிய சூழல் - புதிய வாழ்வு – புதிய கலாச்சாரம் என்பன கூட்டுக் குடும்ப வாழ்வை தனிமனித வாழ்வுக்கு தள்ளும் "தாரம் இழந்த தபுதாரன்"..

புலம் பெயர் வாழ்வின் பயங்கர முகங்களுக்கு மத்தியில் எம் தாய் மண்ணின் ஈரம் காயாமல் காலம் காலமாக காப்பாற்றி வரப்படும் "திருந்தாத ஜென்மங்கள் இருந்தென்ன இலாபம்".....

மீண்டும் மீண்டும் தொட்டால் சுடும் எனத் தெரிந்து சுட்டுக் கொள்ளும் முகநூல் அனுபவங்கள்.... யாரை இராமன் என நம்புவது என்ற கேள்வியை எழுப்பும் "படிதாண்டிய பொழுது"....

தலைமுறை இடைவெளிகளின் மோதல் மரணம் வரை இட்டுச் செல்லும் "பதறிய காரியம் சிதறிப் போகும்"....

காதலுக்கு கண் இல்லை.... சாதியில்லை... என்றது மட்டு மில்லை... மதமும் இல்லை என கிறிஸ்துவத்தை ஏற்றாலும் இஸ்லாம் மதத்தையே புறக்கணித்த புலம்பெயர் வாழ்வில் இப்போ அதனையும் ஏற்கும் நிலைக்கு தள்ளும் "பிள்ளைகளால் காதில் பூச்சுத்தப்படும் பெற்றோர்"....

மனம்திறந்த உரையாடலுக்கு பழக்கப்பட்டு புலம்பெயர் பிள்ளைகளும் பழக்கப்படாத பெற்றார்கள் பற்றிய "பிள்ளைப் பராயத்தில்"....

பாசம் கூட எல்லைகளைத் தாண்டும் பொழுது அவை அனை வரையும் பாதாளக் குழியுள் தள்ளிவிடும்... மரணம் கூட ஏற்பட்டு விடும் என்னும் "புலம்பெயர்விலோர் பாசம் ஏங்குகிறது"....

சலரோகம் என்பது இன்று தடிமன் காய்ச்சல் போல அனை வரையும் அரவணைத்த கால கட்டத்தில் அது பற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றைய வியாதிகள்... உறுப்புகள் மாற்றீடு பற்றியும் ஆய்வு செய்யும் "பொறுமையின் கனிவு"....

பாடசாலைப் புள்ளிகளால் மட்டும் எம் பிள்ளைகளை நாம் அளக்கும் கண் கெட்ட கலாசாரத்தையும் பெருமையாக இலங்கையில் இருந்து புலம் பெயர் நாடுகள் வரை எம் மீது நாமே போர்த்திக் கொண்டு வாழும் "மதிப்பெண்"....

மதுவைத் தொட்டாலே அவன் அடுத்து ஒரு மாதுவைத் தொட அலைவான் என்பது எம் ஊர் வழக்கு. அதுவே ஒரு பெண் மதுவைத் தொட்டால்! "மதிவதனி ஏன் மதி இழந்தாள்".....

ஐரோப்பாக்காரன் இப்படித் தான் செய்கின்றான்.... அப்பிடித் தான் செய்கின்றான் என்று கண்மூடித்தனமாய் பெற்றோர்கள் ஏற்கும் சில நிகழ்வுகள் பிள்ளைகளை எவ்வாறு தாக்கும் என மனப்போராட்டம் நடாத்தும் "மனதின் மாறாட்டம்"....

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை உள்ளது என்ற அடிப்படை அறிவு இல்லாது "பிள்ளைகளுக்குள் நடாத்தும் தேவையற்ற போட்டிகளும்..... அயல்பிள்ளைகளுடன் ஒப்பிடுதலும்" எம் பிள்ளைகளை நாங்களே மலடாக்கும் "மாமரத்தில் மாங்கனியே பெற முடியும்"....

வேலியே பயிரை மேய்வது போல பாலகர் மீதான பாலியல் என்ற ஒன்று கன்னத்தில் அறைந்து போகும் "மிருகமாகும் மனிதர்கள்"....

கட்டற்ற கலாசாரம் கலாசார அழிவுக்கு அழைத்தே செல்லும் என்பதற்கான இன்னோர் சாட்சியாகும் "முகத்திரை கிழிக்கப்பட்டது"....

குழந்தையின்மை வாழ்வில் ஒரு குறைபாடே இல்லை. அவ்வாறு இல்லாவிடின் தத்துப் பிள்ளை எடுக்கலாம். ஆனால்.... பலர் தொட்ட விடயம் இது - இரவல் தாய். ஆனால் முடிவில் மட்டும் மாறுபடுகிறது "முடிவைச் சொல்லிவிடு"...

மறுமணம் என்பது வரமா? சாபமா? எனப் பட்டிமன்றம் நடாத்தும் "வழிகாட்டிய வரம்"....

மனித மனங்களை ஆய்வு செய்வதையும் தாண்டி எம்மைச் சுற்றியுள்ள மிருகங்களின் உலகினை காட்சிப்படுத்தும் "வாயில்லா ஜீவராசிகள் மௌனம் கலைகின்றன"....

எப்போதும் அடுத்த வீட்டுக் கருகிய மணம் பக்கத்து வீட்டுக்கு சாம்பிராணியாகும் ஊர்வாயைக் களமாக்கிய "வாழ்க்கைப் பாடம்"....

பருவத்தே பயிர் செய்ய வேண்டும் - காலம் கடந்து வரும் கட்டாயக் கல்யாணத்தில் எதிர்பார்க்கும் காதலின் சுவை குறைவே என்பதனைக் காட்டும் "வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்"....

இசைக்கு மொழியில்லை... எல்லையைக் கடந்தது என்பதனை கட்டாயம் ஏற்றுச் சொல்லும் "மொழிக்கலப்பு"....

கன்னிகாதானங்கள் இல்லாத கல்யாணங்கள் இனிவரும் காலங்களில் வரலாம் என்பதனை எதிர்வு கூறும் "பழகிப்பார் பிடிக்க வில்லையா இருக்கிறது இன்னும் ஒன்று"....

நாம் செய்த புண்ணியங்களின் பலன்கள் எதிர்பாராத தருணங்களில் எம்மை வந்தடையும் எனச் சொல்லும் " எங்கிருந்தோ வந்தான்".....

என்ற இத்தனை கதைகளினூடும் மிகுந்த சமுதாய அக்கறையும் தார்மீகக் கோபங்களும் கொண்ட தலைப்பாகை கட்டிய கண்ணாடி அணிந்த கணீரென்ற குரலுக்குச் சொந்தக்காரியான ஒரு பாரதியை நான் கண்டேன்.

அவரின் எழுத்துகளில் ஒரு ஆளுமை தெரிகிறது.

சில கதைகளில் சிறுகதைக்கும் பத்தியெழுத்துக்கும் இடையில் ஒரு நூல்வேலி போட்டு கவனமாக நடந்து சென்றுள்ளார்.

இந்தப் பதிவு நீண்டு விடும் என்ற காரணத்தால் அவரின் வர்ணனை இடங்களை வலிந்து தவிர்த்துக் கொள்கின்றேன்.

இயற்கை வர்ணனைகளும் அதனை வாழ்வியலுடன் இணைத்துச் செல்லும் பாங்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவர் இயற்கையுடன் இணைந்து திரிந்தமைக்குச் சான்று. அதுவே புலம் பெயர்ந்த நாட்டின் இலைகளின் துளிர்ப்புக்களையும் உதிர்வுகளையும் தனது கதைகளுக்குள் வசனக் கவிதை போல நடைபோட கைகொடுத்துள்ளது என உறுதியாக நம்புகின்றேன்.

தொடர்ந்தும் அவரது ஆசிரியப்பணியும் இலக்கியப்பணியும் மேன் மேலும் வெற்றி பெற கல்லுக்குள் தேரையையும் அந்தத் தேரைக்கு உயிரையும் கொடுத்த கடவுளை அல்லது இயற்கையை வேண்டிக் கொள்கின்றேன்.

- நினைவு நல்லது வேண்டும் -

சில நிமிடங்கள் நுழைவாயிலில் உங்களுடன்.....

விதைக்கின்ற பயிரின் விளைச்சல், நேர்த்தியாகவும், நேர்மை யாகவும், சுத்தமாகவும் தேவையானதாகவும் இருந்தால் மாத்திரமே பிறருக்குச் சரியான முறையிலும் சத்தான முறையிலும் பயன்படும். அந்த வகையில் சமுதாய நீரோடையில் கலந்து கொள்ளும் என் வாழ்வின் போக்கில், நான் போகின்ற பாதையில், பெற்றுக்கொள்ளும் பயன்களுக்கேற்ப கொடுத்துச் செல்லும் பயன்களும் அமைய வேண்டும் என்னும் என் உள்மனநோக்கின் உன்னதங்களே என்னுடைய நூல்கள் என்னையே நானறியேன், முக்கோண முக்குளிப்பு வரிசை யில் வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்.

மனதை அரித்து அரித்து இதயத்தைச் செல்லடைகளாக மாற்றிக் கொண்டிருக்கும் புலம்பெயர் வாழ்க்கையில், எத்தனையோ மனிதர் களுடைய அவலங்கள் ஆட்சி செய்யும் அகமே இப்புத்தகம்.

ஊமைகளாய் வலம் வந்து கொண்டிருக்கும் பலருடைய அநுபவங் களும், உண்மைகளும், என் ஆராய்ச்சிப் படிவங்களும் கோர்க்கப்பட்ட நூலே இந்நூல்.

உலகமே ஒரு சிறு கருவியாகி அவரவர் கைகளில் வந்து அமர்ந்து கொண்டிருக்கிறது. அவரவர் விரல் நுனியின் அசைவிலே உலகத்தையே அளந்து பார்க்கின்ற வேளையில் கலாசார பண்புகள் கலந்து பட்டுக் கிடக்கின்றன.

நடக்கின்ற சம்பவங்கள் ஐரோப்பா, இந்தியா, இலங்கை என்று எந்தவித வேறுபாடுகளும் இன்றி இயல்பாக பிரச்சினைகள் இணைந்துள்ளன. அனைத்து உலகமும் கவனம் எடுத்தால் அன்றி எதிர்கால உலகத்தை அழிவில் இருந்து மாற்றியமைக்க முடியாமல் போய்விடும்.

இந்நோக்கிலேயே, என் மனக்கோலங்கள் வரிக்கோலங்களாக மாறி வார்த்தைப் படையல்களாய் வாரி வழங்கப்படும் போது, அது வாசகர் மனதில் சிறிய சிந்தனைத் தூண்டலை ஏற்படுத்தி, மன அழுக்குகளைச் சுத்திகரித்தால் என் பணியின் துளியும் பலனைக் கண்டது என மனம் மிக மகிழ்வேன்.

சுழலுகின்ற உலகத்தில் சுமந்து செல்லுகின்ற நிகழ்வுகளும் புதுமைகளும் மின் வேகத்தில் மாற்றம் காணுகின்றன.

இன்றைய உலகு நாளை இல்லை. வாசிப்பு கைகட்டி நிற்க, கேட்டல் தலை நிமிர்ந்து நிற்கின்றது. சைகை உயர்ந்து நிற்க எத்தனிக்கின்றது. போகின்ற போக்கில் கேட்டலும் பார்த்தலும் மனதுள் நுழைய நூல்கள் அப்பாவிகளாகிப் போன நிலையில் வாசிப்பை இன்றும் நேசிக்கும் மனிதர்களை நம்பி இந்நூலும் வெளிவருகின்றது.

அதிகம் எழுதாதீர்கள் என்னும் கட்டளையை உள்வாங்கியே என் இணையத்தளம் இயங்கியது. குறிக்கப்பட்ட நேரத்தினுள் குறிக்கப்பட்ட சம்பவங்களைச் சொல்லிவிட வேண்டும். அது பிறரைச் சென்றடைய வேண்டும்.

சமுதாயக் கண்கள் திறக்கப்பட வேண்டும். நான் வாழும் சூழலும் நலம் பெற வேண்டும் என்னும் ஆத்மார்த்தமான நோக்கிலேயே இக்கதைகளை மிகச் சிறுசிறு கதைகளாக எழுதினேன்.

தந்திருக்கின்ற விடயத் தொகுப்புக்களை உள்வாங்கி தரம் காண வேண்டிய பொறுப்பு வாசகர்களைப் பொறுத்தே இருக்கின்றது. நீங்கள் என்னைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தினாலும், கைகொடுத்து தூக்கிவிட்டாலும், வெட்டி வெட்டிச் செதுக்கினாலும் ஏற்றுக் கொண்டு என்னை நான் வளர்த்துக் கொள்வேன் என்பது என் தாழ்மையான தீர்மானமாகும்.

என் சிறுகதைகளை என் இணையமே பிரசவித்தது. அவற்றைத் தாங்கித் தாலாட்டி வளர்த்தெடுத்த பெருமை முகநூல் நண்பர்

களையும், இணைய பிளக் நண்பர்களையும், சஞ்சிகைகளையுமே சாரும்.

இந்நூலுக்கு அணி அணிவிக்க நான் நினைத்த போது என் அன்புக்குரிய முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர், பேராசிரியர் கலாநிதி துரைமனோகரன் அவர்களே என் மனதுள் தோன்றினார். பல்கலைக்கழக வாழ்வில் என் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய ஆசானாக இருந்தவர். இவரைத் தவிர இந்நூலுக்கு அணி சேர்க்கப் பொருத்தமானவர் எவருமில்லை என்று நினைத்தேன். அவரும் மனமுவந்து முன் வந்து இந்நூலின் முக்கிய அணிகலனான அணிந்துரையை தந்துதவியுள்ளார். அவருக்கும் என் அன்பையும் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலுக்கு ஒரு உண்மை இதயம், பொய்மைக்குப் புறம்பான நிச்சய உண்மையைத் தரவேண்டும் எனத் தேடியபோது, எனது அனைத்துக் கதைகளையும் வாசித்து, அக்கதைகளின் உண்மை நிலைமையினைத் தன் வாக்குமூலமாக வழங்கிய பிரபல எழுத்தாளர் வி.ஜீவகுமாரன் அவர்களுக்கு என் நன்றியை வரிகளால் சமர்ப்பிக்கின்றேன்.

ஒரு நூலுக்கு முகவரி அதன் பெயராகவும் இருக்கும். பலரால் உச்சரிக்கப்படுவதும் மனதால் கவரப்படுவதும் அந்நூலை அடையாளப் படுத்துவதும் அந்நூலுக்கு நாம் வழங்கும் நாமமே.

அந்த வகையில் இந்நூலுக்குப் பெயர் சூட்டியவர் என்னுடைய பல்கலைக்கழக நண்பனும் கண்டி திருத்துவக்கல்லூரி ஆசிரியருமான சிவலிங்கம் ராஜேந்திரபிள்ளை அவர்கள். அவரையும் இவ்விடத்தில் நினைத்துப் பார்க்கிறேன். நன்றிதனை வழங்கி நிற்கிறேன்.

ஜேர்மனி தமிழ் கல்விச் சேவையில் முதல் வெளியீடாக இந்த நூல் வெளிவருவதை நினைத்து நான் பெருமைப்படுகின்றேன். என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறுகதைகள் நூல்வடிவம் பெற வேண்டுமானால், கலை வடிவம் கண்ணைக் கவரவேண்டும். இப்பணியை பொறுப்பேற்றுச் சிறப்புடன் யாழ்ப்பாணம் அன்றா பிறிண்டர்ஸ் நிறைவேற்றித் தந்துதவி யமைக்கு அவர்களுக்கும் இக்கணப்பொழுதில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொலைதூரம் ஒப்படைக்கப்படும் பொக்கிசம், கலைந்துவிடாது எண்ணியது எண்ணியவாங்கே என் கைகளுக்கு திரும்பவும் வந்தடைய, திருத்தங்களும் வடிவங்களும் சீர் பெற்றிருக்க வேண்டியது அவசியம். அத்துடன் பொருத்தமான நல் இதயம் பொறுப்பேற்க வேண்டியதும் அவசியம். இந்நற்பணியைத் தன் சொந்தப்பணியாக ஏற்று என் கரங்களில் காட்சிப்படுத்திய அன்புக்குரிய எழுத்தாளர் யாழ்பாவாணன் (கா.ஜீவலிங்கம்) அவர்களுக்கு என் நன்றியை பகிர்கின்றேன்.

என் எழுத்துகளுக்கு அங்கீகாரம் வழங்கி அவ்வப்போது குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி என்னை ஊக்கப்படுத்தும் நண்பர்கள், முகநூல் நண்பர்கள், இணைய நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகிறது.

என்னைப் பெற்றெடுத்து எனக்குள்ளும் நற்காரிய நற்சிந்தனை களுக்கு வித்திட்ட என் பெற்றோரின் ஆசியுடன் எழுத்தென்னும் படியேறி உங்களிடம் நெருங்கி வரும்

இவள்

சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)
Felder Str – 56
42651 Solingen
Germany
E-Mail: c.gowry@yahoo.de
webseite: www.gowsy.com
youtube chnanel: kowsy2010
T.No: 0212/22605546

உள்ளடக்கம்

அப்பா என்னவானார்!..... 01-05

அவள் நினைத்தாளா இது நடக்குமென்று..... 06-08

அன்புக்கு வரையறை தான் ஏது?..... 09-10

ஆணே உன் கதி இதுதானா? 11-15

இப்படியும் ஒரு பெண்ணா!..... 16-21

உதிர்ந்த ரோஜா..... 22-28

எது நிஜம்..... 29-31

எனக்காய் ஓர் தாய் ஏங்க என் இதயம் சிரித்திருக்கும்..... 32-34

ஏணியை நினைத்துப் பாரார்..... 35-37

ஒரு குளவியின் அலறல்..... 38-39

கண்ணுக்கு ஏன் கறுப்புக் கண்ணாடி?..... 40-43

கவிதை பாடலாம்..... 44-50

காத்திருப்பு..... 51-55

காலம் வரக் கூடி வரும்..... 56-58

சீர்கெட்ட வாழ்வு..... 59-63

சுகம் விசாரித்தல்..... 64-70

ஞாயிறு மறையும் முன் வந்துவிடு..... 71-73

தலையீட்டைத் தவிர்க்க..... 74-81

தவறுகள் தண்டிக்கப்படலாம், திருத்தப்படலாம்.
தண்டனையே வாழ்வானால் 82-86

தாமரை ஏன் தயங்குகிறாள்..... 87-89

தாரம் இழந்த தபுதாரன்..... 90-93
திருந்தாத ஜென்மங்கள் இருந்தென்ன இலாபம்..... 94-101
படிதாண்டிய பொழுது..... 102-111
பதறிய காரியம் சிதறிப்போம்..... 112-117
பிள்ளைப்பராயத்திலே..... 118-121
புலம்பெயர்வில் ஒரு பாசம் ஏங்குகிறது..... 122-133
பொறுமையின் கனிவு..... 134-142
மதிப்பெண்..... 143-148
மதிவதனி ஏன் மதி இழந்தாள்..... 149-152
மனதின் மாறாட்டம்..... 153-155
மாமரத்தில் மாங்கனியே பெறமுடியும்..... 156-159
மிருகமாகும் மனிதர்கள் 160-165
முகத்திரை கிழிக்கப்பட்டது..... 166-169
முடிவைச் சொல்லிவிடு..... 170-185
வழி காட்டிய வரம்..... 186-190
வாயில்லா ஜீவராசிகள் மௌனம் கலைகின்றன..... 191-194
வாழ்க்கைப் பாடம்..... 195-200
வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்..... 201-206
மொழிக்கலப்பு..... 207-209
பழகிப்பார்பிடிக்கவில்லையா இருக்கிறது இன்னும்ஒன்று 210-215
சுரங்கள் சிந்துகின்றன..... 216-218
எங்கிருந்தோ வந்தான்..... 219-222
கௌசியின் வரிகளை நேசித்தவர் வரிகள்..... 223-224

அப்பா என்னவானார்!

"இஞ்ச பாருங்கோ இது நான். நான் காசு கட்டி வாங்கின வோஸ் மெஸின். இதில் என்ர பிள்ளைகள்ட உடுப்பும். என்ர உடுப்பும் தான் கழுவலாம். உங்கட ஊத்தைகள இதுக்குள்ள போட்டுக் கழுவாதீங்க"

"அப்பிடியென்றா நானென்ன கையாலயா கழுவுறது"

"என்னென்றாலும் செய்யுங்க. ஸ்ரட்டு (நகரம்) க்குள்ள இருக்கிற பொது மெஷினில கழுவுங்க. இல்லாட்டிக் கழுவாமப் போடுங்க. எங்களுக்கு ஒண்டும் பிரச்சினையில்ல"

கணவன் இரத்தினத்திடம் கட்டளையிட்டாள். நிவேதா.

வீட்டுக்குள்ளே அடைந்து கிடக்கிறாளே. வேலைக்குப் போனால். அவளுக்குப் பொழுதுபோகும் என்று ஏதாவது வேலைக்குப் போ என்று நிவேதாவை வேலைக்கு அனுப்பினான் இரத்னம். இது

அவனுக்கு இப்படி அடிமைத்தனத்தைத் தரும் என்று நினைத்துப் பார்க்கவில்லை. அடக்கமாக வாழ்ந்தவனுக்கு அவளை அடித்துத் திருத்தத் தெரியவில்லை. குடிப்பழக்கமில்லாதவனுக்கு போதை என்ர பெயரில் அவளைக் போட்டுப்பிரட்டத் தெரியவில்லை.

வங்கிக்கணக்கைத் தனக்கும் மனைவிக்கும் இணைந்த வைப்பில் வைத்ததனால், உழைப்பின் ஊதியத்தை பங்கு போட்டு விடுவாள் நிவேதா.

"உங்கட பிள்ளைகளுக்கு நீங்கதான் காசு செலவழிக்க வேணும். என்னுடைய வருமானத்தை நம்பியா பிள்ள பெத்தனீங்கள்"

"பிள்ளைகளுக்கு ஹிண்டகெல்ட்ல (அரசாங்கத்திலிருந்து வரும் பணம்) நீங்க கை வைக்கக் கூடாது"

"இது நான் வாங்கின ரி.வி.பிள்ளைகள் பார்க்கிற நேரம் நீங்க பார்க்கக் கூடாது. முடியுமா இருந்தா நீங்க வேற ரி.வி வாங்கிப் பாருங்க. பிள்ளைகள் பார்க்கிற நேரம் கரைச்சல் கொடுக்காதீங்க" இத்தனை கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு அவ்வீட்டில் நரக வாழ்க்கை வாழ்ந்த இரத்தினம். தன் வீட்டுப் பிரச்சினைகளை வெளியில் சொன்னால், அவமானம் என்று யாரிடமும் சொல்லாமல் மறைத்தான்.

அன்று இரத்தினத்திற்கு நெஞ்சுவலி பொறுக்க முடியவில்லை. வீட்டிலோ யாருமில்லை. நண்பன் சுரேஷை அழைப்போம் என்று தொலைபேசியை அழுத்தினான். அவனும் வந்து ரத்தினத்தை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான். இதயம் கொஞ்சம் பலவீனமாக இருப்பதாக கூறிய வைத்தியர் மருந்தும் கொடுத்து வீட்டிற்கு அனுப்பினார்.

வீட்டிற்கு வந்த நிவேதா, தொலைபேசியை பரீட்சித்துப் பார்த்தாள். ரத்தினம் யாருடனோ கதைத்திருக்கின்றார் என்பதை அறிந்தாள்.

"இஞ்ச பாருங்கோ. எங்க போயிற்று வாறீங்க. யாருக்கு ரெலிபோன் எடுத்தனீங்கள். உங்களிட்டச் சொல்லியிருக்கிறன். இந்த ரெலிபோன் நீங்க பாவிக்கக் கூடாதென்று. உங்கட ஹென்டியால எடுக்கலாம் தானே. என்ர பெட்டில வந்து படுத்திருக்கிறீங்க. எல்லாம் குழம்பிப் போய் கிடக்கு"

தொடர்ந்து கேள்விக்கணைகளைத் தொடுத்தாள் நிவேதா.

"நான் ஒன்றும் சும்மா. உம்மட வாசம் பிடிக்கப் படுக்கல்ல. சரியா நெஞ்சுக்குள்ள குத்திச்சு. என்ர ரூமுக்குள்ள போக முடியல்ல. அதுதான் டக்கென்று உம்மட ரூமுக்குள்ள போய்ப் படுத்தனான்"

"சும்மா நடிக்காதீங்க. கண்டவனோட கதைக்கிறதுக்கெல்லாம். நான் காசு கட்டத் தேவையில்ல. கூப்பிட்டு வச்சு என்ர புராணம் பாடத்தானே ரெலிபோன் எடுத்தனீங்க"

"உனக்கு எத்தனை தரம் சொல்றது. ஆஸ்பத்திரிக்குப் போகத்தான் கூப்பிட்டனான். என்ர ரெலிபோனில சாச் இறங்கிப் போச்சு"

"நம்பிட்டன் நடிக்காதீங்க"

"நீ என்ன மிருகமாடி. உனக்கு என்ன ஈவு இரக்கமில்லையா? எப்பிடி அடக்கமா மணவறையில வந்து இருந்தா. இப்பிடி பிசாசு மாதிரி இருக்கிறியே. உனக்கு நான் கொடுத்த இடம் தான் என்ன இந்தளவுக்குக் கொண்டுவந்து விட்டிருக்குது. மற்ற ஆம்பிள்ளைகள் மாதிரி நானும் உன்ன வீட்டுக்குள்ள அடைச்சு வச்சிருந்தா இப்படிக் பேச்சு வந்திருக்காது"

மனதுக்குள் இருந்ததெல்லாம் கொட்டித் தீர்த்தான்.

"போதும். நிறுத்துங்க. நான் சொல்றதத்தான் கேட்கவேணும். இருக்கிறதென்றால் இருங்க. இருக்க முடியாட்டி எங்கேயாவது தொலஞ்சு போங்க"

ஆவேசமாகக் கத்திய நிவேதாவுடைய வார்த்தைகளுக்குள் இருந்த தனியே வாழும் ஆசை. இரத்தினத்திற்கு ஆத்திரத்தைக் கொண்டு வந்தது. ஆவேசம் கொண்டு அடிப்பதற்குக் கை நீட்டினான். ஓடி வந்த மகன், இரத்தினத்தைப் பிடித்துத் தள்ளி விழுத்தினான். பிள்ளைகளும் தாயுமாகச் சேர்ந்து இரத்தினத்தை வீட்டிற்கு வெளியே தள்ளினார்கள்.

"போடா. போ எங்கேயாவது போய்த் தொலை....."

தாயும் பிள்ளைகளும் கத்தித் தள்ளிய இரத்தினம் வாசலுக்கு வெளியே கிடந்தான். வீட்டின் யன்னல் திறக்கப்பட்டது. அவனுடைய துணிமணிகள் வெளியே வீசப்பட்டன. அழுது அழுது ஓய்ந்த இரத்தினம் எல்லாவற்றையும் தூக்கிக் கட்டியவனாக நண்பன் சுரேஷ் வீட்டிற்குச் சென்றான்.

"எனக்கு இது தேவையாடா? சும்மா இருந்த என்னக் கல்யாணம் செய், கல்யாணம் செய் என்று எல்லாரும் கரைச்சல் படுத்தி. ஒரு பேய எனர தலையில் கட்டிப் போட்டுதுகள். இப்பப் பார் என்ன உழைச்சும் இப்பிடி நடுத்தெருவில நிக்கிறனே"

"ஏன்டா இப்பிடிச் சொல்ற உனக்கு நான் இல்லையா? என்ன வந்தாலும் பார்ப்போம். இப்பப் போய்ப் படு"

என்னன்டுடா நித்திர வரும். வருத்தமென்டு சொன்னால் நடிப்பு என்றாள். இப்படியும் ஒரு பொம்பிள இருக்குமாடா? பிள்ளைகளுமல்ல அவளோட சேர்ந்து என்ன அடிக்க வருதுகள். இப்பிடி ஒரு நரக வாழ்க்கை வாழ்றத விட்டிற்று என்னத்தையும் குடிச்சிட்டு செத்துப்போகலாம்"

"உனக்கென்ன விசரா. உனக்கு என்ன குறை. நல்லா உழைக்கிறா நீ. உனக்கு நாங்கள் இருக்கிறம். விட்டுப்போட்டு ஒரு வீடு எடுத்திட்டு ராசா மாதிரி வாழு. ஆனா, உன்ர பிள்ளைகளுக்கு காசு கட்ட வேண்டியது உன்ர பொறுப்பு. அதக் குடுத்திட்டு. சந்தோசமா வாழு"

"இல்லடா அவள எப்பிடியெல்லாம் வச்சிருந்தனான். ஏன் தான் கடவுள் என்னப் போட்டு இப்பிடிச் சோதிக்கிறாரோ தெரியாது"

"விடுடா அந்தக் கதைய. இனி நடக்க வேண்டியதைப் பார்"

ரத்தினம் தனியே வீடெடுத்தான். நிவேதாவும் ஜேர்மனி படிப்புச் சரியில்லை என்று பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு இலண்டனில் குடியிருக்கச் சென்று விட்டாள். அவளுக்குத் தெரியாமல் பிள்ளைகள் தந்தை இரத்தினத்துடன் கதைப்பார்கள். தாயாரின் கெடுபிடிகள், பழக்கங்களை வளரும்போதும், நாலு பேருடன் பழகும் போதும் பிள்ளைகள் அறிந்து கொள்வார்கள் அல்லவா!

காலங்கள் கடந்தன. இரத்தினத்திற்கு வயது 40. தனிமை நோயைத் துணையாகக் கொண்டது. ஆயினும் உடலுழைப்பில் சளைக்காது பாடுபட்டான்.

பலமுறை தந்தையுடன் தொடர்பு கொள்ள முடியாத பிள்ளைகள் அப்பா என்னவானார் என்று தெரியாமல் ஜேர்மனி பொலிஸாருக்கு அறிவித்தனர். வீட்டு இலக்கத்தைத் தேடிச் சென்ற பொலிஸார் வீட்டு அழைப்பு மணியை அழுத்தியும் திறக்கப்படாத கதவினை திறந்தனர். அங்கே பிணமாகக் கிடந்த இரத்தினத்தைக் கண்டனர். இரத்தினத்தின் உடலைப் பரிசீலனை செய்த வைத்தியர் இரத்தினத்தின் உடலை விட்டு உயிர் பிரிந்து 3 நாட்களாகிவிட்டன என்று உரைத்தார்.



அவள் நினைத்தாளா இது நடக்குமென்று



காதல் என்ற வலையில் விழுந்து, கல்யாணம் என்ற சிறையில் அகப்பட்டு, கலாச்சாரம் என்ற தண்டனையில் வாழ்பவளல்லவா, அவள். தாயார் வைத்தியர் வளர்ப்புத்தாயார் பொடிமெனிக்கே. இனக் கலப்பை இன்பமாய் அனுபவிப்பவள். இரு தாயார் வளர்ப்பில் அறிவும் அன்பும் செல்வச் சிறப்பும் பண்பும் அன்புச் சகோதரர் இருவர் பாசப் பிணைப்பும் பற்றிய அழகான வாழ்வை அற்புதமாய் அனுபவித்தவள் அல்லவா, சிரேயா. படுசுட்டியாக படிப்பில் படுகெட்டியாக இருந்து இன்று தொலைக்காட்சியின் அன்பையும் பாசத்தையும் அரவணைத்ததன் காரணம் தான் யாதோ? 10 வயது இடைவெளியில் பகல் இரவென்று கணனியுடன் நேருக்கு நேர் முகம் பார்த்து உரையாடி, ஏற்பட்ட காதல் மயக்கத்தில் அந்தக் காதலனைக் கைப்பிடித்து இன்று தொலைக் காட்சியே கதியாக அந்நியநாட்டிலே வாசம் செய்யும் பெண் இவள்.

சிரேயா வேலைவிட்டு வீடு வந்தால் அலுவலகச் சுவாரசியங்களை ஆளுக்காள் பரிமாறி சிரிப்பிலும் சிந்தனையிலும் பங்கு போட்டுக் கொள்ள மனம் துடிக்கும். ஆனால், ஸ்ரீராமோ வேலை நேரமெல்லாம்

கணினியில் செய்தியும் பற்பல விடயங்களும் பார்ப்பான். அதனால், அலுவலக வேலை ஸ்தம்பித்து நிற்கும். அதை முடிக்க மீண்டும் மேலதிக நேரம் அலுவலகத்தில் தஞ்சம். நித்திரையைத் தியாகம் செய்து அடுத்த நாள் காலைப்பொழுது 7 மணிக்கு வீடு நோக்கிப் பயணம். சிறிது தூக்கம். காத்திருந்து கதிரையிலேயே உறங்கி ஸ்ரீராம் வீடு வர சிரேயா அலுவலகம் நோக்கிப் பயணமாகி விடுவாள்.

அன்றும் பொல்லாத நேரம் போவதாய் இல்லையே. வீட்டிற்கு வந்து என்னோடு சேர்ந்து கணினியைப் பார்த்தால், மேலதிக நேரம் எடுத்து வேலைசெய்யத் தேவையில்லையே. பேசாமல் நாட்டில் இருந்திருக்கலாம். நல்ல தொழிலுடன் நிம்மதியாக வாழ்ந்திருக்கலாம். எல்லாம் தலைவிதி. தொலைக்காட்சி, கைத்தொலைபேசியுடன் எத்தனை காலம் வாழ முடியும். என்று சொன்னபடி அறைக்குள் சென்றாள். சமையல் ஒன்றும் அவளுக்கு மனம் பிடித்த வேலை அல்ல. ஆயினும் பொழுதுபோக வேண்டுமே.

அன்று உப்பு மா அவளுக்குப் பிடித்ததும் உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டும் என்று நினைவுறுத்துவதற்காகவும் அவள் அடுக்களையில் ஆயத்தமாக்கும் ஒரு சாதாரண உணவு. சமைக்கத் தொடங்க தொலைபேசி தொணதொணத்தது. கையிலெடுத்தாள் ரிசீவரை. மென்மையான அந்தக்குரல் அவள் செவிகளை வந்தடைந்தது.

"குளியலறையில் சவர்க்காரத்தை எடுத்தேன், கதைகொடுக்க நீ சறுக்குவதைப் போல, அது வழுக்கிச் சென்றது. சவரைத் திறந்தேன், வெடித்து வந்தது சத்தம் உன் சிரிப்பொலியைப் போல. உன் நினைவு வந்தது. தொலைபேசி எண்களைச் சுழட்டினேன். நேரமோ எட்டு. எட்டி நான் நடந்தால், உன் கிட்டே வந்து விடுவேன். சற்று உன் சம்மதத்தைத் தாராயோ"

சுவையாக சுவாரசியமாகக் கதைத்தான், வேலைத்தள நண்பன் ரகு. தனிமையை அகற்றத் தற்காலிகத் துணையை நாடினாள். அதுவே காலப்போக்கில் அவளுக்குச் சுவைக்கத் தொடங்கியது. சுகந்தமாகியது. பொறுப்பான கணவன் புத்தியிழந்தால். பண்பான வாழ்க்கை பறிபோய்விடும். நம்மைப் பற்றிச் சிந்திக்கும் நாம், நம்மை நாடிவந்தவர்கள் பற்றியும் சற்றுச் சிந்திப்போமா? கண்ணைக் கெடுத்த பின் சூரியநமஸ்காரத்தில் ஈடுபட்டு ஆவதுதான் என்ன. தன் தவறைப் பின் உணர்ந்த ஸ்ரீராம் மனம் உடைந்தான். தனிமையில் வாழ்ந்தான்.

அன்புக்கு வரையறை தான் ஏது

மாரிக் குளிரில் வாடித் தத்தம் இல்லங்களில் பதுங்கியிருந்த மக்களெல்லாம் புற்றீசல் போல் கோடைவெயிலில் குதூகலமாய் அரைகுறை ஆடையில் வீதியெங்கும் விழாக்கோலம். விரல்கள் விறைக்கக் காற்சட்டைப் பையினுள் பதுக்கிய கைகளுடன் ஒடுங்கிச் சென்றவர்கள் உதறிய கைகளுடன் நிமிர்ந்த நடையுடன் ஹாயான பரபரப்பு. ஜஸ்கடையில் நிரம்பி வழிந்த மக்களுள் ஒருவராய் அழகாகத் தன் வளர்ப்புத் தாயுடன் அமர்ந்திருந்தாள் லிசி. தலைமயிர் கோதிவிடப்பட்டு அழகான ரிபனால் கட்டப்பட்டிருந்தது. சுட்டெரிக்கும் வெயில்கண்ணுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது சூரியக் கதிரைத் தணிக்கும் கண்ணாடி அணிந்திருந்தாள். முத்துக்கள் வேலைப்பாடமைந்த போர்வை அவள் அழகை மேம்படுத்தியிருந்தது. அவள் அழகில் கவரப்பட்டவளாய் அவளருகே சென்று வளர்ப்புத் தாயிடம் ஹாய் சொல்லியபடி ஒரு இருக்கையில் அமருகின்றேன்.


அவளது தலையைத் தடவி விட்டபடி நாடியைப் பிடித்தேன். கருணைக் கண்களால் என்னை ஒரு தடவை பார்த்து விட்டுத் திரும்பிவிட்டாள். பார்வையின் கனிவு வளர்ப்பின் தன்மையைப்

பறைசாற்றியது. லிசி கை கொடுக்கவில்லையா எனத் தாயார் கேட்டவுடன் தனது கையை இலாவகமாக என்னிடம் தந்தாள்.

எத்தனை வருடங்களாக உங்கள் அணைப்பில் இவள் என்றேன். 5 வருடங்களாக என் வாழ்க்கையே இவள் தான். இவள் என் வார்த்தையை மீறியதே இல்லை. என் காலடியே தஞ்சம் என்றிருப்பாள். அவளுக்கு நான் எனக்கு அவளென்றே வாழ்கின்றோம். நானும் நோய் கண்டு விட்டேன். எனக்குப் பின் யார்தான் இவளைக் கவனிப்பார்களோ? எனது சொத்துக்கள் எல்லாம் இவளுக்காய்ப் பதியப்பட்டுவிட்டது. நானில்லாவிடினும் என் சொத்துக்காய் இவளைப் பராமரிக்கப் போட்டா போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். அவள் வாழும் வரை வசதியாக வாழ வேண்டும். என்று கூறி ஜஸை அவளிடம் நீட்டினாள். லிசியும் லாவகமாக ஜஸைச் சாப்பிட்டாள். அவர்களிடம் இருந்து விடைபெற நான் எத்தனித்த போது அந்தச் செல்வச் சீமாட்டியும் Auf wieder sehen (Bye) சொல்லும் படி அவளைப் பணித்தாள். அவளும் 'வவ்வ் வவ்" என்று அழகான தன் பாஷையில் நளினமாக விடை தந்தாள்.

செய்கின்ற செயலுக்கு முக்கியத்துவம் தாராமல் செயலின் பின்னோக்கியுள்ள மனநிலையின் முக்கியத்துவத்தில் மனம் கொண்டேன். மண்ணுக்காய் வணக்க ஸ்தலங்களிலும் வீதிகளிலும் உயிர்கள் சங்காரம் செய்யப்படும் நிலையை எண்ணி மனம் வருந்த மூக்கு வடிந்தபடி ஆடையின்றி வாடையில் மெலிந்து, பால் வற்றிய தனங்களுடன் சோகம் சுமந்து வறுமையால் வெம்புகின்ற தாயைப் பசியுடன் நோக்கும் பற்பல சோமாலிய நாட்டுப் பாலகர்களை எண்ணிக் கனத்த மனதுடன் என் கால்கள் வீடு நோக்கி நடை பயின்றன. அன்பு செலுத்த ஒரு வரையறை ஏது. வர்க்க பேதம் தான் ஏது. இதயம் சிறிது. அதன் கொள்ளளவு பெரிது. அனைத்து உயிர்கள் ஏங்குவதும் அந்த அன்புக்காய்த்தானே.

ஆணே உன் கதி இதுதானா?



பகலவன் கடமையைப் பங்கேற்றுக் கொண்ட வீதி விளக்குகள், அசைவின்றி அமைதியைப் பேணிப் பாதுகாக்கும் சாலையோர மரங்கள், வியாபார நிலையங்களின் விடிவிளக்குகள் மட்டுமே தமது கடமையைப் பங்கேற்றுக் கொண்ட, உலகமே உறங்கிக் கொண்டிருக்கும் ஆரவாரமில்லாத மாரிகாலப் பொழுது. வெள்ளைப் பனியில் ஜேர்மனி மூழ்கிக் கிடக்கும் -14 பாகை கடுங்குளிர். ஆனால், அவள் மட்டும் சாளரம் நடுவே சாலையை நோக்கியவண்ணம் நின்று கொண்டிருந்தாள். அவள்தான் சாரதா. மணி இரவு பன்னிரெண்டை வழியனுப்பி வைத்திருந்தது. அயலவர் ஆழ்ந்த உறக்கத்திற்குத் தன் காலடி ஓசை தகராறு செய்யக்கூடாது என்பதற்காக வாடகை வீட்டின் படிகளில் மெல்லெனத் தாண்டித் தாண்டித் தன் வாசல் கதவை மெதுவாய்த் திறந்தான், பத்மன். ஜேர்மனியில் பகல் 1.00 மணியில் இருந்து 3.00 மணி வரையும் இரவில் சில நகரங்களில் 21.00 மணியிலிருந்து அடுத்த நாள் காலை 6.00 மணி வரையிலும் சில நகரங்களில் 22.00 மணியிலிருந்து அடுத்த நாள் காலை 6.00

மணி வரையிலும் சத்தம் செய்தல் கூடாது. ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாளும் சத்தம் இல்லாத நாளாக அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே சட்டமாக இருக்கின்றது. சனிக்கிழமைகளில் 23.00 மணி வரை பிரச்சினை இல்லை. ஆனால், குடியிருப்பிற்கு அருகிலுள்ள குடியிருப்பாளர்களிடம் முன்னமே அறிவித்து இருக்க வேண்டும். அதனால் தான் வசிக்கும் வீட்டிற்கு அருகிலுள்ள குடி யிருப்பாளர்கள் வீட்டில் தன் காலடிச்சத்தம் இடைஞ்சல் செய்யக் கூடாது என்பதற்காக மெல்லென வீட்டினுள் பத்மன் நுழைந்தான்.

இனிமையான இளமைப் பருவங்கள் கடமைச் சுமையால் கரைந்தோட, காதோரம் வெள்ளிக் கம்பிகள் அவதாரம் செய்ய, நாற்பத்து நான்கு வயதில் தன் மூளையில் தட்டிய, தனக்கென்று ஒரு துணை தேவை என்னும் விடயத்தைக் கருத்தில் கொண்டு துணை ஒன்றைப் பெற்றான். ஆர்ப்பாட்டம் இல்லாது ஆலயத்தில் ஆதரவான சில நண்பர்கள் ஆசீர்வாதத்துடன் மங்கலநாணைத் தன் மனைக்கும் மனதுக்கும் சொந்தக்காரிக்கு அணிவித்தான். அவளும் அவன் மனதுக்குப் பிடித்த பெண்ணாய் அன்போடு வாழ்கின்றாள். இன்னும் அவனுக்கு இரவே பகல், பகலே இரவு. பகலில் ஒரு நிறுவனத்தில் வேலை முடித்து அங்கிருந்தே சீன உணவகத்தில் சமையல் பாத்திரங்களைக் கழுவித் துப்புரவு செய்யும் தொடர் பணியை முடித்து இரவு முடியும் அதிகாலைப் பொழுது தன் ஓய்வுக்காக வீட்டை அண்மிப்பான். அவ்வேளை வரை அவனுக்காக உறங்காது விழித்திருக்கும் தன் மனைவியுடன் அளவளாவி விட்டு களைப்பில் கண்ணுறங்கிவிடுவது அவனது நாளாந்த வழக்கமாகும்.

எப்படித்தான் சீன உணவகத்தில் வேலை செய்தாலும் ஐரோப்பிய நாட்டில் வாழ்ந்தாலும் எங்கள் நாட்டுச் சோறும் உறைப்புக் குழம்பும்

சாப்பிட்டால்த்தான் எம்மவர்க்கு உணவு உண்ட உணர்வு ஏற்படும். அதேபோல் பத்மனுக்கு மனைவி சாரதா கைப்பக்குவத்தில் சமைத்த கோழிக்கறி உறக்கத்தை படுக்கைக்குப் போகாமலே கொண்டு வந்து சேர்த்தது. ஆனாலும், அன்றைய செய்திகளை இப்போதே கேட்க வேண்டும் அல்லவா. உணவை வாயில் திணித்த வண்ணம், அடுத்த நாள் கடமைகள் பற்றி மனைவியிடமிருந்து விளக்கத்தைப் பெற்றான்.

சாரதாவும் காத்திருந்து வெளியிடும் பத்திரிகைத் துணுக்குகள் போல் தன்னிடம் வந்தடைந்த தகவல்களை பிரதியீடு செய்தாள். தாயகத்திலிருந்து தாயாரின் தொலைபேசி வந்ததாம்.

"ஊரில இருந்து மாமி ரெலிபோன் எடுத்தா. உங்கள் அத்தானுக்கு கடை போட்டுக் கொடுத்தீங்கதானே அது நல்லா நடக்குதாம். வருமானம் நல்லா வருகுதாம். மாமிக்கு நல்ல சந்தோசம். அக்காவும் நல்ல வசதியா வாழ்றாவாம். உங்கட மற்ற அக்காக்கு ஒரு வீடு கட்டிக் கொடுத்தீங்க தானே! அதிட மேல் மாடி வேலை எல்லாம் முடிஞ்சு இப்ப சாமான் வாங்கிப் போடுறாங்களாம். இப்ப கீழ் இருந்து மேல பேசச் சத்தம் கேட்காதாம். அதால கீழயும் மேலயும் பேசக்கூடிய மாதிரி ஒரு ரெலிபோன் வாங்கி அனுப்பட்டாம். வட்ஸப்பில் பேசலாம் தானே என்று சொன்னன். அது மாமிக்குக் கஷ்டமாம். இல்லாட்டி மாமிக்கு ஏற்றாப் போல ஒரு ரெலிபோன் வாங்கி அனுப்பட்டாம். நீங்க போகாட்டியும் உங்கட தங்கச்சிட கல்யாணத்தைத் தடபுடலா நடத்தி முடிச்சிட்டாங்களாம். 500 பேரளவில வந்தாங்களாம். உங்களுக்குத்தானே கதைக்கப் பேச நேரமில்லாமல் வேலை வேலை என்று திரியுறீங்க. நான் ஸ்கைப்பில பார்த்தேன். நான் நினைக்கிறன் அப்பா தேவையில்லாத மேல்மிச்சச் செலவெல்லாம் செய்திருக்கிறாங்கள் போல் இருக்கு. நாங்க இஞ்ச நடந்து திரியிறம் அதுகள் சுப்பர் காரில திரியுதுகள்.

அது கிடக்குது தம்பிக்குப் படிப்பு ஏறுதில்ல என்று நீங்க அனுப்பின காசில ஒரு கடை கொழும்பில போட்டுக் கொடுத்திருக்கிறாங்க. இதெல்லாம் மாமி சந்தோசமாச் சொன்னா. ஆ... மறந்திட்டன். உங்கட தங்கச்சிக்கு ஒரு பேச்சுவார்த்தை வந்திருக்காம். உங்களை ஒருக்கால் ரெலிபோன் எடுக்கட்டாம். இதெல்லாம் விளக்கமாச் சொன்ன மாமி. .... இதுக்கெல்லாம் பணம் எப்படி நீங்கள் உழைக்கிறீங்கள் என்று ஒரு வார்த்தை கூடக் கேட்கல்ல"

தொலைபேசி எடுப்பது கடமையாய் இருந்தது. அத்தனையையும் கேட்டுச் சிரித்தபடி சாரதா கன்னத்தைத் தடவியபடி.

'இன்னும் ஒரு கடமைதானே பாக்கி இருக்கிறது சாரதா. அதன் பின் நமக்காக நாம் வாழ்வோம். என்னைப் போலும் உன்னைப் போலும் இரண்டு பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்காக நானும் நீயும் கண் விழிப்போம் இன்பமான நாளை எமக்காக உருவாக்கிக் கொள்ளுவோம்" என்றான். பத்மன். அவன் கூறிவிட்டான். அது எந்த அளவிற்கு உண்மை என்று சாரதா உணராதவளானாள். ஆனால், அவர்களுக்காக அவர்கள் வாழும் நாளை எண்ணி அந்த இரு ஜீவன்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றன என்பது மாத்திரம் உண்மை.

உணவு உள்ளே செல்ல கட்டில் அவனை வரவேற்றது. படுத்த மறுகணமே நித்திராதேவி அவனை அணைத்துக் கொண்டாள். சாரதா வெப்பமூட்டிகளைக் குறைத்தாள், மின்விளக்குகளை அணைத்தாள். போர்வைக்குள் புகுந்தாள்.

வழமைபோல் காலை கண்விழித்தாள். கட்டிலின் அருகே வேலைக்குப் போகாமல் இன்னும் அசந்து தூங்கிக் கொண்டிருக்கும் கணவனைப் பார்த்தாள். துடித்து எழுந்தாள். இவரை எழுப்பிவிட

மறந்துவிட்டேனே பேசப்போகின்றார் என்று நினைத்தபடி அருகே சென்று மெல்லென அவனைத் தொட்டு எழுப்பினாள். உடல் சில்லென்று குளிர்ந்தது. அவனை மெல்ல உழுப்பினாள். உடல் அசையவில்லை. மீண்டும் உழுப்பினாள். பேச்சில்லை. ஐயோ... என்று அலறியபடி போர்வையை நீக்கினாள். உயிரற்று அவன் உடல் அமைதியாக சலனமின்றி உறங்கிக் கொண்டிருந்தது. சாரதா உடல் நடுக்கம் கண்டது. அழுவதா துடிப்பதா அடுத்த காரியத்தில் இறங்குவதா எதுவாக இருந்தாலும் அவளாகவே செய்ய வேண்டும். தொலைபேசியில் 113 என்னும் இலக்கத்தை அழுத்தினாள். விரைந்து வந்தது அம்புலன்ஸ் வண்டி. உடல்தாங்கி வைத்தியசாலை நோக்கி விரைந்தது. பத்மன் வாழ்வை முடித்துக் கொண்டான் என்னும் வேதனைச் செய்தி உறுதியானது. கடமைகள் முடிக்கப் பிறந்தவன் போல் அந்நிய நாட்டில் வாசம் செய்து தன் சொந்தக் கடமை முடிக்காது சொல்லிக் கொள்ளாமல் விடைபெற்ற பத்மன் நிலையால் அதிகம் பாதிக்கப்படப்போவது சாரதா மட்டுமே என்பது நிச்சயம்.



அவளுக்குப் பட்டம் சூட்டப்பட்ட அந்த விழாவிலே அவள் தோளில் அணியப்பட்ட மாலை அவளுக்குப் படித்த செருக்கையும் சேர்த்துச் சூட்டியது. படித்ததனால் அறிவுடன் சேர்த்துத் தலைக்கனமும் கிரீடமாக அன்று அவள் தலை சுமந்தது. 'பெருக்கத்து வேண்டும் பணிவு' கல்விச் சுரங்கம் சுமப்பவள் பண்புச் சுரங்கமும் சுமத்தல் வேண்டும். பல்கலைக்கழகம் காணாத எத்தனையோ அறிவாளிகள் உலகில் உலா வருகின்றார்கள். உலக வாழ்க்கையை உன்னதமாக வாழ்ந்து இன்பமாக அனுபவித்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால், ரதியோ கற்ற மமதையை மற்றவர்களிடம் சொல்லிப் பெருமைப்படும் ஒரு ரகம். ஆண்டவன் சிலரைச் சோதிக்கப் பொறுத்திருந்து ஏற்ற நேரம் பார்ப்பாரோ என்னவோ! அக்கரை அவளுக்குப் பச்சையாகப்பட்டது. அந்நியநாட்டு மோகம் அவள் கண்ணை மறைத்தது "மாங்கல்யம் தந்துனானே மகஜீவன கேதுனா" மந்திரம் ஒலிக்க அவள் மார்பில் மாங்கல்யம் அணியப்பட்டது. அவள் பெயருக்குத் திருமதி சூட்டப்பட்டது. மேலைநாட்டிலிருந்து வருகை தந்திருந்த ஒரு சொந்தம். மனைவி

என்ற ஒரு அந்தஸ்தை ரதிக்குத் தந்திருந்தது. கணவன் என்னும் பற்றுக்கோட்டுடன் ஐரோப்பிய நாட்டில் கால் வைத்தாள்.

உயர்ந்த கட்டிடங்களும் வெள்ளைத் தோல்களும் நவீனத்துவ நாகரீகச் சின்னங்களும் அவளுக்கு ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால், அவள் நினைத்துப் பார்த்தறியாத நிலையில் தன் கணவன், சாதாரண ஒரு சாப்பாட்டுக்கடையில் சமையல் தொழிலைச் செய்து கொண்டு அலங்கரிக்கப்பட்ட வீட்டில் வாகன வசதிகளுடன் சொகுசாக வாழ்ந்து கொண்டிருந்தான். கன்னத்தில் தன் கையாலேயே "பளார், பளார்" என்று அறைந்தாள். இடி விழுந்தது போல் தொப்பென்று இருக்கையில் அமர்ந்தாள். தன்னுடைய இறுமாப்பிற்கு வந்த இடியை நினைத்து வேதனைப்பட்டாள். கிட்டே வந்த கணவனை எட்டி நிற்கப் பணித்தாள். மனதுள் வைராக்கியத்தை ஊன்றினாள்.

"இன்றையில இருந்து நானும் நீங்களும் அடுத்தவர்கள் கண்களுக்குத்தான் கணவன் மனைவி" முடிவாகக் கூறினாள்.

"ஏனிப்ப என்ன நடந்து போச்சு. நான் என்ன உமக்குச் செய்தனான்"

"என்ன நடந்து போச்சோ.... நீங்கள் ரெஸ்ரோரன்ட் இலே வேலை செய்றதென்று சொன்னனீங்களே?"

"நீரொன்றும் என்ன வேலை என்று கேட்கல்லயே! உமக்கென்ன இப்ப பிரச்சினை. உமக்குத் தேவையான வசதி வாய்ப்புக்கள் எல்லாம் செய்து வச்சிருக்கிறன் தானே. இஞ்ச மற்றவங்களோட பழகிப் பாரும். அவங்கள் தங்கட மனிசி மாரை எப்பிடி வச்சிருக்கினம் என்டு. நான் நீர் நல்லா இருக்க வேணும் என்றதுக்காக எப்பிடியெல்லாம் வேலை செய்து இந்த வீட்ட வாங்கி இப்படியெல்லாம் அழகுபடுத்தியிருக்கிறன் தெரியுமே?"

"நிறுத்துறீங்களா? போதும் உங்களுடைய பேச்சு. எனக்கு நீங்கள் ரெஸ்ரோரண்ட்டில வேலை செய்றதென்று சொல்லியிருந்தா. உங்களோட இங்க வந்திருக்க மாட்டன். நான் படிச்ச படிப்புக்கு இப்பிடி ஒரு கீழ்த் தரமான வேலை செய்ர புருஷன் தேவையில்ல

"உங்க வீட்டாக்களுக்குத் தெரியும் தானே? நீர் விசாரிச்சுப் பார்த்திட்டு கல்யாணம் செய்திருக்கலாம் தானே? அங்க இருக்கும் போது இங்க கூப்பிடுங்க கூப்பிடுங்க என்று கரைச்சல் கொடுத்தீர். இப்ப பெரிய கதை அளக்கிறீர். இங்கெல்லாம் பதவி பார்க்கிறது இல்ல. வெள்ளக்காரரோட பழகிப்பாரும். பெரிய டொக்டர்கள் கூட எளிமையாகத்தான் இருப்பார்கள்.

"நாங்கள் வெள்ளக்காரரில்லையே! என்னட்ட ஏன் மறச்ச னீங்க அதுதான் இப்ப கேள்வி"

"போடி விசரி. நானும் போனாப் போகுது என்று பார்த்தா. பெரிய கதை அளக்கிறீர். பெரிய பெரிய என்ஜினியருக்கெல்லாம் படிச்ச எங்கடையதுகள். இங்க வந்து பாத்ரூம் கழுவுதுகள். ரெஸ்டோரன்டில சட்டி தேய்க்குதுகள். உமக்கு போகப் போகத்தான் தெரியும் படிப்புக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தம் இல்லையென்று"

"வாழ்க்கைய உயர்த்துறதுக்கும். அந்தஸ்தப் பெருக்கிறதுக்கும், பெருமையா வாழ்றதுக்கும் தான் படிப்பு." அத நான் செய்திருக்கிறன். அங்க யூனிவேஸிற்றியில வேல செய்த என்னக் கூட்டிக்கொண்டு வந்து இங்க சட்டி கழுவ விடப்போறீங்களா?

"யார் சொன்னது உம்மச் சட்டி கழுவச் சொல்லி. நான் செலவழிக்கிறன். நீர் படியுமேனப்பா. பாசையைப் படிச்சு நல்ல வேலை செய்யுமென்" "நான் நல்ல வேலை செய்ய நீங்க ரெஸ்டோரன்டில வேலை செய்யப் போறீங்களா?"

"கல்வியில் ஏற்றத்தாழ்வு கணவன் மனைவிக்கிடையில் பார்க்கிறது குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றதல்ல ரதி. உன்னைவிட ஆளுமை அதிகம் எனக்கிருக்கு. என்னால சமுதாயத்தில் உயர்ந்து நின்று காட்டமுடியும். நான் படிக்கல்ல என்றதுக்காகப் பண்பு இல்லா தவனா? இந்த நாட்டில் கண் கலங்காது உன்னை வைத்துக் காப்பாற்றக் கூடிய சக்தி எனக்கு இருக்கு. என்ன சொல்றாய்?

தன் கருத்தை தயா கூறினான். அவள் எதுவும் பேசவில்லை. மனது இறுக்கமாகியது.

"நான் இங்கிருந்து எங்கும் போகமாட்டேன். எதுவும் படிக்கப் போவதில்லை. உங்கள் முன்ன இருந்தபடியே உங்களுடன் வாழாத வாழ்க்கை வாழப் போறன்" என்று இறுமாப்புடன் கூறி அவ்விடம் விட்டுத் தனது அறையினுள் புகுந்தாள்.

அன்றிலிருந்து விருந்தினர் வந்தால் மட்டும் வீட்டில் சிரிப்பொலி கேட்கும். மழலை மொழி கேட்கும். சமையலறை அடுப்பு சூடு காணும். தன்னைச் சுற்றி ஒரு வட்டம் போட்டாள். அக்கோட்டுக்குள்ளே இருந்தபடி வெளியுலக இன்பம், குதூகல வாழ்வு பலவற்றையும் வெறுத்தாள். தானும் வாழாமல் தயாவையும் வாழவிடாமல் ஒரு போலியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள் ரதி.

ரதியோ தனக்காகத் தனியாகச் சமைத்து உணவு உண்பாள். தயாவோ தனியாகச் சமைத்து உணவு உண்பான். தன் கவலை மறக்க மதுவுக்கு அடிமையானான். ஆயினும் தன் நிலை தவறாது தன் கடமையில் விலகாது. தன் உழைப்பினில் குறையாது வாழ்ந்து வந்தான். இவன் நிலை கண்டு வருந்திய நண்பனின் மனைவி சுதா. ரதியிடம் வந்தாள்.

"எப்பிடி இருக்கிறீங்க. நான் தான் அன்டைக்கு உங்களோட ரெலிபோனில கதைச்சனான். சும்மா பார்த்திட்டுப் போகலாம் என்று வந்தனான்"

"ஓ அப்பிடியா? நீங்க இஞ்ச என்ன செய்றீங்க? ஊரில எந்த இடம்? என்ன படிச்சனீங்க?" என்று ரதி கேள்விக் கணைகளைத் தொடுத்தாள்.

"நான் பி.எஸ்ஸி மெத்ஸ்? யாழ்ப்பாண யூனிவேர்சிட்டி. இஞ்ச நாங்க படிச்ச படிப்புக்கு எங்க வேலை கிடைக்கப் போகுது. எங்களுடைய சேர்டிபிக்கட்டை இங்குள்ள கல்வித்தரத்துக்கு மாத்தினேன். 12ம் வகுப்பு பூர்த்தியானதாகி பல்கலைக்கழக ஆரம்பம் என்று மாற்றித் தந்தார்கள். அதனால இப்போ ஒரு கொம்பனியில் நிலம் துடைக்கிற வேலை செய்றன். 2 பிள்ளைகள் இருக்கிறாங்கள். அவங்கள பள்ளிக் கூடம் கூட்டிப் போற. கலை வகுப்புகளுக்குக் கூட்டிப் போறதென்று ரைமே கிடைக்கிறதில்ல. இவரும் குப்பை வாகன ஓட்டுநராக இருக்கிறார். அவருடைய சம்பளம் எங்களுக்குப் போதும். இப்பிடியான வேலைகளுக்கு இஞ்ச நல்ல சம்பளம். தனி வீடு இருக்குது. ஆனால், எனக்குத்தான் வீட்டுக்குள்ள அடைஞ்சு கிடக்க முடியாது. அதாலதான் 3 மணித்தியாலம் வேலைக்குப் போறன். பிள்ளைகளின்ர வேலைகளப் பார்க்கிறன்" என்று தன் நிலைமையை சுதா விளக்கினாள்.

"நீங்கள் வேலைக்கு அல்லது பாஷை படிக்கப் போகல்லையா? வந்து ஒரு வருஷமாகுதில்லையா?" என்று கேட்டாள்.

"நான் ஒன்றும் பாஷை படிக்கவோ வேலை செய்யவோ போறதில்ல. இவருக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேணும். இவரென்னை ஏமாற்றிப் போட்டார்"

இது எவ்வளவு காலத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்கப் போறீங்க. காலம் ஒரு நாளும் காத்திருக்காது. அது பாட்டுக்கு போயிற்றே இருக்கும்.

இது தான் உங்கட வாழ்க்கை என்றாயிற்று. அதைச் சந்தோசமா வாழப் பழகிக் கொள்ள வேண்டும். படிப்பால உயர்ந்தவர்கள் எதையும் வளைந்து கொடுத்துச் சமாளிக்கத் தைரியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். படித்த அறிவால், குடும்பத்தை உயர்த்தி நிறுத்த முடியாவிட்டால். இந்தப் படிப்பிற்கு இந்த நாட்டில் எந்தப் பிரயோசன மும் இல்லை. நினைத்தது மட்டும் நடக்கிறதில்ல. நடந்ததையே நினைத்த தாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் உள்ளவர்களால தான் வாழ்க்கையைப் பூரணமாக அநுபவித்து வெற்றி காணமுடியும். வாழ்க்கை என்பது ஒரு தரம்தான் ரதி. அதை அநியாயமாக அழிச்சுப் போடாதீங்க. தயாவும் தன்ர பிழைய உணர்ந்திட்டார் தானே" என்று அவள் மனதில் பதியும் படியாக எடுத்துரைத்தாள் சுதா.

"எனக்கும் மூளை இருக்கு. சுதா! என்ர வாழ்க்கைய நான் பார்ப்பன். யாருடைய அறிவுரையும் எனக்குத் தேவையில்ல. வந்தால், வேறு ஏதாவது கதை இருந்தால், கதையுங்கோ. இல்லாட்டி வராதேயுங்கோ"

என முகத்தில அடிச்ச மாதிரி பதிலிறுத்தாள் ரதி.

இதெல்லாம் திருந்தாத ஜென்மம். அகம்பாவம் பிடிச்சதுகளத் திருத்த முடியாது என்று நினைத்தவளாய் அவ்விடம் விட்டு நகர்ந்தாள் சுதா.

உதிர்ந்த ரோஜா

பவளமல்லிகை வீட்டு முற்றத்தில் காற்றோடு கலந்து வந்து தன் சுகந்தத்தைப் பரவ விட்டிருந்தது. மலர்கள் மொட்டவிழ்ந்து தேனீக்களுடன் உறவாடி மகிழ்ந்திருந்தன. வண்ணாத்திப் பூச்சிகள் வண்ணம் வண்ணமாய் வட்டமிட்டிருந்தன. கூந்தலைத் துவாயினால் உலர்த்தியவண்ணம் புத்தம் புதிய நாளின் வருகையை ரசித்த வண்ணம் சுபா முற்றத்திற்கு வந்தாள். ஒரு ரோஜாவை முகர்ந்து பார்க்கக் குனிந்தவளின் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்த தாலியானது அம்மலரின் மேல் பட்டதும் அம்மலரின் இதழ்கள் உதிர்ந்து கீழே மண் படுக்கையில் தஞ்சமடைந்தன. தன்னை உருக்குலைத்த தாலியை ஒரு கணம் உற்று நோக்கினாள், சுபா. அந்த நாளின் இனிமை எங்கோ பறந்து போயின. அம்மி மிதித்து அருந்ததி பார்த்து பெரியோர் வாழ்த்த அவள் கழுத்தில் ஏறிய அந்த மாங்கல்யம், சாத்திரம் சம்பிரதாயங்களைக் கேலி செய்வதுபோல் அவள் கண்களுக்குத் தோன்றியது.

அறிந்த குடும்பம், கௌரவமான குடும்பம், அருமையான பெற்றோர் பெற்றெடுத்த ரவி, கனடாவிலிருந்து சாவகச்சேரி வந்தடைந்தான். வாலிப்பான அவன் உடற்கட்டு அவன் வாழ்க்கை பற்றி ஆராயாது சுபா

மனதுக்கு வேலி போட்டது. மூத்தோர் பெரியோர் வாழ்த்த ரவி கட்டிய மாங்கல்யம் சுபா மார்பிலே தவழ்ந்தது. கல்யாணம் முடிந்தது ரவி கனடா திரும்ப வேண்டிய நாளும் வந்தது.

"எங்களுடைய கல்யாணப் படத்தைக் காட்டித்தான் உங்களுக்கு விசா எடுக்க வேண்டும். எடுத்த பிறகு அறிவிக்கின்றேன். ரிக்கட் போட்டு கனடா வாருங்கள்"

என்று ரவி அழகாகக் கூறி விமானமேறிப் போனவன்தான். கழுத்தில் ஏறிய தாலியையும் வயிற்றில் ஏறிய குழந்தையையும் சுமந்து அவன் விசா எப்போது வரும் என்று தவமிருந்தாள், சுபா.

"உங்களப் போலத் தான் உங்கள் பிள்ளையும் சரியான அடக்கமானவள். அசையாமத்தான் கிடப்பாள். நீங்கள் போனவர் போனவர் தான். ஒரு தரம் வந்து போகலாம்தானே. கல்யாணத்தோட போனீங்கள். இப்போது என்னை கூப்பிடும் வேலை சரிவரா விட்டாலும் பறவாயில்லை. வயிற்றுப்பிள்ளைக்காரி தன்ர கணவனைப் பார்க்க ஆசைப்படுறது ஒன்றும் புதிசில்ல. பிளீஸ் ஒருக்கா வாருங்களேன்"

"இன்னும் கொஞ்சம் நாட்கள்தான். நான் நினைச்சா அதைச் செய்யாமல் விடமாட்டன். உன்னையும் என்ர பிள்ளையையும் ஒன்றா எடுக்கிறதுக்குத்தான் நான் வேலை செய்து கொண்டிருக்கிறன். புரிஞ்சுக்கோடி..."

அவள் புரிந்தாள். ஆனால், ஏக்கம் விடுமா! மனதில் கவலை கவ்விக் கொண்டால் வயிற்றில் பிள்ளையும் தாக்கத்தை நோக்கும் என்னும் துயர் அறிந்தும் அறியாதவளாய்ச் சுபா பிள்ளையைப் பெற்றெடுத்தாள். ஆறுமாத காலங்களே ஆசையோடு வளர்த்த பிள்ளை அப்பா யாரென்று அறியாமலே ஆண்டவன் காலடியை நாடிச் சென்று

விட்டது. இவ்வாறான சோகத்தில் இருந்தவளுக்கு அன்றொரு நாள் சுகமான செய்தியொன்று வந்தது.

விசா கிடைத்துவிட்டதாகவும் கடவுச் சீட்டு எடுத்துக்கொண்டு கனடா வரும்படியும் அனைத்து விபரங்களும் அடங்கிய தபால் கிடைத்த மகிழ்ச்சியில் தலைகால் தெரியாது குதித்தாள், சுபா. தன்னை வாழவைக்கும் என நம்பிய கனடா மண்ணை அவள் பாதங்கள் தொட்டது. ரவியைக் கண்டவுடன் தன் மனதுள் அடக்கி வைத்திருந்த சோகங்களையெல்லாம் கொட்டி அழுதாள். அவளுக்கு ஆறுதல் கூறிய ரவி, கனடாவில் வாழும் தனது அக்கா வீட்டிற்கு அவளை அழைத்துச் சென்றான்.

அன்று இரவு

"ஏன் எங்களுக்கென்று தனியாக வீடு எடுக்கவில்லையா?" என்று சுபா கேட்டாள்.

"இந்த நாட்டில் வீடு எடுப்பது ஒன்றும் சின்ன விஷயமில்லை. இந்த வீட்டில் சமாளிப்போம். வசதியாக ஏதாவது வீடு கிடைத்தால், தனியாகப் போகலாம்" என்று கூறிச் சமாளித்தான்.

சுபாவும் தனிக்குடித்தனம் போகும் நாளை எண்ணிக் காத்திருந்தாள். அதுவரை இவ்வீடு அவளுக்குச் சிறையாகவே பட்டது. சுதந்திரம் என்பது சொல்லிக் கொள்ளாமலே அவளிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டது. கட்டுப்பாடு என்பது கணக்கு வழக்கின்றி அவ்வீட்டில் ஆட்சி புரிந்தது. இலங்கையில் இருந்தபோது இங்கு ஏன் வரமுடியவில்லை என்று ஆதங்கமாய் இருந்தது. பார்ப்போர் கண்களுக்கு நான் கேள்விக் குறியாகப்பட்டேன். இந்த முகங்களில் ஏமாற்றத்தை எப்போது கொடுப்போம் என்று நான் வேண்டாத கடவுள் இல்லை. அதில் ஒரு விமோசனம் கிடைத்துவிட்டது என்று

மகிழ்ச்சியடைந்தால், இங்கு அதைவிட கவலை மேலோங்குகிறது. என் பிறப்பே இப்படித்தானோ! ஏன் இந்தக் கடவுள் சிலருக்கு மட்டும் நிம்மதியான வாழ்க்கையைக் கொடுத்துச் சிலரை மட்டும் சோதிக்கின்றார். எத்தனை காலம் இந்தச் சோகம் என்று பார்ப்போம் என்று சிந்தித்தவாறு வாழ்க்கையை நடத்தினாள்.

ஒருநாள் தொலைபேசி அலறியது. அதை எடுப்பதற்காக அவள் ஓடியபோது

"சுபா எதற்காக நீ ஓடுகின்றாய்? இங்க வரும் ரெலிபோன் அழைப் பெல்லாம் உனக்குத்தானா வருகின்றது? அதை அக்கா எடுப்பா" என்று தடுத்துவிட்டான் ரவி.

ஆனால், ஜேர்மனியிலிருந்து சுபாவினுடைய அக்காதான் தொலைபேசி எடுத்துள்ளார் என்று தெரிந்ததும் "சரிசரி போய்க் கதை. ஆனால், இங்கத்தைய கதை ஒன்றையும் உளறித் தள்ளாதே" என்று கட்டளையாகக் கூறிப் பக்கத்தில் இருந்துவிட்டான்.

அந்நியநாட்டில் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், எல்லாம் கிடைக்கும் என்று தான் இலங்கையில் இருக்கும்போது நினைத்து இருந்தாள். ஆனால், இவையெல்லாவற்றுடனும் வாழ்க்கைச் சுதந்திரத்தையும் கனடாவில் சுபா இழந்து நின்றாள். ரவி இரவு வேலை என்று மாதத்தில் சில நாள்களே வீட்டில் தங்குவான். எதற்கு எடுத்தாலும் சுபாவில் எரிந்து விழுவான். வேலைக் கஷ்டத்தில் இவ்வாறான போக்கில் ரவி இருக்கின்றான் என நினைத்து எதுவுமே பேசாது காலத்தைக் கடத்தினாள். சுபா. தன்னுடைய துயரை வெளியில் வெளிப்படுத்த முடியாத கட்டுப்பாட்டினுள் சுபா அடைக்கப்பட்டாள்.

திடீரென ஒருநாள் ரவி,

"சுபா! இங்கு அக்காவினுடைய வீட்டில் தங்குவது பிரச்சினை போல இருக்கிறது. அடுத்த கிழமை நீ இலங்கைக்குப் போவதற்கு ரிக்கட் போட்டிருக்கிறேன். ஊருக்குப் போ. வீடு எடுத்ததன் பிறகு அறிவிக்கின்றேன். திரும்பி வா. என்ன சரிதானே?" என்றான், ரவி.

முடிவை எடுத்ததன் பின் வினா அவசியம் தானா? இதற்குமேல் எதுவும் கதைப்பதற்கு சுபா மனம் இடம் தரவில்லை. கட்டுப்பாடான சூழலில் இருந்து நாட்டுக்குப் போவதே அவளுக்குச் சரியெனப்பட்டது. நகை போட்டு, உடை உடுத்து கண்ணாடி அலுமாரியில் அழகுக்கு வைக்கும் பொம்மையல்லவே அவள்.

"சரி அம்மாவையும் பார்க்க வேண்டும் போல்த் தான் இருக்கின்றது. நான் போகின்றேன்" என்றாள்.

நாடு திரும்பும் வேளை வந்தது. விமானநிலையம் வந்து அடைந்தாள். சந்தர்ப்ப வசமாக சுபா தனது பழைய சிநேகிதியை கண்டாள். விமானத்தினுள் அருகருகே இருப்பதற்காகப் பக்கத்தில் இருந்தவர்களின் உதவியை நாடித் தனது சிநேகிதியின் அருகே அமர்ந்து விட்டாள்.

அவள் சிநேகிதியும்

"என்னடி சுபா! எப்ப கனடா வந்த நீ? எனக்கு ஒரு ரெலிபோன் எடுத்திருக்கலாமே? ரவியோட நின்றாயே?" என வினாவுக்கு மேல் வினா எழுப்பினாள்.

"அவரை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள் சுபா.

"இதென்ன என்னுடைய மகளோடதானே ரவியின்ர மகளும் Kindergarden இலே படிக்கின்றா. நான் அடிக்கடி கதைக்கிறனான்" என்றாள் சிநேகிதி.

சுபாவுக்கு நெஞ்சமே வெடித்துவிடும் போல் இருந்தது. அவளது முகமாற்றத்தை உற்று நோக்கிய சிநேகிதியும்

"ஏன் சுபா ஒரு மாதிரியாய் இருக்கின்றாய்?" என்று கேட்டாள்.

"இல்லை. அவர்தான் இலங்கைக்கு வந்து என்னைக் கல்யாணம் செய்து இங்கே என்னை எடுத்தவர். அவருடைய அக்கா வீட்டில் தான் இவ்வளவு நாள்களும் நின்றேன். வேறு வீடு எடுத்ததன் பின் என்னைக் கூப்பிடுவதாகச் சொல்லி இலங்கைக்கு அனுப்புகின்றார்" என்று கலங்கிய கண்களுடன் விபரத்தை விம்மிவிம்மி வெளிப்படுத்தினாள்.

"ரவியைப் பற்றிய விபரம் முன்னமே நீ அறியவில்லையா சுபா. ஒன்றும் விசாரிக்காமலேயா இந்தக் கல்யாணம் செய்தாய்? இங்க நான் ஒருத்தி இருப்பது தெரிஞ்சுமா என்னட்ட ஒரு வார்த்தை விசாரிக்காமல் இந்த வேலை செய்தாய்? எதுக்காக இப்போது ஊருக்குப் போகிறாய்? கனடாவிலேயே நின்றிருக்கலாமே?" என்று கேட்ட சிநேகிதியிடம்

"இல்லை இங்கே இருப்பதைவிட ஊருக்குப் போய் என் அம்மாவின் மடியில் விழுந்து ஓ... என்று அழுதால் தான் என்னுடைய மனப்பாரம் குறையும். என்னட்ட ஒரு வார்த்தை இது பற்றிச் சொல்லியிருந்தால், நான் இங்கு வந்திருக்க மாட்டன். இப்பிடி என்ன ஏமாற்றிப் போட்டாரே! அவர் மனதில் என்ன நினைத்திருக்கின்றார் என்று பார்ப்போம் இனி விதிவிட்ட வழி" என்று கூறி இலங்கை வந்தடைந்தாள்.

காலம் கடக்கின்றது. கனடா செல்லும் காரியம் நடைபெறவில்லை. அப்படியென்றால் ரவிக்கு இவள் யார்? வைப்பாட்டியா? மனைவியா? அவளைக் கனடாவிற்கு அழைத்ததன் காரணம்தான் யாது? புரியாத புதிருக்கு இன்னும்தான் சுபா விளக்கம் தேடுகின்றாள்.

தன்னை உருக்குலைத்த தாலியினால், இப்போது உருக்குலைந்து கிடக்கும் ரோஜா இதழ்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்தாள். சுபா. ஒரு கண்ணாடிக் குவளையினுள் நீரிட்டு அந்த இதழ்களை அதனுள் இட்டாள். உதிர்ந்த இதழ்கள் வாடிச் சருகாகும் வரை அதற்கு வாழ்வளிக்கும் முனைப்பில் இறங்கினாள்.

எது நிஜம்

கருவிழி மறைக்க இமையொன்று திரையிட்ட நாளென்ற திரைப்படம் முடிவடைகிறது. நீண்ட ஓய்வு தேடினும் சில மணி நேரமாவது இறந்து மீண்டும் பிறப்பெடுக்கும் உயிரோட்டம். படபட வென்று செக்கன்களைச் செலுத்திக் கொண்டிருக்கும் கடிகாரமும் உண்மையான ஊழியனாய் மீண்டும் ராதிகா, உலகில் சஞ்சரிக்க உலுப்பிவிட்டது. அவள் உணர்வுகளை. திரையகற்றிச் சாளரத்தை மெல்லத் திறந்தாள். சத்திரத்து வாசல் பிச்சைக்காரனைப் போல் புகுபுகுவென்று உள் நுழைந்து சில்லிட்ட தென்றல் காற்று மனதுக்கு இதமான உணர்வை உணர்த்தியது. செய்தொழில் முடித்துத் தன் ஊதியத் தொழில் தொடங்க வீட்டைவிட்டுப் படியிறங்கினாள். சூரியனைக் கட்டிப்போட்டிருந்த இருள் தன் பிடியை மெல்லமெல்லத் தளர்த்தியது.

ராதிகா, அவசர அவசரமாகப் பேரூந்து நிலையத்தை அடைந்தாள். சத்தமின்றி அருகே ஊர்ந்து வந்த பேரூந்து தரித்து நின்று வாசலைத் தாராளமாகத் திறந்துவிட்டது. குபுகுபுவென்று உள்நுழைந்த எறும்புக்

கூட்டமாம் சனநெருக்கடியுள் நுழைந்தவளுக்கு இருக்கை சந்தர்ப்ப வசமாய் இடந்தந்தது. தன்முன்னே அமர்ந்திருந்த இரு பருவக் குழந்தைகளின் முகத்தில் பட்டுத்தெறித்த அவள் பார்வை மீண்டும் சென்று அதில் ஒரு பளிங்குச் சிற்பத்தை விட்டகல முடியாவண்ணம் அப்பிக் கொண்டது. தேநீருக்குள் விழுந்த சீனிபோல் கரைந்து போனாள். புன்னகை புரியும் பாங்கில் புதியவள் முகத்தில் அந்நியோன்யம் நாடினாள். சிறகடிக்கும் இமையினுள் சிக்கிக்கொண்ட கருவிழிகள் பற்கள் இல்லாமலே சிரித்தன. ஓவியன் கைப்படாத சித்திரம், சிற்பி வடிக்காத சிலை, ஆயிரம் கண்களை வசப்படுத்தும் அற்புத உடல்வண்ணம். அவள் தாயார் தங்கபஸ்பம் உண்டாளோ! கலர் கலர் மரக்கறிகளைக் கரைத்துக் குடித்தாளோ! பிரம்மன் சிருஷ்டிப்பில் நேரம் ஒதுக்கியதும் இவளுக்குத்தானோ! இவ்வாறெல்லாம் மனதில் சிந்தனைகள், ராதிகாவின் மூளையில் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தன. Nächste Haltestelle Merscheid தரிக்குமிடம் அறிவிக்கப்பட்டதும் அந்தப் பருவப் பெண்ணின் பார்வை சட்டென்று உள்வரவு நுழைவிற்குப் பறந்தது. பேரூந்து நின்றது. ஆவலின் இறுதி ஓரம் தடுக்கிவிழ இறுக்கமானது. அவள் உடலின் முகவரி. சிவந்தது கன்னங்கள், ஏங்கிய தாகம் தீராதவள் தோழியிடம் முறையிட்டாள். அவள் தோழி வரிகளில் வர்ணமிட்டாள்.

கடுகதி என் நினைவு
காக்கவைப்பது உன் வரவு
ஏங்கவைப்பது உன் பண்பு
இரங்கி நிற்குது என் காதல்

படபடவென்று தொலைபேசியில் இசைக்கருவி மீட்டுவது போல விரல்கள் ஆடிய நர்த்தனத்தில் விரைந்து சென்றது எஸ்.எம்.எஸ். யாரோ எழுதித் தாளமிட்ட கவிதைக்குத் தன் கற்பனையாமென கடைவிரிக்கும் கவிஞர்களை இக்கணம் சொப்பனம் கண்டாள், ராதிகா. சிலநிமிடங்களில் தலை வளைத்து விடைபெற்றபடி பேரூந்தை விட்டகன்றாள், அந்த அழகின் அவதாரம்.

காலச்சுழற்சியின் அடுத்த நாளும் அதே பேரூந்து அதே இருக்கை. அந்த சுந்தரப்பாவையின் சிநேகிதி தன்னுடைய சிரிப்பை எங்கோ தொலைத்திருந்தாள். முகத்தின் தசைகள் அவள் கட்டளைக்குள் கட்டப்பட்டிருந்தன. அவள் அருகே வந்த ராதிகாவும் உள்ளத்திடம் உத்தரவு கேட்காமலே மிக விரைவாக

"இன்று உங்கள் சிநேகிதி பாடசாலைக்கு விடுமுறை எடுத்து விட்டாளா?"

"இல்லை அவள் இனிமேல் வரமாட்டாள் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட ஒரு விபத்தில் இறந்து விட்டாள்"

மின்சாரம் தாக்கியது போன்று ஒருகணம் நாடி நரம்புக் குள் இரத்தம் அத்தனையும் ஒன்றாக அதிவேக வெப்பத்தில் கொதித் தெழுந்தன. திடீரென்று சூரியகிரகணம் வந்துவிட்டது போன்று உணர்வுகள் அனைத்தும் இருண்டு போயின. ஒருநாள் இதயம் முழுவதும் ஆச்சரியமாகி மறுநாள் இதயத்தைப் பிழிந்தெடுத்துப்போன அந்தப் பருவப் பெண்ணை எண்ணி எண்ணிக் கலங்கினாள். ராதிகா.

எது நிஜம். அவள் இரம்மியம் நிஜமா? அவள் காதல் நிஜமா? அவள் கல்வி நிஜமா? இல்லை அவளைப் படைத்ததுதான் நிஜமா? அவள் வாழ்க்கைதான் நிஜமா? எதுவும் நிஜமில்லை என்று அறிந்த பின்னும் நமக்குள்ளே போட்டிகளும் பொறாமைகளும், மறைமுகப் பேச்சுகளும், இதயத்தை வெட்டிப் பிழியும் வார்த்தைகளும், காலம் கடந்தும் தொடர்ந்தே வாழ்வோம் என்ற இறுமாப்புப் பேச்சுகளும் தற் பெருமையும் கொண்டு மனிதன் வாழும் வாழ்க்கைக்கு இவளின் மறைவும் ஒரு எடுத்துக்காட்டு என மனதுக்குள் எண்ணக் கோலமிட்டவளாய் எந்த உறவுமற்ற அந்தப் பெண்ணுக்காய் சிலதுளிகள் கண்ணீர் சிந்தினாள்.

எனக்காய் ஓர் தாய் ஏங்க என் இதயம் சிரித்திருக்கும்

இரண்டு வயதிலே நீ இயல்பாய்த் தமிழ் பேசியபோதும், உன் குதலை மொழியால் குழைந்து குழைந்து காரணங்கள் கேட்டபோதும், இதயத்தை நிமிர்த்தி இமயம் போல் ஒரு நம்பிக்கை கொண்டிருந்தேன். வருங்கால நீதிபதி ஒன்று நியாயங் கேட்க நிமிர்ந்து வளர்கின்றதென்று. என் கன்னத்தில் அமுத்தி நீ முத்தமழை பொழியும்போது என் இதயம் கசிந்து அன்பு ஊற்றுக்களாய் பெருகிக் கொண்டேயிருந்தது. உன் இதயமொழி எங்கள் வாழ்க்கை மேடையிலே சங்கீத சாம்ராஜ்யம் நடத்தியிருந்தது.

பூமி சுழன்றதனால் வயதும் சுருண்டு கிடக்கவில்லை. சுயமாக 6 ஆக உயர்ந்துவிட்டது. முதல் வகுப்பில் நீ ஸ்ரீல்ரியூற்ற (Schultüte) (முதல் நாள் பாடசாலைக்குக் கொண்டு செல்லும் அழகான மட்டையாலான சுருள்) தூக்கியபோது நீ பல்கலைக்கழக அனுமதிப்பத்திரம் பெற்று வந்த பெருமிதம் கொண்டோம். கள்ளி நீ எனக்கு எக்கஷ்டமும் தந்ததில்லை. உன் கணக்குப் பாடத்திற்கு உன்

அப்பா உதவிக்கு வர நீ சந்தர்ப்பமும் தந்ததில்லை. நீ பருவ வயது கண்டால் சடங்கு செய்யத் தன் வங்கியிலே பணக்கணக்கை மட்டுமே கூட்டும் வேலையைத் தந்தைக்குக் கொடுத்திருந்தாய். ஆசிரியர்கள் எமை அழைத்து உனக்குப் புகழாரம் எங்களிடம் சூட்டும்போது. எங்கள் குடும்ப மரபணுக்கள், உங்கள் குடும்ப மரபணுக்கள் தொழிற் படுவதாய் நானும் உன் தந்தையும் போட்டா போட்டி போட்டோம்.

வில்லங்கம் வந்துவிட்டது. விடியாத பொழுதுகள் என் கண் களுக்குள் வந்துவிட்டன. விட்ட சனி ஒட்டிக்கொண்டது. வெட்டவெளி யிலே உச்சிச் சூரியனுக்கு அண்மையில் மல்லாந்து கிடப்பதுபோல் உடலெல்லாம் சுட்டெரிக்கிறது. நெருப்புத் தணலில் நிற்பது போல் தவிக்கிறேன். மகளே உன் வாய்ப்பேச்சு எங்கே மாயமாய்ப் போனது. சித்திரம் கட்டிலில் கிடப்பதுபோல் சிரித்தபடி படுக்கின்றாயே! உன் கலகலத்த சிரிப்பை தன் மருந்தால் சிக்கவைத்த வைத்தியரை நான் சிறை வைக்க முடியாது தவிக்கின்றேனே! முழிக்கும் உன் கண்களுக்காய் மூடாத எம் இமைகள் விரிந்த சாளரமாய் நிலை பெற்றுவிட்டன.

அறிவு வாங்கப் பாடசாலை செல்கின்றாய் என்று தான் நினைத் தோம். நீ காய்ச்சல் அல்லவா வாங்கி வந்திருக்கின்றாய். ஆண்டவனாம் வைத்தியர் ஆண்டவனுக்கு அடுத்தபடி யாரிடம் நாம் போய் நிற்போம். வைத்தியரிடம் தானே உயிர்ப்பிச்சைப் பாத்திரம் ஏந்துவோம்.

பச்சைக் குழந்தை உனக்கு அன்ரிபயோரிக் தரும்போது அவரை விட நாமென்ன கற்றுவிட்டோம் என்றும், வைத்தியர் சொல் மிக்க மந்திரமில்லை என்றுமல்லவா நினைத்துவிட்டோம். பாவி கையால் தந்த அன்ரிபயோரிக் உனக்கு நஞ்சாகும் என்று அம்மா நான் நினைக்க வில்லையே! என் கையே உனக்கு நஞ்சு தந்துவிட்டதா! மகளே!

இக்கையை நானே சுட்டெரிக்கப் போனேனே! உன் தந்தை அதற்கும் தடை போட்டுவிட்டாரே. என் கையைப் பார்க்க எனக்கே அருவருப்பாய் இருக்கிறது. ஒரு பிஞ்சை கட்டிலில் படுக்க வைத்துவிட்ட வைத்தியர், எப்படித்தான் தன் கட்டிலில் தூங்குகின்றாரோ புரியவில்லை. ஒரு வேளை இது இவர்களுக்குப் பழக்கமாய்ப் போய்விட்டதோ. அவதானம் தவறும் வைத்தியரும் கொலைகாரனும் ஒருவர் அல்லவா?

இரவு பகலாய் இதயம் ஏங்கி உன் உடல் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், இதயம் இருந்தும் என்னால் தொழிற்பட முடியவில்லை. உன்னைப் பார்க்கையிலே உள்ளமெல்லாம் வேகுதடி. ஓர் கத்தி நான் எடுத்து என் இதயத்தை வெட்டி உன் உடலினுள் புதைத்துவிட என் இதயமது ஆவேசம் கொள்ளுதடி. ஆனால், சட்டம் என்ன கண்மூடிக் கொண்டா இருக்கிறது. உலகப் பந்தை நீ பார்க்க என் உடல் வருத்தம் பொறுத்தேனடி. என் இடுப்புவலி தாங்கி உன் உடலது கண்டு களித்தேனடி. இன்று உன் அருகே ஓர் இயந்திரம் உனக்காகத் துடிக்கும் போது, அதனைக் கையால் தொட்டு நாளும் கண்ணில் ஒற்றிக் கொள்கிறேன். ஆண்டவனே நேரில் வந்து உன் அருகே படுத்திருப்பதாய் உணர்கின்றேன்.

எத்தனை காலம் அவர் அருகே அமர்ந்திருக்க முடியும். உன் போல் ஓர் இதயம் எங்கோ உனக்காய்த் துடித்துக் கொண்டிருக்கின்றது. அது எப்போ உன் உடலுள் அமரப் போகின்றது. அவசரமாய் அதைக் கேட்க ஆசையாய் இருக்கிறது. ஆனால், அங்கும் ஓர் தாய் என் போல் பின் ஏங்கித் தான் என் ஏக்கம் தீர்க்கவேண்டும். அப்போது கூட அவளுக்காய் நான் கண்ணீர் சிந்திக் கொண்டிருப்பேன். இதயம் தேடி இரவுபகலாய் விழித்திருக்கிறாள் இத்தாய்.

ஏணியை நினைத்துப் பாரார்

கதவைத் திறந்து காற்றுப் போல் உள் நுழைந்து தன் கைப்பையை விசுக்கி எறிந்து சோபாவில் தொப்பென்று விழுந்த கார்த்திகாவைப் பார்த்துச் சிரித்த அவர் கணவர் துரை.



"இன்று வேலைத் தளத்தில் கால்கள் ஒரிடத்தில் நிற்கவில்லையோ நகரும் படிகள் போல் நடமாடியபடியே தான் இருந்தனவோ!"

"அப்படியொன்றுமில்லை" என்று அலுத்துக் கொண்டாள், கார்த்திகா. "அப்படியென்றால், அம்மாவுக்கென்ன கோபம் ஏ

பாகை காட்டுகிறது" என்று மெல்லச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்த்த கணவரிடம்

"இந்த நந்தா குடும்பம் இந்த ஜேர்மனி மண்ணில் கால் பதித்த போது வெற்றுக் கடதாசியாய் கண்ணும் கையும் Ja வும் Nein உம் துணை போக பேந்தப் பேந்த முழித்து அப்பாவிகளாய் எங்களிடம் எப்படித் தஞ்சம் புகுந்தார்கள். உடலும் உள்ளமும் வருந்த நேரமும் பொழுதும் போர் புரிய அனைத்தையும் எதிர்த்துக் கட்டுப்படுத்தி அவர்கள் உள்ளத்தில் நாட்டையும் மொழியையும் வாழ் முறையையும் எழுதி வைத்தது யார்? இன்று கண்பார்க்கிறது. மனம் விரும்பியும் விரும்பாமலும் சிரிக்கிறது. கால்கள் நின்று பேச நேரமில்லாது நடந்து கொண்டே இருக்கிறது. என்ன நன்றி கெட்ட ஜென்மங்கள். ஓடிவந்து கட்டித் தழுவி கார்த்திகா. கார்த்திகா என்று வாயெல்லாம் பல்லாய்ச் சிரித்து உரிமை கொண்டாடியவர்கள் இன்று பார்க்கும் இடங்களிலெல்லாம் கண்டு கொள்ளாமல் போவதைப் பார்க்க இந்த மனிதர்கள் எல்லாம் இப்படி இதயத்தில் இரண்டு வேறுபட்ட அறைகள் வைத்து நன்றி மறந்தவர்களாய் எப்படி வாழுகின்றார்கள்"

என்று வெறுப்பாய்க் கூறிய கார்த்திகாவிடம்,

"இது தான் வாழ்க்கை கார்த்திகா. நாம் ஏணியாக இருக்க மேலே ஏறிக் கொண்டே போவார்கள். அந்த ஏணியை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. கீழே வரும் போதுதான் அதன் துணைதேவை. இப்போது அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம். அனைவரும் தங்கள் தரத்துக்குக் கீழே. அவர்கள் தரம் உயர்வதை இவர்கள் விரும்புவது மில்லை. தமது தரத்துக்கு மேலே இருப்பவர்களுடன் பழகுவதற்கும் இவர்கள் விரும்புவதுமில்லை. மனிதப்பண்புகள் மாறுபட்டவை. தன்னைத்தானே பெருமைப்படுத்தி வாழ்வோர். தனக்கு மேல்

ஒருவர் வாழ்வதை விரும்பமாட்டார். அவர்களுடன் ஒட்டிக் கொள்ளவும் விரும்பமாட்டார். ஏனெனில் தற்பெருமை பேசத் தன் தகுதிக்குக் குறைவான தகுதியுள்ளார் மாத்திரமே தேவை. அவர்களை விட ஒருபடி உயர்ந்தவரிடம் உள்ள நற்பண்புகள் சேகரிக்கும் அறிவுக்களஞ்சியம் இவர்களிடம் இல்லை. நாம் மலையில் பெருக்கெடுக்கும் நதியாக இருப்போம். செல்கின்ற வழியெல்லாம் செழிப்பை ஏற்படுத்துவோம். வழிதோறும் தொட்டுக்கொள்ளும் மூலிகைகளின் சிறந்த பண்புகள் எல்லாம் ஏற்றுப் புனித நதியாதல் போல் சிறந்த பண்புகளைப் பெற்றுய்வோம். குட்டையாய் நின்று எருமைகள் குழப்பிய நீராய் இருப்பாரைப் பார்த்து அனுதாபப்படுவதை விட யாதொன்றும் செய்தல் முடியாது. எழுந்திடு! உனக்காய்ப்பல கருமங்கள் காத்திருக்கின்றன. அற்ப விடயங்களுக்கு உணர்ச்சிவசப்படுதல் அற்பபுத்தி" என்று ஆறுதலுடன் அரிய பிரசங்கம் செய்த கணவனின் பேச்சுக்குத் தலைசாய்த்து அமைதியானாள். கார்த்திகா.

திறந்தே இருக்கும் இதயக்கதவினுள் புகுந்தவர் பலர். அதில் பதிந்தவர் சிலர். புகுந்து விரைந்து பறந்தவர் ஒரு சிலர். புகுந்து இருந்து புண்படுத்துவோரும் சிலர். புகுந்து பிரிந்து புண்புடுத்துவோரும் உளர். அதில் இதுவும் ஒரு வகை. இதயம் சொல்லும் கதை. என்று சிரித்தவளாய் மனப்பாரம் நீத்தாள்.

ஒரு குளவியின் அலறல்



ஸ்... ஸ்.....இரவின் மடியில் துயிலும் துரையும் துடித்தெழுந்தார். தன் உறக்கம் துறக்கக் காரணமான அந்த ஒலியைக் காண மின் ஒளியை நாடினார். மீண்டும் நிசப்தம். கையில் கிடைத்த துணியைச் சுழட்டிச் சுழட்டிப்பார்த்தார். எதுவும் இல்லை. மின் விளக்கை அணைத்துப் போர்வையை அணைத்தார். மீண்டும் ஸ்..... ஆத்திரங் கொண்டவர் உறங்கும் மகளைப் பார்த்தார். அவளும் உறக்கங்களைவாள். குளவி என்றறிந்து பயத்தில் அழுவாள். என்ற அக்கறையுடன் சாளரம் திறந்து சத்தத்தின் காரணியை வெளியே அடித்து விரட்ட சுற்றும் முற்றும் பார்த்தார்.

குளவியும் துயருடனே.

"ஏ! மனிதா! செயற்கை ஒளியில் என் கண்களுக்குள் மின்னல் போன்றொரு தாக்கம். என்னால் அசைய முடியவில்லை. என் இறகுகள் சிறிது. அவற்றின் ஓசையோ பெரிது. நான் பறக்கும் போது பரவும் ஒலியைத் தடுக்கும் சக்தி எனக்கில்லை. இருக்கும் இடத்தைவிட்டு

நகரத் துடிக்கும் என் உயிரைக் குடிக்க நீயும் துடிப்பதும் ஏனோ? என்னைத் தீண்டா எவரையும் நான் வேதனை செய்ததில்லை. உன்னை உன் தாய் வளர்த்தது போலவே உன் மகளையும் நீ வாழும் இந்த நாட்டிலும் வளர்க்கின்றாயே. குளவி குத்தும் என்று சொல்வதை விட்டுவிட்டு, குளவியை அழிக்க நீ குறி பார்த்தால், தன்னைப் பாதுகாக்கவே தன் ஆயுதத்தைப் பயன்படுத்தும் என்று நீ சொல்லி வளர்த்திருந்தால், என்னை அழிக்க உன் பிள்ளையும் எத்தனம் எடுக்காது. நீ மனிதன் அல்லவா! எதிரி என்று நினைத்து அப்பாவிகளையும் சந்தேகக் கண் கொண்டு சங்காரம் செய்யும் எமன் வர்க்கம் அல்லவா நீ. எங்கே என் கூக்குரல் உன் காதுகளுக்குக் கேட்கப் போகின்றது. மாரிக் குளிரில் மயங்கிக் கிடந்த யான், இன்று கோடைவெயிலின் குதூகலிப்பில் உன் கோட்டைக்குள் புகுந்து விட்டேன். நான் புறப்பட வேண்டும். என் புத்திரர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். சிறகு விரித்தது குளவியும். அப்போது படார் என்று தலையில் ஏதோ அடித்தது போன்ற பிரமை. ஓ... என்ற அலறலுடன் விழுந்தது, அந்தக் குளவி. அதன் உயிர் ஓய்ந்தது." நிம்மதியுடன் படுக்கையில் சாய்ந்தார், துரை. தாயின் பாசத்திற்காய்த் தவித்தன குளவிக் குழந்தைகள்.

எமது சந்தோஷத்திற்காய் எம்மை அறியாமலே எத்தனை எத்தனை உயிர்களைக் குடிக்கின்றோம். அந்த அந்த உயிர்களின் நிலையில் நின்று சிந்தித்துப் பார்ப்போமேயானால் உயிர்களின் உன்னதமும் புரியும் உயிர் குடிக்கும் உக்கிரமமும் குறையும்.

கண்ணுக்கு ஏன் கறுப்புக் கண்ணாடி?

வாசல் கதவை விரைவாய்த் திறந்து ஓடி வந்த பவித்ரா, விசையாகத் தன் கைப்பையைச் சுழட்டி எறிந்தாள். கட்டிலில் சடாரென்று விழுந்தாள். வெம்மி நின்ற அழுகை வெடித்தது. அடக்க முடியாத கண்ணீர் மடை வெள்ளம் திரண்டதுபோல் தாரை தாரையாகத் தலையணையை நனைத்தது. விதியின் விளிம்பில் நின்று விசும்பினாள்.



பவித்ரா அழகுப் பெண். திருமண நாளுக்காய் நாள்களை கணக்கிட்டுக் கொண்டிருக்கும் கனவுக் கன்னி. கௌரவமான குடும்பம். வெளிப்படையான போக்கு. பெற்றோர் பேச்சுக்கு மறுப்புக் கூறி அறியாத பண்பு. கல்லூரிப் படிப்பைக் கச்சிதமாய்

முடித்தபோது பெற்றோர் முடிவு செய்த திருமணத்திற்குத் தலை சாய்த்து நின்றாள்.

அன்பு மகள் விசும்பலில் கலவரம் அடைந்த தாய் பதட்டத்துடன் ஓடிவந்து மகளைத் தொட்டது தான் தாமதம், சடாரென்று எழுந்தாள் பவித்ரா தாயின் தோளில் முகம் புதைத்து விக்கி விக்கி அழத் தொடங்கினாள். காரணம் புரியாத தாய், என்ன என்ன நடந்ததென ஆரவாரமாய் அவசரப்பட்டுக் கேட்டாள். கண்ணீரை இரு கைகளினாலும் துடைத்துவிட்டுத் தாயை விறைத்துப் பார்த்தாள். சுட்டெரித்தன கண்கள். சொற்களில் இயலாமை கலந்திருந்தது.

"நான் ஏன் தமிழ்ப் பெண்ணாகப் பிறக்க வேண்டும். நீங்கள் ஏன் இங்கு வந்து வாழவேண்டும். ஏனிந்த நாட்டில் என்னைப் பெற்றெடுக்க வேண்டும் நான் வாழ்வதா? சாவதா?"

விளக்கம் புரியாத தாய் கண்களைச் சுருக்கினாள். பவித்ரா கைப் பையிலிருந்த கடிதத்தைத் தன் தாயிடம் நீட்டினாள். கடித வரிகளில் தன் பார்வையைப் புதைத்தாள் தாய்,

அன்புள்ள பவித்ராவிற்கு,

நான் அதிகம் எழுதவில்லை. கோப்பிக்கடையில் 4, 5 Boys உடன் இருந்து நீ கதைத்துக் கொண்டிருந்ததாக எங்கள் நாட்டவர் எங்கள் வீட்டாரிடம் கூறியிருக்கின்றார்கள். இதைவிட வேறும் கூறப்பட்டிருக் கின்றது போல் தெரிகின்றது. இன்றுடன் எங்கள் திருமணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று. உன்னைப்போல் தானே நானும் பாசம் என்னும் வேலியினுள் அடைக்கப்பட்டவன். வேலியை மீறி வர என்னால் முடியாது. மன்னித்துவிடு.

அன்புடன்
ரவி

கடிதத்தை வாசித்து முடித்துவிட்டு நிமிர்ந்தாள் தாய். அவள் விரல்கள் மகளின் கண்ணீருக்குச் சமாதி கட்டியது. நான்கு கண்களும் நிலைக் குத்தி நின்றன.

"கண்ணீர் விட்டு அழும் கோழையையா என் வயிறு சுமந்தது. உன்னில் நான் வைத்திருப்பது நம்பிக்கை. அடுத்தவர் பேச்சை எல்லாம் நம்பி அவற்றுக்கெல்லாம் ஆமாப்போடும் அழுக்கு மனம் படைத்தவன் தாலிக்கு உன் தலை நீட்டப்படுவது அவமானம். மானம் காக்க மரக்கிளையை வேண்டி நின்ற காலப் பகுதியில் நாம் வாழவில்லை. கையைப் பிடித்தால் பிள்ளை பிறக்கும் என்னும் அறியாமை இருளில் உன்னை வளர்க்கவில்லை. சொந்த நாட்டைவிட்டு வந்த நாட்டிலும் நமது இனம் வக்கிரபுத்தியில் வாழ்வதைக் கண்டு கொள்ளாத அடிமட்டமானவர் அல்ல உன் தந்தை. நடந்தது நடந்து முடிந்ததாக இருக்கட்டும். இனி நடக்கப் போவது நல்லதாக அமையட்டும்." உடை மாற்றிக்கொண்டு புறப்படு. சுத்தக் காற்றைச் சுவாசிக்க நிதானமாக நடப்போம் தைரியமான வார்த்தைகளை அள்ளித் தூவிவிட்டு அத்தனை சுமையையும் தன் மனதில் ஏற்றி எழுந்தாள் பவித்ராவின் யதார்த்தத் தாய்.

சமுதாயமே!

எங்கள் பிள்ளைகளை வாழவிடுங்கள். கண்ணுக்கு கறுப்பு விழி இறைவன் படைத்தாயிற்று. மேலும் கறுப்புக் கண்ணாடி கொண்டு உலகைப் பார்க்காதீர்கள். அடுத்தவன் வாழ்க்கைக்கு வேட்டு வைத்து அழகு பார்க்காதீர்கள். 'தமிழர்களைக் காண நாங்கள் அஞ்சுகிறோம். தமிழர்களைப் பிடிக்கவில்லை. எங்களை ஊடறுத்துப் பார்க்கின்றார் கள். அடுத்தவர்கள் என்ன கூறுவார்கள் என எண்ணி பெற்றோர்கள் எமக்குப் போடும் கட்டுப்பாடுகளைப் பொறுக்க முடியாது தொலைவில் உள்ள பல்கலைக்கழகங்களை நாங்கள் தெரிந்தெடுக்கின்றோம் என்று

மனஅழுத்தங்களை வெளிப்படுத்திய எத்தனையோ இளையவர்கள் வார்த்தைகளைக் காதில் போட்டோம். பண்பாடு, கலாசாரம், என்று கூறிக்கொண்டு காலநிலை, பௌதீக சூழ்நிலை போன்றவற்றால் மாறுபட்ட ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நீங்களும் இந்த வயதைக் கடந்து வந்தவர்கள் தானே. வாழ்க்கை இனிமையானது. பாவம் அவர்கள் பல்வேறுபட்ட கலாசாரங்களுக்கு நடுவே பல்வேறு தோணியில் கால் வைத்துக் கொண்டிருக்கும் அப்பாவிகள். முதலில் உங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் நம்பிக்கை வையுங்கள். அவர்கள் கருத்துக்களுக்கு இடங்கொடுங்கள். நண்பர்களாய் ஆலோசனை வழங்குங்கள். எதையுமே எதேச்சையாக முடிவெடுக்காதீர்கள். ஆழமாகச் சிந்தியுங்கள் அவசரம் இன்றி வெளியிடுங்கள் என்று வழமையாகத் தான் எழுதி வரும் பத்திரிகைக்கு தன் மனக் கருத்துக்களை எழுதி வெளியிட்டாள். ஏனென்றால் அதுதானே பவித்ராவின் தாயின் ஒரே ஆறுதல் காரணி.

கவிதை பாடலாம்



சோகம் மனதுள் புகுந்தாலும் சொல்லொணாத் துயர் சூழ்ந்தாலும் அணைப்பொன்றை மனம் நாடும். அதனாலேயே ஓடி வந்து தலையணையில் முகம் புதைத்து விக்கி விக்கி அழுதாள் காவியா. காவியா மனவேதனையின் காரணம் அறிய மகளை அணைத்தெடுத்தாள் தாய். உலகத்து உயிர்கள் அனைத்திற்கும் தாயன்றி வேறு எத்துணையும் தாயின் பரிவைப் பெறமுடியாது. தலையணை தவிர்த்து தாயின் தோளிணை தேடி எழுந்து கட்டியணைத்து புலம்பினாள்.

"யாப்பெருங்கலக்காரிகை கற்றேன், பரணி கற்றேன், கவிதை நூல்களெல்லாம் கரைத்துக் குடித்தேன். ஆனால் கவிதைப் போட்டியில் வென்றவளோ, கல்வி அறிவு கொஞ்சமும் இல்லாதவள். ஆங்கிலத்தை இணைத்தெல்லாம் கவிதை பாடினாள். இது தான் கவிதை தருமமா? இதை நான் ஏற்க வேண்டுமா?"

என்று கலங்கினாள். ஒன்றிலே ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தாலும் அதில் அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்தாலும் அதனை இழக்கும்போது மனம் சோர்ந்துவிடும். இதயமே வெடித்து விடுவது

போன்று மனம் வருத்தமடையும். இதயம் வடித்த கண்ணீர் கண்கள் வழியாக தன் வேதனையை வெளிக்காட்டி தாரைதாரையாக அத்தாட்சி பணியை மேற்கொண்டது.

மகளின் கண்ணீரின் காரணம் கண்டறிந்த தாய்,

"தலையிடி காய்ச்சல் வந்தால்
தயவுடன் மருந்தைக் கேளாய்
மலையிலுள்ள கல்லைத் தூக்கித்
தலையில் போட்டால்
தலையிடி நின்று விடும்"
"பைசாவைக் கொடுத்து
நைசாக வாங்கிப்
பையன்கள் ஊதும் பலூன்
படார் படார்"

"உச்சியில் நாலு மயிர் ஓரமெல்லாம் தான் வழுக்கை
குருத்தெடுத்த வாழை போல் கூனிக் குறுகி நின்றார்"

இவையெல்லாம் கவிதை போல் உனக்குத் தெரிகிறதல்லவா? இங்கு உவமையில்லையா? எதுகையில்லையா? ஆனால் இதைப் பாடியவர் யாரென்று தெரியுமா? பாடசாலைப் படியை மிதிக்காத ஒரு பாமரன்.

விக்கித்து நின்றாள், மகள்.

இதிலிருந்து என்ன தெரிகின்றது. ஆராரோ ஆரிவரோ தாலாட்டுப் பாடல் தொட்டு ஒப்பாரி அமங்கலப் பாட்டு வரை பாடல் மனித வாழ்வில் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. பாட்டுப் பாடும் புலவனும் தேடிப் பெறும் கரு வாழ்வில் கலந்து நின்று மிளிர்ந்து நிற்கும் நிகழ்வுக் கோலங்கள். விறகை வெட்டும் விறகு வெட்டியும், வெத்திலை உரலில் போட்டு வாய்

சிவக்கக் கவிபாடும் எம்மூர் பொக்கைவாய்ப் பாட்டியும் இன்னும் எமது மனக் கண்ணில் நின்று நிலைக்கும் கவிஞர்கள்.

கவிபாடக் காவியம் கற்றிருக்க வேண்டும். இலக்கணம் கரைத்துக் குடித்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை காவியா. கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும். கேள்வி ஞானமும், உணர்ச்சிப் பெருக்கும் கற்பனை வளமும் நிறைந்து விட்டால், மூளை கொட்டிக் கொண்டே இருக்கும், கவிதை பெருகிக் கொண்டே இருக்கும். இப்படித் தான் பாடவேண்டும் என்ற வரன்முறை கொண்டு பாடியிருந்தால், புதுக்கவி புனைந்து பாரதி இன்றுவரை எல்லோர் இதயங்களிலும் இடம் பிடித்திருப்பாரா?

அந்நிய மொழியைத் தமிழ் மொழியில் கலந்து கவிதையின் சிறப்பைச் சீர்குலைப்பதாகப் பலர் கலங்குகின்றார்கள். மொழி எமது எதிர்காலத் தலைமுறையினரைச் சென்ற சேர வேண்டும் என்று அல்லும் பகலும் கண் முழித்துக் கட்டுரைக்கும் எமது முயற்சி என்னாவது? எமது தமிழை எமது தலைமுறையினர் நாடி வரவேண்டுமென்றால், இலகுபடுத்தல், விளங்கச் சொல்லல் அவசியம். அந்த விளக்கம் எங்கே கிடைக்கும்? அவர்கள் பரீச்சயமான மொழியின் மூலம் தானே கிடைக்கும். அதை நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளல் தவறா? சூழ்ச்சியில் புகழ்ச்சி காணல் எமது புராணக்கலை அல்லவா? அருணகிரிநாதர் தமிழில் வடமொழி கலந்த போது நாம் ஏற்கவில்லையா? மணிப்பிரவாளநடை என்று நாம் இரசிக்கவில்லையா?

"வால வ்ருத்த குமார னெனச்சில
வடிவு கொண்டுநின் றாயென்று வம்பிலே
ஞாலநின்னை வியக்கு நயக்குமென்

நடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேன்
பால லோசன பாநுவி லோசன
பற்ப லோசன பக்த சகாயமா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்ப வனேசனே"

இது எப்படியிருக்கிறது. மணிப்பிரவாளநடை.

அடுத்து காவியா! சொற்களைக் கவிச்சுவைக்கேற்ப பிரித்துச் சொல்லல், நீட்டிச் சொல்லல், போன்று சந்தத்திற்கேற்ப தன் சுதந் திரத்தைக் கையாள்வான் கவிஞன். இதற்காகவே அளபெடை இலக்கணத்தில் இடம்பெற்றது. இலங்கு என்பது பிரகாசம் எனப் பொருள் பெறும். ஆனால் பாட்டில் ஓசை குறையுமிடத்து அந்த ஓசையை நிறைத்தற் பொருட்டு இலங்கு என்று ஒற்றளபெடை பயன்படுத்தல் மரபல்லவா? இதே போலவே ஐயா என்னும் சொல் அய்யா எனவும் ஔவை என்னும் சொல் அவ்வை எனவும் வழங்கப்படுகின்றது. இந்த ஐ, ஔ என்னும் இரு சொற்களும் இலக்கணத்தில் போலி என்று அழைக்கப்படுகிறது. எனவே, அதுவும் கவிஞன் சுதந்திரம்.

இதைவிட இன்னுமொரு சர்ச்சை எம்மவரிடையே நடமாடு கின்றது. ஒருவர் பயன்படுத்திய சொல்லை, பொருளை வேறு ஒருவர் கையாளுகின்றார். என்பதே அது. இதுவே பலவித ஆராய்ச்சியின் பலனாக நான் கண்ட உண்மை என்னவென்றால்,

"கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல"

என்னும் திருக்குறளை மனதில் பதித்த கம்பர், மாடத்திலே மலர்ப் பந்தாடிய சீதையையும் வீதியில் மாமுனியுடன் வந்து கொண்டிருந்த இராகவனையும் நோக்க வைக்கின்றார்.

"கண்ணொடு கண்ணினைக் கவ்வி.."

என்று வரிகளைத் தொடுக்கின்றார். இதேபோல் கம்பரைக் கையாண்ட எமது கண்ணதாசனை நோக்கினால், கம்பர் ஓரிடத்தில் பயன்படுத்திய

"தோள் கண்டார் தோளே கண்டார்
தொடுகழல் கமலமன்ன
தாள் கண்டார் தாளேகண்டார்
தடக்கை கண்டாருமஃதே....."

என்னும் வரிகளை

"தோள் கண்டேன் தோளே கண்டேன்
தோளில் இரு விழிகள் கண்டேன்"

என்று பாடல் யாத்துள்ளார்.

இதேபோன்று ஆலய மணி என்னும் படத்திற்கு கண்ணதாசனிடம் ஒரு பாடல் கேட்கப்பட்டது. அவரும்,

"தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே
அமைதி உன் நெஞ்சில் நிலவட்டுமே –அந்த
தூக்கமும் அமைதியும் நானானால் ..."

என்னும் பாடலை அனுப்பியிருந்தார். ஆனால், முதல் கிழமை வாலி எழுதி அனுப்பியிருந்த பாடல் போல் இப்பாடல் காணப்பட்டிருந்தது. அது

"தூக்கம் உன் கண்களைத் தழுவட்டும்
சாந்தம் உன் மனதில் நிலவட்டும் - அந்த
தூக்கமும் சாந்தமும் நானாவேன்"

இங்கு அமைதி சாந்தமானது நெஞ்சு மனதானது. இருவரின் எண்ணப் போக்கும் ஒன்றாயிருக்கிறதே எனக் கண்ணதாசனிடம் வினவியபோது, அவர் கூறிய பதில் ஆ.மு.தியாகராஜ பகவதர் அம்பிகாபதியாக நடித்த படத்தில் வந்த

"தூக்கம் உன் கண்களைத் தழுவட்டும்.
சாந்தம் உன் மனதில் நிலவட்டும்! — ஆகா.
அந்தத் தூக்கமும் சாந்தமும் நானானால்"

என்னும் வசனமே இருவர் மனதிலும் நின்று நிலவியது என்பது தெரிய வந்தது.

அதேபோல் அண்ணாத்துரை வரிகள் கூட கண்ணதாசன் பாடல்களில் பிரதிபலித்திருப்பதை அறியலாம். வேலைக்காரி என்னும் படத்தில் கோபத்தில் இருக்கும் கதாநாயகனுக்கு நண்பன்

"கத்தியைத் தீட்டாதே. உன் புத்தியைத் தீட்டு"

என்று கூறுவதாக வசனம் எழுதியிருந்தார். இதனையே கண்ணதாசன் விளக்கேற்றியவள் என்னும் படத்திற்கு பாடல் எழுதும்போது

"கத்தியைத் தீட்டாதே
உந்தன் புத்தியைத் தீட்டு
கண்ணியம் தவறாதே
அதிலே திறமையைக் காட்டு"

என்று பாடல் எழுதினார்.

இன்னுமோர் இடத்தில் சிவாஜி கணேசன் காங்கிரஸ் கட்சிக்கு மாறியபோது ஆதரவாளர்கள் அனைவரும் சிவாஜி கணேசனை தரக்குறைவாகத் திட்டியபோது அண்ணாத்துரை அவர்கள் "எங்கிருந்தாலும் வாழ்க"

என்று வாழ்த்தினாராம். இதுவே பிற்காலத்தில் நெஞ்சில் ஒரு ஆலயம் என்னும் படத்தில்

"எங்கிருந்தாலும் வாழ்க
உன் இதயம் அமைதியில் வாழ்க"

எனக் கண்ணதாசன் அவர்கள் வரிகள் அமைக்கக் காரணமாயிற்று.

எனவே, கற்றது கருத்தில் நிறைந்தால் அது எப்போதோ கவி வரியாய் வெளிவரும். அது தன்னையறியாமல் உணர்ச்சி வேகத்தில் கொட்டும் போது மூளையென்னும் பண்டகசாலையிலிருந்து பெருக்கெடுக்கும்.

அதனால், கவிதைக்கு யாரும் உரிமை பாராட்ட முடியாது. அது இப்படித்தான் இருக்க வேண்டும். இலக்கண வரம்பு முறைக்குள் அமைய வேண்டும் என்பதெல்லாம் அவசியமில்லை. இலக்கணத்தில் முழுக் கவனமும் நீ கொண்டதனால், கவிச்சுவையைத் தொலைத் திருக்கின்றாய் என்று நினைக்கின்றேன். அனைவரும் கவரும் உத்தியைக் கையாண்டு அவள் வெற்றி பெற்றிருக்கின்றாள். இது மரபுக் கவிதை பாடும் போட்டி என்று வந்திருந்தால், உன்னுடைய கவிதை வெற்றி பெற்றிருக்கலாம். அதனால், மகளே ஒருவன் முன்னிலைக்கு வரவேண்டுமானால், சந்தர்ப்பம் சூழ்நிலையை உணர்ந்து அதற்கேற்ப தொழிற்பட வேண்டும் இந்த உண்மையை உணர்ந்துகொள் காவியா. இப்போது புரிகிறதா? யாரும் கவிபாடலாம் என்னும் கவிதை தருமம் என்று கூறித் தாய் மெல்லச் சிரித்தாள்.

தாயின் நீண்ட விளக்கத்தில் தெளிவுபெற்ற மகளும் காலத்துக் கேற்பக் கவிபாடும் உத்தியில் தன்னை ஈடுபடுத்தும் முனைப்புடன் அகக் கண்ணைத் திறந்தாள். அவள் கற்ற இலக்கணமும் தாயின் கருத்தும் ஒருங்கிணைய கற்பனைக்கு மோட்டர் பூட்டினாள். அவள் சிந்தனையின் தலைமையகம் தொழிற்படத் தொடங்கியது.

காத்திருப்பு

மிரண்டு படுத்த படுக்கையிலே தடவிப் பார்த்த கைகளுக்குத் தட்டுப் படாத மனைவி தேகம் உணர்ந்து துடித்தெழுந்தான் விஜய்.



"என்ன செய்கிறாள் இவள். இன்னும் நித்திரை கொள்ளாமல்" அவன் கைபட்டு மின்சாரம் தொழிற் பட்டு மின் விளக்கு வெளுத்தது. அறையின் வெளியே அவதானித்தான். சமையலறை வெளிச்சம் கதவிடுக் கூடாக கண்களுக்குப்பட்டுத் தெறித் தது. சமையலறை சென்றான். அங்கு

மேசையிலே கைநீட்டிக் கையே தலையணையாய் மேசைமேல் முகம் புதைத்து தனை மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள், கீதா.

"கீதா....." தட்டி எழுப்பினான்.

"பிள்ளை வந்திட்டாளா, பிள்ளை வந்திட்டாளா..." தடுமாறினாள் கீதா

"வராமல் எங்கே போகப் போகிறாள். வருவாள் தானே. வந்து படு. இன்றைக்கு லெக்ஷர்ஸ் முடிய நேரமாகிவிட்டது என்று நினைக்கின்றேன். வந்து எடுத்துச் சாப்பிடுவாள் தானே" அதட்டலாகச் சொன்னான் விஜய். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவள் இல்லை.

"நீங்கள் போய்ப் படுங்கள். நாளைக்கு வேலை இருக்கிறது. நான் சாப்பாடு கொடுத்திட்டு வந்து படுக்கின்றேன்"

என்று கூறித் தன் கையில் பத்திரமாய் வைத்திருந்த போட்டோவை ஒருதரம் பார்த்தாள். என்ன இலட்சணமான பெடியன். குடும்பமோ, உத்தியோகமோ, அழகோ என்ன குறை இருக்கிறது. இவனை மட்டும் ஜெசிக்குக் கட்டிக் கொடுத்துவிட்டால், நிம்மதியாக இருக்கலாம். என்று எண்ணியபடி தன் மகளைத் தரமான ஒருவனிடம் ஒப்படைக்க நாளும் பொழுதும் தேடிக் கண்டு பிடித்த ஒருவனுடன் காத்திருந்தாள் கீதா.

"என்னவென்றாலும் செய். நான் சொன்னால், நீ என்ன கேட்கப் போறியா?" திரும்பி வந்து படுக்கைக்குப் பாரமானான் விஜய். கண் மூடியவுடன் நித்திரையாள் அவனை தாலாட்டிவிட்டாள்.

மணி இரவு பதினொன்று. உணவகம் இன்னும் ஒரு மணித் தியாலத்தில் உறங்க வேண்டும். கலகலப்பு மெல்ல மெல்லக் குறைந்

தது. ஜெசி தன்னுடைய கைகளில் அடங்கிக் கிடந்த ராமுடைய கைகளை விலக்கினாள்.

"அம்மா காத்திருப்பாள். நான் போக வேண்டும். இன்னும் எத்தனை வருடங்கள் இப்படிக் கள்ளமாய் வாழ்க்கையைக் கடத்துவது. நாம் தானே உறவுக்கு அத்தாட்சிப்படுத்தி விட்டோம். உயிருள்ளவரை எனக்கு நீங்கள்தான் என்று உறுதி செய்துவிட்டேன். புதியபாதை வகிப்பதற்கு பொறுப்பான பதவி தேவை. அதற்கு சிறப்பான படிப்பு அவசியம் என்று தானே, எல்லாவற்றையும் மறைத்து விட்டோம். உழைக்கும் காலம் சேர்ந்தே உழைத்துத் தரமான வாழ்வு காண்போம். இப்போது நாம் படிப்பதற்கு வசதி தேவையில்லையா! எங்கே போவோம். சட்டரீதியாகக் கணவன் மனைவி. ஆனால், எங்கள் பெற்றோருக்கு நாங்கள் செல்லப்பிள்ளைகள். திட்டமிட்டுத்தானே தொடங்கினோம். பொறுத்திருப்போம். இன்னும் 2 வருடங்கள் காலத்தைக் கடத்த வழிதான் இல்லையா?"

ஒரு இளம் தம்பதியர், கள்ளங்கபடமில்லாக் குழந்தைகளாய்ப் பெற்றோருடன் வாழும் நிகழ்வுடன் பிரயாணத்திற்காகப் பிரிந்து பெற்றோரிடம் சென்றனர். கதவு திறக்கப்படும் ஓசை கேட்டு கண் விழித்தாள், கீதா. என்ன ஒரு அபார சக்தி. தாய்ப்பாசத்தை ஒப்பிட்டுக் கூற வார்த்தைகளே இல்லை. எங்கிருந்தாலும் ஒரு காந்த சக்தி போன்ற உணர்வு பிள்ளைகளிடம் இழுத்தெடுக்கும். எவ்வாறான இரைச்சலிலும் இடரிலும் அழும் தன் குழந்தை ஓசை துள்ளியமாய் தாயின் காதுகளில் ஒலிக்கும். தாய்க்கும் சேய்க்கும் இடையேயுள்ள அபார சக்தி இது.

"ஜெசி வந்திட்டாயா? கெதியாக முகத்தைக் கழுவிட்டு வா. வந்து சாப்பிடு"

"எனக்குப் பசிக்கல்ல..."

"இரவில் சாப்பிடாமல் படுக்கக் கூடாது. நீ வா! நான் குழைத்து ஊட்டி விடுகிறேன்"

உடைமாற்றித் தாய் ஊட்டிய உணவை வாய்க்குள் அசைபோட்டாள் ஜெசி. உணவுண்ணும் சமயத்தில் தன் மனக்கிடங்கில் உள்ளவற்றை கீதா மெதுவாக எடுத்துரைத்தாள்.

"ஜெசி நாம தேடிப் போனாலும் கிடைக்காத ஒரு சம்பந்தம் எங்களுக்கு வந்திருக்கு. நல்ல குடும்பம். இங்க பார் எப்பிடி ஒரு வடிவான பெடியன். நல்லாப் படிச்சிருக்கிறான். நான் விசாரிச்சுப் பார்த்த மட்டில பெடியனிட்ட எந்தக் கெட்ட பழக்கவழக்கங்களும் இல்ல. விரும்பினா நீ ஒருக்கா அந்தப் பெடியனிட்ட பேசிப் பாரு. நான் அதுக்கு ஒழுங்கு பண்றன். அம்மா உனக்குப் பிடிக்காத எவனையும் உன்ர தலையில கட்ட மாட்டன். என்ர ராசாத்தியெல்லா. நல்ல வாழ்க்கை தான் முக்கியம். அத நாங்க தேடிப் போகாமலே எங்களத் தேடி வந்திருக்கு" மகளிடம் குழைந்தாள், கீதா.

"அம்மா இப்ப நான் படிக்கிறதா? கல்யாணம் கட்டி வாழ்றதா? சும்மா யாரோ ஒருவனைக் கொண்டு வந்து என்ர படிப்பைக் கெடுக்காதீங்க. படிப்பு முடிஞ்சாப் பிறகு இதெல்லாம் வைத்துக் கொள்ளுங்கள்." எடுத்தெறிந்து பேசிவிட்டு சட்டென்று எழுந்து படுக்கைக்குப் போய்விட்டாள், மகள் ஜெசி.

சமையலறையை மூடிவிட்டுத் தன் எண்ணத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு மகள் கல்விக்கு கரை கண்டவுடன் ஏற்ற துணை தேடுவோம், இல்லையென்றால், இப்பொருத்தத்தைக் காத்திருக்கச் சொல்வோம் என்று முடிவெடுத்தவளாய் படுக்கையை நாடினாள், அப்பாவித் தாய்.

தாய் தந்தையரை நன்றாகப் பயன்படுத்தும் பிள்ளைகள் பெற்றோரிடம் தமது எண்ணத்தை முறைப்படிக் கூறி ஒப்புதல் பெற்று பெற்றோர் ஒத்துழைப்புடன் திருமண பந்தத்தில் இணையும் கலாசாரத்தைக் கடந்து புலம்பெயர்வு நாளாகிவிட்டது. பெற்றோருக்குத் தெரியாமலே தமது எண்ணங்களை நிறைவேற்றி கறக்கும் வரைப் பெற்றோரைக் கறந்து விட்டுப் பின் காலமெல்லாம் எதிர்பார்ப்புடன் இருக்கும் பெற்றோரை, ஏமாற்றி உண்மையை மறைத்து நாடகம் போட்டு நன்றாக நடித்து இறுதியில் உண்மையைப் போட்டு உடைக்கும் இரக்கமற்ற பிள்ளைகளால், மனம் உடைந்து நோயாளிகளாகும் பெற்றோர்கள் ஆயிரம்.

பெற்றோரை உறிஞ்சிக் கல்வியை முடித்துவிட்டுத் தன் மனதுக்குப் பிடித்த ராமுடன் சிறப்பான வாழ்வு காணக் காத்திருந்த ஜெசி சட்டரீதியாக ராம் அளித்த மோதிரத்தை முத்தமிட்டபடி கண்ணுறாங்கினாள்.

காலம் வரக் கூடி வரும்

கோடை காலப் பூரிப்பில் அகன்று விரிந்து கிளைகள் பரப்பி பச்சைப் பசேலென பொன் போன்று மின்னுகின்ற இலைகள் தொங்க விடப்பட்டு நகரத்தின் நடுவே பலருக்குப் பலன் தரும் மிடுக்குடன் தலைநிமிர்ந்து நின்றது அந்த விருட்சம். அம்மரத்தில் ஓர் பறவை நாள் தவறாது வந்தமர்ந்து நட்புடன் தன் இன்ப துன்பங்களைப் பேசி மகிழும். அம்மரத்தின் அடியில் இரண்டு இருக்கைகள் வருவோர் போவோர் இளைப்பாற அமர்ந்திருப்பதும் இணையுடன் சல்லாபித்திருப்பதும் சிலர் சோகச் சுமைகளைச் சுமந்த வண்ணம் வெறித்து பார்வையுடன் பெருமூச்சு விட்டபடி அதனுடைய சுகமான



காற்றைச் சுவாசித்துக் கொண்டிருப்பதுமாக இருப்பார்கள். அதனருகே அழகாக வரிசையாக நடப்பட்டிருந்த மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கிப் புதுப் பெண்கள் போல் பொலிவுடன் காணப்பட்டன. பக்கம் வரும் மனிதர்கள் அதனைப் பார்த்து மகிழத்தான் முடியும். பறிக்க முடியாது. அவர்களைப் போலவே அந்த விருட்சமும் சில நாட்களே வாழும் அந்த மலர்களின் அழகில் காதல் கொண்டு அதன் கவர்ச்சியில் தன்னை இழந்து. இதன் இறப்புப் பிறப்பு இரண்டையும் கண்டு கவலையுடன் தன் சிநேகிதப் பறவையுடன் துயரைத் தேற்றிக் கொள்ளும்.

காற்றுடன் இணைந்து கரகாட்டம் ஆடும் அந்த மரத்தின் சிலுசிலுப்பையும் சிங்காரச் சிரிப்பொலியையும் பறவைகள் கூட்டமாக அதில் வந்தமர்ந்து காதல் மொழி பேசுவதையும் சண்டையிடுவதையும் சல்லாபித்திருப்பதையும் கடைக்கண்ணால் பார்த்து புன்னகை புரிந்திருக்கும் அம்மலர்கள். அம்மலர்களில் தேனெடுக்க வட்டமிடும் வண்ணாத்திப் பூச்சிகளின் இரம்மியமான அழகை இரசித்த வண்ணம் ஆசையால், ஆறுதல் இல்லாது அவாப்பிடித்து அலையும் மனிதர்களைப் பார்த்து சிரித்தபடி அந்த கோடைகாலத்தின் குதூகலத்துடன் களித்திருந்தது. அவ்விருட்சம்.

காலதேவன் கரைந்தான். இலையுதிர் காலத்தின் ஆரம்பம் நெஞ்சுக்குள் ஓர் ஏக்கம் பற்றத் தொடங்கியது. அப்போதும் மஞ்சள், செம்மஞ்சள் மண்ணிறம் என நிற வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கும் அவ்விருட்சத்தின் தோற்றத்தை ஆசையுடன் அம்மலர்கள் கண் வெட்டாது வியப்புடன் நோக்கும். நாட்கள் நகர்ந்தன. அவ்விருட்சம், தன்னுடைய உடைகள் ஒவ்வொன்றாகக் கழட்டத் தொடங்கியது. சில்லெனக் குளிர் மெல்ல மெல்ல உடலை வருடத் தொடங்கியது. தன்னுடன் உறவாடிக் களித்திருந்த காற்றும் பித்துப் பிடித்தவன் போல் பேயாட்டம் ஆடத் தொடங்கியது. அதன் ஆவேசத்திற்கு சில நாட்கள்

போராட்டத்தின் பின் ஆடைகள் எல்லாம் பொலபொலவென களைந்து அம்மணமாகியது இவ்விருட்சம். மகிழ்ச்சி குதூகலம். கொண்டாட்டம் அனைத்தும் அடங்கி வெட்கத்தில் தலைகுனிந்து நின்ற அம்மரத்தில் அதன் உயிர் நண்பன் ஒன்று மட்டும் பறந்து வந்து அமர்ந்தது.

நிசப்தமாய் நின்ற அம்மரத்துடன் உரையாடத் தொடங்கியது அப்பறவை. கவலை வேண்டாம் நண்பா! எந்தப் பிரச்சினைக்கும் ஓர் தீர்வு இருக்கிறது. பொறுத்துக் கொள். மீண்டும் நீ உயிர்த்தெழுவாய். அவ் இடைக்காலத்தில். உன்னோடு உறவாட புதிய ஒரு வெண்பஞ்சுக் கூட்டம் வந்து விடும். மனிதர்கள் வெளியிடும் கரியமில வாயுவை உள்ளெடுத்து அவர்களுக்கான பிராணவாயுவை வெளியகற்றி அவர்களுக்குப் பிராணனை வழங்கும் உன்னை வாழ்த்தி வானகம் உனக்குத் தூவும் மாசுமறுவற்ற வெள்ளைப் பூக்கள். உன்னுடலில் தாங்கிக் கொள். மீண்டும் அந்தக் கோடை வெயிலில் நீ குளிக்கும் வரை புதுவித உணர்வு உனக்குள் ஏற்படும்.

இப்படித் தான் இம்மனிதர்களும். ஆழமான வேதனை பிரச்சினை என்று அல்லாடிக் கொண்டிருப்பார்கள். ஆனால் எங்கோ ஒரு மூலையில் அப்பிரச்சினைக்குத் தீர்வு இருந்து காலம் வரக் கூடிவரும். கலங்காதே களித்திரு. என்று கூறி காற்று வெளியில் தன் இறக்கைகளை விரித்த வண்ணம் உலகின் அனைத்து விடயங்களையும் உள்வாங்கி வான் வெளியில் இன்பமாய்ப் பறந்து சென்றது அப்பறவை.

சீர்கெட்ட வாழ்வு

நேரமோ 10. நித்திரையோ கண்ணைச் சுருட்டுகிறது. நாள் முழுவதும் வேலை செய்து வீடு வந்து ஓய்ந்து ஒரு பிடிச் சோற்றைக் கையால் குழைத்துச் சாப்பிட்டாலேயே மனம் நிம்மதியடைகிறது. என்னதான் இரண்டாவது வேலை ரெஸ்டோரண்டில் செய்தாலும் இந்த ஐரோப்பியர்களுடைய உணவு எந்தப் பிடிப்பும் இல்லாத அவர்களைப் போலவே காரம், புளிப்பு இல்லாமல் சப்பென்று இருக்கும். கட்டிக் குழம்பை சோற்றில் ஊற்றி கையால் பிசைந்து ருசித்துச் சாப்பிடும் சுவைக்கு எதுவும் ஒப்பில்லை. பசிக் களை நீக்கினால், பாய்ந்து வரும் உறக்கம். சிறிது நேரம் இருந்துவிட்டு உறங்க வேண்டும் என்று புத்தி பலர் புகட்டினாலும் மூளையதைப் புரிந்து கொண்டு நடப்பதாகத் தெரியவில்லையே. முடியாத காரணத்தால் ஓசையிடும் தொலைக்காட்சியை நிறுத்திவிட்ட விசாகன் எழுந்தான். படுக்கையை நெருங்கினான்.

அழைப்பு மணி ஓசை நித்திரை மயக்கத்தை நீக்கியது. இந்த நேரத்தில் யாரது வாசல் மணியை அழுத்துவது! இப்போதெல்லாம்

இலண்டன், பாரிஸ், ஜேர்மனி பகுதியில் நிம்மதியாக வாழத்தான் முடிகிறதா. களவு, கொள்ளை, கற்பழிப்பு, கொலை, அச்சுறுத்தல் அப்பப்பா... நிம்மதியைத் தொலைத்துவிட்டு வாழ வேண்டிய சூழ்நிலை. பரிதாபம் பார்த்துப் படுகுழியில் விழுந்த நிலை இந்த ஐரோப்பியர்களுக்கு வந்திருக்கின்றது. பொதுவாகவே ஐரோப்பிய நாடுகளில் வீடுகள் பாதுகாப்பு மதிலோ, சாளரக் கம்பிகளோ கொண்டிருப்பதில்லை. ஆனால், இன்றைய சூழ்நிலை இவற்றுக்கெல்லாம் அவசியத்தைக் காட்டி நிற்கின்றன. மெதுவாக சாளரத்தைத் திறந்து கீழ் நோக்கி இருட்டில் பார்வையைச் செலுத்திய விசாகனுக்கு ஆச்சரியம். என்ன ... தீபன்! இவன் என்ன இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளாமல் வந்திருக்கிறான். ஓடிப் போய் கதவைத் திறந்தான். தள்ளாடித் தள்ளாடி வாசல் படியை வந்தடைந்தவனிடம் இருந்து மதுவின் வாசனை விசாகனை வந்தடைந்தது.

"தீபன் என்னடா இது. இந்தநேரத்தில்!"

"என்ர மச்சான் எனக்கு ஏலாதுடா. என்னால ஏலாது. இதெல்லாம் ஒரு வாழ்க்கையா... இன்றைக்கு மட்டும் நான் இங்க படுக்கட்டா. ஏன்டா நான் ஐரோப்பிய நாட்டுக்கு வந்தனான்? ஓடி ஓடி உழைச்சனான்? பிள்ளைகளைப் பெத்தனான்? இப்ப ஒன்றுமில்ல. ஒன்றுமில்ல. இந்தப் போத்தல் மட்டும்தான் எனக்கிருக்கு. மனிசி, பிள்ளைகள்.... " ஓ..... என்று சத்தமாக அழுதான். ஆண்கள் அழுதால், அது விசித்திரம். பொதுவாகவே மனதைக் கல்லாக்கி எதையும் தாங்கும் சக்தி அவர்களுக்கு உண்டு. அழுவதென்றால், அவர்கள் மதுவுக்கும் மாதுக்கும் அடிமையாக வேண்டும். அப்போதுதான் அழுகையும் அவர்களை வந்தடையும்.

அவனைச் சமாதானப்படுத்திய விசாகன். அன்று தீபனைத் தன் வீட்டில் தங்க வைத்தான். இரவு படுத்தானோ, புரண்டானோ

யாரறிவார். விசாகன் நாள் களைப்பில் நன்றாகவே உறங்கி விட்டான். விடிந்த பொழுது காலை 5 மணி கடமைக்காக எழுந்திருந்த விசாகன். ஏற்கனவே பொழுது புலர்ந்து எழுந்து விட்ட தீபனைக் கண்டான்.

"எப்படி நித்திரை?" என்றவனிடம் "சுத்தமாய் இல்லை" என்று பதிலளித்துவிட்டு தேநீருக்கும் காத்திருக்காமல் வீடு செல்லத் தீபன் ஆயத்தமானான். விசாகன் வேண்டுதலும் பதிலளிக்காததால். நடந்தது உரைக்க விருப்பில்லை என்று உணர்ந்து கொண்ட விசாகன்.

"மச்சான் குடிச்சுக் குட்டிச் சுவராகாதே. எப்படி இருந்தனீ. இப்படி குடிச்சுத் தேயிறியே. மனிசி பிள்ளைகள நினைச்சுப் பார்க்கக் கூடாதா?" என்றபோது

"என்னது? மனிசி பிள்ளைகளா? போடா.. டேய்..." என்றபடி பதிலுக்குக் காத்திருக்காது. வெளியேறினான். சொந்தக் கதையை வெளிப்படுத்த அவன் விரும்பவில்லை என்பது அவன் சொல்லித் தெரிய வேண்டியதில்லையே.

சொந்த வீட்டின் மேல்பகுதியில் தனியனாய் வசித்துவரும் தீபன் நிலையைப் பின் பிறர் கூறக் கேட்ட விசாகனும் மனம் மிக வருந்தினான். தாயாரிடம் சென்று உணவருந்தி வாழும் அவன் வாழ்க்கையின் சோகத்தை புரிந்து கொண்ட விசாகனும் இவன் குடிப்பது போதைக்கு அல்ல. அவன் இறப்பை அவனே தேடிக்கொள்ள என்னும் சூட்சுமம் அப்போதுதான் விசாகனுக்குப் புரிந்தது.

வேலை வீடு என்று வாழ்ந்து வரும் விசாகனுக்கு பல நாள் தொடர்பில்லாத தீபன் பற்றி நினைத்துப் பார்க்க நேரம் கிடைக்க வில்லை. அன்றொருநாள் வேலைத்தளத்திலே விரைவாகப் பணி புரிந்து கொண்டிருக்கும் போது ஒரு தொலைபேசி தொடர்ந்து

அடித்துத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. வேலைத் தளத்திலே உத்தரவு பெற்று தொலைபேசியை அழுத்தினான். தீபனின் அம்மாவே மறுமுனையில்

"விசாகன் என்ர பிள்ள 2, 3 நாளா சாப்பாட்டுக்கு வரல்ல. பிள்ளைக்கு என்னவோ, ஏதோ தெரியாது போய்ப்பார்க்கக் கூட எனக்கு அனுமதியில்ல. அவனை ஒருக்காப் போய்ப் பார்க்கிறியா மகன். எனக்கு மனம் திக்குத் திக்கென்று அடிக்குது" தாயின் தவிப்பை சொற்கள் தாராளமாகக் காட்டின.

"ஓமம்மா. வையுங்க. நான் மற்ற வேலைக்குப் போக முதல் போய்ப் பார்க்கிறன். பார்த்திட்டு உங்களுக்குச் சொல்றன். நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாதீங்கள். அவனுக்கு ஒன்றும் நடந்திருக்காது" என்ற விசாகன் வேலை முடிந்து தீபன் வீட்டை அடைந்தான்.

அழைப்பு மணியை அழுத்தியபோது தீபன் மனைவியே கதவைத் திறந்தாள். தீபனைப் பற்றி விசாரித்தபோது மேலே இருக்கின்றார் என்ற பதிலுடன் மேலே போகும் படிச் சைகை காட்டினாள். மேலே சென்ற விசாகனுக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. பல நாட்கள்துப்பரவு செய்யப்படாத வீட்டினுள் கெட்ட வாடையுடன், சாளரங்கள் என்றுமே மூடப்பட்டு சாக்கடை போன்ற மணமும் அருவருப்பை அள்ளித் தந்தது. மூக்கை இறுகப் பொத்தியபடி உள்ளே நுழைந்தான். வெளிவரத் துடித்துக் கொண்டிருக்கும் வாந்தியை அடக்கியபடி கட்டிலில் சரிந்து கிடக்கும் தீபனைக் கண்டான். அருகே போய் அவனை எழுப்பியபோதே தெரிந்தது. ஐயகோ... நெஞ்சை நிமிர்த்தி ஜாம்பவானாக விதவித ஆடையுடன் கம்பீரமாகத் திரிந்த தீபன் உயிரற்று மடிந்து கிடக்கும் நிலையது கண்டு துடித்துப் போய்விட்டான் விசாகன்.

கீழே ஓடிவந்து காவல்துறைக்கு தொலைபேசி அழைப்பு விட்டவுடன் காவல் துறையும் விரைவு வாகனமும் விரைந்து வந்தது.

பரிசோதித்த வைத்தியர் உயிர் பிரிந்து ஒரு நாளுக்கு மேலாகிவிட்டது என்று கூறியபடி உடலை உடன் கொண்டு சென்றனர். சொந்த வீட்டிலே, அநாதைப் பிணமாக ஒருநாள் முழுவதுமாகக் கிடந்த மனிதனை ஏறெடுத்தும் பார்க்காது உண்டு குடித்து வாழ்ந்த மனிதர் களும் வாழுகின்ற புலம்பெயர் வாழ்க்கையானது தொடரும் நாட்களில் இன்னும் மோசமான நிலைக்குத் தான் போகப்போகின்றதா என்பது பற்றி நினைக்க நினைக்க வேதனையாக இருக்கின்றது. யாரும் எப்படியும் வாழலாம் என்னும் மனங்களெல்லாம் கொடூர வஞ்சனைப் பிண்டங்களாகிப் போய்விட்டன. அன்பு, பாசம், விட்டுக்கொடுப்புக்கள், மரியாதை, சமூக பயம், எதுவுமே இன்றி சுயநலப் பிசாசுகள் வாழுகின்ற பூமியில் நாமும் வாழுகின்றோம் என்னும்போது பயமாக இருக்கின்றது.

தீபன் ஒரு தடவையாவது தனது நிலையைச் சொல்லி இருக்கலாம். ஆறுதலாக அதற்குரிய பரிகாரத்தை வேறு வழியில் வேறு யாரிடமாவது அறிவுரை மூலம் பெற்றிருக்கலாம். ஆனால், தனக்குள்ளேயே போட்டு மறைத்து அநியாயமாக சின்ன வயசிலே வாழாமல் மடிந்து விட்டானே. இப்படி எத்தனை ஆண் வர்க்கம், தமது குடும்பப் பிரச்சினைகளைத் தமக்குள்ளே போட்டு மறைத்து மாண்டு போகின்றார்கள். சொல்லி அழ நாதியற்று குடிக்கு அடிமையாகித் தமது விதியைத் தாமே தேடிக் கொள்ளுகின்றார்கள் என்று எண்ணிபடி வீடுநோக்கிப் புறப்பட்டான் விசாகன்.

சுகம் விசாரித்தல்

இருமனங்கள் இணையும் போது இதயம் நுழை அன்பு நிலைக்க வேண்டும். தாலி தாங்க மனம் விழைந்த போது தாங்கும் மனம் சேரவேண்டும். நாடு கடந்து வந்தபோது தேடிவரும் பிரச்சினைகள் ஓடிச் செல்ல வழி காணும் மனமும் வலுக்க வேண்டும். இயந்திர உலகு, நிம்மதியற்ற வாழ்க்கை. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற துடிப்பிற்காய் ஓயாத உழைப்பு. கணவன் படி தாண்டுவது காதல் மனையாளைக் களிப்பில் ஆழ்த்த வேண்டும் என்ற அவாவும் ஒரு காரணமாக அமைகின்றது. உரிமையுள்ள இடத்திலேயே கவலை, களைப்பு, கோபம் அனைத்தும் காட்டமுடியும். ஆடிக் களைத்த பம்பரம் வீட்டில் ஓய்வு காண வேண்டும் அல்லவா! இதை உணர்ந்து கொள்ளாப் பெண் வீட்டில் உறைவதன் அர்த்தம் தான் யாதோ! அடுத்தவரைப் புரிந்து வளைந்து சமாளித்துக் கொள்ளும் பக்குவம் இல்லாவிட்டால், மனையை ஆளும் தகுதி அவளுக்கு ஏது?

ஆம். சுபி கணவனுடன் வாழ வந்த இளம்பெண் உறவுகள் சொந்தங்கள் சுகம் விசாரிக்கத் தூக்கும் தொலைபேசி அவள் உள்வீட்டுப்

பூசலுக்குத் தூபம் போடும் அழைப்பாகவே இருக்கும். சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுத்துவிடும் சுகம் விசாரிப்பாய் இருக்கும்.

அன்று சமயலறைப் பாத்திரங்கள் போட்டபடி கிடக்க, அடுப்பில் கோதுமை மாவை அவிப்பதற்காக வைத்துவிட்டு ஒரு மணித்தியால நேரக் கணிப்பீட்டை மனதிலே பதித்துவிட்டு அதுவரை தொலைக்காட்சியில் தன்னை மறந்திருந்தாள் சுபி. அவ்வேளை வந்த தொலைபேசியைக் கையில் எடுத்தாள். ராணி தான் மறுமுனையில் பேசினாள். இருவரினதும் சுவாரஸ்யமான பேச்சில் தொலைக்காட்சி நாடகம் இணைந்து கொண்டது. இருவரும் நாடகங்களின் விமர்சனத்தை மாறிமாறி வழங்கிக் கொண்டிருந்தார்கள். மணிக்கணக்கில் கதையும் நாடகமும் சுவாரஸ்யமாகப் போய்க் கொண்டிருந்தது. சமையலறையில் மா எரிந்து புகை கிளம்பிய வாடைதான் அடுப்பில் மா அவிய வைத்த நினைப்பையே சுபாவுக்குத் தட்டி எழுப்பியது.

"ஐயோ! மா அவிக்க வச்சனான். பிறகு உங்களோட கதைக்கிறன்" என்றபடி சமயலறை வந்தாள். புகை மண்டலம் சமையலறை முழுவதும் பரந்திருந்தது. சாளரங்கள் முழுவதையும் திறந்துவிட்டாள். ஆனால், மணம் போக வேண்டுமே. இலேசான காரியமா? மா அவித்த பாத்திரம் கரி பிடித்துக் கிடந்தது. அந்த அளவிற்கு சுவாரஷ்யமாகக் கதை போனது. சிறிது நேரம் கழித்து கணவன் ரமேஸ் வந்தான்.

"உனக்கு எத்தனை தரம் ரெலிபோன் எடுக்கிறது. ஒரே என்கேஜ்"

என்றபடி கதவைத் திறந்தவனுக்கு மூக்கினுள் நுழைந்த எரிந்த வாடை ஆத்திரத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

"என்ன நடந்தது. ஏதோ எரிஞ்சிருக்கே"

"அது ராணியோட கதைச்சிக் கொண்டிருந்தனான். மா அவிப்பதுக்கு வச்சத மறந்திட்டன்"

"யாரோடையும் அலட்டிறதுக்கு ஒரு அளவு வேணும். உமக்கு எத்தனை தரம் ரெலிபோன் எடுத்தனான். பக்கத்தில மொபைலக் கொண்டு வச்சிருக்கலாமே. வீட்டில போட்டது போட்டபடி கிடக்குது. அது பற்றிய சிந்தனைகள் எதுவும் இல்லை. தேவையில்லாத கதைகள்" எனப் பலவாறாக கத்தியபடி "மணத்தை முதல்ல வெளிய எடும். நான் திரும்ப வாறன்" என்றபடி வெளியே போய்விட்டான் ரமேஸ்.

திரும்பவும் தொலைபேசி சிணுங்கியது. ராணிதான் எடுத்தாள்.

"ஏதோ மா எரிந்தது என்றீர். அதுதான் என்னவென்று கேட்க எடுத்தனான்"

"பாத்திரமெல்லாம் எரிஞ்சு போச்சு ராணி. அன்றைக்கு மீன் குழம்பும் இப்பிடித்தான். தான் சாப்பிட்ட உடனே அடுத்த வேலைக்குப் போக வேணும். நான் இப்ப வர்றேன். சாப்பாட்டைச் சூடாக்குங்கள் என்று ரெலிபோன் எடுத்துச் சொன்னார். நானும் அடுப்பில வைச்சிட்டு ரிவியோட இருந்ததால கறி எரிஞ்சு மீனெல்லாம் கருகிப் போயிற்றுது. வந்து கத்து கத்தென்று கத்திட்டுப் போனார்" என்றாள்.

"அப்படி அவர் எப்படிப் பேசமுடியும்? நீ என்ன பேசாமடந்தையா? அடங்கிப் போக நீ என்ன அடிமை இல்லையே. இடத்தைக் கொடுத்திடாத. உன்னைக் காலில் போட்டு மிதித்து விடுவார். ரிவி பார்க்கிறது உன்ர சுதந்திரம். பிழை யார் தான் விடுவதில்லை. அதிகம் கத்திக் கை நீட்டினா ரென்றால், பொலிஸுக்கு ரெலிபோன் எடுத்துப் போடு. ஊரில ராசாத்தி மாதிரி இருந்த நீ இஞ்ச வந்து அடிமையா இருக்கப் போறியா? இந்த நாடு பொம்பிள்ளைகளுக்கு நல்ல சுதந்திரமும் வசதிகளும் செய்து கொடுக்கும். நீ ஒன்றுக்கும் பயப்பிடாத. பிடிக்காட்டி விட்டுப் போட்டு தனிய போய் வாழ். அரசாங்கம் உன்ர செலவுக்குப் போதிய காசு தரும்"

என்று அக்கறையான புத்திமதி கூறுவதுபோல் குடும்பத்தை குலைத்து இன்பம் காணும் ராணி கூறினாள்.

எப்படி சுகமா? என்றே அழைப்பு வரும். ஆனால், அது தூண்டித் தூண்டிப் பற்றவைக்கும் நெருப்பாகப் போய்விடும். அனுபவசாலிகள் வயதுக்கு வந்த பெரியவர்கள் ஒரு இளங்குடும்பத்தை வாழ வைப்பதற் காகவோ அறிவுரை கூறுவர்? வாழ்வின் அழிவுக்காகவோ அறிவுரை கூறுவர்? கூடி வாழும் கூட்டைக் குலைப்பது பாவமல்லவா? இப்படியும் சில சூத்திரதாரிகளாலேயே மனிதனும் மிருகமாகின்றான். குடும்ப பந்தம் உறுதியானால் மாத்திரம் எதிர்கால உலகம் உருவாகும். இல்லையென்றால், ஆணும் பெண்ணும் திருமணம் செய்வதன் அர்த்தம் தான் என்ன? ஆணையும் பெண்ணையும் படைத்ததன் காரணம்தான் என்ன? தொலைபேசியின் இலவச இணைப்பு நன்றாகத் தொழிற்படுகிறது.

சுபி சிந்திக்கத் தொடங்கினாள்.

"உண்மை தான் அக்கா. கூட்டிக் கொண்டு வரும்போது எங்களுடைய நிலைய நினைச்சுப் பார்க்க வேண்டும். பொறுங்கள் அக்கா. என்ன நடக்கிறது என்று மட்டும் பாருங்கள்."

அன்று ஞாயிற்றுக்கிழமை. இந்நாள் ஜெர்மனி இல் இறந்த ஞாயிறு என்று சொல்வார்கள். கடைகள் எல்லாம் பூட்டப்பட்டிருக்கும். அவசரத்திற்குக் கூட ஒரு பொருள் வாங்க முடியாது. வீடுகளில் கூட எவ்வித சத்தமும் வரக் கூடாது. ஆனால் சுபா காலை ஏழு மணிக்கு உரலும் உலக்கையும் எடுத்துவிட்டாள். புட்டுக்கு மாசிச் சம்பல் போட வேண்டுமாம். இப்போதுதானே தமிழ் கடைகளில் தாயக உணவுகள் தயாரிப்பதற்கான அத்தனை பலசரக்குச் சாமான்களும் உபகரணங்களும் கிடைக்கின்றனவே. உரல் சிறிதாக இருந்தாலும் இருக்கும் வீடு நடக்கும் சத்தத்தையும் நயமாக கீழ் வீட்டுக்காரருக்கு விவரணம் செய்யக் கூடிய வகையில் தானே கட்டப்பட்டுள்ளது. தனி வீடாக இருந்தாலும் பரவாயில்லை. அக்கம் பக்கம் ஒட்டிய சுவர்

இல்லை. கீழ்வீட்டார் மேல் வீட்டார் என்ற கவனிப்புத் தேவை இல்லை. ஆனால் சுபா, குடியிருப்பதோ அடுக்கு மாடி வாடகை வீடு. அன்று எத்தனை குடும்பம் கிழமை முழுவதும் வேலை வேலை என்று ஓடிக் களைத்து இன்று ஆறுதலாகத் தூங்கிக் கொண்டிருப்பார்கள்.

உரல் உலக்கையில் போடும் இடியானது, ரமேஷ் மண்டையில் விழுவது போன்ற உணர்வுகளைத் தந்தது. இவள் என்ன செய்கின்றாள். புரியாத ரமேஷ்.

"சுபா..... சுபா.... அங்கே என்ன செய்கின்றாய். சத்தத்தை நிற்பாட்டு. கீழ் வீட்டுக்காரன் வந்து பெல் அடிக்கப் போறான்"

அவள் எதையும் காதில் விழுத்துவதாய் இல்லை. தான் நினைத்ததைத்தானே அவள் செய்வாள்.

ஆத்திரம் கொண்ட ரமேஷ் எழுந்து வந்து "இப்ப என்ன அவசரத்திற்கு இந்த சாப்பாடு செய்கிறாய். இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை என்று தெரியாதா?" மெதுவாகச் சொன்னான்.

"அதுக்கு நாங்கள் சமைச்சுச் சாப்பிடக் கூடாதா. அதுகளைப் போல பாணுக்கு பட்டர் பூசித்தான் சாப்பிட வேணுமா. எனக்கு புட்டும் சம்பலும் இன்றைக்குச் சாப்பிட வேணும்"

"அதுக்கு ஸ்ரீ லங்காக்குப் போ. இஞ்ச வந்து என்னக் கொல்லாத. முதல்ல இந்த சத்தத்தை நிற்பாட்டு"

"முடியாது என்ன நடக்குது என்று பார்ப்பம். எவன் வர்றான் என்டு பார்ப்போம்"

கையில் இருந்த உலக்கையை பறித்தான் ரமேஷ். சுபாவும் பிடிவாதமாக உலக்கையை இரும்புப் பிடியாய்ப் பிடித்தாள். எவ்வளவு முயற்சித்தும் முடியாத ரமேஷ் அவள் கன்னத்தில் பளார் என்று

ஒன்று விட்டான். அவ்வளவுதான் கையில் இருந்த உலக்கையை வீசி எறிந்தாள். அதுவும் பெரிய சத்தத்துடன் விழுந்தது. பெரிய சத்தத்துடன் அழுதபடி ஓடிப்போய் தொலைபேசியை எடுத்தாள்.

ரமேஷ் தன் படுக்கையில் போய்ப் படுத்தான். அடுத்த நிமிடமே. வாசல் அழைப்பு மணி ஒலித்தது.

வந்திட்டான் அடுத்த வீட்டுக்காரன் என்றபடி ரமேஷ் ஓடிப்போய் கதவைத் திறந்தான்.

அங்கே ஜெர்மனி போலிஸ்காரர் வந்து கொண்டிருந்தார்கள். கீழ் வீட்டுக்காரரே போலீசுக்கு சொல்லிவிட்டார்கள் என்று எண்ணியபடி "சுபா பார்த்தியா கீழ் வீட்டுக்காரர் போலீசுக்கு சொல்லிப் போட்டார்கள்" என்றான்.

"அவர்கள் ஒன்றும் சொல்லல்லை. நான் தான் சொன்னனான்"

"என்னது... என்ன பாசையில சொன்னனீர்"

"என்னத்துக்குப் பாஷை அழுதனான். விலாசம் சொன்னனான்"

அதற்குள் படி ஏறி வந்த பொலிஸார். முதலில் கேள்வி கேட்டது சுபாவிடமே.

அவளின் கையும் காலும் அழுகையும் நடித்ததனால் பொலிஸார் ரமேஷை அழைத்துக்கொண்டு போனார்கள்.

குதூகலத்துடன் தொலைபேசியை எடுத்தாள் சுபா.

"இவருக்கு வச்சேனே ஆப்பு. இப்ப கம்பி எண்ணுறார்" மறுமுனையில் ராணியும் "அப்படியா! சூப்பர். இப்போ பிள்ளைய டான்ஸ் க்ளாசுக்கு கூட்டிப் போறான் வந்து எடுக்கிறன்"

என்றபடி தொலைபேசியை வைத்தாள். இரவு வரைக் காத்திருந்த சுபா. மீண்டுமாய் ராணிக்குத் தொலைபேசியை எடுத்தாள்.

நாளை டாக்டர் பரிசோதனை இருப்பதனால், ரமேஸ் வேலைக்கு விடுமுறை எடுத்திருந்தான். ஆனால் இப்போது அவனில்லாமல் யாரைக் கூட்டிக் கொண்டு போகலாம் என்று நினைத்த சுபா ராணிக்கு தொலைபேசி எடுத்தாள்.

"ஆ ... சுபா கொஞ்சம் அலுவலாக இருந்ததனால் கோல் பண்ண மறந்திட்டேன். சொல்லும் சுபா"

"ஒன்றுமில்லை அக்கா நாளைக்கு டாக்டர்ட Termin இருக்கு என்னோட வாறீங்களா. தண்ணியும் முழிஞ்சு வாங்க வேணும்?"

"அது வந்து சுபா. எனக்கு வேற ஒரு அலுவல் இருக்கு. வேற யாரை யாவது கூப்பிட்டுப் பாருமேன். நான் படுக்கப் போறன். நாளைக்கு பிள்ளைய ஸ்கூலுக்குக் கூட்டிப் போகவேணும்" என்றவளாய் தொலை பேசியை நிறுத்தினாள்.

ஞாயிறு மறையும் முன் வந்துவிடு

தன்னுடைய நண்பன் நிரோஜன் திருநாவுக்கரசினுடைய பாடலைக் கேட்டவுடன் கணினியைத் திறந்தான். சுதன். உள்ளத்தின் கட்டளைக்குக் கட்டுப்பட்டான்.

எனக்குள் உறைந்த என்னுயிரே!

உன் தைரியத்திற்கு இம்மடல் பாடம் நடத்துகின்றது. பல்கலைக் கழகத்தில் நீ கற்கும் பாடங்கள் மனதின் பண்புகளை உனக்குக் கற்றுத் தரும் பாடங்களாய் இருக்க முடியாது. ஏக்கம் கொண்ட மனம் நீண்ட காலம் தாக்குப் பிடிப்பதில்லை. பால் கெட்டால் திரைந்துவிடும். நெய் கெட்டால் வயிற்றைப் பிரட்டும். நட்புக்கெட்டால் எல்லாமே தலை கீழாகி விடும். பேயோடு பழகினும் பிரிவதரிதே. உன்னோடு பழகிய நான் உன்னைப் பிரிவது எப்படி? என் விழிகள் உன்னையே அதிகம் படம் பிடித்துள்ளன. ஏனெனில், நேரிலும் நிழற்படத்திலும் உன்னைத்தானே என் கருமணிகள் அதிகம் நேசிக்கின்றன, தரிசிக்கின்றன. அதனால், ஏக்கத்தில் கூட என் கண்கள் கண்ணீரைச் சேகரித்ததில்லை. ஏனெனில் நீ நனைந்து குளிரடைவதை அவை விரும்பியதில்லை!

ஒன்று சேர்ந்த அன்பு எங்களது. பாகப்பிரிவினை அதற்கில்லை. என்னோடு நீயிருக்கும் பொழுதுகள் உன் பெற்றோர் மற்றோர் உன் நினைவை விட்டு மறைந்த பொழுதுகள். மாற்றானை நீ மணம் முடிக்க என் மூச்சுக் காற்றே முன் நின்று உன்னைத் தடுத்துவிடும் என்பதை அறியாதவன் நான் இல்லை. நீ கணினிக்குள் அகப்பட்ட கவிதை அல்ல. என் மனதுக்குள் எழுதப்பட்ட கவிதை.

பல்கலைக்கழகத்தில் நீ கற்று பதவி வகித்துப் பெறும் பலனை விடப் பல மடங்கு உன்னை என் இதயத்திலும் செல்வாக்கிலும் உயரத்தில் வைத்திருக்க முடியும். அந்தஸ்தில் குறைந்தவன் நான் இல்லை. சாதியில் சரிந்தவன், நானில்லை. உன்னை விட என்னால் கல்வியால் உயர முடியவில்லை. ஆனால், உன்னை விட என்னால் உழைப்பால் உயர முடியும். உன்னையும் என்னையும் இணைத்த அந்தக் காதலுக்குத் தடையென்னவென்று என் மூளைக்கு எட்டியவரை அறிய முடியாதவனாய் உள்ளேன்.

"நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்!
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோ ரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்!
பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்!
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க."

என்று சென்ற நூற்றாண்டில் பாரதி புலம்பியும் இந்த நூற்றாண்டும் தொடர்கிறது காதலுக்கு சிவப்புக்கொடி. காதலுக்காகக் காதலர்கள் உயிர் துறந்த கதை கேள்விப்பட்டிருக்கின்றேன். எந்தப் பெற்றோராவது இறந்து விடுவோம்...! இறந்து விடுவோம்...!! என்று நச்சரித்ததைத் தவிர, எங்காவது இறந்த செய்தி கேள்விப்பட்டிருக்கின்றாயா? "நம்புபவனுக்கு எல்லாம் கைகூடும்" என்று பைபிள் கூறுகின்றது.

நம்பிக்கை தான் நிஜங்களை உருவாக்குகிறது" என்று வில்லியம் ஜேம்ஸ் கூறியுள்ளார். பிரியமுள்ள பெற்றோர் உன் பிரிவைத் தாங்கார். பொறுத்தது பொன்னான நேரம். போதும் உன் அமைதி. நம்பிக்கையில் நாள் குறிப்போம். வருடங்கள் பல கடந்தும் வாழுகின்ற எம் காதல், வதுவை காணாது முடிவுறாது. நான் உரைத்த வார்த்தைகள் எல்லாம் நானாய் உரைத்தவை அன்று. எனக்குள் இருக்கும் நீயுரைக்கும் வார்த்தை என்பதை உணர்வாய்.

திங்கள் பெண்ணாள் செவ்வாய் மலர்ந்து
புதனன்று சந்திக்க வருஞ்செய்தி சொல்லாயோ?
பூத்திருக்கும் புதுமலர் புனைந்தெடுத்து மாலையாக்கி
மங்கலநாண் மகிழ்ந்தேத்த, வியாழனன்று நாள் குறித்து
வெள்ளிக்கொலுசிட்டு வதுவைவினை முடித்து
சனியன்று சடங்கு வைக்கும் செய்தி சொல்ல
ஞாயிறு மறையுமுன் வந்துவிட மாட்டாயோ
நாமிணையும் நற்செய்தி நம்பெற்றோர் செவிநுழைய.
உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இவன்
சித்திரத்து ரோஜாவைச் சிறைப்பிடித்த
உன் இதயக் காவலன்.

கணினி மூலம் அக்கடிதம் அவள் கண்களுக்குச் சமர்ப்பணம் ஆகியதும் நிம்மதிப் பெருமூச்சுடன் காதல் தேவதைக்கு உள்ளத்து நன்றியைப் புன்சிரிப்புடன் உதிர்த்து விட்டபடி படுக்கையில் சாய்ந்தான். சுதன்.

தலையீட்டைத் தவிர்க்க

ராம் பெற்றோர் ஆசைகளை வேஷமின்றி நிறைவேற்றினான். "பெற்றாலும் சுதன் தேவி பிள்ளை பெறவேண்டும்"

என்னும் புகழ்மாலையை பிறர் சொற்கோர்வையாய் பெற்றோர்க்குச் சூட்டினான். ஐரோப்பிய மண்ணிலே அந்நியர் வாழ்வில் மோகம் கொண்ட தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒரு விநோதமான இளைஞனாகக் காட்சியளித்தான்.

"என்னதான் தோல் வெள்ளையானாலும் நாகரீகத்தில் மேம்பட்டு இருந்தாலும் பண்பாட்டில் பண்பட்ட வாழ்க்கை மேற்கொண்டாலும் தமிழர் வாழ்க்கை முறைக்கு ஈடாக எதுவுமே இல்லை அம்மா" என்று தமிழர் கலாசாரம் பற்றி ராம் பெருமையாகப் பேசுவான். தமிழ் பாடசாலை செல்வதானால் தமிழர் கலாசார ஆடையில் பளிச் என்று பலர் பொறாமைக்கு ஆளாவான். ராம் கல்வி, கலைகளில் நாட்டமும் பண்பாட்டில் கட்டுப்பாடும் கொண்ட அன்பான இளைஞன்.

ஆனால், ராம் ஒரு ஆசையில் நாட்டம் கொண்டான். அதில் இருக்கும் உயர்வு கருதி அமெரிக்கா செல்ல பெற்றோர் சம்மதம் தெரிவித்தனர். இசையை ஒரு வருடம் அமெரிக்க மண்ணில் துறைபோக கற்க வேண்டும்.

இசைத்துறையில் இணையற்ற புகழ் சேர்க்க வேண்டும் என்று இரத்தத்தில் ஊறிய பண்பு தனக்குள் தூண்டவே அமெரிக்கா செல்ல ஆயத்தமானான். 12 ஆம் வகுப்பு சித்தியெய்தியவுடன் பல்கலைக் கழக நுழைவின் முன் சில மாணவர்கள் தமது விருப்பத்திற்கேற்ப அயல் நாடுகள் சுற்றி வருவது வழக்கம். விரும்பிய நாட்டில் அந்நாட்டு பிரஜைகளின் வதிவிடத்தில் விருந்தாளியாக வாழ்ந்து வருவதும் வழக்கம்.

புதிய கல்வியை மூளை ஏற்கும் முன் மனதை இலகுவாக்கவும், தாம் பெற்ற அனுபவங்களை இதமாய்ச் சுமந்து எதிர்கொள்ளும் உயர் கல்விக் காலங்கள் சுவையாய் கழிப்பதற்காகவும் இச்சுற்றுலாவை இளையவர்கள் விரும்புவர். பெற்றோர் செல்வச் செழிப்பிற்கேற்ப பிள்ளைகள் ஊர் உலா, உலக உலா செல்வர்.

ராம் 12ஆம் வகுப்பை அபாரப் புள்ளிகளால் அசத்தியிருந்தான். தன் திறமையின் பிரகாசத்தை நாட்டு மக்கள் கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தளிக்க இசைக்குழு ஒன்றைக் கல்விக் காலத்திலிருந்தே கண்காணித்து வந்திருந்தான். எத்தனை திறமைகள் இப்பிள்ளையிடம் ஒட்டிக் கொண்டிருக்கின்றன என வழமைபோல் அயலவர் பொறாமைக் கண்களிலிருந்து பார்வை வீச்சானது ராமில் கதிர் வீச்சாய் பாய்ச்சப் பட்டிருந்தது.

வெளியுலகு கற்றுத் தரும் அனுபவ பாடமும், விருட்சமாய் மனதுடன் விரிந்து கிடக்கும் இசையின் தாகமும் ஒன்றிணைய ராம் அமெரிக்கா நோக்கிப் பறந்தான். அமெரிக்க மண் இசை ஆர்வமுடையார்க்கு ஏற்ற இடம். இதனால், ராம் இசையின் திறமை நாளுக்கு நாள் வளர்ந்தது.

ஒரு வருடம் தனியனாய்த் தன் எண்ணங்களை யார் தடையுமின்றி நிறைவேற்றும் திறமைசாலியாய் பக்குவம் பெற்றான். ராம்

விருப்புக்கள் சுயாதீனமாய் சுதந்திரம் பெற்றன. தன் வாழ்க்கையைத் தானே தீர்மானிக்கும் வல்லமை வலுத்தது. எதற்குமே அம்மா, அப்பா இருவர் அனுமதிக்காகவும் காத்திருக்கும் காத்திருப்புக்கள் நேரத்தை வீணடிப்பதாக உணர்ந்தான். ஒரு வருட காலம் அமெரிக்காவில் விரைவாகக் கடந்ததுபோல் ராம் வாழ்க்கை முறையும் விரைவாகவே மாற்றம் பெற்றது. ஜேர்மனியில் ராம் பாதங்கள் பட்டன. தனக்குள் ஏற்பட்ட மாற்றம் தன் வாழ்க்கையை மேம்படுத்தப் போவதாய் மனங் குளிர்ந்தான்.

ராம் ஆற்றலொன்றும் பெற்றோர்க்குப் புதுமையில்லை. அவன் ஆர்வமொன்றும் பெற்றோர்க்குப் புதிதில்லை. அவன் மனதின் ரகசியங்கள், அவன் தம்மை மதிக்காத போக்கு, தம்மை எதிர்த்து நிற்கும் பண்பு இவையே தேவி சுதன் மனதுக்குள் பாறாங்கல்லாய் வந்தமர்ந்திருந்தன.

"என்னங்க சுதந்திரத்தை அளவுக்கதிகமாய்க் கொடுத்து விட்டோமோ. பிள்ளை இப்படி மாறிப்போய்ட்டானேங்க. அவனை அமெரிக்கா அனுப்பியிருக்கக் கூடாது"

"தேவி நடக்கிறது தான் நடக்கும். நாம் எவ்வளவு காலம் ராமோடு இருக்க முடியும். தனியாக வாழும். தனியாக முடிவெடுக்கும் பக்குவம் பெற்றால்தானே அவனால் தனித்து வாழ முடியும். அம்மாவின் சேலைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு எவ்வளவு காலம் அவனால் வாழ முடியும். எம்முடைய கடமை முடிந்துவிட்டது. இன்னும் என்ன ஒரு நல்ல இடமாகப் பார்த்து அவனைக் கட்டிக் கொடுத்துவிட்டால் நிம்மதியாக இருக்கும். கவலைப்படாதே எல்லாம் நல்லபடியாக நடக்கும்" சுதன் தேவிக்கு ஆறுதல் கூறினான்.

ஒரு நாள் ஒரு திருமண விழாவிற்கு ராம் இசைக்குழுவை அழைத் திருந்தனர். ராம் அவ்விசைக்குழுவில் பாடுவதற்கான பாடல்களை

ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான். அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின் நடைபெறப் போகும் முதல் இசை நிகழ்வு. தன் புது உத்திகள் எல்லாம் கையாண்டு அந்நிகழ்வை நடத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தான்.

"ராம் பாலும் பழத்திலும் வரும் ஒரு பாட்டை எடுத்துப் பாடேன். நல்லா இருக்கும். எங்கட சனங்களும் ரசிக்கும்" என்றாள் தேவி.

"சும்மா இருங்கம்மா உங்கட பாட்டும் நீங்களும். இந்தப் பழைய பாட்டுகள் எல்லாம் இல்லை. எல்லாம் புதிசு. அதுவும் வேற மாதிரி இருக்கும். பாருங்களேன்"

"பழசுக்கு இருக்கிற மதிப்பு புதிசுக்கு இல்லை ராம். எங்கட சனம் அதத்தான் ரசிக்கும்"

"இந்தக் கதைய விடுங்க. உங்கட சனத்த மாறச் சொல்லுங்க. அவங்க மாற வேண்டும். எப்பவும் பழைய பல்லவிதான். கேட்டுக் கேட்டுப் புளிச்சதைத்தான் கேட்க வேண்டுமா?" இந்த லோலாப் பாட்டெல்லாம் யார் கேட்பார்கள்?

"பழசு இல்லாம புதுசு எங்க இருந்து வந்தது. அதுக்கு பழசக் கட்டிக் கொண்டு தான் வாழுகின்றீர்களா? உங்கட கதையெல்லாம் கேட்டால் வாழ்ந்த மாதிரித்தான். பழைய பஞ்சாங்கமாகத்தான் வாழவேண்டும்."

"பழைய பாட்டு இல்லையென்றால், இந்த Music Group இல்லையென்று அறிவிச்சுப் போடுவன்"

"செய்யுங்கள் பார்ப்பம். இது நான் நடத்துவது. என்னிடமே அவர்கள் கேட்க வேணும். நான் Music Group கொண்டு போகத்தான் போறன். எனது இஸ்டத்துக்குப் பாடத்தான் போகிறேன்"

வார்த்தைக்கு வார்த்தை போட்டா போட்டி. கருத்து மோதல்கள். கலாசார தூற்றல்கள். இனத்தின் இழிவுகள் போன்றன வார்த்தைகளால் ராமால் வீசப்பட்டன. தேவி தன் நண்பர்களிடம் மகன் இப்பாடல்கள் பாடுவான் என்று தம்பட்டம் அடித்துவிட்டாள்.

தன் மகன் தன்னை பலவாறாக எதிர்த்துப் பேசுகின்றான் என்னும் கவலை அனைத்தும் சேர கண்களில் இருந்து கண்ணீர் அவளையும் மீறி பெருக்கெடுத்தது. அவள் கண்ணீரைப் பார்த்த மகன் "சும்மா நடிக்காதீங்கம்மா" என்று கூறிய வார்த்தைகள் கேட்டு ரணமாகியது மனம். அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சுதன் தன் கோபத்தை வெளிக் காட்டினான். பட்டென்று எதிர்பாராத விதமாக கன்னத்தில் விழுந்த தந்தையின் ஆத்திரத்தின் பிரதிபலிப்பு ராம் பொறுமைக்கு விடை கொடுத்தது. பிறந்து 20 வருடங்கள் கடந்துவிட்டான். எத்தனையோ முறை பெற்றோர் அவனைத் தண்டித்திருக்கின்றார்கள். எள்ளளவும் அவர்கள் தண்டிப்பு அவன் வளர்ச்சிக்கும் அன்புக்கும் தடையாக இருந்ததில்லை.

பொறுமை இழந்த ராமுக்கு எது செய்வதென்று அறியாத குழப்பத்தைக் காட்ட அவனது மூளையானது மேல் மாடியிலிருந்த தன் அறைக்கு விரைவாக அவனை இழுத்தெடுத்தது. பெற்றோர் இருவரையும் விலத்திவிட்டு விரைவாக மேல்மாடியிலிருக்கும் தன் அறைக்கு ஓடினான். எதுவுமே பேசாது மௌனமாய் அடங்கிய தாய் மெதுவாக வேலைக்குப் போவதற்காக கதவைத் திறந்தாள்.

தந்தையும் "கோவம் மட்டும் துரைக்கு இப்போது மூக்கு நுனியிலே வந்திடும். மேலே போகிறாய் உன் அறை அலங்கோலமாக இருக்கிறது. அதை முதலில் அடுக்கி வை. எல்லாம் அம்மாதான் செய்ய வேண்டும் என்றில்லை"

என்று ஆத்திரத்துடன் கூறியவராய் மனைவியுடன் வெளியேறினார்.

வேலைத்தளத்திலே எந்த விடயத்தில் கை வைத்தாலும் எதிலுமே மனம் நிலை நிறுத்த முடியாத சஞ்சலத்தை தேவி மனம் உணர்ந்தது. பிள்ளையின் போக்குக்கு விட்டிருக்கலாமே. இளந்தலைமுறை தாம் விரும்பியதைத்தானே செய்யும். எமது காலந்தான் கடந்துவிட்டது. எல்லாம் அனுபவித்துத்தானே இங்கு வந்தோம். மற்றவர்களிடம் நான் சொன்ன வார்த்தைகளுக்காக பிள்ளையின் ஆசையை மறுப்பதா? என்ன தான் பெரிதாய் மறுத்துவிட்டான். நான் அடம்பிடிப்பதற்கு. சீச்சீ .. என்ன மனம் எனக்கு. நான் பிள்ளைக்கு அடி வாங்கிக் கொடுத்து விட்டேனே. பெற்ற மனம் பேதலித்தது. வேலையில் இருப்புக் கொள்ள வில்லை. மேற்பார்வையாளரிடம் உடம்புக்கு முடியவில்லை டாக்டரிடம் போக வேண்டும் என்று சாட்டுச் சொல்லிவிட்டு வீடு நோக்கிச் சென்றாள் தேவி.

இருந்தாலும் நாளை வேலைக்குப் போகும்போது வைத்தியரின் துண்டு கொண்டு போனால்த்தானே அதிகாரி மீண்டும் வேலைக்குத் தேவியை ஏற்றுக் கொள்வார். அதனால் டாக்டரிடம் சென்றாள். வழமை போல் டாக்டர் வரவேற்பறை நாற்காலி அவளைத் தாங்கியது. சில வேளை டாக்டரிடம் காட்டுவதற்கு அப்பொயின்மென்ட் இல்லை யென்றால் அனுமதி கிடைக்காது. இன்று என்னவோ அவளுக்கு அனுமதி கிடைத்துவிட்டது. நேரம் செல்லச் செல்ல அவளுக்குச் சலிப்பேற்பட்டது. இது அப்பொய்ன்ட்மென்ட் இல்லாது வருபவர்களுக்கு எப்போதும் வரும் சலிப்புத்தான். ஆனால், ஒருபடியாக மருத்துவரிடம் வலிந்து தனக்கு வராத ஒரு நோயை வரவழைத்துப் பொய்யான நோய்க்கு மருந்துவரிடம் மருந்துச் சீட்டையும் விடுமுறைக்கான சீட்டையும் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினாள். வீட்டு வாசலில் சுதன் கார் நிறுத்தப்படுவதைக் கண்ட தேவி இவர் என்ன இன்று நேரத்துடன் வந்துவிட்டார் என்று நினைத்தபடி அவரருகே சென்றாள்.

"என்ன ஆச்சரியமா இருக்கு. நேரத்தோடு வந்திட்டீங்க"

"மனசு சரியில்லை தேவி மனம் நல்லா இருந்தால்தானே வேலை செய்ய முடியும். நான் ராமுக்குத் தேவையில்லாமல் கை நீட்டியிருக்கக் கூடாது. அவனும் தோளுக்கு மேலே வளர்ந்திட்டான்"

என்றபடி கதவைத் திறந்தான்.

உடலென்னவோ இருவருக்கும் வாசலில் நின்றது மன மென்னவோ வீட்டினுள் இருந்தது. உடையும் கழட்டாது மகனைச் சமாதனப்படுத்துவதற்காக உடனடியாக ராம் அறையை நோக்கிச் செல்வதற்காக வரவேற்பறையினுள் இருந்த படிகளில் ஏறினான். குனிந்து படிகளில் பாதங்களை வைத்தவன் நிமிர்ந்து அடுத்த படிகளில் கால் வைப்பதற்காக மேல் நோக்கினான். அதிர்ந்துவிட்டான். படிகளில் தொங்கிய ராமுடைய பாதங்களைக் கண்டு துடித்துப் போனான். தேவி... என்று அலறியபடி மேல் நோக்கிப் பார்த்தான். படிக்கட்டுகளில் தாயின் சீலையால் தூக்கிட்டுத் தொங்கிய ராமின் உயிர் பிரிந்த உடல் கண்டான். ஸ்தம்பிதமானான். தாங்கமுடியாது அவதிப்பட்டான்.

கயிற்றை அறுப்பதற்காகக் "கத்தியை எடுத்துவா தேவி..... " என்று பலமாகக் கத்தினான்.

விசயம் எதுவென்று அறியாது சமையல் அறையினுள் ஓடிச் சென்று கத்தியை எடுத்துக் கொண்டு வேகமாய் ஓடிவந்த தேவி மகனைப் பார்த்தாள். ஐயோ.... என்று அலறியவளாய் கையில் கத்தி இருப்பதையும் உணராதவளாய் கையால் தலையில் ஓங்கி ஓங்கி அடுத்தபடி உலகமே அதிரும்படிக் கத்தினாள். அடிக்க அடிக்க கத்தி தலையைப் பதம்பார்த்தது. அப்படியே இரத்த ஓட்டத்தின் நடுவே தேவி தரையில் சாய்ந்தாள். மகனைப் பார்ப்பதா, மனைவியைப் பார்ப்பதா? சுதன் நடைப்பிணமானான். அழுது கொண்டு தரையில் சட்டென்று

அமர்ந்தான். கைகள் இரண்டையும் கோர்த்து மேல் உச்சியை அழுத்தியபடி அப்படியே படிக்கட்டுக்களில் அமர்ந்து கொண்டான். விரிந்த கண்களினுள் தொங்குகின்ற தன் மகனின் கால்களை நோக்கினான். யாரை அணைப்பது அழுவது எதுவுமே புரியாது. அம்புலன்ஸ்க்கு அழைப்பைக் கொடுத்தான். மருத்துவமனையில் உணர்வற்ற தேவி உடலும், உயிரற்ற ராம் உடலும், உணர்விருந்தும் உயிரிருந்தும் சலனமற்ற மௌனமான சுதனும் .....

தவறுகள் தண்டிக்கப்படலாம், திருத்தப்படலாம். தண்டனையே வாழ்வானால்?

காலை 9 மணியைச் சுழலும் கடிகாரம் சுட்டிக் காட்டியது. இன்னும் சில நிமிடங்களில் துணிவின் முடிவு நிரூபிக்கப்படப் போகின்றது. கட்டிலின் மேலே வைக்கப்பட்டிருந்த பெட்டியினுள் மாற்றுவதற்கான இரண்டு ஆடைகளையும் அத்தியாவசியத் தேவைக்கான பொருட்களையும் வைத்த சுவேதா, தன் மனம் போல் பெட்டியை இறுக்க மூடினாள். இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்த கட்டில்கள் தன் வாழ்வின் விரிசலைப் படம் போட்டுக் காட்டியது. 10 வருட காலங்கள் வாழ்ந்த அவள் பொய்யான வாழ்வுக்கு விடிவு காண அவள் எடுத்த முடிவு சரிதானா? கண்ணாடி முன்னே நின்று தனது உருவத்தை வெறித்துப் பார்த்தாள். அவள் முகம் மன ஆழத்தை மறைத்துக் காட்டியது.

போலியாக எத்தனை வருடங்கள் உள்ளத்திற்கும் உடலுக்கும் வஞ்சனை புரிந்து ஒரு பொய்யான வாழ்வில் தன்னைத் தானே ஏமாற்றியிருக்கின்றாள். சமுதாய ஓடையில் அவள் ஒரு சாக்கடை. இழந்த பொழுதுகள் நிம்மதி இழந்த பொழுதுகள். வேதனை சுமந்த உறவுகள். இப் பத்து வருட சிறைத் தண்டனை வடுச் சுமந்த அவள்

நெஞ்சை வாட்டியெடுத்திருந்தது. கன்னங்களில் ஆறாக வடிந்து கொண்டிருந்த கண்ணீர், எரிந்த நெஞ்சத்திற்கு மருந்திட்டது. சிவந்த கண்கள் அவள் எடுக்கும் தீர்மானத்திற்கு எச்சரிக்கை செய்தது. பாறாங்கல்லான நெஞ்சுடன் வீதிக்கு வந்தாள் சுவேதா. அவளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வாகனத்தினுள் பெட்டியைப் போட்டாள். திரும்பி நின்று அந்த உயர்ந்த கட்டிடத்தை ஒரு தடவை நோக்கினாள். ஆயிரம் நினைவுச் சுமைகள் சுமந்த அந்தக் கட்டிடம் கண்ணில்பட பலமாக மாறிமாறித் தன் கன்னங்களில் என்றுமே விழுகின்ற அடிகள் அவள் மூளையில் சுள்ளிட்டன. தவறுகள் திருத்தப்படலாம், தண்டிக்கப்படலாம், தண்டனையே வாழ்வானால் தப்புவது தானே வழி. சந்தர்ப்பம் சூழ்நிலை அவள் வாழ்வுக்கு ஏற்படுத்திய கறையும் அதிலிருந்து விடுபடுவதற்காக அவள் எடுத்த முயற்சிகளும் விழலுக் கிறைத்த நீரானது.

மூன்று மணிக்கு வீட்டை விட்டுச் செல்லும் கணவன் திரும்பவும் வீட்டை அடைவது காலை 10 மணிக்குத் தான். அதற்கிடையில் அவசர தேவைக்காய் அவள் அடிக்கடி நாடுவது, வாகீசன் அன்பைத்தான். கடமை, கடமை என்று குடும்பத்தில் சிறிதும் கவனமின்றி வருமானத்தையே வாழ்க்கையாக வாழும் கணவனிடம் காணாத ஒரு பாசத்தை வாகீசனிடம் கண்டாள், சுவேதா. இந்தத் திருமண பந்தத்தில் இத்தனை வருடங்கள் தாலியைச் சுமந்த அவளுக்கு அவன் செய்தது தான் என்ன? ஒரு ஆண் திருமணம் செய்வது, சமுதாயத்தில் கணவன் என்ற அந்தஸ்தைப் பெறுவதற்காக மட்டுமல்ல. தன்னை நம்பி தன் நிழலில் வாழ வந்தவளின் ஆசாபாசங்களிலும் அக்கறை காட்டுவதற்காகவும் தான். ஆனால் அவள் கணவனிடமிருந்து பெற்றது தான் என்ன? அவள் இதை அடிக்கடி நினைத்துப் பார்த்துக் கண்ணீரால் துயர் துடைத்த காலங்கள் பல. பெண்மையின் பலவீனம், அந்தரங்க ஆசைகள்,

வழி தேடித் தந்த பொழுதுகள், கணவனின் அலட்சியப் போக்கு அத்தனையும் சாதகமாக அவன் நடத்தை வாகீசன் மனச்சிரத்தைக்கு அடிமையாக்கியது. அறிவை விட ஆசைக்கே மனம், இடம் தந்தது. கட்டுப்பாட்டை விடக் கட்டாய தேவையாக வாகீசன் மன வாசம் தென்பட்டது.

தும்மலையும் காதலையும் மறைக்க முடியாதல்லவா? கணவன் சந்தேகக் கண் வெளிச்சமாக்கியது, அவள் கள்ளத் தொடர்பை. வார்த்தைக் கணைகள் அவள் மனதைச் சல்லடையாக்கின. நம்பிக்கையின் உச்சத்தில் மனைவியைத் தனிமைப்படுத்திய தவறை உணர்ந்த கணவன், தனிமையே இல்லாத பொழுதுகளைத் தந்தான். கிட்ட நின்று மனதால் எட்ட நின்றான். ஒட்டிய படுக்கைகள் பிரிக்கப்பட்டன. தன்னுடைய பெரிய தவறை உணர்ந்த சுவேதா, வாகீசன் தொடர்பைத் துண்டித்தாள். வாழ்க்கை முழுவதும் தன் கறையைக் கழுவித் துடைக்க கணவனுக்கு அடிமையானாள்.

வெளி உலகிற்குத் தம்பதிகளாயும், வீட்டிற்குள்ளே விரிசலான இதயங்களாயும் குடும்ப வாழ்க்கை வாழ்ந்தனர். அத்தனை பெண்களுக்கும் இருக்கக்கூடிய ஆடை, அலங்காரங்களின் ஆசைகள் அத்தனையையும் அடக்கினாள். பெண்மையைப் பூட்டி வைத்தாள். இவ்வாறு வாழ்க்கையின் 10 வருடங்கள் பாழாக மீதமுள்ள வாழ்வுக்கு விடை காண இன்று ஏன் இந்த முடிவைத் தேடவேண்டும்? எண்ணச் சிறையில் அடைபட்ட சில சம்பவங்கள், நிழற்படமாய்க் கண்முன்னே தோன்றி மறைய வாகனத்தினுள் ஏறி அமர்ந்தாள், சுவேதா.

சாரதி இருக்கையில் அமர்ந்திருந்த வாகீசன், அவளிடம் எதுவுமே கேட்காமல் வாகனத்தை மௌனமாகச் செலுத்திக் கொண்டிருந்தான். நீண்ட மௌனத்தின் பின்

"ஏன் சுவேதா! 10 வருட மௌனத்தின் பின் ஏன் இந்த மனமாற்றம்? திடீரென உன் அழைப்பு வந்ததும், என் நின்ற இதயம் இன்று தான் தொழிற்பட்டது போலிருந்தது. எப்படி இத்தனை வருடங்கள் என்னை உதாசீனம் செய்ய முடிந்தது?" என்றான்.

"தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலங்களில் கட்டுப்பட்ட ஒரு பெண்தானே நானும். மனதாலும் உடலாலும் கணவனுக்குத் துரோகம் செய்ய மாட்டோம் என்று தானே தாலியைக் கழுத்தில் தாங்குகின்றோம். அதை நெஞ்சில் சுமந்து தவறை மனதால் செய்த பாவத்துக்குத் தான் இத்தனை வருடங்கள் துன்பத்தை அனுபவித்தேன். சோகங்களை எனக்குள்ளே மறைத்து வைத்திருந்தேன். என்னை நினைத்து உங்கள் வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருக்கும் உங்களுக்கு என்ன ஆறுதல் என்னால் சொல்ல முடியும்? அதனாலேயே மௌனமாக நல்ல வாழ்வு உங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று கல்லாய் அமர்ந்து அனைத்து உயிர்களையும் காத்துக் கொண்டிருக்கின்ற ஆண்டவன் காதுகளுக்கு மாத்திரம் எனது வேண்டுகோளைச் சமர்ப்பித்தேன்" என்றாள்.

"சரி எதற்காக மனச்சிறை தகர்த்துப் பெட்டியுடன் புறப்பட்டு விட்டாய்?" என்றான்.

உத்தம புருஷனுக்குத் துரோகம் செய்து விட்டோமே என்று அவர் எனக்குத் தரும் தண்டனைகள் எல்லாம் ஏற்று அவர் காலடியில் கிடந்த நான், இப்போது தான் அறிந்தேன் அவர் வேறு ஒரு பெண்ணுடன் சந்தோஷமாக உடலாலும் மனதாலும் தொடர்பை வைத்திருப்பதை. எனக்குள்ளேயே அழுது அழுது எனது ஏமாற்றத்தைத் தாங்க முடியாது தன்னந்தனியளாய்த் தவித்தேன். நான் உண்மையை அறிய அவரிடம் இதுபற்றிக் கேட்டபோது

"இதைக் கேட்கும் உரிமை உனக்கேது? நான் ஆண். எது வேண்டுமானாலும் செய்யலாம். நீ என் வீட்டு எச்சிலை உண்ணும் நாய். போட்டதை தின்றுவிட்டு கிட. எனக்குச் சரியென்று பட்டதைத் தான் நான் செய்வேன்" என்று திமிராகச் சொல்லிவிட்டு, வீட்டிலே அவளுடைய படத்தை படுக்கையறையினுள் வைத்துள்ளார்.

அதைப் பார்க்கும் போதெல்லாம் பண்பட்ட என் உள்ளம் நிலை தடுமாறுகின்றது. பெண் என்ன கிள்ளுக்கீரையா? நோண்டிப் போடுவதற்கு. வாழ வேண்டிய வாழ்வை அன்பை விலைபேசும் ஒருவனுடன் வாழ்ந்து கெடுக்க நான் விரும்பவில்லை. என்னையே நினைத்துக் காலம் முழுவதும் காத்துக் கிடக்கும் உங்களின் நியாயமான காதலை ஏற்க என் மனது இடம் தந்தது. சம்பிரதாயம் பார்த்து மனப் பொருத்தம் பார்க்காது என் கழுத்தில் ஏறிய மாங்கல்ய பந்தத்தை உடைத்தெறிய நினைத்தேன். என்னை நீங்கள் ஏற்பீர்கள் என்ற தைரியத்தில் துணிந்தேன். வாழ்க்கை வாழ்வதற்கே அது இறப்பு வரை தான் தொடரும். அதைத் தாண்டி யாரும் வாழ்வதில்லையே. இறப்பு வரை இயல்பாக வாழ்வோமே! என்றாள்.

"இது தான் பட்டுத் தெறித்த தத்துவமோ?" என்று கூறிப் புன்னகை புரிந்த வாகீசன், அவள் கண்ணீரைத் துடைத்தபடி அவளை அணைத்தான். மனச்சுமையை இறக்கிய நிம்மதியில் அவள் உடம்பு காற்றுப் போல் இலேசாகியது.

தாமரை ஏன் தயங்குகிறாள்

தைரியம் மிக்க தாமரைக்கு நடந்தது தான் என்ன? பரதம் ஆடும், அவள் கால்கள் பதட்டம் கண்டதும் ஏன்? பட்டென்று விடையளிக்கும் அவள் மூளை பரீட்சையில் பங்கம் விளைவித்ததும் ஏன்? அடுக்கடுக்காய் வினாக்கள் கோர்வைபோல் அவள் ஆசிரியர் மூளைக்குப் படையெடுத்தன. அவள் மாணவர்கள் மனநிலையைக் கற்றுத்தான் இத்தொழிலைக் கையேற்றாள். அருகே தாமரையை அன்பாய் அழைத்தாள், ஆசிரியை சத்யா.

"தாமரை உமக்கு என்ன நடந்தது. பரீட்சையே வாழ்க்கை என்று நம்புகின்றாயா? இல்லை. அது ஒரு சூதாட்டம். வெற்றியும் தோல்வியும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை உன் மனம் ஏற்கப் பழக வேண்டும். அறிவுக் கிடங்கிற்குள் அமிழ்ந்து கிடக்கிறவள் நீ. நீ அள்ளிப் பருகியவை அளப்பரியன. பதட்டம் ஏன் ஏற்படுகின்றது? பரீட்சையில் வெற்றியடைய வேண்டும் என்னும் அதிகூடிய வெறியே இதற்கெல்லாம் காரணம்"

"இல்லை மிஸ். நான் நல்லாத்தான் படிச்சனான். ஆனா பயமா இருக்கு"

"பரீட்சை மண்டப வாயிலை அடைந்தவுடன் உனது இதயம் பட்பட்டென்று உன்னை எதிர்த்து நின்று துடிக்கின்றதா? உடலில் திடீரென்று வெப்பம் அதிகரித்து வியர்வை வெளிவர எத்தனிக்கின்றதா? தொண்டையில் நீர் வற்றி நா வறண்டு வார்த்தைகள் வெளிவரத் தயங்குகின்றனவா?"

அத்தனை வினாக்களுக்கும்

"ஆம்" என்ற விடையே தாம்ரையிடமிருந்து வெளிவந்தது.

அழகாகச் சிரித்த ஆசிரியர்,

"அது அப்பொழுது மாத்திரம் உன்னோடு உறவாட இணைந்த ஒரு உணர்வு. அதி வேகமாக உனக்குள் பெருக்கெடுக்கும் உணர்வு. அது முற்றுமுழுதான பதட்டமும் அன்று. முற்று முழுதான பயமுமன்று. உனக்குள்ளே உனது ஆளுமையைப் புதைப்பதற்காய்ப் புறப்பட்ட ஒரு தற்காலிக எதிரி. வீட்டிலிருந்து புறப்படும் முன் பரீட்சை என்னும் ஒன்று இருப்பதையே மறந்து விடு. முதல் நாள் மண்டை வீங்கப் படிக்காதே. பரீட்சை அன்று மூக்கு முட்ட உணவருந்தாதே. நேரத்துக்குப்படுத்து நேரத்துக்கு விழித்தெழு. பரீட்சைக்குப் போகும் போது படமாளிகைக்குப் போகும் உணர்வுடன். பதட்டம் ஏற்படுத்தும் பெற்றோரையும். பரீட்சைப் பேச்செடுக்கும் நண்பர்களையும் அதட்டி அடக்கு. இயற்கையை அனுபவித்துக் கொண்டே பயணமாகு. படிக்க வேண்டியவை அனைத்தும் படித்துவிட்டேன். இனி எது வரினும் துணிந்து செயற் படுவேன். பலன் எதனையும் ஏற்றுக் கொள்வேன் என்னும் பக்குவத்தை மனதில் வரவழைத்துக் கொள்"

"ஓகே அப்படித்தான் நான் செய்வேன். ஆனால், பரீட்சை மண்டபத் திற்குள் நுழைந்தால், திரும்பவும் வியர்த்து நெஞ்சு பட்பட்டென்று வேகமாக அடிக்கின்றது"

"பொறு. பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்து விட்டாயா! அடக் கத்துடன் முதலில் சுத்தக்காற்று உள் நுழைய அனுமதி வழங்கும்படி ஆசிரியரிடம் பயமின்றிக் கேள். இல்லையேல், அனுமதி பெற்று சாளரத்தை நீயாகவே திறந்து சுத்தக்காற்றை அழைத்தெடு. கையில் வினாப்பத்திரம் வந்து அமர்ந்து விட்டதா? இல்லை, உன் திறமையை வெளிப்படுத்தும் உனது நேரம் வந்து விட்டதா? ஆழமாகக் காற்றை உள்ளே இழுத்து இரண்டு நிமிடம் வைத்திருந்து பின் வெளியகற்று. சிறிது குளிர்ந்த நீர் அருந்து. எல்லாம் அறிந்தவள் நீ என்னும் ஒரு கர்வத்தை வலுக்கட்டாயமாக ஏற்படுத்திக் கொள். உனக்கு முன்னே அமர்ந்திருக்கும் மேற்பார்வையாளர் உடையேதும் அணியவில்லை. அல்லது கோமாளிபோல் உடையணிந்துள்ளார் என்று மனதிற்குள் நினைத்துப் பார். உன்னையறியாமலே உனக்குச் சிரிப்பு வந்து உன் எண்ணத்தைத் திசை திருப்பும். இத்தனையும் நினைத்துப் பார். நானும் உன் வயது கடந்தவள் தான். எத்தனையோ பரீட்சைகளில் அமர்ந்து சித்தியும் பெற்றுள்ளேன். தென்துருவத்தை அடைந்த முதல்ச் சிறுவன் நான் தான் என்று நாளை சரித்திரம் குறிக்கும் என்று 12 வயதிலே நம்பியவர் அமுட்சேன் என்பவர். நம்பிக்கைதான் வாழ்க்கையின் அச்சாணி. வெற்றி என் கையில் கிடைக்கும் என்று நம்பு. பரீட்சை உன் திறமையைத் தீர்மானிப்பதில்லை. பட்டங்கள் உன் திறமைக்கு விலாசப்பலகை அல்ல. உன் செயலே நாளை கல்வெட்டில் உன் திறமைக்குக் கட்டியம் கூறும். உன் கெட்டித்தனத்தை எனக்குத் தெரியும் தாமரை! பயப்படாமல் நாளை சிரித்த முகத்துடன் பரீட்சை மண்டபத்திற்கு வரவேண்டும்" என்றாள் ஆசிரியை சத்யா.

தாரம் இழந்த தபுதாரன்

ஆட்டம் பாட்டுக் கொண்டாட்டம். வீட்டுச் சுவர்களில் பட்டுத் தெறித்த ஒலியின் துள்ளல் அலைஅலையாய் மிதந்து கொண்டிருந்தது.

"அப்பா! அங்கு என்னதான் செய்றீங்கள்? இஞ்ச வந்து கொஞ்சம் பாத்திரங்களைக் கழுவி வையுங்கோ"



அந்த அறையினுள் அவரால் என்னதான் செய்ய முடியும். எத்தனை வசதிகள் அந்த அறையினுள் இருந்தாலும் அவர் ஒருபுறம் ஒதுங்கிய வாழ்வுதானே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அன்று நண்பர்கள் புடைசூழ புட்டிகளின் பரிமாற்றத்தில் ஆளுக்கு ஒரு பாடல் பாடி ஆனந்தத் திருவிழா எடுக்கும் போதெல்லாம் அடிக்கடி கேட்கும் Taste க்கு அடுப்படியில்

நின்று அனலுக்கு அடிமையானவள், இன்று அனலுக்குள்ளேயே அஸ்தமனமாகி விட்டாளே. அப்போதெல்லாம் கதிரேசுக்கு ஆத்திரமும் அகங்காரமும் அளவுக்கதிகமாகவே இருந்தது. ஏனென்றால், ஆட்டிப் படைக்கவும் அணைத்தெடுக்கவும், அளவுக்கு மீறி உரிமை கொண்டாடவும் பொறுமையின் பொக்கிஷம் அருகிலேயே இருந்தது. ஆனால், இன்று பொறுமையையும் அடக்கத்தையும் அந்தப் பொக்கிஷம் கண்ணுக்குத் தெரியாமல் எங்கோ இருந்து அவருக்குப் போதித்துக் கொண்டிருக்கின்றது. இதுதான் சொல்வார்கள், கண்ணுக்குத் தெரியாததற்கு ஆற்றல் மிக அதிகம் என்று. மின்சாரம் கண்ணுக்குத் தெரியாதது. ஆற்றல் மிகுந்தது. காற்று கண்ணுக்குத் தெரியாதது. ஆற்றல் மிகுந்தது. சாய்மானைக் கதிரையில் சாய்ந்திருந்த கதிரேசுவை உலுப்பிவிட்டது, அவர் மகளின் அழைப்பு ஒலி.

இப்போதெல்லாம் கதிரேசுவின் கரங்கள் அளவுக்கதிகமாக நடுக்கம் எடுக்கின்றது. அன்றெல்லாம் குடியே கதியாய்க் கிடந்தவருக்கு ஆண்பலம் அதிகமாகவும், உடலுறுதி மேம்பட்டும் இருந்தது. அக்காலத்தில் தன் மனைவிக்கு உடலுழைப்பைத் தந்துதவ வேண்டுமே என்று எள்ளளவும் எண்ணத் தோன்றவில்லை. ஆனால் இன்று குடியை வெறுத்து ஒதுக்கி விட்டார். ஆயினும் உடல் தளர்ந்து நடுக்கம் கண்டுவிட்டது. என்னதான் இறுதியில் திருந்தினாலும், உடல் பழைய பகையை மறக்காது என்பதுதான் உண்மை. தெய்வம் நின்று கொல்லும் என்பது போல் உடலும்தான் நின்று கொல்லும்.

தன்னுடைய மூன்றாவது காலைத் தொட்டு எடுத்தார், கதிரேசு. தன் மனைவியின் கரம் இணைந்த துணிவுடன். மெல்லமெல்லத் தத்தித்தத்திச் சென்றார். பாவித்துத் தள்ளிய பாத்திரங்கள் எல்லாம் கதிரேசு கரங்கள் பட்டுப் பளிச்சிட்டன.

நடுங்கிய கரங்கள் பட்ட பாத்திரம் ஒன்று தடுமாறி நிலத்தில் விழுந்து பெரும் சத்தத்தைத் தந்தது. சத்தம் கேட்டு ஓடி வந்த மகள்

"என்ன சத்தம் அப்பா. மெல்லச் செய்யக் கூடாதா? அங்க எல்லாரும் பார்க்கிறாங்கள்" என்றபடி சென்றாள்.

உங்களுக்கு என்னவாவது நடந்ததா என்று கேட்டிருந்தால், மனம் மகிழ்ந்திருப்பார். ஆனால், இப்போது மனபலம், விருப்பு வெறுப்பு எல்லாம் இழந்துவிட்டார் அல்லவா! அதனால், கவலை மிகப்படவில்லை

இவர் ஒரு பிரபலம். மனைவி மறைவில் இழந்தது மனபலம். தன் கற்பனைக் கண் இப்போது அரைக்குருடாகி விட்டது. காட்சிகள் தெளிவுபடத் தடங்கள் வீட்டினுள் வந்து வந்து போகின்றன. பாத்திரங்கள் கழுவித் துடைத்தவர் கண்களுக்கு உயிரற்ற கோழியொன்று இவர் உடை கழட்ட உத்தரவு தந்து உறைந்து ஒடுங்கிக் கிடந்தது. இப்போது இவர் கோழிக்கு உடை கழட்ட வேண்டும். உயிருள்ளவர்களுக்கு உயிரற்ற அவ்வுடல் அஸ்தனமாக வேண்டும். அவ்வுடலின் தென்பில் அவர்கள் புரதம் பெற வேண்டும். அதற்காக அக்கோழி இறுதிக் கிரியையாக கதிரேசு கரம்பட்டு பொரித்துப் பரிமாறப்படும். கண் பார்வை அரை வாசியாக படியிறங்கி இருந்தாலும் அவர் அகக்கண் 100 வீதம் இப்போது தெளிவாகத் தெரிகின்றது. புரிந்தோ புரியாமலோ வயதான தந்தையிடம் அன்பாய் வேலைவாங்கும் பிள்ளைகள் ஒரு நிமிடம் அவர் நிலையில் நின்று சிந்தித்தால் உடல்பலம், மனபலம் இழந்திருக்கும் உருவத்தின் வருத்தம் புரிந்துவிடும்.

தாரத்தின் மகிமையைத் தாரம் இழந்த நிலையிலேயே மனிதன் முழுமையாக உணர்கின்றான். வீட்டிற்கு விளக்கேற்ற ஒரு பெண் தேவை என்பார்கள். கைவிரல்களற்ற ஒருவர் வீட்டில் இல்லாமல் இருப்பாரா? ஒரு மனையில் புகுந்த மனையாள், அம்மனையில்

வாழ்வோர் அனைவரின் அனைத்திற்கும் ஒளியேற்றுவாள். அக இருள் நீக்கி இன்ப ஒளி ஏற்றுவாள். தோழியாய், மனைவியாய், தாயாய், குருவாய், ஆலோசகராய் அனைத்துமாய் அவதாரம் எடுப்பவள் தான் தாரம். அத்தாரத்தை இழந்த தபுதாரன் தன் சக்தியில், தன் வெற்றியில், தன் இன்பத்தில் அரைப்பகுதியைத் தொலைத்தவன். அவன் ஏறுபோல் பீடுநடை போனதெங்கே.

பாடல் ஆடல் கலந்த கூச்சலிடையே தந்தையை வந்து வந்து எட்டிப் பார்த்த மகள். அவரின் உணவுக்காக வேகத்தை அதிகரிக்கச் செய்து மீண்டும் ஆட்டத்தில் கலந்து கொண்டாள். அடுப்பில் கருகிய கோழியின் வாசனை மூக்கைத் துளைக்க இவர் என்ன செய்கின்றார் என்று சத்தமிட்டபடி சமையலறை நாடினாள். அங்கே கதிரேசு நிலத்தில் விழுந்து தலையில் அடிபட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். இவர் எப்போது விழுந்தார்? அலறல் சத்தம் கேட்டதா? இல்லையா? எதுவும் அறியாது மதுவின் மயக்கத்திலும் பாடல் சத்தத்திலும் மயங்கிக் கிடந்த பிள்ளைகள் தந்தையின் நிலையைக் கண்டு பதறினர்.

திருந்தாத ஜென்மங்கள் இருந்தென்ன இலாபம்

திரு! திருந்தாத ஜென்மம் என்பது பல சமூகநலவாதிகள் முடிவு. ஆனால், திருவே என் பாசவிளக்கு பண்புள்ள மகன். என் காலடி மண்ணில் பூசை செய்யும் அன்புப் பண்பாளன். இது தாயாரின் மன எண்ணம். யார் அந்தத் திரு?

ராஜி பால் நிறக் கன்னங்களில், கண்ணீர் கண்மையின் நிறங் கலந்து சாரைசாரையாக வரிபோட்டது. வழிகின்ற கண்ணீரைத் தேக்கி வைத்திருந்தால், குளமொன்றை அடையாளச் சின்னமாகக் கட்டி வைத்திருக்கலாம். விடியாது எனக்கினி பொழுதுகள். இவ்வாழ்க்கைக்கு விடை தேடவேண்டியது அவசியம் என விக்கி விக்கி அழுதாள். மாரிக்குளிரில் விறைத்துத்தான் போனாள். முழங்காலைத் தொட்டு விடும்படி பனிப்படுக்கை வீதியை ஆக்கிரமித்திருந்தது.

வீட்டு வாசலில் நின்று "மாமி கதவைத் திறவுங்கள்.... எனக்கு கை சரியா விறைச்சிட்டு. உடம்பெல்லாம் குத்துது..... கால் விரல்களெல்லாம் விறைச்சிட்டு. தயவுசெய்து கதவைத் திறங்க மாமி. உள்ளுக்குள்ள வந்து கதைக்கலாம். பிளீஸ்... என்னால முடியல்ல. என்னால தாங்க

முடியல.....ஜக்கட்டை எடுத்திட்டு வெளியில போறதென்றால் போறன். அதை எடுக்கவாவது கதவைத் திறவுங்க..."

"என்ன அங்க நின்று சீன் போடுறியா. எக்கேடு கெட்டாவது போ. செத்துத்தொல. எங்களை நிம்மதியாய்ப் படுக்க விடு" மாமியின் அதட்டல் பேச்சு.

"என்னாங்க கொஞ்சங் கதவத் திறங்க. உள்ளுக்கு வந்து கதைக் கிறன். கையெல்லாம் விறைச்சுப் போச்சு. வாங்க..." உதவிக்குக் கணவனை அழைத்தாள். ராஜி.

பிரான்ஸ் மண்ணில் அன்றைய வெப்பநிலை –18 பாகை காட்டியது. எந்தக் கல்நெஞ்சக்காரரும் குளிரில் வாடுவோருக்குக் கரைந்து விடும் காலநிலை. ஆனால், ராஜி மாமியாரோ அதற்கு விதிவிலக்கு. இரும்பிதய இயந்திரமோ! அழுதழுது ஓய்ந்த ராஜி அவ்விடத்தில் சரிந்துவிட்டாள். அவ்வீடு நாடி வந்த அம்பிகைபாதம் அலறித் துடித்தபடி

"ராஜி...! ராஜி...! என்னாச்சு..... என்னாச்சும்மா.... எங்க போயிற்றிந்த களிசறைகள்"

வாசல் மணியை அழுத்தினார். கதவு திறக்கப்படவில்லை. ஒரு முடிவோடு இருப்பவர்களை எதுவுமே செய்ய முடியாது. கைத் தொலைபேசி போதுமே ஒரு உயிரின் உடனடித் தேவைக்கு. இலக் கத்தின் துணையோடு அம்புலன்ஸ் வாகனம் எதிரே வந்து நிற்க, உணர்விழந்த ராஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்.

இயற்கையாகவே பெண்களுக்கு இரங்கும் குணமுண்டு என்ப தெல்லாம் அனைவருக்கும் பொருத்தமில்லாத வாசகம். எழுதப்படும் பொன்மொழிகள் எல்லாம் எல்லோருக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாதல்லவா! சூழ்நிலை, காலம், பரம்பரைக் குணம், வளர்ந்த

விதம் என ஆளுக்கு ஆள் வேறுபடும் என்பது இந்த ராஜி மாமியார் பக்வதி மூலம் அறியப்படுகின்றது.

மருத்துவமனை மருத்துவம் பார்த்த பின்புதானே மற்றவை பற்றிப் பேசும். இது உடல் நிறம் போல் மன நிறமும் கொண்ட வெள்ளையர்கள் தயாள குணத்தின் ஒரு வடிவம். வைத்தியசாலைப் படிவங்களை நிரப்பி அளித்த பின் ராஜி அருகே வந்தார் சேகர்.

"என்னம்மா நடந்தது.... "

"அழுகையைத் தவிர வேறு எதுவுமே பேசமுடியவில்லை. வெளியே விட்டுக் கதவைச் சாத்திவிட்டார்கள்..."

"வீட்டில் திரு நின்றானா?"

"ம்...ம்...."

"திருந்தாத ஜென்மம்...."

"நீ கவலைப்படாதே.... இது நீ இரண்டாவது ஆள்.... இதற்கு முன்னும் ஒரு பிள்ளையக் கல்யாணம் செய்து. அந்தப் பிள்ளையிலும் சந்தேகப்பட்டு துரத்தி விட்டிற்றுதுகள். (மனிதன் மிருகமாவது மற்றவர்கள் வார்த்தைகள் உணர்த்தும்) கவலைப்படாதே நான் பார்த்துக் கொள்ளுறன். படுத்திரு ... நாளைக்கு வாரன். வந்து கூட்டிற்றுப் போறன்"

அங்கிருந்து நகர்ந்த அம்பிகைபாதம் திருவிற்குத் தொலைபேசி எடுத்தார். நடந்த விடயங்களை விளக்கமாக திருவிற்கு எடுத்துரைத்தார்.

"நீங்கள் இதில் தலையிடாதீங்க அண்ண..... அவள் நடத்தை கெட்டவள். அவளிட கதையைக் கதைக்காதீங்க.... இனி அவள் இந்த வீட்டு வாசலை மிதிக்கக் கூடாது. எக்கேடு கெட்டாவது போகட்டும்"

"என்னடா திரு! உன்னக் கல்யாணம் பண்றதுகள் எல்லாரும் நடத்தை கெட்டதுகளா? பெண் பாவம் பொல்லாதது. வீணா அந்தப் பிள்ளையில பழி போடாத. கல்யாணத்துக்கு முதல் நடந்த விசயமெல்லாம் இப்ப எடுத்து வச்சு கதைக்கிறாய். இங்க யாருதான் இளம் வயதில காதலிக்கல்ல. பெரிசா இதைப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறா... போ.... அந்தப் பிள்ள ஆஸ்பத்திரியில கிடக்குது. கணவன் என்ர முறையில நீதான் பார்க்க வேண்டும்...."

"வேற கதை இருந்தாக் கதையிங்க... இல்லாட்டி ரெலிபோனக் கட் பண்ணிப் போடுவன்...."

மிருகத்துடன் பேசலாம். இந்த மனித ஜென்மத்துடன் பேச முடியாது என்ற முடிவுடன் வீட்டிற்குச் சென்ற அம்பிகைபாதம், அடுத்தநாள் தன் வீட்டிற்கு ராஜியை அழைத்து வந்தார்.

இத்தனைக்கும் காரணம்தான் என்ன? பாடசாலைக் காலங்களில் பருவக் காதலுக்கு அடிமையானாள் ராஜி. காதல் ஏற்றத்தாழ்வு பார்ப்பது இல்லை, அழகு அறிவு தேடுவதில்லை, சாதி மதம் சாற்றுவதில்லை, சொல்லிக் கொண்டு வருவதில்லை. அவ்வாறே தொற்றிக் கொண்ட உணர்வினால், விசாகன் விருப்பத்திற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால், மறுத்தனர் பெற்றோர் மணம் முடித்து வைத்தனர் திருவை. இன்று ஏதோ வழியில் காதுக் கெட்டிய ராஜி காதல் கதையானது திருவிற்கும் தாயாருக்கும் பொல்லாக் கொலைக் குற்றமாய்பட்டது. கல்யாண பந்தத்தின் பின் கருத்தில் சிறிதும் தன் காதலுக்கு இடந்தராது, கட்டியவன் மனதுக்கேற்ப பாரிஸ் நகரில் வாழப் பழக்கப்பட்டாள். வீட்டுக்கருமம் பார்த்து, தான் வாழவேண்டுமானால், தான் வேலைக்குச் சென்று உழைக்க வேண்டும் என்ற கட்டளைக்கும் கட்டுப்பட்டு, மாமியார் கண்டிப்புக்கும் வழிவிட்டு வாழ்ந்து வந்தாள்.

எப்படித்தான் ஒரு பெண்ணால் இப்படி அடிமையாக வாழமுடியும். சுடுநீரில் குளிப்பதற்குத் தடை. இருக்கும் அறையில் வெப்பமூட்டி பயன்படுத்தத் தடை. தொலைபேசியில் பேசுவதற்குத் தடை. தடை.... தடை.... தடை.... எல்லாவற்றிற்கும் தடை. இவை எல்லாவற்றிற்கும் மேல் இப்படியொரு பழி.

அம்பிகைபாதம் தம்பதியினர் இவள் நிலைதனை நினைத்துப் பல தடவை அந்த கல்லைக் கரைக்கப் பார்த்தனர். முடியவில்லை. தமது வீட்டில் ராஜிக்கு இடம் கொடுத்தனர். ஏதோ எப்படியோ நடக்கும் அதற்குக் காரணம் சொல்ல முடியாது. தத்தளிக்கும் நேரத்தில் எங்கிருந்தோ ஒரு துணை வந்து சேரும். இதுதான் இயற்கை நியதி. அந்தவகையில்த்தான் அம்பிகைபாதம் குடும்பத்தினர் ராஜிக்குக் கைகொடுத்தனர். அன்பான அவள் நடவடிக்கையில் அழகான அவள் வாழ்க்கையை வெறுமையாக செலுத்துவதற்கு அவர்கள் விரும்பவில்லை. முடிவுதான் என்ன?

பல முயற்சியின் பின் ராஜியை மனதால் நினைத்து மறக்காது வாழ்ந்து கொண்டிருக்கும் விசாகன் இருக்கும் இடம் அறிந்தனர். ஆண்டவன் போடும் கணக்குப் பிழைப்பதில்லை. அபலைப் பெண்ணுக்கு வாழ்வும் பிழைப்பதில்லை. அம்பிகை பாதத்தின் அயராத உழைப்பினால் விசாகன் இலண்டனில் வாழ்ந்து வரும் உண்மையை அறிந்தார். அவனைத் தேடி விசாகன் பணி புரியும் இடத்திற்குச் சென்றார். அவன் வேலை முடிந்து வீடு திரும்பும் வரைக் காத்திருந்து வழியில் விசாகனை மறித்தார்.

"தம்பி என்னை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்ல. நான் பாரிஸில் வாழ்றவன். இன்றைக்கு உங்களைத் தேடிக்கண்டு பிடித்து இஞ்ச வந்திருக்கிறன் என்றால், நீங்கள் எனக்கு இப்ப எந்தளவுக்கு முக்கியமானவர் என்று அறிஞ்சு கொள்ள வேணும்"

"நீங்க யார் அங்கிள்..."

"தம்பி உங்கட குடும்பம் எங்க இருக்கு?"

"எல்லாரும் ஊரில தான் இருக்கிறாங்க. நான் மட்டும்தான் இங்க இருக்கிறன். நீங்க எங்க இருந்து வாறீங்க அங்கிள்...?"

"நான் பாரிஸில் இருந்து வர்றன். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?"

விசாகனுக்குத் திருமணமாகிவிட்டதா? அவனது தற்போதைய நிலை என்ன என்பதை அறியும் ஆவல் அம்பிகைபாதத்திற்கு இருந்தது. இவர் யார்? இவர் ஏன் என்னைத் தேடி வரவேண்டும்? என்பதை அறியும் ஆவல் விசாகனுக்கு இருந்தது. தத்தமது சந்தேகங்களைத் தீர்த்து வைக்கும் நோக்கத்திலேயே இருவரும் குறியாக இருந்தார்கள்.

"எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை அங்கிள். வீட்ட கல்யாணம் பேசுறாங்க"

"காதில தேன் பாய்ச்சிட்டா தம்பி. நான் இந்த விஷயமாத்தான் உன்னோட பேச வந்தனான். இந்த மெக்டொனால்ஸ்க்குள்ள போய் இருந்து கதைப்பமா? இருவரும் மெக்டோனால்ஸ்க்குள்ளே போனார்கள். எப்படியும் விசாகனிட்ட சம்மதம் வாங்கிட வேண்டும் என்ற உறுதியுடன் பேச்சைத் தொடங்கினார் அம்பிகைபாதம்."

"தம்பி உனக்கு உன்னோட படிச்ச ராஜியைத் தெரியும் தானே. இப்ப அவ கல்யாணம் கட்டி பாரிஸிற்கு வந்திருக்கிறா..." எதுவுமே பேசாது மௌனமாக இருந்த விசாகனிடம்.

"என்ன தம்பி உங்களுக்கு அவவத் தெரியும் தானே?"

"தெரியும்...." என்னும் வார்த்தைகள் மட்டும் வரட்சியாக வெளி வந்தது.

"எனக்கு உங்கட விசயமெல்லாம் தெரியும் தம்பி. போதாத காலம் எல்லாப் பிரச்சினைகளையும் கொண்டுவந்து சேர்க்கும். அந்தத் தங்கமான புள்ளய ஒரு தறுதலைய்க்கு அவட தாய் தகப்பன் கட்டிக் கொடுத்துட்டுதுகள். உன்ன லவ் பண்ணின குற்றத்திற்கு அந்தப் பிள்ளயப் போட்டு அவட புருஷனும் மாமிக்காரியும் பாடாய்ப் படுத்துதுகள். என்னென்டுதான் இந்த விஷயத்த அறிஞ்சதுகளோ தெரியாது. அதுக்குத்தானே இஞ்ச சில காவாலிகள் திரியுதுகள். குடும்பங்களைக் குலைக்கிறது தான் அதுகளுக்கு வேலை. ஒரு பெண் சீவன் எத்தனை காலத்துக்குத் தான் எல்லாத்தையும் தாங்கும். வெளியில குளிருக்குள்ள விட்டுக் கதவச் சாத்திப் போட்டுதுகள். நான்தான் சாகக் கிடந்த பிள்ளயக் கூட்டி வந்து வீட்ட வைச்சிருக்கிறன்"

காதலிச்சவன் அல்லவா. அவனுக்குள்ள இதயம் அவனை யறியாமலே துடிக்கும் அல்லவா. இதயத்தை எல்லோருக்கும் பறி கொடுக்க முடியாது. அது உண்மையான காதலென்றால். அது ஒரு முறைதான் மலரும். காதல் பிரிவொன்று கண்டாலும் ஒரு மெல்லிய இழையாய் தொடர்பு இருந்து கொண்டே இருக்கும். உண்மைக் காதல் உருவின்றி மனதுக்குள் வாழும். அதற்காகவே ஏங்கும் எத்தனை வருடங்கள் கடந்தாலும் மனதை விட்டு அகலாது. அதன்பின் வருகின்ற உறவுகள் எல்லாம் அதற்கு அடுத்தபடிதான். ஆனாலும், அவள் இப்போது அடுத்தவன் மனைவி.

"அதுக்கு நான் என்ன செய்ய அங்கிள். அப்பவே அவ உறுதியா நின்றிருந்தால். இந்தநிலை வந்திருக்குமா?"

"விதி தம்பி விதி. அந்தப் பிள்ள உனக்குத் தான் கிடைக்க வேண்டும் என்பது விதி. இடையில வர்றதெல்லாம் சம்பவங்கள். தானாய் வந்து தானாய்ப் போகும். உனக்குத்தான் அவவோட வாழ்ற பாக்கியம் கிட்டியிருக்கு. அவட புருஷன் ஒரு சந்தேகப் பேய். அவனுக்கு இப்பிடி

யான பிள்ளயோட வாழக் கொடுத்து வைக்கல்ல என்றுதான் சொல்ல வேணும். தாய் தகப்பனோட பேச்சுக்கு மறுப்புச் சொல்ல முடியாம விட்டதுதான் அந்தப் பிள்ள விட்ட பெரிய பிழை. இல்லாட்டி இந்தப் பழியை ஏற்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. மாட்டன் என்று சொல்லாம அவவ கல்யாணம் கட்டிறியா தம்பி"

"என்ன அங்கிள் விளையாடுறீங்க. இது எப்படி சாத்தியப்படும். அவ இப்ப வேற ஒருவனின் மனைவி"

"அந்தப் பிரச்சினையை விடுங்க. அத நான் பார்க்கிறன். எனக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியும். உங்களுக்கு அவவக் கல்யாணங்கட்ட விருப்பமா? அத மட்டும் சொல்லுங்க. மற்றத நான் பார்த்துக் கொள்ளுறன்" என்றார், அம்பிகைபாதம்.

விசாகன் விருப்பத்தை அறிந்து மகிழ்ச்சியின் உச்சத்தைத் தொட்டார் அம்பிகைபாதம்.

பொருத்தம் பார்த்துக் கட்டிய தாலி, நீதிமன்றம் பார்த்து அறுந்தது. மனது பார்த்து இணைந்த காதல் இறுதிவரை நிலைக்கவே பாரிஸ் மாநகரிலே பிரபல மண்டபத்திலே பலபேரை அழைத்து, குற்றஞ்சாட்டியவனுக்கு சாட்டையடி கொடுக்கும் வகையாக பிரபல்யமாக ராஜி கழுத்தில் விசாகன் தாலி வீற்றிருந்தது. வாழ்த்த வந்தோர் மனதில் உச்சத்தின் மகிழ்வு பிரதிபலித்தது.

"கடவுள் போல் வந்தாய் தம்பி. அந்த நரகத்திலிருந்து ராஜியை மீட்டாய். நீங்கள் நல்லாய் வாழணும். இந்தப் பிள்ளை இனியாவது சந்தோசமாக இருக்கணும்"

படிதாண்டிய பொழுது

கண்ணுக்குள்ளும் கருத்துக்குள்ளும் அது புகுந்துவிட்டால், கள்ளமும் தவிப்பும் துணிவும் எங்கிருந்துதான் வருகின்றது என்பது புரியாது. புரிகின்ற வயதுதான், தெளிவான மனதுதான், எங்கிருந்து தான் அது பொங்குகின்றது. கூடேற்றும்போதுதான் பால் பொங்குகின்றது. சர்க்கரை சேர்க்கும்போதுதான் தின்பண்டங்கள் இனிப்பாகின்றன. பிரச்சினைகள் வருகின்ற போதுதான் துன்பமும் வந்தடைகின்றது. அதுபோல், ஒரு மனதுள் வேறு ஒரு மனது இணைந்து புகுந்துவிட்டால் காதல் அணைகடந்து பொங்கும். இதை வயதுக்கோளாறு என்பதா? உடலுள் உற்பத்தியாகி உலகையே உலுக்கும் ஹோமோனின் தொழிற்பாடு என்பதா?

எதுவாக இருந்தாலும் இதுவே மிருதுளாவிற்கும் நித்திரை யைத் தொலைத்தது. நினைவுகளை ஒருமுகப்படுத்தியது. எதிலும் எவற்றிலும் அவன் நினைவே அவளை ஆட்டிப்படைத்தது. என்றோ ஒரு நாள் ஒரு நிகழ்வில் பவனைச் சந்தித்தாள். எத்தனையோ இளைஞர்கள் அந்நிகழ்வில் எதிர்ப்பட்டாலும், பவனே அவள்

கண்களுக்கு மன்மதனாய்த் தெரிந்தான். காந்தக் கண்கள் அவன் முகத்தையே கவர்ந்திழுத்துக் கொண்டன. நிகழ்வு முடிந்தது. ஆனால், அவன் நினைவுகள் தொடர்ந்தது. இளையவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இவ்விடயத்தில் மிக அதிகமே. பெற்றார் கட்டளைக்கு அடிபணியும் எண்ணமும்

"உங்களை மீறி உங்களுக்குத் தெரியாது எந்த ஒரு பெடியனையும் நான் காதலிக்கப் போவதில்லை"

என்று பெற்றோரிடம் உரைக்கும் உறுதிமொழிகளும், செயலால் மாறுபடும். இவ்வாறுதான் மிருதுளா நடவடிக்கையும் நாளும் பொழுதும் நிதானமாய் வளர்ந்தது.

எப்படி பவனுடன் தொடர்பு கொள்வேன். என் சிந்தைக்குள் சிறைப் பட்டுவிட்ட அவன் மனதுக்குள் நான் எப்படிச் சிறைப்பட முடியும். எனது வீட்டிலோ கட்டுப்பாடு. யாருமே அறியாது. வேறு ஒரு பெயரில் நான் நுழைந்து விளையாடும். சிரித்துக் கும்மாளம் இடும். உலகத்து நண்பர்கள் அனைவருடனும் பக்கத்திலிருந்து பழகுவது போல் கைகுலுக்கும் முகப்புத்தகத்துக்குள் நுழைந்து பக்கம் பக்கமாய்த் தேடலாமா! இல்லை என் பவனைத் தேடித்தரும்படி ரிவிட்டர் பறவையை சிறகடிக்க விடலாமா! இல்லை லிங்கடினுக்கூடாகத் துருவித் துருவித் தேடலாமா! இல்லை ஸ்கைப் ஐடியை பெயர் கொடுத்துத் தேடலாமா! ஓகோ எம்.எஸ்.என் மூலம் அறியலாமா! ஓகோ உலகமெல்லாம் சட் பண்ணும் வோட்ஸ்அப் மூலம் தொடர்பு கொள்ளலாமா! சா... எதுவுமே கைகொடுப்பதாக இல்லையே ஒரு வேளை அவனும் என்னைப் போல் தந்திரமாக வேறு ஒரு பெயரில்தான் சமூகத்தளங்களினூடாக சல்லடை போடுகின்றானோ! இவ்வாறு மிருதுளா தன் எண்ணங்களால் நாட்களை ஏக்கத்துடனும் வலியுடனும் நகர்த்தினாள்.

எங்கே போகிறது இவ்வுலகு? உலகத்து மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கவும், கலாசாரம் பண்பாடு அனைத்தையும் ஒன்று கலக்கவும் முகந்தெரியாதவர்களுடன் எழுத்தின் மூலமும் பேச்சின் மூலமும் தொடர்புகொள்ளவும் பலவிதமான இணையத் தொடர்புகள் தற்போது உலகப்பந்தில் உலாவருகின்றன. இதை உதவிக்காய் எடுக்கும் மக்களில் இளையோர் பெரும்பங்கு வகிக்கின்றனர். தேவை கருதி தொழிற்படும் இத்தளங்களினால் சமுதாய சீர்கேடுகள் கட்டுக்கடங்காது செல்வது தவிர்க்க முடியாதுள்ளது.

சட்டென அவள் எண்ணத்தில் அவ்விழாவில் பவனுடன் சரளமாக சிரித்துச் சிரித்துப் பேசிய தன் ஒரு நண்பியின் நினைவுகள் தட்டியது. உடனே அவள் விரல்களும் அந்நண்பியின் தொலைபேசி நம்பரைத் தட்டியது.

" சத்யா... நான் மிருதுளா.."

" என்னடி! ரெலிபோனே எடுக்காத நீ. இன்றைக்கு என்னைத் தேடி எடுக்கிறாய். என்ன நடந்தது அம்மையாருக்கு? எங்கே இருந்துடி என்ர நம்பரைச் சுட்டநீ "

ஆச்சரியத்தில் அளவுகடந்த ஆர்வம் அவள் நண்பி சத்யாவிற்கு.

"இல்லை. சும்மாதான். உனக்கு பவனுடைய முகநூல் பெயர் தெரியுமா?"

"ஆஹா.... இது புதிசா இருக்கே? என்ன விசயம்? மனசுக்குள்ள தூண்டில் போட்டாச்சோ? என்னவா இருந்தாலும் என்னட்டச் சொல்லிப் போடு மவளே. பிறகு உன்ர அம்மாட்ட நான் தப்ப முடியாது. இருந்தாலும் மிருதுளாக்கு ஒன்டென்றால், என்ர இதயம் தாங்காதுப்பா...."

"சும்மா போடி. எதுக்கெடுத்தாலும் சந்தேகம்... ஏன் பிரெண்டா பழகக் கூடாதா? சும்மா நோண்டிக் கொண்டு.... தெரிந்தா சொல்லு.

இல்லாட்டி விடு. அவரென்ன பெரிய மன்மதனா? கெஞ்சிக் கெஞ்சி பெயரை எடுக்க...."

"சரிசரி.... அலட்டாத..... நிஜம். இதுதான் அவன்ட பேஸ்புக் பெயர். விசயம் முடிந்தது என்று கைவிட்டுறாத அம்மா..... எனக்கும் எழுது. அல்லது ரெலிபோன் எடு..."

"இதென்னடி புதுசா இருக்கு. புதினமான பெயர் வச்சிருக்கான்..."

"இப்பிடித்தான் எல்லோரும். சொந்தப் பெயர் மறைத்து. நல்ல பிள்ளைகளுக்கு ஆடுதுகள். நான் அப்பிடியில்லப்பா. செய்றதை வெளிப்படையாச் செய்ய வேண்டும். எதுக்கு ஒளிவு மறைவு. இப்பிடியானவர்கள் தான் பிழைகளை தயங்காம செய்றாங்க. சிலருக்கு 2, 3 பேஸ்புக் பெயர்கள் இருக்கு. கவனம் மிருதுளா. பேஸ்புக் பொல்லாத ஊடகம். பார்த்து நடந்துக்க. நான் சொல்லிப்போட்டன். மற்றது உன்ர இஸ்டம்.... நான் வைக்கிரன்டி"

தகவல் தந்த நண்பியைத் தாண்டிப் பாய்ந்தது மனம். சின்னத் தகவல்தான் ஆனால். சிந்தையை நிறைக்கும் தகவல். யார் சொல்லித்தான் அறிவுரை கேட்கப் போகிறது மனம். அதற்குத்தான் நிலையான குணமே இல்லையே. அது அடிக்கடி பாயும் குரங்குதானே. ஒன்றை நினைத்துவிட்டால், சுற்றிச்சுற்றி அதற்குள்ளேயே நின்று சுழலும். அது மிருதுளாவுக்கு பவனைச் சுற்றிச் சுற்றியே சுழல்கிறது.

ஓடிப்போய் லப்டொப்பைத் திறந்தாள். பட்டனை அழுத்தினாள்.

"இதோ வந்திட்டன்...."

என்று கூறிப் பணிவிடைக்குத் தயாரானது லப்டொப். முகப்புத்தகம் பந்தி விரித்து முன்னே வந்து அமர்ந்தது. தன்னுடைய அழகான

படத்துடன் விரிந்த பக்கத்துக்குள் மிருதுளா நுழைந்தாள். விழுந்து கிடந்த பற்பல செய்திகள் அவள் சுவைப்பதற்காய் சிவப்பு வெளிச்சம் காட்டி வரவேற்றது.

"இவை என்ன சுவை? என் சுவை பவனே... அச்சுவையன்றி எச்சுவையும் இன்றெனக்கு தித்திக்கும் சுவையல்ல...."

என்ற வண்ணம் முகப்புத்தகத்தில் நிஜம் கொடுத்தாள். நிழற்படம் கண்முன்னே நிஜமானது. ஆகா..... ஆயிரம் மின்வார்ட் மின்சாரம் அவள் மனதுள் பாய்ந்தது. படபடவென்று ஒரு மெசேஜ்

"என்னை நண்பியாக ஏற்றுக்கொள்வீர்களா?" அழகான பெண் ணென்றால், நிராகரிப்பார் யாருண்டு. குணமெல்லாம் இரண்டாம் பட்சம்தானே. பழகியபின் தெரிவதுதான் குணம். பார்த்தவுடன் பதிவது முகமதின் பொலிவுதானே. மனதை வெளிக்காட்டும் பண்பு முகத்தில் இருக்குமானால், இந்த அழகுக்கு அடிபணியும் பண்பு என்பது உலகில் இல்லாமலே இருந்திருக்கும்.

பவனுக்கு மனதுக்குள் பெரிதான ஆர்வம் பதியவில்லையா னாலும், அழகொன்று ஆர்வமாய் அழைக்கிறது. பேசித்தான் பார்ப்போமே. சம்மதம் தெரிவித்தாயிற்று. தொடர்ந்தது மொழியூடு உளப்பாங்கு வெளிப்பாடு. வளர்ந்தது காதலென்னும் உறுதிப்பாடு. உள்ளத்தை எப்படித்தான் தொலைத்தாளோ! தன் மதத்தையே மறந்துவிட்டு வேறு மதத்தில் மயங்கிக் கிடக்கும் மனமுள்ளவன், தன் மனதுள் சேர்ந்திருப்பாளைப் பிரித்தெறிய எவ்வளவு நேரமாகும் என்று மிருதுளா நினைத்துப் பார்க்கவில்லை.

வீட்டிலிருப்பவர்கள் காலை எழுந்திருக்க நேரமாகும் என்பதை அறிந்து கொண்ட மிருதுளா விடியற்காலை வேளை கண்முழிப்பாள்.

மெதுவாக பூனை பதுங்கி வருவதுபோல் வரவேற்பறையை நாடுவாள். பவனுடைய இலக்கங்களை மெல்லத் தட்டுவாள். எதிர்பார்த்திருந்த அவனோ ஒரு அழைப்பிலேயே முழித்துக் கொள்வான். கள்ளத்தனம் மனதுள் புகுந்து கொண்டால், மனக்கட்டுப்பாடும் அடக்கமும் பயமும் இருப்பிடம் இன்றி மறைந்துவிடும்.

"நித்திரையைத் தொலைத்துவிட்டேன். எப்போது விடியும் என்று காத்திருப்பதனால், கண்ணில் உறக்க வாசனையே மறந்துவிட்டேன். என்னைப் பாடாய்ப் படுத்தும் இந்நோய் மறைய என்னதான் செய்வேனோ தெரியாது பவன்...."

தித்திக்கும் அவள் பேச்சில் உலகத்தையே மறந்து விடுவான் பவன். எடுத்துரைக்கும் வார்த்தைகள் நாடிநரம்புகளை மீட்டிப்பார்த்தன. குரலோ இனிமை, வடிவழகோ சொர்க்கம். வார்த்தைகளோ மனத் தூண்டில். இத்தனையும் கசக்கிப் பிழிய எப்படியோ அவளைச் சந்திக்கவேண்டும் என்று முடிவாய் முடிவெடுத்தான்.

"எவ்வளவு நாட்கள் தான் இப்படி அருகே அமர்ந்திருக்காது. எங்கோ இருந்து நீ என்னைக் கொல்வது. சந்திக்கவேண்டும். சேர்ந்தே இருந்து கதைபேச வேண்டும். உன் மூச்சுக்காற்றின் சுவாசத்தை அருகே நான் உணர வேண்டும். எனக்கு நீ. உனக்கு நான் என்று நாமாகவே நிச்சயித்துவிட்டோம். நாளும் பொழுதும் உனக்காகவே ஏங்கும் என் ஏக்கத்தை பேச்சு ஒன்றும் வெளிப்படுத்திவிடாது அது வெறும் வார்த்தை ஊடகமே. நீ என் வாழ்வு, உயிர் மூச்சு. என்னைக் கொல்லாதே. உன்னைக் காணவேண்டும். நேரடியாக ஓராயிரம் வார்த்தைகள் பேசவேண்டும். சந்திப்போம். அளவுகடந்து எனக்குள் பாயும் ஆர்வ நீரை வேறு பாதைக்குத் திசை திருப்பிவிடாதே. பிளீஸ்....." பவனின் வார்த்தைகளில் தன் உறுதிப்பாட்டை மிருதுளா தொடைத்தெறிந்தாள்.

ஜேர்மனி Nordrhein Westfalen இல் பிரபல்யமான நகரம் டுசுல்டோர்ப். அதன் புகையிரதத் தளத்தில் பவனின் ஆசை நிறைவேற்றப்படும் நாள். பொதுவாகவே காதலர்கள் கைகுலுக்கும் புகையிரத நிலையம். இங்கு உண்மைக் காதலும் உறவாடும். பொய்யான காதலும் புகலிடம் தேடும்.

இருவரும் இருவேறு ரயிலில் வந்து ஒரு இடத்தில் சந்தித்தனர். கண்டவுடன் இரு கரங்களும் குலுக்கும்போது மனதும் பரிமாறிக் கொண்டது. சட்டென்று மிருதுளாவை இறுக்கமாய் பவன் கட்டிப் பிடித்தான். அது அவளுக்குப் பயமாக இருந்தாலும், பிடித்துக் கொண்டது. இளமைப்பருவத்தின் இதமான சுகங்கள் இணையும் போது ஒதுங்கிக் கொள்ள இதயம் இடம் தராது. சில நிமிடங்கள் தம்மை மறந்து இமை கள் இறுகப் பற்றிக்கொள்ள இருந்தவர்களை இரயலின் இரைச்சல் இடை நிறுத்தியது.

முறையான கட்டுப்பாடு கலாசார உணர்வுகளுடன் வளர்க்கப்படும் இளையவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வது வழமை. கலாசாரத்தை ஊட்டி வளர்ப்பதற்கும் மனதுக்குள் பதிய வைப்பதற்கும் வேறுபாடு உண்டு. ஊட்டி வளர்த்த பிள்ளை இன்று மதிமயங்கி நிற்கின்றாள் என்றால், கவனம் எடுத்ததில் தவறுண்டு என்றுதானே கருதவேண்டும். பெற்றோரோ பண்பை மதிப்பவர்கள். கலாசாரத்தில் கவனம் எடுப்பவர்கள். பிள்ளை தடுமாறுகின்றது என்றால், அங்கு கலாசாரக் கட்டுப்பாடு விரும்பாத வகையில் ஊட்டப்பட்டுள்ளது என்றுதானே அர்த்தம்.

கையிலே வைத்திருந்த கோலாப் போத்தலை மிருதுளா கைகளுக்குள் பவன் திணித்தான். தானும் ஒரு கோலாவைப் பருகினான். "குடி மிருதுளா... நாங்கள் எஸ்ரட்டுக்குள் போவோமா. அங்கே ஒரு இடம் இருக்கிறது. நாங்கள் ரெண்டு பேரும் தனியாகக் கதைத்துக் கொண்டிருக்கலாம்"

கோக் பருகியபடி இருவரும் கைகோர்த்தவண்ணம் நடந்தனர். நடை தொடர நிதானம் மெல்லமெல்ல மிருதுளா கட்டுப்பாட்டை தாண்டி விடைபெற்றது. கோக் தந்த மயக்கம் பவன் தோள்களில் சாய்ந்தது. குடிபானத்துள் கரைந்து தன் குணம் மாறிய கோலா மிருதுளா போக்கை தடம்மாறச் செய்தது.

ஏமாந்தவளைத் தன் வழிக்குக் கொண்டுவர பவனுக்கு நாளாக வில்லை. தமிழனென்னும் பெயரில் தரங்கெட்ட வாழ்வைத் திறமான வாழ்வென்று வாழும் நற்குணங்கெட்ட கேடி பவன் என்று புரியாத அப்பாவி மிருதுளா, கட்டிலில் சல்லடையானாள்.

தன் இச்சைக்கு மிச்சம் வைக்காது அமைதியாய் நடந்தேற்றிய காமத்து களியாட்டம், காட்சிப்படமாக்க எடுத்த முயற்சியிலும் வெற்றி கண்டான். தன்னிலை மறந்து துவண்டுகிடந்த மிருதுளா விழித்துக் கொண்டாள்.

"என்ன நடந்தது பவன். உடம்பெல்லாம் ஒரே அலுப்பாக இருக்கிறதே. எப்படி நான் இங்கே..... இது யாருடைய வீடு? என்ன நடந்தது....? "

"மிருதுளா.... நீ மயங்கிப் போயிட்டாய். அதுதான் உன்னை இங்கே கொண்டு வந்தேன். இது என்னுடைய பிரண்ட்டினுடைய வீடு. நீ எழும்பும் வரைதான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். வா போவோம்"

"என்ன கதைக்கிறீங்கள்? மயங்கினால், ஹொஸ்பிட்டலுக்கெல்லோ கொண்டு போகவேணும். இது என்ன யாரோ ஒருவருடைய வீட்டிலே கொண்டு படுக்க விட்டிருக்கின்றீர்கள்"

"ஹொஸ்பிட்டலுக்குப் போனால், உங்கட வீட்டில தெரிஞ்சிருமெல்லா மிருதுளா... என்ன கதைக்கிறாய் நீ? சட்டென்று

எழுந்தாள். கால்கள் தடுமாறின. உடம்பெல்லாம் உலுக்கி எடுத்தது வலி. பவனுடைய சேட்டை இறுகப்பிடித்தாள். அவனை ஒரு தரம் முறைத்துப் பார்த்தாள்."

"உண்மையைச் சொல் பவன். என்னை என்ன செய்தாய்?"

"உன்னை நான் என்ன செய்வது? வா வீட்டிற்குப் போகலாம்...."

" இல்லை. உண்மையைச் சொல்..."

"என்ன உண்மை உனக்கு வேண்டும். வருவதாய் இருந்தால், வா! இல்லை எப்படியாவது போ!"

இறுக்கமாகப் பேசிய அவன் வார்த்தைகளால், கலங்கிப் போனாள் மிருதுளா. பெற்றோரை மதிக்காது தன் காதல் பெரிதென்று நம்பி இரகசியமாய் வந்தது பிழையாகப் போய்விட்டதோ என்று மனதுக்குள் பயம் பற்றிக் கொண்டது. ஆனால், தனக்கு ஏதோ நடந்துவிட்டது என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது. ஆனால், இனிப் புரிந்துதான் என்ன செய்ய முடியும். பெண்களுக்கு தவறு நடந்துவிட்டால் அது கலங்கம். ஆண்களுக்கோ அது வெறும் சம்பவம்.

வீதிக்கு வந்தாள். தனியே நடந்தாள். இரயிலில் ஏறினாள். வீட்டின் வாசல் அழைப்புமணியை அழுத்தினாள். கண்கள் குளமாகத் தாய்,

"எங்கே மிருதுளா போன நீ. உன்ர ரெலிபோனுக்கு ரிங் பண்ணி ரிங் பண்ணி அலுத்துப் போனன். என்ன நடந்ததோ ஏது நடந்ததோ என்று பயந்து கொண்டிருக்கிறன். கெதியா வாறதென்று தானே சொன்னாய். நெஞ்செல்லாம் நடுங்குது. உனக்கு என்னவாவது நடந்தால் என்னால தாங்கமுடியுமா பிள்ள. எனக்கு உன்ன விட்டால் வேற யாரிருக்கிறா பிள்ள....."

பாசத்தின் பரிதவிப்பு இங்கு பதறுகிறது. இப் பாசத்தின் பெறுமதியைப் புரியாத இளம் உள்ளங்கள் பெற்றோரைத் தவிக்கவிடுகின்றன. ஏதோ ஒரு காரணத்தை இதற்காகவே தயார்படுத்தத் தெரிந்தவர்கள் தானே பிள்ளைகள். பெற்றோரின் கண்களைக் கட்டுவதாக எண்ணித் தம் கண்களையே குருடாக்கும் இளந்தலை முறையினரே இன்று அதிகம். காலத்தின் விசையிலே கணனித்திரையில் இவள் அலங்கோலக்காட்சியைக் கண்டுகளித்த இளையவர்கள் செய்தி இவள் காதுகளில் கசிந்தது.

நம்பிக்கைத் துரோகம் என்னும் ஆயுதம் தாங்கிய பவன் இப்போது வேறு பெயரில் முகப்புத்தகத்தில் தரிசனம் தருகின்றான். தன் தொடர்பை முறித்துக் கொண்ட பவனின் செய்கைகளை ஆதாரத்துடன் காவல் துறைக்கு தெரியப்படுத்திய மிருதுளா. இன்று துடைத்தெறியப்பட்ட தன் பெண்மையை எண்ணித் துவண்டு விடவில்லை. தன் அறிவென் னும் கருவி கொண்டு அறியாமையை அகற்றி வாழத் துணிந்துவிட்டாள். ஆண்வர்க்கத்தின் மத்தியில் கேடுகெட்ட சில மனித மிருகங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் துறையில் தன்னை அர்ப்பணித்தாள். அறியாத வயதில் புரியாத பருவத்தில் தவறிவிட எத்தனிக்கும் இளந் தலைமுறையினருக்கு கட்டுபாடற்ற அறிவுரைகளைக் கச்சிதமாய்ப் புகட்டுகின்றாள். இணையத்திலே தனக்காய் ஒரு தளம் அமைத்து குழுக்களாய் பெண்கள் குழாம் அமைத்தாள். ஸ்கைப்பிலே குழு அழைப்பு மூலம் பலரை ஒன்றாக அழைத்து இளையவர்கள் பிரச்சினை களைத் தீர்த்து வைக்கின்றாள்.

பதறிய காரியம் சிதறிப்போம்

வாலிபமிடுக்கு, வாலிப்பான உடற்கட்டு, அங்கொன்றும் இங்கொன்றுமாக அரும்பிய மீசை, வாழ்க்கையின் அத்தியாயங்களை மீட்டவொண்ணா பேதலித்த நிலையில் ஜடமாய்ப் படுத்திருந்தான் பருவக்காளை விசாகன். குமுறிக்குமுறி அழுத கண்ணீர் முத்துக்கள் கன்னத்தில் தாரை தாரையாக வழிய அவன் முன்னே அமர்ந்திருந்தாள் அவன் தாய் அமலா.

ஆண்டாண்டு காலங்கள் வானொலி என்னும் சமுதாய முன்னேற்ற வான் பரப்பில் பொன்மொழிகளையும், வாழ்வியல் சிந்தனைகளையும் வடித்து வடித்து பிறர் வாழ்வுக்கு வளம் சேர்த்த இந்த உள்ளமானது சொந்த வாழ்வின் சிந்தனைகளைச் சிந்திக்கத் தவறிவிட்டது.

அன்று வழமைபோல் மகனின் அறையைத் துப்பரவு செய்வதற்காக அவன் அறைக்குள் சென்றவள் அவன் மேசையை ஒருமுறை நோட்டமிட்டாள்.

"வளர்ந்தது தான் மிச்சம் ஒருவேலை கூடச் செய்யத் தெரியாது. படிக்கிற மேசை கிடக்கிற கிடையைப் பார்"

என்று தனக்குத்தானே முணுமுணுத்தபடி ஒழுங்கின்றிக் கிடந்த புத்தகங்களை ஒழுங்கு செய்யும் நோக்குடன் புத்தகங்களைக் கையில் எடுத்தாள். ஒரு புத்தகத்தினுள் இருந்து ஒரு புகைப்படம் தரைநோக்கி விரைவாய் விழுந்தது. தன்னைப் பார் என்று கூறுமாப்போல் அழகாய் காட்சியளித்த அந்தப் புகைப்படம் அவள் கண்களில் தென்பட்டது. குனிந்தாள். தன் கரம் தொட்டுப் புகைப்படத்தை கண்ணருகே கொண்டு வந்தாள். விசாகனும் ஒரு ஐரோப்பிய இனப் பெண்ணும் அருகருகே நின்றாற் போன்ற காட்சி கண்ணில் பட்டது. இதயம் சுக்குநூறாக வெடித்துவிடுவதுபோல் அமலா உணர்ந்தாள்.

இந்த நிமிடம் அமலவிற்கு விசாகன் தாய் என்ற நிலையிலிருந்து தமிழ் சமுதாயத்தினிடையே ஒரு பெண் என்னும் ஒரு எண்ணமே தலைதூக்கி நின்றது. அடக்கமுடியாத கோபக்கனல் தெறித்தது. தொலைக்காட்சி நிகழ்வை சுவாரஸ்யமாகச் சிரித்துச் சிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த விசாகன் முன்னே கையிலிருந்த புகைப்படத்தை வீசி எறிந்தாள். விசாகனும் இலாவகமாக எறியப்பட்ட படத்தை எடுத்துத் தன் சட்டைப்பையினுள் வைத்து விட்டு மீண்டும் தொலைக்காட்சியில் லயித்தான்.

"எவ்வளவு தைரியம் உனக்கு. யாரிந்தப் பெட்டை?"

தாயாரின் கேள்விக்குப் பதிலாக

"அது என்ர பிரண்ட். படம் எடுப்போம் என்றாள். எடுத்தோம். அதற்கேன் துள்ளிக்குதிக்கின்றீர்கள். இது என்ன புதினமான படமா?" சொல்லிவிட்டு சலனமின்றி அமர்ந்திருந்தான் விசாகன்.

"எவ்வளவு நெஞ்சமுத்தம் உனக்கு. பிரண்ட் என்றால், என்ன அர்த்தம். அதை ஏன் புத்தகத்திற்குள் ஒளித்து வைத்திருக்கின்றாய். முளைத்து மூன்று இலை விடல்ல. அதற்குள் பெரிய எண்ணங்கள். அலட்சியமான கதை பேச்சு. உன்ன மகனாகப் பெற்றதற்கு இந்த சமுதாயத்தில தலை நிமிர்ந்து என்னால் எப்படி வாழ முடியும்" படபட வென்று வார்த்தைகளை சரமாரியாகப் பொழிந்தாள்.

"இப்ப என்ன நடந்திட்டு. நான் ஒன்றும் ஒளித்து வைக்கல்ல. நீங்க எந்த உலகத்தில. எந்த நூற்றாண்டில வாழ்றீங்கள்? போதும் அம்மா உங்கட சமுதாயக் கதையெல்லாம். அதைத் தூக்கிக் குப்பையில போடுங்க. அப்பா வேலையில்லாமல் கஷ்டப்பட்ட போது எந்த சமுதாயம் உங்கள வாழ வைத்தது. நோயாளியாய் நீங்கள் கட்டிலில் கிடந்தீங்களே.... எந்த சமுதாயம் உங்களைக் கவனித்தது...." இது விசாகன் அனுபவித்த அத்தாட்சி வார்த்தைகள். அமலாவும் விடுவதாக இல்லை.

"சமுதாயம் எம்மை ஏறெடுத்துப் பார்க்கவில்லை என்பதற்காக சமுதாயக் கட்டுப்பாடுகளை மீற முடியுமா? பரம்பரைப் பழக்கவழக்கங் களை மாற்றமுடியுமா.....? எப்படியும் வாழலாம் என்பது இல்லை வாழ்க்கை. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதுதான் வாழ்க்கை. இனிமேல் அவளுடைய தொடர்பை விட்டுவிடு"

"போதும், போதும் அம்மா! இப்போது கூட உங்கள் சமுதாயத்தின் முன் உங்கள் பெயர் கெட்டுப் போவது பற்றித்தானே சிந்திக்கின்றீர்கள். என்னைப் பற்றி நினைத்துப் பார்க்கிறீங்களா? எதற்காக இங்கு வந்து என்னைப் பெற்றீர்கள்? எல்லா இனங்களுடனும் என்னைப் படிக்க அனுப்பினீர்கள்? இந்த நாட்டு உதவிகளை ஏன் பெற்றீர்கள்? சிறு வயதிலிருந்து இவர்களுடன் பழகுவதற்கு ஏன் அனுமதித்தீர்கள்?

முடியாது உங்களால் முடியாது. ஏனென்றால், இங்கு வாழ வேண்டுமென்றால், இணைந்துதான் வாழ வேண்டும். இந்த நாட்டு சுகம் தேவை என்றால், எங்களை இங்கு பெற்று வளர்த்து பயன் பெறுவீர்கள். ஆனால், இந்தப் பெண்களுடன் நாங்கள் வாழக்கூடாது. இது எந்த விதத்தில் நியாயமாக உங்களுக்குப் படுகிறது அம்மா? என் எண்ணத்தில் ஊறியிருக்கும் அவள் நினைவுகளை இலகுவாக அழித்துவிட முடியும் என்று நினைக்கின்றீர்களா? இது உங்களுக்கு எங்கே விளங்கப் போகின்றது. நீங்கள் மகனை விட சமுதாயத்தைத்தானே நேசிக்கின்றீர்கள்?"

"நியாயம் நீ பேச நான் கேட்கப் போவதில்லை. எது நல்லது கெட்டது என்று அறிந்து கொள்ள உனக்கு வயது போதும். எங்களுக்கும் அவர்களுக்கும் ஒத்து வராது. எங்கடைய ஆட்கள் இதை அறிந்தால் என்ன கதைப்பார்கள்"

"பார்த்தீங்களா அம்மா. இப்போது கூட எங்கடை ஆட்கள் என்ன கதைப்பார்கள் என்பதுதான் உங்களுக்குப் பிரச்சினை. உங்களுக்கும் அவர்களுக்கும் ஒத்து வராமல் இருக்கலாம். ஆனால், எனக்கும் அவர்களுக்கும் ஒத்துவரும். ஏனென்றால், நாங்கள் அப்படித்தான் பிறந்ததிலிருந்து வாழுகின்றோம்"

"அப்படியென்றால், உனக்கு ஒத்து வந்தால் மட்டும் போதும். எங்களுக்கு ஒத்துவரா விட்டால் உனக்குப் பிரச்சினையில்லை. அப்படித்தானே"

"இல்லை அம்மா! அது போகப் போகப் பழகிடும்"

"அப்பிடி என்றால் இனி தமிழர்கள் என்ற இனமே வெளிநாட்டில் இல்லாமல் போவதுதானா?"

"ஏனம்மா அப்பிடி நினைக்கிறீங்க?"

"ஏன் இல்லாமல் போகப் போகுது? இனித்தான் இனம் அதிகமாக வரும். நாங்கள் வெளிநாட்டவர்களை கல்யாணம் செய்தால், அவர்களும் தமிழ் கலப்புத்தானே. உங்களுக்கு யோசித்துப் பார்க்கத் தெரியாதே. உடனே எங்கட ஆட்களின்ர முகத்தில எப்பிடி முழிக்கிறது என்டு மட்டும் கதையுங்கள். அங்கே இருக்கைக்குள்ள யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், தோட்டக்காட்டான், என்று பிரிச்சுப் பார்த்தனீங்க தானே. ஒருத்தரோடையும் சேராமல் தனிய உங்களால் வாழ முடியாது. அதத் தெரிஞ்சு கொள்ளுங்கள். நாங்கள் அப்பிடியில்லை. எங்களுக்கு எல்லாரும் மனிதர்கள் தான்."

"உனக்குக் கனக்கத் தெரியும். யார் எப்படிப்பட்டவர்கள் என்று எங்களுக்கு நல்லாத் தெரியும் "

"ஓம் நல்லாத் தெரியும். எல்லாரிட்டையும் இருந்து உங்களுக்குத் தேவையானத எல்லாம் எடுப்பீங்க. ஆனால், அவங்களோட வாழ மட்டும் கூடாது. நல்ல நியாயம்"

இளமையும் முதுமையும் தத்தம் வாதங்களை முன்வைத்தன. வாக்குவாதங்கள் அறிவை மழுங்கடித்தன.

"நான் உயிரோடு இருந்தால்தானே இதையெல்லாம் பார்க்க வேணும்..."

அமலா ஓடிப்போய் குளியலறையிலிருந்த கிருமிநாசினிப் போத்தலைத் திறந்தாள். குடிப்பதற்காக போத்தலை உயர்த்தினாள். கூடவே ஓடிச் சென்ற விசாகன் போத்தலைத் தட்டிப் பறித்தான் பறித்த விசையில் தன் வாய்க்குள் மருந்தைச் சரித்து ஊற்றினான். உட்சென்ற மருந்து தொண்டை கழிந்து குடல் நோக்கிப் பயணமானது.

அந்தக் கணமே அமலாவுக்குத் தாய்மை மேலோங்கியது. சமுதாயம், சுயசிந்தனை அத்தனையும் எங்கோ மறைந்தது. மகனின் உயிர் ஒன்றே முதன்மையானது. அவசரஅவசரமாக வாகனத்தினுள் மகனை ஏற்றினாள். இந்த நாடகத்தைப் பார்த்தும் பார்க்காது இருந்த தந்தை வாகனத்தின் வேகத்தைத் துரிதமாக்கினார். மருத்துவமனை செல்லும் வழியிலேயே விசாகன் உடல் தாயின் மடியில் சரிந்தது. தன் கைகளால் தன் தலையிலே மாறிமாறி அடித்தாள். வலிக்கும் வரை அடித்தாள்.

பிள்ளைப்பராயத்திலே

என்னுடைய பிள்ளையென எச்சொல்லும்

எடுத்தெறிந்து பேசாதீர்கள் - அச்சொல்

உள்ளமதில் போய்விழுந்து

கல்லெனத் திரும்பவரும்

பல்லுடைந்த போகாதீர்கள்,

சொல்லிழந்து சொதப்பாதீர்கள்.

தொலைபேசி அலறல் கேட்டு ஓடிப்போய் அழைப்பை ஏற்றாள், செல்வி. இது வழமை. தாயாரிடம் தொலைபேசி அகப்பட்டால், தான் தனித்து விடுவேன் என்னும் அங்கலாய்ப்பாகவும் இருக்கலாம். பேசும் பகுதியைக் கையால் மறைத்தபடி

"அம்மா! பிரான்சிஸ்கா விளையாட வரட்டாம். போகட்டா?"

"சரி சரி" திரும்பவும் கேட்டாள்.

"எத்தனை மணிக்கு?"

தாயும் 3 மணிக்கு என்று விடையளித்தாள். பிரான்சிஸ்காவிடம் சம்மதம் தெரிவித்து வந்த மகளிடம்.

"போவதற்கு முன்னமே ஆக்கம் எழுதி, கவிதையும் எழுதி விட்டு வயலினும் பயிற்சி செய்து விட்டுத்தான் போக வேண்டும்"

கட்டுப்பாடு போடப்பட்டுவிட்டது. முனைப்புடன் ஓடி ஓடி அம்மா சொன்னவற்றை முடிப்பதற்கு தொழிற்பட்டாள். ஜெர்மனியில் வீட்டிற்குள் அடைந்து கிடக்கும் பிள்ளைகள் எப்போது கூட்டைவிட்டு வெளியே போவோம் என்று அல்லலாடுவார்கள். வீடுகளின் அமைப்பும், குளிர் காலச் சூழ்நிலையும் கூட்டுக்குள் வாழும் குருவிகள் போல் அவர்களை ஆக்கிவிடும். அதனால் எங்கே சந்தர்ப்பம் என்று பார்த்திருந்து பறக்கவே எத்தனிப்பார்கள். அந்நிலையே இவ் விநிதாவுக்கும் இருக்கிறது.

தாயார் கூறிய விடயங்களைச் செய்யத் தொடங்கினாள். இடை யிடையே தாயாரின் கட்டுப்பாடு மீறாமல் இருப்பதற்காக முடிந்தவரைத் தன் மனதைக் கட்டுப்படுத்தினாள். எம் மனம் நாடும் பணி புரியும் போது சுமைகளும் சுகங்களாகும். நேரம் வந்துவிட்டது. ஆனால், தாயாரின் உத்தரவை முடிக்க முடியாமல் போய்விட்டது. எத்தனை வேலைகளைத்தான் ஒரே தரத்தில் செய்து முடிப்பது.

"அம்மா கவிதை எழுதி முடிக்கவில்லை. வந்து பின் எழுதுகின்றேன்"

ஆனால் தாயாரோ

"சொன்னால் சொன்னது தான். எழுதிவிட்டுப் போகலாம்"

"அம்மா! 3 மணிக்கு வருவதாகச் சொன்னேனே"

"குறிக்கப்பட்ட நேரத்திற்குப் போக வேண்டுமென்ற அவசியம் இல்லை"

"நீங்கள் மட்டும் போன கிழமை தமிழ் நிகழ்ச்சிக்கு 3 மணிக் கென்றால் 3 மணிக்கு நிற்கின்றீர்கள்தானே. நானும் அப்படித்தான் நேரம் கடைப்பிடிக்க வேண்டும் அம்மா"

திரும்ப வந்து விழுகின்றது அடி. சிரிப்பையும் சிந்தனையையும் தூண்டிவிட்டது, அவ்வார்த்தை.

"நீ சொல்வது சரிதான். ஆனாலும் நான் எனது வேலைகளை போவதற்குள் முடித்து விடுவேன்"

அம்மா... வடை செய்து முடியவில்லையென்று மீதியை வைத்து விட்டுத்தானே போனீர்கள். அதேபோலவே நானும் வந்து மீதியைச் செய்யலாம்தானே?

இடையில் கட்டளை மீறியது சமாளிக்கப்படுகின்றது. உணர் கின்றோம். ஆனாலும், சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. இறுக்கம் இப்போது தளர்கின்றது. விட்டுப்பிடித்து விடயத்தைக் கையாளலாமா?

பொருத்தமான இடத்தில் சூத்திரத்தைப் பயன்படுத்தி விடை காண்பது போலவே வார்த்தைகளைத் தேக்கி வைத்துப் பொருத்தமான நேரத்தில் பயன்படுத்த வல்லவர்கள் எமது வளர்பயிர்கள். பேச்சு சுதந்திரம் கிடைக்காத காரணத்தினால் இப்படி எத்தனையோ கேள்விகள் எமக்குள்ளே புதையுண்டு போயின. செய்வது சரி

என்று நாம் உணராத பருவத்திலே உணராமலேயே வாய் மூடி மௌனிகளானோம். ஆனால், இன்றைய சமுதாயத்தினர் மனதில் பட்டதைச் சட்டெனப் பேசி தம்மைத் தெளிவுபடுத்தக் கூடிய திறமை மிக்கவர்கள். எனவே அதற்கு ஏற்றதுபோல் காலச் சூழ்நிலைக்கேற்ப பிள்ளைப்பராயத்திலே அவர்கள் மனநிலை உணர்ந்தவர்களாய் சந்தர்ப்பத்திற்கேற்ப வார்த்தைகளைப் பிரயோகப்படுத்துவதன் மூலம் நிலைமையைச் சமாளிக்கும் வல்லமையை நாம் வளர்த்துக் கொள்ளல் அவசியமாகின்றது. சிந்திக்கத் தொடங்கினாள். சுதா.

புலம்பெயர்வில்
ஒரு பாசம் ஏங்குகிறது

தன் முயற்சி பலித்தால், வாழ்க்கை வைரங்கள் மின்னுமாப் போல் உணர்வு தோன்றும். விண்ணைப் பிடிப்பதானால், இன்னும் முயற்சி வேண்டுமென உள்ளமும் உடலும் இணைந்து கொள்ளும். தனியளாய்த்தான் தன் மகனின் வைத்தியப் படிப்புக்குத் துணையாய் நின்றாள். துணையிழந்தால், துவண்டு விடுவார் என்னும் வாக்குகளை உள் வாங்கி ஏப்பமிட்டாள். அவள்தான் சுதா.

முதல் முறை சம்பளத்தைப் பெற்றுக் கொண்ட வேந்து, அம்மாவின் கையில் அழகான புடவையையும் 500 ஓயிரோ பணத்தையும் கொடுத்து "அம்மா சம்பளம் போட்டிற்றாங்கள். உங்களுக்கு என்னவும் வேணுமென்றால், இதில வாங்குங்கள். பேசாமல் இதையும் கொண்டு போய் எனக்கென்று சேர்த்து வைக்காதீங்க. விளங்கிச்சா..... "

"போடா, போ..... இனி ஏன் உனக்குச் சேர்க்கப் போறன். வாற என்ர மருமகளுக்கு வகை வகையா நான் வாங்கிக்கொடுக்கத் தேவையில்லையா?"

"என்ன மருமகளுக்கா. உங்களுக்கென்ன பயித்தியமா? ஆகத் தான் வாறவள தலையில தூக்கி வச்சீங்க. பிறகு நீங்கதான் அவஸ்தப்பட வேண்டிவரும். இப்ப ஒண்டும் அவசியமில்ல. ஆறதலாய்ப் பார்க்கலாம்"

"பொறு பொறு படிப்புப் படிப்பு என்டு தள்ளிப் போட்டிற்றா. இனி வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்குப் போக வேணாமா? சும்மா எனக்குப் புத்தி சொல்லத் தேவல்ல. கிழட்டு வயசிலயா கல்யாணம் செய்யப் போறாய். எல்லாம் நல்லா நடக்கும். மகளின் அன்பு எப்படி என்று அறியாதவள் நான். வாற என்ர மருமகளை என்ர மகளப் போல பார்க்கப் போறன். நீ உன்ர வேலயில கவனமா இரு"

மகனை அடக்கிவிட்டுத் தன் முயற்சியைத் தொடர்ந்தாள் சுதா. அயராத முயற்சி பலனலிக்காது விட்டதாக சரித்திரமே இல்லையே. தாயாரின் வேண்டுதலின்படி பல்கலைக்கழக வளாகத்திலே விஞ்ஞானப் பட்டப்படிப்பைக் கற்கும் மாணவி நிரூபா முன்னே போய் நின்றான் வேந்து.

"எப்படி இருக்கிறீங்க. என்னத் தெரியும் என்று நினைக்கிறன்"

" ம்..."

"கென்டின் போயிருந்து பேசுவோமா?"

" ஓகே.."

கோப்பியின் சுவையுடன் அவள் பேச்சின் சுவையும் இணைந்து கொள்ள, புரிய வேண்டிய பல செய்திகள் புரிந்து கொள்ள, மனதுக்குள் ஒரு இனம் புரியாத இன்ப உணர்வு ஏற்படுவதை உணர்ந்தான் வேந்து. மீண்டும் அவளைச் சந்திக்கவே மனம் துடித்தது. இருவர் பேச்சும்

சுமுகமாக நிரூபா தான் தன் எதிர்காலம் என்பது வேந்து மனதில் நிரூபணமாகிவிட்டது. சில காலம் பேசிய பின் முடிவைப் பெறலாம் என்று எண்ணி வந்த எண்ணம் பஞ்சு போல் சொல்லிக் கொள்ளாமலே பறந்து போனது. நிரூபாவும் நிதானமாகவே முடிவெடுத்தாள்.

"நான் வெளிப்படையாகவே சொல்றன். பேசிப்பேசி நாட்களைத் தள்ளி, நாளொருநாள் எனக்குப் பிடிக்கவில்லை என்று விட்டுப் போக எனக்கு விருப்பமில்ல. ஒரு பார்வையில் புரிந்து கொள்ளும் இது எனக்கு செட் ஆகுமா என்று. ஆகும் போல் மனம் சொல்லுது. நீங்க...?" தன் பேச்சைத் தரித்தாள். கண்களை விழித்தாள். தலையை ஒருபுறம் சரித்தாள். அவள் பார்வை விழிக்குள் பதுங்கிப் போனான் வேந்து. சிக்கிக் கொண்ட பார்வையையும் பாய்ந்து கொள்ளத் துடிக்கும் மனதையும் சிக்கெனப் பிடித்தான். வைத்தியசாலையில் வகைவகையான அழகு பிம்பங்கள் தன் முன் தோன்றினாலும் சலனப்படாத மனம் இன்று மட்டும் ஏன் தடுமாறுகின்றது. இதைத்தான் விதி என்பதா? இல்லை ஈர்ப்பு என்று சொல்வதா எதுவாக இருந்தாலும். தலையை ஆம் என்று பேச்சின்றி அசைத்தான்.

"என்ன?..... சொல் வேண்டும். பேசத் தெரியும் தானே" என்று கேட்டாள்.

"எப்போ கல்யாணத்தை வச்சிக்கலாம். மீண்டும் எப்போ சந்திக்கலாம்?" இதுவே அவன் பதிலாகியது.

இருவரின் சிரிப்பும் திருமணத்தில் கொண்டு நிறுத்தியது. அமோக திருமண நிகழ்வில் தன் மகனை நிரூபாக்குக் கைப்பிடித்துக் கொடுத்தாள் சுதா. ஆடம்பரமாகத் தன் மகனை அழகு பார்த்தாள். எண்ணியதை எண்ணியபடியே ஆற்றிய சுதாக்கு இப்போதெல்லாம் மருமகளுக்குப் பார்த்துப் பார்த்துப் பணிவிடை செய்வதே பணியாகிப்

போனது. அன்புக்குப் பஞ்சமின்றிய சுதாவுடனேயே நிரூபா தங்கி விட்டாள். நிரூபாவின் பல்கலைக்கழகப் படிப்புக்குப் பங்கம் வந்துவிடக் கூடாது என்பதில் சுதாவும், வேந்துவும் கவனமாக இருந்தனர். மாமியை அரவணைப்பதிலும் மகிழ்ந்து செல்லங் கொஞ்சுவதிலும் பல்கலைக்கழக இறுதி நேரம் செலவாகியது. வேந்துவின் பேச்சுக்கும் வாழ்வுக்கும் ஏற்ற பெண்ணாக நிரூபா திகழ்ந்தமை அவர்கள் வாழ்வில் வசந்தத்தை வழங்கியது.

"மகள் நாளைக்கு எத்தனை மணிக்கு யுனிவேர்சிட்டி. ஏனென்றால், காலையில் நேரத்துக்கு எழும்ப வேண்டுமே!" என்றாள், சுதா

"அம்மா உடம்புக்குச் சுகமில்ல என்று நேற்று முழுவதும் சொன்னீங்க. நாளைக்கு சும்மா அயர்ந்து தூங்குங்க. அவ தனக்கும் எனக்கும் சாப்பாடு செய்து எடுத்துக் கொண்டு போவா. ஓய்வில்லாமல் வேலை செய்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும். நாங்க என்ன சின்னப் பிள்ளைகளா?" என்றான் வேந்து

"பறவால்லப்பா.... வீட்ட வந்து கொஞ்சநேரந்தான் புள்ள எங்களோட கதைக்குது. மற்றநேரம் படிப்பு படிப்பு என்று பறக்குது. என்னால ஏண்ட உதவியச் செய்றன். இன்னும் இந்த உடம்பு இருந்து என்னத்தச் சாதிக்கப் போகுது. நீங்க ரெண்டு பேரும் நல்லா இருந்தாத்தான் நானும் நிம்மதியா இருப்பன். நீ சொல்லு பிள்ள. அவன் கிடக்கிறான்"

"நாளைக்கு 8 மணிக்கு அங்க நிற்க வேணும் மாமி"

"ஓ 6 மணிக்கு எழும்பினாக் காணும்"

மறுநாள் காலை கண் விழித்தாள். உடல் அலுப்பு வாட்டி எடுத்தது. வயதாகிவிட்டால், எங்கிருந்துதான் இந்த வருத்தங்கள் எல்லாம் வந்து ஒட்டி கொள்கிறதோ! எத்தனை வருடங்கள் தான் இந்த உடல்

எங்களுக்காக உழைப்பது. 110 தாண்டி யாராவது வாழ்ந்ததாக நாம் அறியவில்லையே. உடல் முடியவில்ல. தட்டுத்தடுமாறிப் பார்த்தாள். மணி 7.30. உடலை நிதானப்படுத்தினாள். சமையலறையில் பெரிய சத்தம். மகனும் மருமகளும் வாக்குவாதப்படுவதும் பாத்திரங்கள் உருட்டுவதும் காதில் விழுந்தது.

"முதலே சொல்லியிருந்தால் நான் அலாரம் வைத்து எழும்பி யிருப்பேன். எல்லாம் தான்தான் செய்ய வேணும். வயசு போனா போன மாதிரி இருக்க வேண்டியதுதானே. இப்ப எனக்குத்தான் தேவை இல்லாத ரென்ஸன்"

"ஒரு பாசம் என்றா என்னவென்று தெரியாத ஜென்மம். அவவே முடியாது என்று படுத்திருக்கிறா. ஏன் நீ நேற்றே சொல்லியிருக்கலாமே. வேணாம் மாமி நாளைக்கு கென்டினில சாப்பிடுறன் என்று. ஒரு நாளுக்கு கென்டினில் சாப்பிட்டால், உடம்பு ஒன்றும் கெட்டுவிடாது. இன்றைக்கு பிந்திப் போறதால உன்ர படிப்பு ஒன்றும் குறையப் போற தில்ல. எனக்கு முக்கியம் அம்மா. அவ இல்லாட்டி உனக்கு நான் இல்ல. எனக்கு இந்த வாழ்க்கை இல்ல. இதைக் கொஞ்சம் இப்ப புரிஞ்சுக்க"

"நீ ஒன்றும் இப்படிக் கரிஞ்சு கொட்டி எனக்கு ஒன்றும் சாப்பாடு தரத் தேவையில்ல. நான் ஆஸ்பத்திரியில் சாப்பிடுவன்"

பதிலுக்குக் காத்திராமல் தாயை ஒரு தடவை எட்டிப் பார்த்து விட்டுக் காரை எடுத்துப் போய்விட்டான்.

"உலகத்தில இல்லாத பெரிய அம்மா. அவவும் ஏதோ பெரிய அன்பு காட்டிற மாதிரி நடிப்பு" முணுமுணுத்துவிட்டு நிரூபாவும் கிளம்பிவிட்டாள்.

ஒரு தாயுள்ளம் இடிந்து போனது. உண்மைக்கும் நடிப்புக்கும் வித்தியாசம் தெரியாத பெண்ணையா என் மகள் என்று கருதினேன்.

நெஞ்சு படபடத்தது. நோய்க்கு முதற் காரணமே மனம் என்னும் மாயப் பொருள் தானே. ஆயினும் என் மகள் பேசினால், நான் தாங்காமலா இருப்பேன். நானும் பிழை விட்டிருக்கிறேன். சின்னஞ் சிறுசுகள் பாவம் நிம்மதியாப் படுத்திருக்கலாம். இப்ப அநாவசிய சண்டை என்னால் வந்துவிட்டது என்ற படி இரவுணவை வகை வகையாய்த் தயாரப்படுத்தினாள். அசதியோ ஆட்டிப்படைத்தது. எனினும் பிள்ளை களை நினைக்க, அவை இரண்டாம் பட்சம் என்று கருதினாள். உணவு தயாரானதும் மீண்டும் வந்து படுத்துவிட்டாள். இந்த உடலுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. அதனால் என்னைக் கேட்காமலே மூளை என்னை உறங்க வைத்திருக்கிறது. பிள்ளை யூனிவர்சிட்டி முடிக்கும் வரையாவது நான் தாக்குப்பிடிக்க வேணும். அதுக்குப் பிறகு என்ர கடமை முடிஞ்சது என்று நான் போய்ச் சேர்ந்திருவன் என்று நினைத்தவளாய் இமை மூடினாள்.

கண் விழிக்கும் போது இருவரும் ஒன்றாக வீடு வந்திருந்தது தெரிய வந்தது. மீண்டும் நிரூபாவே வாய் திறந்தாள்.

"இப்ப பாருங்க. இவக்கு முடியாதென்று கடையில வாங்கி வந்தா. இஞ்ச ஆக்கிப் படைச்சிருக்கு. இதுக்கு என்ன செய்யப் போறீங்க"

"ஆ.... அப்பிடியா! அப்ப வா சாப்பிடுவம். அம்மா எண்டா அம்மாதான். வாங்கினத பிரிஞ்சுக்குள் (Freezer) போடு. நாளைக்கு சாப்பிடுவம். அம்மா.... எப்பிடி உடம்பு இருக்கு. ஏனம்மா இப்ப சமைச்சனீங்க. சும்மா படுத்திருக்கலாமே"

"காலயில என்ன அறியாமப் படுத்திட்டன் மகன். நீங்க கென்டீனில சாப்பிட்டிருப்பீங்க. வாய்க்கு ருசியாச் சாப்பிட்டாத் தானே. படிப்பு ஏறும். வேலையும் நல்லாச் செய்ய முடியும். நான் இருக்கும் வரையும் என்னால ஏன்டவரை செய்யிறன். பிறகு உன்ர மனிசி உன்னப் பார்த்துக் கொள்வாள்" என்றாள்.

"என்ன செய்யுது மாமி? எதாவது பார்த்து மாமிக்கு மருந்தக் குடுங்களேன். உங்கள படிப்பிச்சதுக்கு மாமிக்கு ஒரு வருத்தமும் வராம பார்க்க வேண்டியதுதானே உங்கட பொறுப்பு"

நீ வேல செய்யாம இருக்கிறதுக்கு என்று சொல்லு என்று மனதுக்குள் நினைத்தவனாய்.

"வாங்க அம்மா. சேர்ந்து சாப்பிடுவம்" என்று சொல்லியபடி வேந்து எழுந்தான். மூவரும் ஒரே மேசையில் உணவருந்தினர். சிறிது நேரம் தொலைக்காட்சி. அன்றைய பொழுது அமைதியாகக் கழிந்தது.

காலம் கரையவும், தன் வாழ்நாளைத் தன் மகன் மருமகளுக்காய் அர்ப்பணிக்கவும் சுதா வாழ்வு தொடர்ந்தது. சின்னச் சின்னத் தவறுகள் வராமல் தன் பிள்ளைகளை குதூகலமாய் வைத்திருந்தாள். அடிமனதில் பெண்பிள்ளை இல்லையென்ற குறை இருந்ததுவே இவ்வாறு நிரூபாவில் அளவுகடந்த பாசத்தைக் காட்ட காரணமாகியது. சிறிது நேரம் பல்கலைக்கழகம் இருந்து திரும்பிவரப் பிந்திவிட்டால், சுதா மனம் படபடவென்று துடித்துப் பாடாய்ப்படுத்தும். அவள் சிரித்த முகம் பார்த்தே மனவமைதி கொள்வாள். அளவுக்கு மீறி பாசம் வைக்காதீங்க அம்மா என்று வேந்து அடிக்கடி சொல்வான்.

ஆனால், பாசம் என்பது வரிந்து கட்டிக் கொண்டு வருவதில்லையே. தரமான மனதுக்குத் தானாக வரும். அதை மறைத்து வைக்கவோ, விலத்திக் கொள்ளவோ முடியாது. அடித்துப் போட்டாலும் பாசம் வைத்தாரைத் தேடியே ஓடும். இதே நிலைதான் சுதாவுக்கு.

அன்றொருநாள் வேந்துக்கு இரவுவேலை. நேரமோ விரைவாய் கடக்கிறது. நிரூபா இன்னும் வரவில்லை. மகனுக்கு தொலைபேசியில் அழைத்தாள். அவனும் இன்று யூனிவேர்சிட்டி முடியத் தாமத

மாகும் என்று சொன்னான். ஆயினும் சுதாவுக்கு மனம் இருப்புக் கொள்ளவில்லை. கடிகாரமோ நேரத்தை இரவு ஒ மணியெனக் காட்டியது. இப்படித் தாமதமாக நிரூபா வருவதில்லையே! ஏங்கிக் கொண்டு சாளரம் ஊடாகத் தன் பார்வையைப் பதித்திருந்தாள்.

வீட்டின் முன்னே ஒரு வாகனம் வந்து தரித்தது. கண்ணைச் சுருக்கிப் பார்த்தாள். இருண்ட வீட்டில் சாளர வெளிச்சம் வெளிவர அவசியமில்லையே. வாகனத்தினுள் இருந்து இறங்கினாள் நிரூபா. யாரோ கையைப் பிடித்து இழுப்பதையும் அதை விலத்தி விட்டு வாகனத்தினுள் இருந்து வெளிவருவதையும் பின் கையை இழுப்பதனால் உள்ளே செல்வதையும் கண்டாள். மீண்டும் கண்களை அகட்டிப் பார்த்தாள் சுதா. அழகான ஒரு ஆண்மகன் வாகனத்திற்குள் இருப்பது தெரிந்தது. அவன் கன்னங்களில் நிரூபாவின் உதடுகளின் அழுத்தம். மீண்டும் அவன் இதழோடு நிரூபா இதழ்கள் இணைவது கண்டு சுதா ஆடிப்போனாள். சட்டென்று படுக்கையில் அமர்ந்தாள். நிசப்தம். என்ன செய்வதென்றே புரியாத நிலை. வழமையாக அவளுக்காக விழித்திருந்து உணவு பரிமாறிவிட்டே தூங்கச் செல்லும் சுதாவின் கைகால்கள் எல்லாம் நடுக்கம் கண்டன. விழிநீர் விழிவிட்டு விடைபெற்றது. கண்களைத் துடைத்துவிட்டு வெளியே வந்தாள்.

பளிச்சென்ற புன்னகை முகத்துடன் குளியலறையிலிருந்து வெளியே வந்த நிரூபா,

"மாமி ரெலிபோன் அடித்துச்சொல்ல மறந்திட்டன். நான் வெளியில பிரெண்ட்ஸ் ஓட சாப்பிட்டிற்றன். நீங்க சாப்பிட்டிற்றுப் படுங்க"

"யார் பிரண்ட்ஸ் பிள்ள"

"உங்களுக்குத் தெரியாது மாமி"

உணவை வெறுத்து உடலைக் கட்டிலில் சரித்தாள். மனமோ சிந்தனையில் ஆழ்ந்தது. இதை எப்படிக் கையாள்வது. நான் கண்டதாகச் சொன்னால், வயசு போன காலத்தில கண் தெரியவில்லை என்பாள். புத்தி சொன்னால், எனக்கு எல்லாம் தெரியும் என்பாள். ஏனென்றால், நிரூபாவைச் சுதா நன்றாகவே படித்து வைத்திருக்கின்றாள். அளவுக் கதிகமாக இடத்தைக் கொடுத்து விட்டேனோ! என்னிலோ, அல்லது எனது மகனிலோ ஏதோ பிழையிருந்திருக்குமோ! இல்லை யென்றால், இவள் வேறு துணை நாடியிருக்க மாட்டாளே. மனம் தடுமாறும் வயதில் தவறுவிடுவது சாத்தியமே. ஆனாலும் தடுமாற என் மகனில் என்ன குறையைக் கண்டிருப்பாள்? இதைவிட எப்படிப் பாசத்தை இவளில் என்னால் காட்டமுடியும். சொந்த இரத்தம் போலல்லவா கவனித்தேன். எனது மகளென்றால், நான் என்ன துரத்தியா விடப்போகிறேன். புத்தி சொல்லிப் பார்ப்போம். புரிந்து நடந்து கொள்வாள். சந்தர்ப்பம் சூழ்நிலையை பார்த்துக் கதைக்கலாம். இப்போது இக்கதையை வேந்துவிடம் அறிவிக்கத் தேவையில்லை. நாளை பேசிப் பார்ப்போம். என்று அன்றைய இரவைத் தூக்கமில்லா இரவாய் அனுப்பி வைத்தாள்.

நாளும் காத்திருக்காமல் இறக்கை கட்டுகிறது. மனக்குளப்பமோ நாளுக்கு நாள் மன உழைச்சலை அளவின்றி அதிகரிக்கச் செய்கிறது. வேந்துவை நிரூபா கட்டி அணைக்கும் போதும், மாமி மாமி என்று தன்னிடம் குழையும் போதும் சுதா மனதில் தேளொன்று இறுகக் குத்துவது போல் வேதனை வாட்டி எடுத்தது. அன்று தொலைக்காட்சியின் முன்னே மாமியும் மருமகளும் நாடகம் ஒன்றை இரசித்தபடி இருந்தனர். இதுவே சந்தர்ப்பம் என்ற படி

"பிள்ள உன்னிடம் கன காலம் ஒரு சங்கதி கேட்கவென்று இருக்கிறன். நீ எப்படி எடுப்பியோ தெரியாது. ஆனாலும், இன்டைக்குக் கேட்கவே வேணும் என்று முடிவெடுத்துவிட்டேன். உன்னோட படிக்கிற

பெடியன்கள் யாராவது உன்ன விரும்பிறதென்று கேட்டவனுகளோ?" கண்களைச் சுருக்கினாள், இருட்டு வெளிச்சமானால், அடை யாளங்கள் வெளிப்படை அல்லவா? போதிய அளவு ஒளித்தாலும், மறைவு எப்படியோ காட்சிப்படுத்தப்படும் அல்லவா

"என்ன இது புதுக்கதையா இருக்கு. எல்லாருக்கும் தான் என்னப் பிடிக்கும்"

"எல்லாருக்கும் பிடிக்கிறதுக்கும் ஒருவனுக்குப் பிடிக்கிறதுக்கும் வித்தியாசம் இருக்கிறது நிரூபா. இது ஒன்றும் பெரிய விடயமல்ல. இந்த வயசில அறியாமப் பிழை விடுறது வழமைதான். ஆனால். இதக் கொஞ்சம் நீ யோசிச்சுப் பார்த்தா சரியாயிடும்"

"என்ன சரியாயிடும்? நீங்க என்ன சொல்றீங்க? முழுப் பூசணிக்காயை முழுவதுமாக மறைத்தாள்."

"பிள்ள உன்ர நன்மைக்குத்தான் சொல்றன். வேந்து அறியிறதுக்கு முதல் அந்தப் பிள்ளயிட்டச் சொல்லி ஒதுங்கச் சொல்லிரு மகள். அது தான் எல்லாத்துக்கும் எல்லாருக்கும் நல்லது"

எந்த வார்த்தைகளும் காதில் செலுத்தாது. இருந்த இடத்தைவிட்டு விட்டென்று எழுந்தாள். தன் அறையினுள் சென்று அமர்ந்து கொண்டாள். எப்படி இந்த மனிசிக்கு இது தெரிந்தது. இதுக்கு ஒரு முடிவு கட்ட வேணும் என்று நினைத்தாள்.

நிரூபா நடவடிக்கைகள் சுதாவின் அச்சத்துக்கு நெய்யூற்றியது. எத்தனை காலங்கள் வேந்துவிடம் மறைப்பேன். நடிப்புலக மேதையாய் நிரூபா நடமாடும் காட்சி மனதைச் செல்லரிக்க வைத்தது. மீண்டும் மீண்டும் பேசும் பேச்சுக்கள் விழலுக்கிறைத்த நீரானது. எப்படியும் நிரூபாவை வழிக்குக் கொண்டுவந்து விடலாம் என்று போட்ட கணக்கு பொய்க் கணக்கானது.

பார்த்துப் பார்த்துச் செய்த பணிவிடைகள் பலனளிக்காமல் போனது. சேர்த்து வைத்த பாசமெல்லாம் வேசமாகிப் போனது. தாய்க்குத் தாயென போட்ட கணக்கு தப்பானது. நேசம் வைத் மனசு பேதலித்துப் போனது. இளமைக் கனவுகளும் எடுத்தெறியும் உறவுகளும் இலகுவானதனால், அன்புக்கும் காமத்துக்கும் வேறுபாடு புரியாது போனது. நிரூபா என்னும் கல்லுக்குப் பாசமென்னும் பாலூற்றிய சுதா பரிதவித்துப் போனாள். அழகுப் பெண்ணானவள் மெலிந்து துரும்பானாள். உடனிருந்தே கொல்லும் மனநோயானது பாசத்தை யாரென்று ஆராயாது பற்று வைக்கும் உனக்கு பாசமே கல்லறையாகும் என்று சுதா மனதுக்கு சாபம் போட்டது.

வேந்துக்கு உண்மை விளங்கியது. இறங்க வேண்டிய அளவுக்கு இறங்கினான். மாமி. மாமா மௌனமானார்கள். பெற்றெடுக்கவும் பார்த்துப் பார்த்து வளர்த்தெடுக்கவும் கற்பிக்கவுமே உரிமை கொண்ட புலம்பெயர் பெற்றோர்களிடையேயுள்ள ஒரு பெற்றோரே இந்த நிரூபாவின் பெற்றோரும். அளவுக்கதிகமான சுதந்திர உரிமை யானது சூழலையும் சுற்றத்தையும் எண்ணிப் பெரிதாய்க் கவலைப்படுவதில்லை.

அன்றொரு நாள் நிரூபா வீட்டைவிட்டுச் செல்வதற்குத் தயாரானாள். தன் உடைமைகள் அடங்கிய பெட்டியைக் கைகளினால் இழுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள். அதுகூட அவள் மனம் போன போக்குக்கு இழுபட்டது. வீட்டு வாசலிலே நின்ற சுதா அவளைத் தடுத்தாள்.

"நில்லு மகள் நில்லு மகள்.... அவளின் காலில் விழுந்தாள்."
"எங்களை விட்டிற்றுப் போகாத பிள்ள. கொஞ்சம் பொறுமையாக இரு. எல்லாம் சரியாயிடும். வேந்து தனிச்சுப் போவான். அந்தப் பெடியனிட்ட நான் கதைக்கிறன்"

"நீங்கள் ஒண்டும் கதைக்க வேண்டாம். எனக்கு இங்க இருக்கப் பிடிக்கல்ல. விடுங்க...."

காலால் சுதாவை எற்றிவிட்டாள். அவளைக் கடந்து போனாள். சுதாவின் உடல் நிலத்தில் சரிந்தது. பாசம் வைத்த மனசு மயக்க மானது. வேலை முடிந்து வீடு வந்த வேந்து வாசல்படியில் மயங்கிக் கிடக்கும் தாயைக் கண்டான்.

"அம்மா! எழும்புங்க எழும்புங்க...."

அவளால் எழும்ப முடியுமானால், இப்போது மகனுக்கு ஓடிப் போய் குடிக்கவோ உண்ணவோ ஏதாவது கொடுத்திருப்பாளே.

துடித்துப்போன வேந்து தாயை மருத்துவமனையில் அனுமதித்தான்.

அன்று ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிடந்த தாயைக் காண அறை யினுள் நுழைந்தான் வேந்து. ஆனால், தாயோ அவனைப் பெரிதாக அலட்சியம் செய்யவில்லை.

"போட்டது போட்டபடி கிடக்கு. இங்கே ஏன் தான் என்னக் கொண்டு வந்து வச்சிருக்கிறியோ தெரியாது. களைச்சுவரும் புள்ள. டெவில் செய்து தரக் கேட்டவள். வேந்து.... என்னடா இது."

"ஏன் என்ன இஞ்ச கொண்டு வந்தனீ? பிள்ள வார நேரமாச்சு"

மலைத்து நின்றான் வேந்து.

பொறுமையின் கனிவு

உடற்பலம் அனைத்தும் சேர்த்து தன் தனி முயற்சியால் உலகத்தை வெளிக்காட்ட உலோகத்துணை எதுவுமின்றி பூமிக்குத் தன் குழந்தையைக் கொண்டு வந்தாள் கவிதா. குழந்தைக் குரல் கேட்கத் தளர்ச்சி கண்ட அவள் கண்கள் விழித்துக் கொண்டன. கையிலே தரப்பட்ட குழந்தையின் கன்னங்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் விழுந்தன. இது ஆனந்தக் கண்ணீரா? இல்லை அவள் தாங்கிய வேதனைகளைப் பிழிந்து வந்த கண்ணீரா?

வேதனைக் காலம் தொடர்வதில்லை – மனிதன்
சோதனைக் காலம் சொந்தமாவதில்லை
வேதனையும் சோதனையும் ஓர்நாள் - இன்ப
வேதனததை விதைத்து விடும்
விளைவுகளும் நலமாய்ச் சொரிந்துவிடும்.

கையளவில் பிள்ளைவரக் கடந்த காலங்களை அவள் கடத்தியதும் ஒரு கனவாகியது. செழிப்பான செல்வக் களிப்பான குடும்பத்திலிருந்து தனக்காய் ஒரு சிறப்பான குடும்பங் காண கடவைச் சீட்டே அவளுக்குச் சிறகாகியது. ஜேர்மனியும் அவளை வரவேற்றது.

6 மாதங்கள் அவளுக்கோ அழகான வாழ்க்கை. அவள் ஆசை மணாளன் அன்புடனே உலகம் அனைத்தும் சுற்றி வந்தாள் கவிதா. அவள் முகம் நிமிர்த்த உலகம் பூச்சொரிந்தது. இன்ப மலர்கள் கொட்டிக் கிடந்தன. குதூகல வாசனை இல்லமெங்கும் நுகரப்பட்டது. புகுந்த வீட்டுப் புது உறவுகள் பாசத்தைப் பாத்திரமின்றிப் பருக்கினார்கள். தெளிவான வாழ்க்கை மேகத்தில் சில இன்ப நட்சத்திரங்கள் மட்டுமே மின்னிக் கொண்டிருந்த போது அந்த வானில் விமானக் கீறல் விழுந்தது போல் அந்தத் தலையிடி இரகுவைத் தடங்கள் செய்தது. Vicks , Axe oil, Paracetamol இப்படி இக்கால தலையிடி நிவாரணிகள் எல்லாம் தலையிடிக்கு எதிராய் எதிர்த்துப் போரிடத் தனக்காய்க் கையாண்டான் இரகு. ஆனால் முடியவில்லை. இறுதியாய் ஆண்டவனாம் மருத்துவரை நாடினான். இரத்தஓட்டத்தில் அழுத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. இரத்த அழுத்தம் வழமைக்கு மாறாய் அதிகரித்திருந்தமை உணரப்பட்டது. அப்படியென்றால் எப்படி?

கீழுள்ள கணிப்பீடு 80 ஆகவும் மேலுள்ள கணிப்பீடு 110 ஆகவும் இருக்க வேண்டிய நிலை மாறி கீழே 120 மேலே 200 ஆக அதிகரித்திருந்தது. இரத்த அழுத்தத்தை குறைப்பதற்கான மருத்துவப்பயிற்சிகள் மருந்து மாத்திரைகள் எதற்குமே இரத்த அழுத்தம் குறைவதாயில்லை. அருகே வைத்துத் தாய் போல் அவதானிப்போம் என ஆண்டவனால் படைக்கப்பட்ட மனிதத் தெய்வங்கள் மருத்துவ சாலையில் வைத்து 3 கிழமைகள் முயற்சித்தார்கள். தமது கட்டுப் பாட்டுக்குள் இரத்த அழுத்தத்தைக் கொண்டுவரலாம் என முயற்சித்த அவர்கள் முயற்சி தோற்றுத்தான் போனது. "அவனைத் தாண்டி அணுவும் அசையாது" விதியை வெல்ல விதியாலும் முடியாது.

முடிவாக எதைத்தான் பரிசோதனை செய்வோம். இந்த இரகுவின் இரத்த அழுத்தத்தின் மேலோட்டம் கீழிறங்க வழிதான் யாது? இறுதிப் பரிசோதனை சிறுநீரகப் பரிசோதனை. முயற்சி நமது கையில் முடிவு

இரகுவின் உடலில். மருத்துவர்கள் ஆலோசனையின் பெயரில் சிறுநீரகப் பரிசோதனைக்காய் வேறு மருத்துவமனை அவனைத் தத்தெடுத்தது. தகுந்த பரிசோதனைகளின் பின் முடிவும் கண்டறிந்தது. இரகுவின் இரண்டு சிறுநீர்த் தொழிற்பாட்டு நிலையங்களும் 25 வீதமே தொழிற்படுகின்றன. இப்போது கவிதா கண்களில் கண்ணீர்த் தேங்கி கட்டப்பட்டாயிற்று.

அளவுக்கு மிஞ்சினால் இன்பம் தரும் மதுபானம் வாந்தியாய் வெளியேறிவிடும். தித்திக்கும் இனிப்புச் சக்கரை. வியாதியை அன்புடன் பரிசளிக்கும். இன்பத்தின் மறுபகுதி துன்பம் அல்லவா. முதுகுதான் வெளித் தோற்றம் இடுப்பில் மறைந்திருக்கும் இடது, வலது சிறுநீரகங்களின் வடிவமும் தொழிலும் வெளித்தோற்றத்தில் யாரறிவார். குருதியில் குணம் தரும் சத்துக்களும் உண்டு, கழிவுகளும் கூடவே உண்டு. நாளொன்றுக்கு 350 தடவைகள் சிறுநீரகத்தின் ஊடாகப் பயணம் செய்யும் வேகக் குருதியைச் சுத்தமாக்கி அனுப்பிக் கொண்டிருக்கும் தொழிற்சாலையே இந்தச் சிறுநீரகம்.

உடலுக்குத் தேவையான புரதத்தை இரத்தம் எடுத்துச் செல்கிறது. செல்கள் புரதத்தைப் பயன்படுத்தியது போக மிஞ்சிய கழிவுகள் நைட்ரஜன் அடங்கிய யூரியாவாக மாறும். இவை இரத்தத்திலே மீண்டும் கலந்துவிட்டால், உயிர் உடலைவிட்டு விடை பெற்றுவிடும். அதனால், இந்த யூரியாவை இரத்தத்தில் இருந்து பிரித்தெடுத்து சிறுநீராக கழிவாக வெளியகற்றுகின்ற பாரிய பணியை சிறுநீரகம் செய்கின்றது. இது நல்லவற்றை உடல் ஏற்கத் தீயவற்றை வெளியகற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளி. வாழும் நாள் வரை இரவுபகலின்றி நமக்காய் உழைக்கும் தியாகி. அவர் உழைப்புத் தொய்வு கண்டுவிட்டால், அழுக்கனைத்தும் இரத்தத்துடன் இணைந்து இழுக்கடைந்த உடலாகும். இந்நிலைக்குத் தள்ளப்பட்டான் இரகு.

நமது இதயத்திலிருந்து இரத்தம் தமணிகளின் வழியாக நெப்ரானை வந்தடைகின்றது. இங்கு இரத்தத்தின் திரவப்பகுதிகளான பிளாஸ்மோ, குளுக்கோஸ், அமினோஅமிலங்கள், பொட்டாசியம், குளோரைட் போன்றவை வடிகட்டப்படுகிறது எஞ்சிய இரத்தம், நெப்ரானிலுள்ள (Nephron) குளோமெருலஸ் (Glomerulus) என்னும் இரத்தக் குழாய்ப் பகுதியை வந்தடைகின்றது. இங்கு போடோசைஸ் செல்கள் வடிகட்டியாகச் செயல்படுகின்றன. இங்கு இரசயான மாற் றங்களுக்கு உட்பட்ட இரத்தம் டுயூபிள் என்னும் நுண் குழாய்களை வந்தடைகின்றது. இங்கு உடலுக்குத் தேவையான சத்துக்களாகிய சோடியம், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்றவற்றின் சரியான அளவுகள் கணக்கெடுக்கப்பட வேண்டும். இத்தொழிலைச் சிறுநீரகம் மிகக் கண்ணியத்துடன் செய்கின்றது. இந்த அளவில் குறைவு காணப்பட்டால் மீண்டும் அவற்றை இரத்தத்தில் கலக்கச் செய்யும் பணியையும் தலைமேற் கொண்டு செய்கின்றது.

வெளியேற்ற வேண்டிய கழிவுப் பொருள்களை வெளியேற்ற முடியாமலும், அல்புமினை சேகரிக்க முடியாமலும் போனால் அல்புமின் என்னும் சத்து வெளியேறிவிடும் அல்லவா. இந்த அல்புமின் தானே நீரை இரத்தத்தில் இருக்கச் செய்வது. இப்போது என்ன நடக்கப் போகிறது. நீர் திசுக்களுக்குள் சென்று முகம், கைகால்கள் வீக்கம் காணும் அல்லவா! மூளையும் உடலுக்கு அல்புமின் தேவையென்று கல்லீரலுக்கு அறிவிக்க கல்லீரலும் கூடுதலான கொலஸ்டோலை இரத்தத்தில் வெளியேற்றுகின்றது. இதனால் இதயம் பாதிப்பை அடைகின்றது.

இரகுவின் பரிசோதனையின் போது இரத்தக்கொதிப்பு அதிக மாகவும் சிறுநீரில் அல்புமின் இருப்பதும் அத்துடன் கிரியோனின் (Creatine) கழிவுப் பொருள் அதிகமாகவும் இருப்பது அறியப்பட்டது.

இரகுவுக்கு நோய் இதுவே என்று ஊர்ஜிதமாகிவிட வைத்தியர்கள் துரிதமானார்கள். ஜேர்மனிய வைத்தியத்தை உலகமே அறியும். மனிதனைப் பார்த்தே பணத்தைப் பார்க்கும் மனிதத்தன்மை படைத்தவர்கள். பணமில்லாத காரணத்தினால் நோயாளிகளைத் தவிக்கவிட்ட வைத்தியர்களை எத்தனையோ தமிழ்ப் படங்களில் பார்த்திருக்கின்றேன். பண வசதி குறைந்தவர்களுக்குக் கூட அனைத்து மருத்துவ வசதிகளையும் பெறக்கூடியது இரகுவுக்கு வாழ்வளிக்கும் நாடு. இந்த வகையிலே இரகுவின் கையின் தோலைக் கிழித்து ஒரு செயற்கை இயந்திரம் நிரந்தரமாய் பொருத்தப்பட்டது. அதனூடாக இரத்தம் சுத்திகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். நாடிக்குள்ளால் குருதி வெளியேறும் போது நாளத்தினூடாகப் புதிய குருதி செலுத்தப் பட்டுக் கொண்டிருக்கும். இதனை டயாலிஸிஸ் சிகிச்சை முறை என்பார்கள். இரகுவின் உடலும் துரும்பானது. உற்றார் உறவினர் துணையிழந்தான். கூடிவந்த உறவுகள் அவனை நாடவில்லை இப்போது சிறுநீரக தானம் வழங்க யாரும் முன் வரவில்லை. யாரால் தான் இம்முடிவு எடுக்க முடியும். முடிந்தவர் இரத்தம் கூட இரகு உடலுக்கும் பொருந்த வேண்டுமே. அப்போதுதானே அவனுடலும் அந்நியனாய் இவ்வுறுப்பை எண்ணாது. ஒன்றுடன் வாழ்ந்து விடலாம். ஆனால். அந்த ஒன்றுக்கு ஏதும் பங்கம் விளைந்து விட்டால்!!!! தம்பதிகள் இருவரும் தவியாய்த் தவித்தனர்.

உலகத்தில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் ஒரு சிறுநீரகத்துடன் வாழ்கின்றார்கள். 3 சிறுநீரகத்துடனும் பலர் படைக்கப்பட்டுள்ளார்கள். தேவைப்படுவோர்க்குக் கிடைப்பதில்லை. போதுமென்பார்க்கு அளவு மீறித் தரப்படுகிறது. சிறுநீரகம் தானம் புரியவில்லையே என்று யாரையும் குறைகூற முடியவில்லை. யாரும் தருவதற்காய் முயற்சி செய்வதாய் பாசாங்கு கூடச் செய்யவில்லை.

கவிதா வாழ்வில் இணைந்ததனால், அவள் காலம் ரகுவைப் போட்டு ஆட்டுவதாய் பிறர் உரைக்கும் பழி அனைத்தும் கவிதா சுமந்தாள். தன் நெஞ்சில் சுமக்கும் இரகுவின் பாரத்துடன் இணைத்தே, தாதியாய், மனைவியாய் மட்டுமன்றி நோய்த் தாக்கம் கண்டு அதிகரிக்கும் இரகுவின் ஆத்திரத்திற்கும் அடிபணிந்து வாழும் அடக்கமானவளும் ஆனாள். அதுமட்டுமன்றி இப்படி வடுச் சொற்களைத் தாங்க வேண்டிய பெண்ணாகவும் ஆயினாள்.

கவிதா நிலை இவ்வாறு இருக்க இரகுவின் நிலையோ பரிதாபத்திற்குரியதானது. இந்த சமூகம் இருக்கிறதே, வலி கொண்ட மனத்திற்கு ஆறுதல் கூற மனமில்லையானாலும் சூட்டுக்கோல் வைக்க மட்டும் தயங்காது. கோடையதில் தாகம் கூடிநிற்க தாகம் தீரவெனத் தண்ணீர் உடற்குத் தந்துவிட்டால் கையது, காலது வீக்கம் கண்டு கழுத்தின் மேல் நீரளவு தாண்டி மூச்செடுக்கவொண்ணா நிலைகண்டு திக்குமுக்காடுவான் இரகு. கவிதா நெஞ்சில் சாய்ந்தபடி இரவிரவாய்க் கண்முழிப்பான்.

வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு
பேரிகொண்டு நீர்திரண்டு பெய்ய வேண்டும் - அதுபோல்
நீரையுண்டு தாகமின்றி நீநிலைக்க வேண்டுமென்றால்
நீரழிவு நின்னுடலில் நேரவேண்டும்.

நான் குறிப்பிட்டது நீரிழிவு என்னும் நோயல்ல. சலமும் மலமும் வெளியேறாத நிலையில் நீரின் அளவு கூடி நீருடன் எல்லாம் நிலை கலந்து விஷமளவு கூடி வாழ் காலத்தை முடித்துவிடும். ஒருநாள் இரகு மருத்துவமனையைத் தரிசிக்காது விட்டால் காவல் துறையினர் இரகு வீட்டைத் தரிசித்து விடுவார்கள். தற்கொலை முயற்சி என்று கையுடன் கொண்டு சென்றுவிடுவார்கள். நம்மைவிட நம் உடலில் ஜரோப்பியர் அதிக அக்கறை வைத்திருக்கின்றார்கள்.

பிஞ்சு முகங்கள் இவர்கள் நெஞ்சைக் கவரும். வாஞ்சையுடன் அள்ளிக் கொள்ள சொந்தக் குழந்தை இல்லையெனும் வேதனை நெஞ்சில் புதைந்து கொள்ளும். அவர்கள் உறவினர் குழந்தைகளில் அன்பு காட்டினாலும் சொந்தக் குழந்தை போலாகுமா? உடலும் உள்ளமும் வேதனை கொண்டாலும் எங்கோ தூரத்து வெளிச்சம் இருவர் மனதில் மின்னிக் கொண்டுதான் இருக்கும். வனவாசம், அஞ்ஞாதவாசம் செய்த காவிய நாயகர்போல் இந்த 5 வருட காலம் இரகு தம்பதியினர் வாழ்வில் துயர் குடி கொண்டுவிட்ட காலங்கள் ஆயின. இடையில் மனமாற்றங்கள் தர உறவினர், நண்பர்கள் அறிவுரை இவர்கள் அறிவைக் கெடுக்கும். இவை தூறல்கள். இடையிடையே வந்து போய் நின்றுவிடும்.

"தம்பி நான் சொல்றதைக் கேளுங்கள். இந்த ஜேர்மன்காரர் இப்படித்தான் போட்டு இழுப்பார்கள். நல்லா பழுதாகினபின் கையை விரித்து விடுவார்கள். இந்தியாக்குப் போங்கள். அங்கு உங்கள் காசுக்கு மலிவாக சிறுநீரகம் வாங்கலாம். அங்கு இப்போது சீறுநீரக மாற்று ஒப்பரேசன் நன்றாகச் செய்கின்றார்கள்"

இப்படிப் பலருடைய சம்பாஷணை இரகுவைக் குழப்பியது. ஆனால்,

"சீச்சீ அங்கு போய் நோய்ப்பட்டிருக்கிற உடலுக்கு வேறு ஏதாவது தொற்று வருத்தங்களை வாங்கிக் கொண்டு வந்துவிடாதீர்கள். இப்படித்தான் ஒருவர் இந்தியாக்குப் போய் சிறுநீரகம் மாற்றி நன்றாகத் தான் இருந்தார். பிறகு ஏதோ தொற்று ஏற்பட்டு இறந்துவிட்டார். அதனால் பொறுத்ததும் பொறுத்தது இன்னும் கொஞ்ச நாள்கள் பொறுத்துப் பாருங்கள். நல்லதே நடக்கும்"

இப்படிச்சிலர் வார்த்தைகள். அனைத்தும் மாறிமாறி இருவர் நெஞ்சிலும் அலைமோதிக் கொண்டிருந்தன.

ஒரு நாள் திடீரென வைத்தியசாலையில் இருந்து ஒரு அழைப்பு வந்தது. உடனடியாக இரகு வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டும். கவிதா நெஞ்சிலே பயவுணர்வு ஒட்டிக் கொண்டது. இறுதியாகக் கொடுத்த இரத்தப் பரிசோதனையில் பிழை ஏதோ இருக்கின்றது என உறுதியாக எண்ணிக் கலங்கிப் போனார்கள். அவசர அவசரமாக மருத்துவமனை அண்மித்தவர்களுக்கு ஒரு நற்செய்தி காத்திருந்தது. இவர்கள் வாழுகின்ற பகுதி மேற்காகக் காணப்பட வடக்குப் பகுதியில் மோட்டார் சைக்கிள் (உதையுந்து) விபத்தில் இறந்துபோன 21 வயது வாலிபன் ஒருவருடைய சிறுநீரகம் இரகுவின் உடலில் வந்து அமர்ந்து கொள்வதற்கு ஏங்கிக் கொண்டிருக்கின்றது. காலதாமதமானால் தன் உயிரை அதுவும் மாய்த்துக் கொள்ளும் என்னும் செய்தி கேட்டு இருவரும் புளகாங்கிதம் கொண்டனர்.

வசந்தம் இரகுவின் உலகில் துளிர்விட்டது. கண் இமைக்கும் முன் ஒரு இன்ப அதிர்ச்சி கிடைத்த நிலையைத்தான் "கொடுக்கும் கடவுள் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுப்பார்" என்பதோ. இரகுவின் உடலினுள் இணைத்த சிறுநீரகம் சிலமணி நேரத்துக்குள் இரகு உடலைத் தன் உடல் போல் கருதி உடனே தொழிற்படத் தொடங்கி விட்டது. இதுவும் ஒரு அபூர்வம் இல்லையா? பொதுவாக சிறுநீரகம் பொருத்தப்பட்டால் குருதி பொருந்தினாலும் அச்சிறுநீரகம் சரியாக தொழிற்படுவதற்கே நாளாகும். ஆனால், உள்நுழைந்தேன் உன் உடல் என் உடலே. என் பணி தொடர்ந்தேன். ஏற்றுக் கொள் உன் வசமே, என்று தன் பணியை அவ்வாலிபனின் சிறுநீரகமானது இரகு உடலில் தொழிற்படத் தொடங்கிவிட்டது.

ஜேர்மனிய உறுப்பு ஒரு தமிழனின் உடலில் தொடர் வாழ்வுக்குச் சொந்தமாகியது. எங்கோ மலையில் பிறந்த சந்தனம் மனிதர்கள் பூசிக்கொள்ள உதவவில்லையா? கடலில் தோன்றிய முத்து மனிதர்

அணியும் மாலையாகவில்லையா? வடக்கே பிறந்த சிறுநீரகம் தெற்கே வாழும் இரகு உடலில் வாழமுடியாதா? ஒரு இழப்பு பிறிதொரு வரவுக்கே என்று மனம் பதித்த இரகு தம்பதியினரின் வாழ்வில் தேனருவி பாயத் தொடங்கியது. 10 மாதங்கள் கடக்கும் முன்னே கவிதாவின் பொறுமையின் கனிவாய் பிஞ்சுக் குழந்தை ஒன்று இருவர் முகங்களையும் பார்த்துச் சிரித்தது.

மதிப்பெண்

அந்த அடுக்குமாடிக் கட்டிடமே அமைதியில் ஓய்ந்திருந்தது. மின்விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டிருந்தன. ஆள் அரவம் அடங்கியிருந்தது. இரவுப்பொழுது வழமைபோல் சிறுவர்கள் தங்கள் உறக்கத்தைத் தழுவியபடி இருக்கும் நேரம் பத்து மணியைச் சுவர்க்கடிகாரம் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. அந்த நகர்ப்புறச் சூழலில், கார்த்திக் குடும்பமும் குடியிருந்தது. வீடும் வேலையும் என்றிருக்கும் கார்த்திக்கிற்கு 2 பிள்ளைகள். மூத்தவள் சுதா நான்காம் வகுப்பில் படிக்கின்றாள். கலை, விளையாட்டுக்களில் ஈடுபாடுடையவள். இரண்டாவது மகன் சுகி. 2ம் வகுப்பில் கல்வி கற்கின்றான்.

அன்று வழமைபோல் கார்த்திக் தன் சுய தொழில் முடித்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். வேலைக் களைப்பு உடலை வாட்ட நிம்மதியான இரவுப் படுக்கையை நாடி மாடிப் படிக்கட்டுகளில் கால் வைத்தான்.

"ஓ..... என்று ஒரு சிறுமியின் அழுகுரல் அவனைத் திடுக்கிட வைத்தது. இந்த இரவுப் பொழுதில் இப்படியொரு சத்தமா! சுதாவின் குரல் போல் இருக்கின்றதே!" பதட்டத்துடன் வழமைக்கு மாறாகப் படிகளில் படபடவென்று ஏறினான்.

வேகமாகக் கதவைத் திறந்து உள்ளே வந்த போது, அழுகுரல் ஓங்கி ஒலித்தது. ஓடி வந்து கட்டியணைத்து அழத் தொடங்கினாள், சுதா. கீழே குனிந்து கைகள் இரண்டினாலும் அச்சின்னவள் முகத்தை நிமிர்த்தினான். திடுக்கிட்டு விட்டான். அவள் கன்னாங்கள் இரண்டும் செக்கச் செவேலென்று சிவந்திருந்தன.

"என்ன நடந்தது? ஏக்கத்துடன் வினவினான்."

"அம்மா அடிச்சுப்போட்டா விம்மினாள், மகள்."

"சாந்தி....நீ என்ன காட்டுமிராண்டியா? பிள்ளையைப் போட்டு இப்படி அடிச்சிருக்கிறாய்" மீண்டும் அதட்டலாய்க் கத்தினான்.

"ஏன் கத்துறீங்கள். உங்களின்ர மகளின்ர கெட்டித்தனத்தைப் பார்த்திட்டு கத்துங்கோ. எனக்கென்று வந்து பிறந்ததே"

என்று சினந்தபடி சுதாவின் மதிப்பீட்டறிக்கையை நீட்டினாள். அதை வாங்கியபடி மகளை அணைத்துக் கொண்டு போய் மதிப்பீட் டறிக்கையைப் பார்ப்பதற்காக கதிரையில் அமர்ந்தான் கார்த்திக். 2 பாடங்களில் 1 ம், 3 பாடங்களில் 2ம், மற்றைய பாடங்களில் 3ம் 4ம் எடுத்திருந்தாள்.

1 அதி திறமையை குறிக்கும். அதாவது 90க்கும் 100 க்கும் இடப்பட்ட புள்ளிகளைக் குறிக்கும். 2 அதன் அடுத்தபடியான புள்ளியாக இருக்கிறது. திறமை என்று அழைக்கப்படும். 3 திருப்திகரமானது.

4 என்பது போதுமானது. இவை ஜெர்மனியப் பாடசாலை மதிப்பீட்டுப் புள்ளிகள்.

"என்னம்மா இப்படி எடுத்திருக்கின்றாய். அம்மாக்குக் கவலையாகத் தானே இருக்கும்" சுதா எதுவும் பேசவில்லை. விம்மிக்கொண்டே இருந்தாள். திரும்பவும் தொடங்கினாள் சாந்தி

"நான் பட்டபாடெல்லாம் வீணாய்ப் போய்விட்டது. இந்தக் கணக்கெல்லாம் செய்து முடித்துவிட்டுத் தான் படுக்கப் போக வேண்டும். போ...போய் செய். Gymnasium Schule க்கு எடுபடாமல் இருக்கட்டும். நான் தூக்குப் போட்டுத்தான் சாவேன்" மகளைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு போய் கதிரையில் இருத்தினாள்.

"நீ என்ன ராட்சசியா? பேசாமல் இரு. எனக்குத் தெரியும் என்ன செய்வதென்று" என்று அதட்டியபடிக் கதிரையில் அமர்ந்திருந்த சுதாவைக் கட்டிலுக்கு அழைத்துச் சென்றான் கார்த்திக்.

"நான் முடியுமானவரைப் படிச்சனான் தானே அப்பா. அடுத்த முறை நல்ல Zeugnisse (மதிப்பெண்) எடுப்பன் அப்பா. அம்மா சரியா ஏசுறா அடிக்கிறா அப்பா...."

சிணுங்கிய மகளின் கன்னத்தில் வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி "சரி சரி அழாத. இனிமேல் நல்லாப் படிக்கவேணும். படிப்புத்தானே ராசாத்தி கைகொடுக்கும். அப்பா போல இப்படி இரவுபகலென்று கஸ்டப்படப் போறியா? நல்ல சூலயில (Schule) சேர்ந்து படித்து நல்ல மாக்ஸ் எடுத்து நல்ல வேலையில சேர்ந்தால்த் தானே அப்பாபோல கஸ்டப்படாமல். நல்ல நிலையில வாழலாம்"

"அப்பா இது குறைஞ்ச சொய்க்னஸ் (மதிப்பெண்) இல்லப்பா. நான் மொக்கில்லப்பா"

"அது எனக்குத் தெரியும் ராசாத்தி. அம்மாக்கு நான் விளங்கப் படுத்திறன். நீ நாளைக்கு பள்ளிக்கூடம் போக வேணுமில்லையா. ஆறுதலாப்படு"

என்று மகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லி மகளை படுக்க விட்டுக் குளித்துச் சாப்பிடுவதற்காக மேசைக்கு வந்தான். கார்த்திக்.

மேசையில் இருந்தவனிடம். திரும்பவும் சாந்தி தொடங்கினாள்

"இந்த ராதாவோட மகளைப் பாருங்கள். 8 பாடங்களில் 1 எடுத்து இருக்கிறாள். சுதாடதைக் கேட்டாள் சொல்லத் தேவல்ல. எனக்கு எப்படி வெட்கமாக இருந்தது தெரியுமே"

அவள் தொடர்வதற்கு முன் ஆத்திரத்துடன் தொலைபேசித் தொடர்பை அறுத்தெறிந்தான் கார்த்திக். பொறுமைக்கும் ஓர் எல்லை இருக்கிறதல்லவா.

"இந்தத் ரெலிபோனால்த் தானே இவ்வளவும். தங்களின்ர மகளின்ர புராணம் பாடுவதென்றால் பாடிட்டு விட வேண்டும் அடுத் தவர்களுடையதை ஏன் துளைத்தெடுக்க வேண்டும். கேட்டிற்று சும்மா இருக்க வேண்டியதுதானே. அதுக்குப் பிள்ளையப் போட்டு அடிச்சிருக்கிறீயே. நீ என்ன அம்மாவா! எல்லாருக்கும் எல்லாம் முடியாது. இதுக்குத்தான் உமக்கு பிரியா ரெலிபோன் தொடர்பை ஏற்படுத்தித் தந்தேனா?"

எரிச்சலுடன் சாப்பிடாமல் உடுப்பை மாற்றிவிட்டுப் படுக்கப் போய் விட்டான். ஆதங்கத்தை மனதில் அடக்கி மனம் வெந்தபடி சாந்தியும் கட்டிலுக்கு வந்து அழுதபடி அமர்ந்தாள். சிறிது நேர மயான அமைதியின் பின் கோபம் தனிந்த கார்த்திக். மனைவியின் கரங்களை ஆதரவாகப் பற்றினான்.

"உன்னுடைய ஏக்கம் எனக்குப் புரிகிறது சாந்தி! எல்லோரையும் ஒரு மாதிரியாக எடைபோட முடியுமா? நீ படிச்ச காலத்தில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை 3 தரம் எடுத்தியே. உன்னால முடியாமல் தானே என்னைக் கட்டிற்று இஞ்ச வந்த நீ. அப்போ உன்ர அம்மா இப்பிடித்தானா கத்தினவ? பிள்ளையைத் தண்டிக்க ஒரு வரன் முறை இருக்கிறது. சாந்தி அவள் முடிந்த அளவு படிக்கிறாள். முடியாது என்றால் அதற்குரிய முறையைத் தான் நாங்கள் கையாள வேண்டும். அதை விட்டுப் போட்டு அடிச்சு கண்டபடி திட்டி அவளின்ர மனதை நோகடிக்கும்போது அவளின் மனநிலை பாதித்தால் பிறகு என்ன செய்வது. அதுவே உனக்கொரு தண்டனையாகப் போய்விடும்."

அடுத்தவர் பிள்ளைகள் போல நம்முடைய பிள்ளையும் இருக்க வேண்டுமென்று ஏன் நினைக்கிறாய்? அவளுக்கென்றும் ஒரு திறமை இருக்கும். அதைக் காலப்போக்கில் கண்டுபிடித்து அதை வளர்க்க முயற்சி செய்வோமே. சுதா ஒன்றும் மொக்கில்ல. இப்பிடிப் போட்டு அடித்தால் மொக்காத்தான் போவாள். இந்த சொயக்னஸ்ல ஜிம்னாசியம் போக முடியாது. ஆனால், ரெயால் சூலய்க்குப் போய்ப் பிறகு ஜிம்னாசியம் வந்து படிக்கலாம். அவளுடைய எதிர்காலத்திற்கு எது நல்லது? எது படித்தால், நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று பார்த்து விடுவதுதான் எங்கள் கடமை. சின்ன வயசில நல்லாப் படிக்கிறதுகள், வளர்ந்த பின் ஒன்றும் படிக்காமப் போன எத்தின பேரப் பார்த்திருக்கிறம். அவளுக்கென்று ஒரு எதிர்காலம் இருக்கு. அவட திறமையை உயர்த்துவதற்கும், தெரிந்து கொள்வதற்கும் தான் நாம முயற்சி செய்ய வேணும். எதற்கும் ஒரு வழிமுறை இருக்கிறது சாந்தி! "மதிப்பெண் மட்டும் மனிதன் வளர்ச்சியைத் தீர்மானிப்பதில்லை. எங்களுக்கு எங்கள் பிள்ளைதான் முக்கியம், அவள் படிக்காட்டியும் பரவாயில்லை. அவளால இயன்றத படிக்கட்டும். நல்ல சுகதேகியா வாழ்ந்தாலே போதும்"

என்று சாந்திக்கு அறிவுரை கூறினான்.

அவன் கூறியது அனைத்தும் சரியெனப்பட்டதால், மெல்ல எழுந்து மகளின் அறையினுள் சென்று அவளுக்கு முத்தம் கொடுக்கக் குனிந்தாள். சாந்தி.

குனிந்த போது கன்னம் நெருப்பாய்க் கொதித்தது. சுதாவும் எழுந்து அம்மாவைக் கட்டிப் பிடித்து அழுதாள். அப்போது அனைத்தையும் மறந்தாள், சுதா. தாயடிச்சு நோவதில்லை. தாய்மை மேலோங்கியது. எதுவுமே அவளுக்கு மேலாய்ப்படவில்லை. தன் பிள்ளையினுடைய உடல்நலம் மட்டுமே இப்போது அவளுக்கு முக்கிய மாகப்பட்டது. பதட்டத்துடன் இயந்திரமானாள். கணவனை எழுப்பி மருத்துவமனைக்குப் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

ஆழ்மனதில் பாசத்தைப் பூட்டி வைத்து அடுத்தவர் போலெல்லாம் ஆகவேண்டுமென்ற வெளிமன ஆசையினால் தன் பிள்ளையைத் தண்டித்தமையை எண்ணி எண்ணிக் கலங்கினாள் சாந்தி.

மதிவதனி ஏன் மதி இழந்தாள்



அவள் அடக்கமாகத்தான் இருந்தாள், அவனின் ஆசைக்கு அடிபணிய மறுத்த போது. அவள் கற்புக்கரசியாகவே இருந்தாள், கணவன் தீபன் கட்டளைக்குக் கட்டுப்பட மறுத்தபோது. கணவன் என்ன கடவுளா? மனைவி கொள்கையைக் கலைத்து எறிவதற்கு. மனத் திறம் இல்லா மங்கை மதித்திறம் மாயமாய்ப் போம். இந்த மதிவதனி கலங்கப்பட்டாள். கணவன் கைகழுவிவிட்டான். காரணம் அவள் அவளாக இல்லாத காலப்பொழுது.

நண்பர்கள் கூடிக்குடித்துக் கும்மாளம் அடிக்க கூடவே கூட்டுச் சேர்த்தான் மதிவதனியை, அவள் கணவன். வயிற்றைக் குமட்டும் வாடை அவளைத்

திக்குமுக்காட வைத்தது. வாட்டிய இறைச்சியை உண்டு கொண்டு அளவுக்கதிகமான மது போதையில் மனைவியை கட்டி அணைத்தான். அவள் தள்ளிவிட மீண்டும் மீண்டும் நண்பர்கள் இருப்பதைக் கூடக் கவனிக்காது கட்டி அணைத்தான். என்ன செய்வது என்று அறியாது மதிவதனியும் ஓடிச் சென்று அறைக்கதவைத் தாளிட்டு அழுது தீர்த்தாள். ஆயினும் அவன் விட்டபாடில்லை. நண்பர்கள் முன்னிலையில் அவன் இன்பத்திற்கும் களியாட்டத்திற்கும் அவள் கைப்பொம்மை.

"டேய் சுரேஷ் என்ர மனிசி கைபட்டா இந்தக் கோழி சொர்க்கத்த எனக்குக் கொண்டு வந்து காட்டும். பார்க்கப் போறியா, சாப்பிட்டுப் பார்க்கப் போறியா? மதி... மதி... என்ர ராசாத்தி. இஞ்ச வாரும். கெதியா வாரும். ஒரு கொஞ்சம் இறைச்சியை நல்லா உறைப்புப் போட்டுப் பிரட்டித் தாருமப்பா. இவன்களுக்கு உன்ர கைப்பக்குவம் தெரியாது. வாருமப்பா...."

கதவை இறுக்கப் பூட்டியவளுக்கு தீபன் தொல்லை தாங்க முடியாதவளாய்,

"குடிக்கிறதுக்கு அளவு கணக்கில்ல. மனிசர நிம்மதியா இருக்க விடுறீங்களே. எப்பத்தான் இந்த பார்ட்டிகள் குறையப் போகுதோ"

என்று அலுத்துக் கொண்டவளாய்க் கதவைத் திறந்து சமையல் அறைக்குள் நுழைந்தாள் மதிவதனி. அவளோடு கூடவே பின் தொடர்ந்த தீபன் அவள் சமைக்கும் போது அவளை கெஞ்சுவதும் கொஞ்சுவதுமாய் இருந்து தன்னுடைய மதுவை அவளுக்கு ஊட்டி விட்டான்.

முதல் முதலாகத்தான் அருந்தினாள். தன்னை முழுவதுமாய் இழந்தாள். இரத்த நாளங்களில் தன் கைவண்ணத்தைக் காட்டியது அந்த மது. அதை அருந்திய மதிவதனிக்கு, உலகமே சுற்றுவது

போன்ற உபாதை ஏற்பட்டது. தட்டுத்தடுமாறித் தன் படுக்கையில் வந்து விழுந்தாள். கணவனோ மது போதையில் வரவேற்பறைத் தரையில் மல்லாந்து கிடந்தான்.

கட்டிலில் கிடந்தவன் தனது கணவன் என்னும் எண்ணத்தில் அவனின் ஸ்பரிசம் அவள் உள் உணர்வுகளுக்குத் தூபம் போட்டது. தன்னை மறந்தாள், தன் மானம் கெட்டாள். தன் கணவன் தோழன் போதையில் தன்னை இழந்தாள் மதிவதனி. குடிபோதை தெளிந்த நிலையில் தன்னுடைய படுக்கையறைக்கு எழுந்து வந்த தீபன் கண்கள் படம் பிடித்த காட்சி. அவனுக்கு மண்டையில் பாறாங்கல்லால் அடித்தது போன்றிருந்தது.

அவனுடைய கூச்சல் கேட்டு கண்விழித்த மதிவதனி தன் அருகே படுத்திருந்து எழுந்த தீபனின் நண்பன் குலத்தைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். தீபனின் கூச்சலில் இருந்த இடமே தெரியாது பறந்து போன குலத்தைத் தண்டிக்கவோ இல்லைத் தன் தவறை நினைத்து மனம் வருந்தவோ விரும்பாத தீபன்,

"எப்ப நேரம் கிடைக்கும் என்று காத்துக் கிடந்தியா? உன்னப் போய் நம்பினேனே! துரோகி. சீ ... இன்றோட முடிஞ்சு போச்சு"

"ஐயோ எனக்கு ஒண்டும் தெரியாது. அவன் ஏன் இஞ்ச வந்து படுத்தவன். உங்களால தானே. எல்லாம். என்னில என்ன பிழை இருக்கு"

"நடிக்காத... போதும். உன்ர முகத்தில முழிக்கவே எனக்குப் பிடிக்கல்ல"

கத்தியவனாய் வீட்டை விட்டு வெளியேறினான்.

இவை அனைத்தும் ஏன்? ஐரோப்பிய வாழ்வில் அறிவுக்கு ஆயிரம் இருக்க, இந்த அசிங்கமான வாழ்க்கை முறைக்குத் தம்மை அடிமைகளாக்குவதற்கோ விமானம் ஏறி இங்கே எம்மினம் வந்தடைந்தது. பெண் தவறி விழுந்தாலோ, தள்ளி விழுத்தப் பட்டாலோ பழி பாவங்கள் அனைத்தையும் அவளே சுமக்க வேண்டிய வளாகின்றாள். வாழ வந்தவளை பாழுங் கிணத்தினுள் தள்ளி விழுத்திவிட்டு நடத்தை கெட்டவள் என்னும் பட்டத்தையும் அல்லவா கொடுக்கின்றார்கள்.

தொல்பழங்காலத்தில் வரன்முறையற்ற உறவு இருந்திருக்கலாம். விலங்குகளைப் பார்த்து பழகிய மாந்தரினம் அவற்றைப் போல வாழ்ந்திருக்கலாம். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளாக பண்பட்ட கலாசாரத்தில் சீர்பெற்றுச் சிறப்புப் பெற்று வாழும் இனம் தமிழ் இனம். இன்றும் ஐரோப்பியரால் போற்றிப் புகழப்படும் ஒரு கலாசாரம் எம்முடைய தமிழர் கலாசாரம். அதைக் கலங்கப்படுத்தவே இவ்வாறான காட்டுமிராண்டிகள் புல்லுருவிகளாய்ப் புறப்பட்டுப் புகலிடத்தில் நமது புனிதத்தைப் புதைக்கின்றார்கள்

மதிவதனியைத் தீபன் விலத்தி வைத்தான். இன்று தனியே வாழும் மதிவதனி, மதி இழந்த காரணத்தால் கெட்டவள் என்ற பட்டம் சுமந்து தனியே வாழ்கின்றாள்.

மனதின் மாறாட்டம்

சுந்தரிக்கு அன்று இனம் புரியாத ஒரு பயம் திடீரென்று மனதில் ஏற்பட்டது. எத்தனை காலம் தான் நான் வாழப் போகின்றேன். மனிதனுடைய வாழ்க்கை நினைப்பது போல் நடப்பதில்லையே. திடீரென்று ஏதாவது ஒரு அசம்பாவிதம் என் வாழ்க்கையில் ஏற்பட்டு விட்டால். உடும்புப் பிடியாக ஒட்டி யிருக்கும் என் மகள் இதைத் தாங்குவாளா! இறுக இறுக இரவில் என்னைக் அணைக்கும் போது எனக்குள்ளேயே இந்த ஏக்கம் தொடராக என் மனதில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.



இதை மனதில் கொண்டுதானோ ஐரோப்பியர்கள், குழந்தைகளைத் தனியே படுக்கப் போடுகின்றார்கள். மனதில் தன்னம்பிக்கையும் பயமின்மையையும் தனித்து வாழும் பக்குவத்தையும் ஏற்படுத்தத்தான் என்பதை நன்கு அறிந்திருந்தும், வெள்ளைத் தோல்கள் பாசமில்லாதவர்கள் தன்னந்தனியே பிள்ளைகளைப் போட்டுவிட்டு அவர்கள் சுகமாகத் தூங்குகின்றார்கள் என்றெல்லாம் குறை கூறுகின்றோம். ஆனால், எதையுமே திட்டமிடாது வாழ்க்கையில் தொடர்ந்து திண்டாடும் எம்மவர்கள், வாழ்வின் படிமானங்களைத் தெரிந்து கொள்வதில்லை. பாசமென்ற பெயரில் பயந்தாங்கொள்ளிகளை உருவாக்கும் பெற்றோர்கள் அல்லவா, நாங்கள். பலவாறான எண்ணங்களின் பின் முடிவானது அவள் மனதில் ஒரு துணிவு. கணவனிடம் சென்று மெதுவாகக் கூறினாள்.

''பிள்ளையை இன்றைக்கு அவவுடைய அறையில் படுக்க விடுவோம். தற்செயலாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் நான் படுக்க வேண்டி வந்துவிட்டால், தனிமை பற்றி அவள் சிந்திக்காது இருக்க வேண்டுமல்லவா?"

"திடீரென்று என்ன இன்றைக்கு இந்த சிந்தனை"

கணவனின் சந்தேகம்.

"அப்படியொரு பெரிய விசயமுமில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவக்கு எல்லாம் பழக்கத்தானே வேண்டும்"

மகள் பாலர் பாடசாலை சென்றவுடன் ஆயத்தம் பலமாக இருந்தது. மகளுடைய அறையை அழகுபடுத்தி அதில் ஆசை ஏற்படும் வண்ணம் தடபுடலான அமர்க்களம். அறையினுள் கட்டிலைச் சுற்றி அழகான பொம்மைகளின் அலங்காரம். கணவனிடம் கட்டளையிட்டாள்,

"நான் படுக்கைக்குக் கொண்டு போய் பாலைக் காய்ச்சிக் கொடுத்து விட்டு வந்துவிடுவேன். நீங்கள் தான் சிறிது நேரம் பக்கத்தில் படுத்திருந்து விட்டு வரவேணும். அவ அடம் பிடிப்பா பிள்ளையின் நல்லதுக்குத் தானென்று நீங்கள் தான் எடுத்துச் சொல்ல வேண்டும். பிள்ளையை கவலைப்பட விடாமல் நீங்கள் தான் பார்க்க வேண்டும்"

அனைத்துக்கும் சம்மதித்தார் கணவன். மகளும் வந்தாள். மாலை நேரமும் வந்தது. அம்மாவின் முன்னெடுப்புக்கு முதலில் பலத்த எதிர்ப்புப் பிள்ளையிடம்.

ஒருவாராக சம்மதத்துடன் கட்டிலுக்குச் சென்றுவிட்டாள். சுந்தரி தனது கட்டிலுக்குப் படுக்கச் செல்லும் முன் மகளை அணைத்து முத்தமிட்டு இரவு வணக்கம் சொல்லி படுக்கையை அடைந்தாள். போர்வையினால் உடலைப் போர்த்தினாள். பிரண்டு பிரண்டு படுத்தாள். இறுக இறுகக் கண்களை மூடினாள். நித்திரை வருவதாயில்லை. எதோ ஒரு இனம் புரியாத தவிப்பு. மெல்லெனக் கால்கள் மகளின் அறையை நோக்கி நகர்ந்தன. கணவனிடம் கொஞ்சம் விடுங்கள் என்று சொல்லியவண்ணம் நித்திரையிலிருந்து மகளை எழுப்பாமல் தூக்கிக் கொண்டு தனது கட்டிலுக்குப் போனாள் சுந்தரி. மகளை அணைத்த போதுதான் நித்திராதேவி அவள் கண்களை அணைத்துக் கொண்டது.

காலையில் எழுந்து பாலர் பாடசாலைக்கு மகளை அனுப்புவதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்த சுந்தரியிடம் அவள் கணவன் ஒரு பத்திரிகையை நீட்டினான். அதில் "சிறு பிள்ளைகளைத் தனியறையில் படுக்க விடாதீர்கள் தாயின் அணைப்புடன் உறங்கும் பிள்ளை ஆரோக்கியமாக வளரும்" என்ற தலையங்கத்துடன் ஒரு மனநிலை வைத்தியர் எழுதிய கட்டுரை தெரிந்தது.

மாமரத்தில் மாங்கனியே பெறமுடியும்

"கோழிப்பொரியல் வைக்கட்டா அக்கா. வசந்தன் நீ இன்னும் ரோல்ஸ் சாப்பிடல்ல."

"பிறகு சாப்பாடு சாப்பிடு. இப்ப அங்கே போய் இருடாப்பா. அந்த அறைக்குள்ள எங்கட சமாச்சாரம் இருக்கு. அங்கதான் சுரேஸ், பிரியன், குமார், குலம் எல்லாரும் இருக்கிறாங்க. நான் இந்தச் சாப்பாட்டை பொம்பிள்ளைகளுக்குக் கொடுத்திட்டு வாறன்" சிவம் பரபரப்பாகவே இருந்தார்.

"எனக்குக் கொஞ்சம் கறி டெவில் வையுங்க சிவம். இந்த கெட்டரிங் சாப்பாடு என்றால், ஒரு தட்டுக் கூடத்தான் போகும்" என்றாள் வனிதா.

"சரி அக்கா சரி....திவ்யா..... சின்னப்பிள்ளைகளுக்கு ஐஸக் கொடும். அவங்கள் எல்லாம் சாப்பிட்டு முடிச்சிட்டாங்கள்" எல்லோரையும் அன்புடன் கவனித்துக் கொண்டிருந்தார், சிவம்.

ஆண்கள் ஒருபுறம். பெண்கள் ஒருபுறமென அன்று அந்தத் தொடர்மாடிக் கட்டிடம் கலகலப்பில் களித்திருந்தது. மேலும் கீழுமுள்ள குடியிருப்பாளர்களுக்கு ஏற்கனவே அறிவித்தாய் விட்டது. தமிழர்கள் விழாவென்றால் ஒருபடி மேல்த் தான் ஒலியலைகள் வருமென்று சில வருடங்களாக அறிந்துதானே வைத்திருக்கின்றார்கள். சகித்துக் கொள்ளும் பொறுமைசாலிகளை அயலில் பெற்ற ஆனந்தத்தில் தனது பதினொராவது பிறந்ததினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தாள். சிறுமி கவிதா. அங்குமிங்குமாகச் சிறுவர்கள் ஓடிக்கொண்டிருந்தனர். அனைத்துக் கருமாங்களும் முடிந்து சாப்பாடும் பரிமாறியாயிற்று.

சிறுவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஒவ்வொரு வரும் தமது திறமைகளை வெளிக்காட்ட வேண்டும் என்பதே அந்த வேண்டுகோள். இயல்பாகவே எல்லாவற்றிற்கும் முந்திரிக்கொட்டை போல் முன்றியடித்துக் கொண்டு முன்வரும் கவிதா, ஆடல் பாடல் என்று அனைவரையும் கவர்ந்து கொண்டிருந்தாள். ஒருபுறத்தில் ஒரு சிறுமி விக்கி விக்கி அழுது கொண்டு நின்றாள். பார்ப்பதற்கே அநுதாபமாக இருந்த அந்தச் சிறுமியை அண்டிய நான்,

"ஓடிவிளையாடிக் கொண்டிருந்தீங்களே பவி. என்ன நடந்தது? ஏதாவது அடிபட்டிற்றா? என்னவா இருந்தாலும் அத சிம்பிளா எடுத்திட்டு விளையாடுங்க. அங்க பாருங்கள் எல்லாரும் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கிறாங்கள். அங்க வந்து இருக்கலாமே. கவிதா டான்ஸ் எல்லாம் ஆடுறா. வந்து பாருங்கள். எங்கே சிரியுங்கள் பார்ப்போம்"

என்று சிரிப்பதற்காக சில்மிசம் பண்ணினேன். அழுகை அதி கரித்தது. பக்கத்தில் சர்வாதிகாரி போல் அச்சிறுமியினுடைய தாயார் நின்று கொண்டிருந்தார்.

"விடுங்கள் நன்றாக அழட்டும். எதுக்கு இவ்வளவு பணத்தைக் கொட்டி இவளப் படிப்பிக்க வேண்டும். மொக்கு மாதிரி நிற்கிறதைப் பாருங்கள்"

எந்நெஞ்சில் சுருக்கென்றது அந்தத் தாயினுடைய வார்த்தைகள்.

"ஏன் இவள் கெட்டிக்காரி தானே. படிப்பில் நல்ல புள்ளிகள் தானே வழமையாக எடுப்பாள். சில பிள்ளைகளுக்குத் தங்களுடைய திறமையை வெளிக்காட்ட விருப்பம் இல்லை. விருப்பமில்லாததை ஏன் திணிக்கிறீங்கள். அதுவும் மொக்கு என்ர வார்த்தையைப் பயன்படுத்தலாமா? சிலருக்குச் சிலவிடயங்களில் நாட்டமில்லை. எதற்குக் குழந்தை மனத்தைப் புண்படுத்துவான். உங்களுக்கு விருப்பமானதெல்லாம் படிப்பிச்சீங்க அக்கா. அதைத் தட்டாம படிக்கிறாள் தானே. படிப்பிலயும் கெட்டிக்காரியாக இருக்கிறாள் தானே. பிள்ளைகள் பூ மாதிரி. உங்களுக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியதில்ல. இப்படி ஏசினீர்களென்றால், அடுத்த முறை நீங்கள் கூப்பிட்டாலும் பிள்ள வராது அடம்பிடிக்கும். தெரிஞ்சு கொள்ளுங்கள்" என்று தாயிடம் கூறி அச்சிறுமியைச் சமாதானம் பண்ணிவிட்டு அவ்விடம் விட்டு நகர்ந்தேன்.

அடுத்த வீட்டுக்காரன் பிள்ளை உதைப்பந்தாட்டத்தில் பதக்கம் பெற்று விட்டால் எனது வீட்டுப் பிள்ளை அதை விடப் பெரிய பதக்கம் பெறவேண்டும். அறிந்தவன் வீட்டுப் பிள்ளை வயலின் வாசித்தால், என் வீட்டுப் பிள்ளையிடம் தூக்கி மிருதங்கம் கொடுக்கப்பட்டு விடும். அப்பிள்ளை அதில் ஈடுபாட்டுடன் இருக்கின்றதோ இல்லையோ அதனுடன் மாயத்தான் வேண்டும். யாரிடம் என்ன திறமை கொட்டிக் கிடக்கிறது என்று அறியாது சிறுவர்களை ஆக்கினைப்படுத்தும் எமது சமுதாயம், உணரவேண்டியது திறமைகள் வெவ்வேறு விதமாக ஒவ்வொரு சிறுவர்களும் பெற்றிருப்பார்கள். அவற்றை அறிந்து

அவர்கள் ஈடுபாட்டைப் புரிந்து அவர்களை ஈடுபடுத்தல் மனநிலை மருந்தல்லவா. மாமரத்தில் மாங்கனியே பறிக்கலாம். அனைத்து வகைக் கனிகளையும் மாமரத்தில் பெற நாம் முயற்சிப்பது முறையா? எம்மால் முடியாத காரியத்தை எனது பிள்ளை சாதிக்கவேண்டும், அடுத்தவன் பெருமைப்படும் அளவிற்கு என் பிள்ளை திறமை காட்ட வேண்டும் அதன் மூலம் என் பெருமையை விலாசப்படுத்த வேண்டும். என்று நாம் நினைப்பது எந்த விதத்தில் நியாயம்.

ஆசையெல்லாம் தீர்த்து வைக்க நம் கைக்கு அகப்பட்ட பொருளல்ல நமது வாரிசுக்கள். அவர்கள் அவர்களுக்காகவே பிறந்தவர்கள். அவர்களுக்கென ஆசாபாசங்கள் இருக்கின்றன. அவற்றைப் புரிந்து கொள்வோம் இரம்யமான உலகை இயல்பாகவும் இன்பமாகவும் வாழ வழிவிட வேண்டும்.

என்று நினைத்தபடி வீட்டை நோக்கித் திரும்பினேன்.

மிருகமாகும் மனிதர்கள்

பலன் ஒன்று படி இறங்கி வந்ததனால், அபிராமி தன் மடியில் வந்த மகவைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டித் தன் தோளில் போட்டுச் சீராட்டி சப்பாணிப் பருவம், சாய்ந்தாடு பருவம், எனப் பருவந்தோறும் நாட்டுப் பாடல்கள் பாடி இயற்கையாய் அன்பையும் கலந்து வளர்த்த பிள்ளை அட்ஷயா, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை என

மலர் பருவம் தளிர் பருவம்
மகிழ்ந்தின்பச் சுவை ததும்பும்
மாங்கனிப் பருவம் தேன் சுவைப்பருவம்
தித்திப்பாய் தெளிந்து நிற்கும் பருவம்

வந்தடைந்தாள். கன்னிப்பருவத்தில் எத்தகைய பெண்ணாகிலும் ஒருவித களைகட்டியே காணப்படுவாள். இது இயற்கை. இறைவன் இனத்தை வளர்க்க இயற்றி வைத்த சூன்யம். காட்சிப்பொருளாகக் காலமெல்லாம் அவள் வாழத் தோற்றம் பெற்றதல்லவே வாழ்க்கை.

"மாங்கல்யம் தந்துநானே" ஒலிக்க அவள் கழுத்திலே தொங்கி மார்பிலே தவழ மங்கலநாண் அணிந்து அடுத்த தலைமுறைக்கு வலிமை சேர்க்க வேண்டியதல்லவா அவள் வாழ்க்கை.

எனவே பருவமடைந்த பெண்ணைப் பலரும் அறிய பூப்புனித நீராட்டுவிழா செய்யப் பெற்றோர் சித்தம் கொண்டனர். ஐரோப்பிய நாட்டிலே தமிழர்கள் பூப்புனித நீராட்டுவிழா செய்வதென்றால், அழைப்பிதழ் தொடக்கம் அணிகலன் வரை தாய்நாட்டில் இருந்து கொண்டு வருவார்கள். அதுமட்டுமல்ல வாழைமரத்தை வாழைக் குலையுடன் இணைத்தே தாய்நாட்டிலிருந்து இறக்குமதி செய்து நாட்டுவார்கள். பெண்ணைப் பெற்றவுடன் அவள் பூப்புனித நீராட்டு விழாவிற்கென்றே பணம் சேகரிக்கும் பணியில் தம்மை முழுதாக ஈடுபடுத்துவார்கள். பலருக்கும் தமது பெண்ணின் பூப்புனித நீராட்டு விழாவே சிறந்தவிழா என்று பெயர் பெறவேண்டும் என்பதில் ஆர்வம் அதிகமாக இருக்கும். விதவிதமான ஆடையில் விலை மதிக்கவொண்ணா படாடோபத்துடன் ஆடம்பரத்தை விரவவிட்டு விழாவைச் சிறப்பிப்பார்கள். பல்லக்கில் பூப்புனித நீராட்டுவிழாக் காணும் பிள்ளையை மண்டபத்திற்கு அழைத்து வருவார்கள். ஐரோப்பியர்கள் வியந்து நிற்கும் வண்ணம் விருந்தினரை அழைப்பார்கள். ஏனெனில் இவ்வாறு மண்டபம் நிறைந்த மக்களை ஐரோப்பியர்கள் மேடை நிகழ்வுகளில் தான் கண்டிருப்பார்கள்.

ஆனால், ஐரோப்பியர்கள் தமது குடும்ப விழாக்களுக்கு இப்படி அதிகம்பேரை அழைப்பது கிடையாது. அவர்களுக்கு எமது குடும்ப விழாக்கள் அதிசயமாகத் தெரிவது ஒன்றும் வியப்பில்லை. விருந்தினரை அழைப்பது மட்டுமன்றி உறவினர்களையும் ஸ்பொன்சர் செய்து தாயகத்திலிருந்து அழைப்பது வழக்கமாக இருந்தது. பெற்றோர் தமது பெற்றோர் உறவினர்களை சகோதரர்களை அவர்கள் ஆசீர்வாதம்

பெறுவதற்கு அழைப்பார்கள். அரவிந்த் தம்பதியினர் இந்நடைமுறைக்கு விதிவிலக்கானவர்கள் அல்ல.

அரவிந்த் தம்பதியினர் தமது ஏக புதல்வி அட்சயாவின் பூப்புனித நீராட்டுவிழாவிற்கான ஆயத்தங்களைத் தடபுடலாக நடத்தத் திட்டமிட்டனர். விருந்தினரை இவ்விழாவிற்கு அழைப்பதன் நோக்கமே பெண் நல்லமுறையில் வாழவேண்டும் என்று வாழ்த்துகளை, வாழ்ந்த அநுபவம் பெற்றவர்களிடம் இருந்து பெறுவதற்காகவும், தமது மகிழ்ச்சியைப் பலருடன் இணைந்து பகிர்ந்து கொள்வதற்காகவும், எனது மகள் வயதுக்கு வந்துவிட்டாள். அதனால், ஆணைப் பெற்றோர்களே! அவதானமாக இருங்கள். எங்கள் வீட்டிலும் ஒரு பெண் இருக்கின்றாள் என உலகுக்கு அறிவிப்பதற்குமாகவே நடைபெறுகின்றது.

அரவிந்த் தனது தந்தையை தாய்நாட்டிலிருந்து வரவழைத்திருந்தார். தன் தந்தையை அழைத்திருந்த பெருமையில் சில கடமைகளை அவரிடமே ஒப்படைத்திருந்தார். அவரும் ஓடியாடி வேலைகளை செய்து கொண்டிருந்தார்.

விழாவிற்கான நாளும் நெருங்கியது. நல்வாழ்த்துச் சொல்லப் பலரும் பங்குபற்றினார்கள். மண்டபம் நிறைந்த விருந்தினர்கள். அழகான மண்டபம் அதில் அழகுத் தேவதையாய் பருவப் பெண்களெல்லாம் கண்டு பொறாமை கொள்ளும் அளவிற்கு பேரழகியாய் மண்டபத்து மேடையிலே வீற்றிருந்தாள் அட்சயா. சொர்க்கத்துத் தேவதைக்குத் தொடக்குக் கழிக்கும் வைபவம் நடந்தேறியது. புகைப்பட வீடியோ கலாசாரங்கள் அமர்க்களமாய் அமைந்தன. பிற்காலத்தில் பெற்றோரும் மற்றோரும் இந்நாளை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திப் பார்க்கவென ஒப்பனை மாறாத பொலிவுடன் படங்கள், வீடியோக்கள் அவதானமாக எடுக்கப்பட்டன. விருந்தினர்

உபசரிப்பு முற்றுப்பெற்று அன்பளிப்பு வரிசை நீண்டது. மெல்லமெல்ல வரிசை நீளம் குறைய மண்டபம் காலியாக அரவிந்த் குடும்பமும் வீடு திரும்பியது.

தன் மகளின் பூப்புனித நீராட்டுவிழாவைச் சிறப்புடன் நடத்தி முடித்த பெருமையுடன் அரவிந்தன் தம்பதியினர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். மாதங்கள் கழிந்தன. மாதந்தோறும் ஏற்படும் மாதவிடாய் தன் மகளுக்கு ஏற்படவில்லையென அபிராமி மனதில் ஓர் ஏக்கம் எழுந்தது. ஆனால், இப்பருவத்தில் சில பெண்கள் 2 வருடங்களின் பின்னும் அடுத்த மாதவிடாய் காண்பார்கள் என அயலவர் பகர்ந்து நிற்க அபிராமியும் அமைதியானாள். மாதங்கள் ஒவ்வொன்றாய்க் கடந்து செல்ல அட்சயா வயிற்றைக் குமட்டி வாந்தி எடுக்கத் தொடங்கினாள். உடலில் வாட்டம் ஏற்பட்டது. உணவுகளைக் காணும் போது வெறுப்பு எற்பட்டது. பலரின் கண்ணும் என் பிள்ளைமேல் பட்டுவிட்டதே. வராத நோய் ஏதோ வந்துவிட்டது. என அங்கலாய்த்த தாய் அபிராமி, தன் மகளை வைத்தியரிடம் கொண்டு சென்றார்.

தகுந்த பரிசோதனையின் பின் தன் மகளின் வயிறு வாரிசொன் றைச் சுமக்கிறது என்னும் இடியொன்று அபிராமி காதுகளில் வந்து விழுந்தது. ஒடுங்கிப் போனாள் அவள். அசையாது பிரமை பிடித்தவள் போலானாள். அப்பாவியாய் நின்ற அந்தப் பச்சைக் குழந்தை ஒரு குழந்தையை சுமக்கும் நிலை பெற்றது கண்டு துடித்துப் போன பெற்றோர்கள், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் பிள்ளையை வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

"யாரது? இவ்வளவு நாளும் இதை மறைச்சுத்தானே இருந்தனீ. இப்ப உண்மையச் சொல். யாரடி அவன்?

எதுவுமே பேசாமல் அச்சத்துடன் அழுதபடி இருந்தாள் அட்ஷயா.

"உனக்குப் பார்த்துப் பார்த்து எல்லாம் செய்தாரே அப்பா. அவரைத் தலைகுனிய வச்சிட்டியே. எந்தப் படுபாவியோ இப்படிச் செய்தது! உனக்குப் பள்ளிக்கூடத்தில இது பற்றி படிப்பிச்சவர்கள் தானே. உனக்கு இதெல்லாம் விளங்காதா? மடச்சி...மடச்சி. சொல்லு சொல்லு யாரவன்? உன்னத் தனிய விட்டு எங்கேயாவது போயிருக்கிறனா? சொல்லு போயிருக்கிறனா? எங்கடி போய்க் கெட்டுத் தொலஞ்சனீ? இப்ப சொல்லப் போறியா இல்லையா?"

"சொல்ல வேண்டாம் என்று சொன்னார் அம்மா..."

"ஓ.... அப்பிடியென்றால். பிள்ளையப் பெத்துத் தாலாட்டி வளர்த்தெடு.... கன்னத்தப் பொத்தித் தந்தனென்றால் தான் தெரியும்"

சொன்னது மாத்திரமல்ல. அபிராமி கரங்கள் அட்சஷயா முகத்தில் தடம் பதித்தது.

ஓ... வென்று அழுதபடி.

"அப்பப்பா தான் அம்மா. அவர்தான் சொல்ல வேணாமென்றார்"

அப்படியே அதிர்ந்து போனாள் அபிராமி.

"என்னது? அந்தக் கிழட்டுப் பேயா இப்பிடி செய்தது. அந்தக் கிழட எப்பிடி மரியாதையா நடத்தினம். இப்பிடிச் செய்திட்டுப் போயிட்டே. உனக்கெங்கடி புத்தி போனது. கிட்ட வந்த நேரம் கத்திக் கூச்சல் போட்டிருக்கக் கூடாதா?"

"நான் ஓடின நான். அவர் விடல்லம்மா. பிறகு நல்லா இருந்துதம்மா அதுதான் சத்தம் போடல்ல"

"ஐயோ.... நான் என்ன செய்வன். இந்தக் கிழட்டுப் பூனை இப்பிடி செஞ்சிட்டுதே. படுபாவி..."

கத்தியபடி அரவிந்தை அழைத்தாள்.

"இஞ்ச வாறீங்களா? உங்கட அரும கொப்பா தான் இப்பிடி செய்திருக்கிறார். சந்தோசம் தானே. இப்ப என்ன அந்த நாயைச் செய்யப் போறீங்க"

வயது செல்லச் செல்ல பகுத்தறிவு பண்பட்ட நிலையில் தொழிற் படும். இது மனிதப்பண்பு. ஆனால். இப்பண்பற்ற மிருகமாகும் மனிதர்கள் சமுதாயத்தில் துடிக்கத் துடிக்க உயிருடன் புதைகுழியில் புதைக்கப்பட வேண்டியவர்கள். இக்காலத்தில் 11,12 வயதிலேயே பெண்கள் பருவமடைகின்றனர். பார்க்கும்போது குழந்தைகள் என எண்ணத் தோன்றும் உள்ளம் வர வேண்டும். ஆனால். மிருகமாய் வாழும் கிழட்டு ஜென்மங்கள் பண்பட்ட கலாசாரம் என்று சொல்லப்படுகின்ற எம்மினத்தில் வாழ்வது வெட்கப்பட வேண்டியது. தாயகத்தில் இருந்து விமானம் ஏறி வந்து தன் மகனின் பிஞ்சுக் குழந்தையைத் தொடுவதற்கு அந்த முற்றிய மரத்திற்கு எப்படி மனம் வந்தது? மௌனமாய் நாடு திரும்பி விட்டாலும் தன் கேவலமான துரோகச் செயல் ஒரு நாள் வெளிப்படும் என ஏன் அந்த மிருகம் எண்ணவில்லை?

தனது தந்தையின் கேவலமான செயல் கண்டு ஸ்தம்பித்து நின்றான் அரவிந்தன்.

முகத்திரை கிழிக்கப்பட்டது

சித்திரத்தில் கறை படிந்தது போல் அந்தச் சின்னவன் வதனம் களை இழந்ததும் ஏன்? சிட்டுக்குருவி போல் வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்த அவன் பாதங்கள், ஒரு அறையினுள் அடைபட்டுக் கிடந்ததும் ஏன்? வீடு முழுவதும் கலகலக்கும் அவன் ஓசை, இன்று நிசப்தமாகியதும் ஏன்? துருதுருவென்ற பார்வை ஒரு புள்ளியை விறைத்துப் பார்த்துக் கொண்டிருந்ததும் ஏன்? இத்தனையும் ஏன்? மூடப்பட்ட அறையினுள் தாயின் மேலங்கியை அணைத்தபடி தனது அறைக் கட்டிலில் சுருண்ட படியும் இருந்த ரகுவின் கண்கள் மட்டும் எதையோ நினைத்தபடி நிலைக்குத்தி நின்றன. மெல்லக் கதவு திறந்து நுழைந்த மருத்துவரை ஓடி வந்து மல்யுத்தக்காரனைப்போல் இரு கைகளாலும் மாறிமாறித் தாக்கினான், ரகு.

அவன் தாய் சாந்தமாய் இருப்பதனாலோ சாந்தி என்று பெயர் பெற்றாள். அவன் உருவாகக் கரு என்னும் ஆய்வுகூடம் சுமந்தவள். உடலுக்குத் தோல்போல் ரகு வளரக் காத்து நிற்பவள். தாலி சுமக்கக்

காரணகர்த்தாவான தன் கணவன் கடமைக்குத் துணையாய்க் காலமும் கழித்தாள். கணவன் வருவாய்க்கு அவள் கூட்டல் கணக்கு. அவன் இன்பத்திற்கும். உறவினர் நம்பிக்கைக்கும் அவள் பெருக்கல் கணக்கு. இவ்வாறே குடும்பத்தின் முதுகெலும்பு என்னும் படி கணவன் முழு நம்பிக்கையின் பெட்டகமானாள். அவனையும் நம்ப வைத்தாள்.

வேலைக்குச் சென்றவள் திரும்பும் நேரம் கடந்ததால். மூளைக்குள் பிரளயம் வந்தது போல் கலங்கினான். ரவி. அந்த அளவில் அவன் மூளையின் இதயத்தின் முக்கால்ப் பகுதி சாந்தி நிறைந்திருந்தாள். அவன் இதயத்தில் மகுடம் சூட்டி அல்லவா அவளை வைத்திருக்கின்றான். திடீரென ஒரு எண்ணம் பளீச்சிட்டது. அவள் கைத்துணையான கைத்தொலைபேசியுடன் தான் சென்றாளா! என்று அறியும் அவாவில் அவள் பீரோவைத் திறந்தான். அடுக்கப்பட்டிருந்த புத்தகங்களிடையே மோப்பம் பிடிக்கும் நாயானது. அவன் விரல்கள். கைத்தொலைபேசியுடன் இணைந்தே இந்த ஆச்சரியமும் அவனுக்குக் காத்திருந்தது.

மனைவி என்னும் அந்தஸ்துக்கு ரவியும். காதல் என்னும் போதைக்கு அந்தக் கடிதக் காதலனும் இருப்பதை. விரசமாய் அவளால் எழுதப்பட்ட அந்தக் கடித அத்தாட்சி காட்டி நின்றது. கடிதத்தைப் பார்த்த போது இது புதிதாய் எழுதப்பட்டது என்பதை உறுதி செய்தான். விறுவிறு என்று ரவியின் இரத்தக் கொதிப்பு மேலோங்கியது. மனிதன் இரு முகத்தில் மறைந்து நிற்கும் மறுமுகம் மட்டுமே இப்போது வெளிப்பட்டது. பதுங்கிய புலியானான்.

கதவு திறக்கும் ஓசை கேட்டு ஓடிய மகனை உச்சி மோந்தாள். சாந்தி. காலதாமதத்தின் காரணம் அறியும் ஆவல் ரவியிடம் எள்ளளவும் இருக்கவில்லை. அவளைக் கண்ட போது அளவுகடந்த ஆத்திரம்

அவனுக்கு வந்தது. இன்று ரவியின் சமையலைச் சுவை பார்த்த சாந்தியிடம்

"வீட்டுச் சாமான் வாங்கவேணும். உனக்காகத்தான் இவ்வளவு நேரமும் காத்திருந்தனான். காருக்கு போறன் வந்திடு"

கட்டளையிட்டபடி வெளியே சென்றான்.

அவளின் முகத் திரையைக் கிழிக்கும்படி உத்தரவிட்டபடி அவன் இதயம் அளவுக்குமீறித் துடித்துக் கொண்டிருந்தது. இருப்பினும் பொறுமையைக் கையாண்டான் ரவி.

மகனுடன் கீழே வந்த சாந்தி. அவனைப் பின் இருக்கையில் இருத்திப் பாதுகாப்புப்பட்டி அணிவித்தாள். அவளுக்காய் முன் இருக்கைக் கதவு திறக்கப்படவில்லை.

வாகனத்தினுள் இருந்த வண்ணம் ரவி வாகனத்து கண்ணாடியைக் கீழே இறக்கினான்.

"இஞ்ச பாரு சாந்தி! இந்தக் கடிதத்தை வீட்டுக்குள்ள வச்சிட்டு, கொம்பியூட்டர் மேசையிலே இருக்கிற கடிதத்தை எடுத்திட்டு வா. நான் மாறி எடுத்திட்டு வந்திட்டேன்"

என்று கடிதத்தை உள்ளிருந்த படியே காட்டினான்.

சாந்தி கடிதத்தைப் பெறுவதற்காக தன் கழுத்துடன் இணைத்தே கரத்தையும் நீட்டினாள். திடீரெனச் சாளரம் மேலெழுந்தது. அதனுள் பட்டென அவளது கழுத்து சிக்கிக் கொண்டது. அலறத் தொண்டை இடம் தரவில்லை. ஆதரவு கேட்டு உயிர் நிற்கவில்லை. ஓவென்று அலறிய மகன் மயக்கமானான்.

பொய்மைக்கு இங்கு மரணதண்டனை. நம்பிக்கைத் துரோகத்திற்குச் சாவுமணி. சந்தர்ப்பங்களாலும் சூழ்நிலைகளாலும் மனிதன் மிருகமாகின்றான். தன்னைத் தாக்க வருகின்ற மனிதர்களைக் கண்டாலேயே மிருகம் துடித்தெழும். அழகாய் நடித்த அந்தச் சாந்தியை அழித்தே தீர வேண்டும் என்று ஆத்திரம் கொண்டது அவன் செய்கை. இவ்வாறான ஏமாற்றுப் பெண்களுக்கு எச்சரிக்கை. ஆனால், அநாதரவான அந்தக் குழந்தையின் நிலையை இருவருமே நினைத்துப் பார்க்கவில்லையே. இங்கு எத்தனையோ பெண்கள் பிள்ளைகளுக்காகத் தங்கள் ஆசாபாசங்களைத் துறந்து வாழுகின்றார்கள். பொருந்தாத கணவன் தன் இச்சைக்கு போதாத கணவன் என்றால், உண்மையைச் சொல்லி விவாகரத்துப் பெற்று வேறாக வாழலாம். இதுகூட மன்னிக்கப்படக் கூடியது. ஆனால், ஒன்றாக இருந்து கொண்டு ஏமாற்றி வாழுவது தான் மன்னிக்க முடியாத குற்றம். இதற்காக ரவி செய்தது நியாயமாகப்படாது. ஏனென்றால் ஒரு உயிரைக் கொல்லும் அனுமதி இவருக்கு யார் அளித்தார்கள். மனமென்பது இப்படித்தான். சிலர் இப்படி வாழ்வார்கள். சிலர் அப்படி வாழ்வார்கள்.

சிறையில் வாழும் ரவி தன் தவறை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்தான். சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் வளர்ப்பில் வளரும் ரகுவோ புத்தி பேதலித்தவனாகத் தன் தாயின் தவறையோ தந்தையின் நிலையையோ அறியாது வாழ்கின்றான்.

முடிவைச் சொல்லிவிடு

பிறப்பின் பெருமை சந்ததி வளர்ச்சியில் சம்பந்தப்பட்டிருக்கின்றது. என்னோடு நான் வாழ்ந்த வாழ்க்கையின் தடயம் மறைந்து போகின்றது. தம்பதிகளாய் வாழ்ந்த தொடர்பு அறுந்து போகின்றது. மனையின் மகிழ்ச்சி மழலையில் தான் மண்டிக் கிடக்கின்றது. அம்மா என்ற வார்த்தையே ஒரு பெண்ணின் காதுகளுக்குத் இன்னிசைப்பாட்டை இசைக்கமுடியும்.

புழுவாய் நெளிந்தாள். முழங்காலை முகம் வரை இழுத்து பின் நீட்டி புரண்டு புரண்டு படுக்கையைக் கரடுமுரடாய் கண்டாள். அருகே படுத்திருந்த கணவனை ஒருமுறை பார்த்தாள். சலனமின்றி நித்திரையில் நிம்மதி தந்த மூளையின் தயவில் கட்டிலில் கிடந்த கணவனின் மார்புக்குள் நுழைந்தாள் சிந்து. அவள் நெருக்கத்தில் உறக்கம் துலைந்த மதனும்

"என்னம்மா.... நித்திரை வரல்லையா? அன்பொழுகக் கேட்டான்."

"ம்...."

"காலையில் வேலைக்குப் போக வேணுமல்லவா....."

"உழைச்சு உழைச்சுத்தான் என்னத்தக் கண்டம்"

"இதென்ன இந்த நேரத்தில் பேசும் பேச்சா. பேசாமப்படு நாளைக்குக் கதைப்பம். கண்டதையும் நித்திரையில் போட்டுக் குழப்பாதையும். இப்படித்தான் என்றால். இப்படித்தான். அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரவேணும்...."

இவருக்கெங்கே புரியப்போகிறது. என் மனம் படும்பாடு. சிந்தனை மனதுக்குள் புகுந்துவிட்டால். மூளை அது பற்றித்தானே வேலை செய்யும். நித்திரை கொள்ள சம்மதிக்குமா. என்னை நான் மறந்தாலேயே என் மூளை களைத்துக் கண்ணை மூடச்செய்யும். அதுதான் முடியாது முனகுகின்றேனே. நேரத்தைப் பார்த்தாள் சிந்து அதுவோ ஓடுவதாக இல்லை. ஒரு செக்கனுக்கு ஒரு மணி நேரம் தேவைப்படும்போல் இருந்தது. "சீ....." என்றபடி எழுந்து அமர்ந்தாள். அறைக்கதவை சாத்திவிட்டு சமையலறையினுள் எதிர் கொள்ளும் நாளுக்கு எந்திரமானாள்.

உடலுக்கு உரமேற்றும் உணவுகள். உடலுக்கு உதவிட உத்தரவு கேட்டு சமையலறை மேசையில் தயாராக இருந்தன. விடிகாலைப்பொழுதோ தன் கடமைக்காய்த் தயாரானது. அலாரச் சத்தத்துடன் இணைந்தே மதனின் குரலும் ஓங்கி ஒலித்தது.

"சிந்து..... சிந்து..... "

"என்னப்பா.... "

"இந்த அலாரத்தை நீ மாற்றல்லையா? அதனுடைய கடமை உணர்ச்சிக்கு அளவேயில்ல. சொல்லிட்டம் என்ரதுக்காக விடாது அடித்துக்கொண்டே இருக்குது. நாங்க இன்றைக்கு வேலைக்கு லீவெல்லோ எடுத்தோம். டொக்டர்ட்ட Termin இருக்கல்லவா..."

"சரிசரி எழும்புங்க. நான் மறந்திட்டன். டொக்டரிட்டப் போக முன் உங்களோட கொஞ்சம் கதைக்க வேண்டியிருக்கு"

நீண்ட பெருமூச்சுடன் கூடு பறக்கும் தேநீர் மெல்லமெல்ல உற்சாகம் ஏற்ற சிந்து வார்த்தைகளை மதன் மனம் மென்று கொண்டிருந்தது.

"என்ன பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம். லீசியை வரச் சொல்லிட்டன். இப்ப அவ வந்திடுவா...."

"ஓஹோ இதுக்குத்தான் டொக்டரிட்ட Termin எடுத்தனீயா? நீயே எல்லாம் செய்துவிட்டு பிறகு ஏன் என்னட்டக் கேட்கிறாய்.... நடக்கட்டும். பிறகு ஏதாவது பிரச்சினை என்றால் கண்ணைக் கசக்கிக் கொண்டு நிற்காதேயும்...."

மதனின் சலிப்பான பதிலில் எதிர்கால வாழ்வின் பயம் இருந்தது. ஆனால், சிந்துவின் உடனடி முடிவில் ஆத்மதிருப்தி இருந்தது.

கற்பப்பையின் பலவீனம் குழந்தைப் பாக்கியத்தை தடுத்துவிட்டது. இனியொரு வாரிசு இவளால் தாங்க முடியாது என்னும் வேதனைப் பாரம் இதயத்தில் பெரும் பாறாங்கல்லைத் தூக்கி வைத்துவிட்டது. பாறாங்கல்லை இறக்க வேண்டுமானால், தன் கருமுட்டையை இறக்கவேண்டும். சிந்தித்ததில் செயல் ஒன்று சிறப்பாய் நடத்த முடிவு எடுத்தாள். லீசி என்ற ஒரு போலந்து நாட்டு நட்பொன்றின் உதவியை நாடினாள். லீசியின் கருப்பையில் சிந்துவின் கருமுட்டையும்,

மதனின் விந்தணுவும் ஒன்றாக இணைந்து வளர லீசியிடம் சம்மதம் வாங்கினாள். நீண்ட போராட்டத்தின் மத்தியில் மதனின் சம்மதம் கிடைத்தது.

''அவளின் செலவுகளுக்கு என்ன செய்யப்போகின்றாய். ஆரோக்கியமான குழந்தைக்கு அவசியமான சத்துணவுகளை நாமல்லவா கொடுக்கவேண்டும்....''

"ஓமப்பா.... நான் எல்லாம் கதைத்துப்போட்டன். எங்களுடைய மேல்வீடு இன்னும் வாடகைக்கு விடாமல்தானே கிடக்குது. அதில லீசியை குடிவரச் சொன்னேன். நாங்க பார்த்துக் கொள்ளலாம்தானே. பிள்ளைக்கு வேண்டிய சத்துணவெல்லாம் கொடுக்கலாம். அது எங்கட பிள்ள தானே... எங்கட பிள்ளப்பா... "

இரண்டு கைளையும் மேலே உயர்த்தி ஆரவாரம் செய்தாள்.

"ஓஹோ ... இவ்வளவும் கதைச்ச நீ பிறகு எதுக்கு என்னிடம் இதைச் சொல்றாய். அதையும் நீயே பார். உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. உன்னால முடியாது என்றால் ஒரு பிள்ளையை தத்தெடுப்போம். நல்லா வளர்ப்போம். அத விட்டுப்போட்டு யாரோ போலந்துக்காரியிட்ட எங்களை தொடர்புபடுத்தி.... இதெல்லாம் சரிவரும் என்று எனக்குப்படல்ல...."

"எதுக்குத்தான் நீங்க ஒத்து வர்றீங்க..... அது எங்கட பிள்ள. தத்தெடுக்கும் பிள்ள எங்கடதில்ல....எங்கட மரபணுக்கள் இல்ல"

கண்ணைக்கசக்கினாள். பொலபொலவென்று குழாய் நீராய் கண்ணீர் வடிந்தது. சிந்திய மூக்கில் மதனின் கல் நெஞ்சம் கரைந்தது.

"சரி சரி.... அவள் வரட்டும்"

இருவரின் உறவுக்கும் இணைப்பாகப் போலந்து உறவொன்று புகுந்து கொண்டது. ஐரோப்பியர்களுக்கு பாசம் குறைவென்றுதானே நாமெல்லாம் கருதுகின்றோம். அவ்வாறுதான் மதன் சுதா தம்பதிகளும் கருதி தமிழ்ப்பெண்ணைவிட்டு போலந்துப் பெண்ணிடம் தஞ்சம் அடைந்தனர்.

அழைப்புமணி அதிர்ஸ்ட மணியாய் அலறியது. 1000 வார்ட் மின்சாரம் சிந்து முகத்தில் பிரகாசித்தது. பூசி வைத்த சில்வர் பாத்திரம் போன்ற முகப்பொலிவுடன் முன்னே வந்த லீசியை வரவேற்ற இருவரும் வரவேற்பறையில் அமர்ந்தனர்.

முதலில் மதன் தொடங்கினான்.

"லீசி பிள்ளை வளரும் காப்பகம் உன் கருப்பை. பிள்ளை எங்களுடையது. உயிர் நாங்கள் உறை நீ. நீ சுகதேகியானாலேயே எங்கள் பிள்ளை சுகமாகப் பிறக்கும். நீ மகிழ்ச்சியாய் இருந்தாலேயே எங்கள் பிள்ளை மகிழ்ச்சியான பிள்ளையாய் பிறக்கும். உயிரொன்று உன் உடலுள் வளர்கின்றபோது உயிரைக்கொல்லும் எந்த போதை வஸ்துக்களையும் உன் அருகே கொண்டுவராதே. உன் தேவைகளை நாங்கள் பார்க்கின்றோம். பிள்ளையின் தேகத்திற்கு இடையூறு ஏற்படுத்தாது நீ பார்த்துக்கொள். எங்கள் எதிர்காலத்தை நீ சுமக்கப் போகின்றாய் வாழ்நாள் முழுவதும் உன்னைத் தாங்குவோம். இந்தச் சேவைக்கு எந்தச் சேவையும் இணையாகாது. உன்னில் நாம் வைத்திருக்கும் நம்பிக்கை எவ்வேளையும் குறைந்து கொள்ளாமல் பாதுகாக்க வேண்டியது உன் பொறுப்பு. இப்போது டாக்டரிடம் போவோம்"

லீசியின் சம்மதம் இருவருக்கும் சர்க்கரையைக் கரைத்துப் பருகக் கொடுத்தது. அந்தரத்தில் பறக்கும் ஆனந்தத்தை அள்ளிக் கொடுத்தது.

சிந்துவின் வாய்களிலிருந்து எந்த வார்த்தைகளும் வெளி வரவில்லை. கண்ணீர் மட்டுமே கன்னங்களில் வரிகள் போட்டுக் கொண்டிருந்தது. இறுதியாக சிந்து லீசியின் கைகள் இரண்டையும் தன் கைகளினுள் புதைத்தாள் தன் உள்ளம் முழுவதும் அவளிடம் மண்டியிட்டு நன்றி கூறியது. அவளை அணைத்தெடுத்தாள். ஆயிரம் வார்த்தைகள் அவ் அணைப்பில் இருந்தது.

தோள்மீது மகவொன்று தூங்கும் இன்பம்
தொல்லைகளை தூரவீசும் நிலையான இன்பம்
இல்லமதில் இணையவரும் நாள் பார்த்து
இமைதூங்கா காத்திருக்கும் காவலர்கள் இவர்கள்

மருத்துவமனைப் படுக்கையில் லிசி. அருகே நின்றாள் சிந்து. அந்தரத்தில் பறந்தாள். மனதுக்குள் ஒரு அழகு நடனம் அரங்கேறிக் கொண்டிருந்தது. இதழோரம் புன்னகை பூரித்து நின்றது. வண்ண விளக்குகள் வகைவகையாய் மூளைக்குள் மின்னிக் கொண் டிருந்தன. கற்பனைக்கு எத்தனை சக்தி. தாய்ப்பாசம் என்பது பிள்ளையைச் சுமந்து பெற்றாள் மாத்திரமே என்று யார் சொன்னது? இதைப் பெற்றவர்கள் மட்டுமே பிரசுரிக்கலாம். குழந்தை பிறக்காமலே தாய்ப்பாசம் தலை நிமிர்த்தும் என்று விளம்பரப்படுதியது சிந்துவின் மனம்.

விடைபெற்ற மதனும் சிந்துவும் வீடு வந்தனர். நாட்களின் நகர்விலே காலியாய் இருந்த மேல் வீடு தற்போது லீசியின் வதிவிட மானது. சிரிக்கின்ற குழந்தையின் சித்திரங்கள் நிறைந்த வீட்டிலே அலங்காரங்கள் அமர்க்களம். இலகுவாக வாழும் வசதிகள் செலவு பாராமல் செய்யப்பட்டிருந்தன. வீடு வந்து சேர்ந்த லிசியின் வாழ்க்கையில் வசந்தம் குடிகொண்டது. நட்பின் பிடிப்பிலும் அன்புப்

பராமரிப்பிலும் மகாராணியாய் வலம் வந்தாள். சுற்றுலாக்களில் மூவரும் இணைந்தே எடுக்கும் புகைப்படங்கள் இவர்கள் அன்பிற்கு அத்தாட்சியானது. லீசியின் வயிற்றைத் தடவித் தன் குழந்தையை அணைக்கும் இன்பத்தை கண்ணீர் மல்க அனுபவிப்பாள் சிந்து.

அரசாங்கம் அளிக்கும் அன்பளிப்புகள் மட்டுமல்ல, மதனின் பணப் பையும் லீசியின் செலவுக்குத் திறந்தே இருந்தது. சிந்து தனக்காக எதுவும் கொள்வனவு செய்வதை மறந்தாள். தன் வாரிசுக்கே தன் ஆசைகளை இடம்மாற்றினாள். ஏழு மாதங்கள் இடைவெளி தெரியாமல் பறந்தன. இடைவெளியில் தங்கை மகளின் பூப்புனிதநீராட்டு விழாவிற்குச் செல்லவேண்டிய அவசியம் சிந்துவிற்கு ஏற்பட்டது. மதனும் சிந்துவும் மூன்றுநாள் இடைவெளியில் இலண்டன் பயணமாயினர்.

"லீசி என் உயிரை இங்கே விட்டுப் போவது போன்ற ஒரு உணர்வு எனக்கு ஏற்படுகின்றது. எனது மகனை கவனமாகப் பார்த்துக்கொள். வெளியில் செல்லாதே. விபரீதம் எதுவும் ஏற்படாது வீட்டிலே இரு. 3 நாட்களில் நாங்கள் வந்துவிடுவோம். பிளீஸ் லீசி. எங்கள் குழந்தையை எந்தப் பிழையும் இல்லாமல் எங்களிடம் ஒப்படைத்துவிடு. அதற்குப் பிறகு உன்னை நாங்கள் கட்டுப்படுத்தப் போவதில்லை"

மண்டியிட்டாள் சிந்து. மனங்குழைந்தான் மதன்.

"என்ன சிந்து எனக்குத் தெரியாதா? எங்கள் ஒப்பந்தமும் அதுதானே. எதற்கும் பயப்படாமல் போய் வாருங்கள். நான் இந்த மூன்று நாட்களில் வெளியிலேயே போகப் போவதில்லை. ஓகே..."

தன் மகனைப் பிரிந்து செல்லும் வேதனை இருவரையும் வாட்டவே லண்டன் பயணமானார்கள். ஆனால், பாச இழை பற்றி இழுக்கவே விரைவாய் திரும்பி வந்த இருவரும் பயணப் பைகளைப் போட்டுவிட்டு

லீசி வீட்டின் அழைப்பு மணியை அழுத்தினர். நிசப்தம். வாசல் கதவு திறக்கவில்லை. அவளுக்காய்க் கொண்டுவந்த அன்பளிப்புப் பொருள் தரை நோக்கித் தளம் இறங்கியது. மீண்டும், மீண்டும் அழுத்தினர் நிசப்தம்...நிசப்தம். சிந்து ஓடிச்சென்று தம்மிடமுள்ள திறப்பை எடுத்து வந்து மின்னலெனக் கதவைத் திறந்தாள். வீட்டினுள் எங்குமே லீசியில்லை. இந்த இரவில் எங்கே சென்றிருப்பாள். பொறுத்திருந்து பார்ப்போம் என்ற போது சாப்பாட்டறை மேசையில் ஒரு கடிதம் பளீச்சிட்டது.

ஈர நெஞ்சங்களுக்கு இதயமில்லா லீசி எழுதிக்கொள்வது,

என்னால் முடியவில்லை. எங்கள் மூவரின் தொடர்பில் எனக்குள் வளரும் உயிருக்கு என்னை மட்டுமே உரிமையாளியாக்க விரும்பு கின்றேன். என் கருவறை வாடகை வீடு அல்ல. உயிருக்குள் உறைந்து விட்ட உறைவிடம். என் உணர்வுகளில் நடமாடுகின்றது. இது என்றோ உருவாகிவிட்டது. எப்படி எடுத்துரைப்பது என்று அறியாது தத்தளித்தேன். அவனை விட்டுப் பிரியும் சோகம் எனக்கு வேண்டாம். அவனோடு வாழவேண்டும். அவனோடு விளையாட வேண்டும். அவனோடு பேசவேண்டும். அவனுக்காக என்னை இழக்கவேண்டும். அவன் எனக்கு மட்டுமே. எனக்கு மட்டுமே.....

இப்படிக்கு
மன்னிக்கப்பட வேண்டிய
லீசி

இதயங்கள் சுக்குநூறாகுவது என்பதன் அர்த்தம் இன்று தான் மதன் தம்பதியினருக்குப் புரிந்தது. அவள் விடுதலையானாள். இவர்கள் மனம் கல்லறையுள் அடக்கமானது. கையில் இருந்த கடதாசியை விட்டெறிந்தான் மதன்.

"இதுக்குத்தான் சொன்னேன். வேண்டாம். வேண்டாமென்று.... தலையால அடிச்சுக் கொண்டேன். உன் ஆட்டம் இப்போது எப்படிப் போனது தெரிகிறதா? கண்ணுக்குள் வெண்ணெய் விட்டோமே. இன்று கண்ணையே தோண்டி எடுத்துவிட்டாள். இப்படி ஒரு நிலமை எமக்குத் தேவையா?"

இடிவிழுந்து அமர்ந்த சிந்துவுக்கு மதனின் வார்த்தைகள் எங்கே நுழையப் போகின்றது

இந்த இதயம் இருக்கிறதே இதுகூட சிலவேளை குருதியால் நிறையாது கல்லால் நிறைந்து இருக்கின்றதோ என்று எண்ணத் தோன்றும். மலையாய் நினைத்திருக்க மண்ணாய் மாற்றி விட்டாளே. தனியாய் புலம்பவிட்டு எம் தலைமுறையைக் கொண்டு சென்றுவிட்டாளே. நம்பிக்கை என்பது மோசமா? இது மனித வாழ்வில் சகஜமா? ஈட்டி கொண்டு குத்தியிருந்தால் இறந்திருப்போம். இதயம் எம்முடன் இருக்க எப்படி வாழ எம்மால் முடியும். புலம்பிய இரு இதயங்கள் புண்ணாகிப் போன மனதுடன் வீடு திரும்பின. அவள் விட்டுப்போன வீட்டை துப்பரவு செய்து வீட்டுக்காரரிடம் ஒப்படைத்தனர்.

ஏமாற்றத்தை எப்படி மனது ஏற்றுக்கொள்ளும்? நடந்தவற்றை எப்படி மனது மறந்து போகும்? வாரிசு எங்கோ வாழ்கின்றது என்னும் போது மனதில் நிம்மதி எங்கே குடிகொள்ளும்? உலகம் உருண்டை ஆனது. தொழில்நுட்ப உலகில் யாரைத்தான் மறைத்து வைக்க முடியும். உலகமே கைக்குள் அடக்கமாகி இருக்க விமானம் ஏறி உளவுப்படை தேடவேண்டுமா?

காலம் கடந்தது காத்திருப்புத் தொடர்ந்தது. தன்னுடைய பிள்ளையை நினைத்து நினைத்து சிந்து சிந்தினால் கண்ணீர். நொந்து நூலானாள்.

வருடங்கள் பதினெட்டுக் கடந்தன. வேலை நிமித்தம் வேறு ஓர் கிராமம் மாறினான் மதன். மாற்றம் தன் மனைவியின் மனநிலைக்கு நல்லதென வைத்தியரின் அறிவுரையும் கிடைத்தது. புதிய இடம் புதுவித அனுபவம் நினைவுகளுக்கு இடைவெளி தரும் என்பது பலரது கணிப்பு. ஆனால் அது நடக்கவில்லையே. காலையில் கண்விழித்தால் தன் பதினெட்டு வயது மகனை அல்லவா தேடும் மனம்.

புதிய கிராமத்தில் உணவுப்பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு கடைக்குள் நுழைகிறான் மதன். என்ன ஆச்சரியம் தன் முன்னே லீசி உணவுப்பொருள்கள் தாங்கிய வண்டியைத் தள்ளிக் கொண்டு செல்வது தெரிகின்றது. அவன் கண் அவனுக்குப் பொய் உரைக்காது. ஒரு செக்கனுக்குள் மின்சாரமாய் லீசி முன் பாய்ந்தான்.

" லீசி..... நில் ...."

திரும்பிப் பார்த்தவள். பார்க்காததுபோல் வாகனத்தினுள் ஏறினாள்.

"நில்...." மீண்டும் அவளைத் தடுத்து நிறுத்தினான் மதன்.

"ஹலோ..... உங்களுக்கு என்ன வேண்டும். நான் உங்களுடன் கதைப்பதுக்கு எனக்கு ஒன்றும் இல்லை. என்னை விடுங்கள்....."

ஸ்தம்பித்து நின்றான் மதன். சுர்ர்ர்..... என்று ஏதோ மூளைக்குள் ஓடியது. அவள் ஊரை விட்டு ஓடுவதற்குள் அவள் இருப்பிடம் கண்டு பிடிக்க வேண்டும். மனைவிக்கும் சொல்லாமல் வேலைக்கும் லீவு போட்டுவிட்டான். தேடல் தொடர்ந்தது. விட்டுவிடுவானா தனது பதினெட்டு வருட மன உழைச்சல், நம்பிக்கை, தன் கனவு, ப்ரேக் இல்லாத வாகனமாய்த் தொடர்ந்த அவன் தேடலுக்கு முடிவு கிடைத்தது. இடம் கண்டு பிடித்தான். வீட்டின் அழைப்பு மணியை அழுத்தினான்.

வாசல் கதவு திறந்தது. தன் கண்ணையே தன்னால் நம்ப முடியவில்லை. பேச்சு வரவில்லை. கண்ணீரே கண்களில் இருந்து தொடர் ஊற்றாய் ஆனது. ஆண்டவனை இன்று நம்பினான். இவ்வுலகில் துரோகத்தை என்றோ ஒருநாள் காலடியில் விழ வைக்கலாம் என்னும் தத்துவம் புரிந்தது. மதனையே போட்டோக்கொப்பி எடுத்ததுபோல் மதன் தோற்றத்தில் ஒரு இளைஞன் தன்முன்னே கதவைத் திறந்தது ஒரு கனவாய்த் தெரிந்தது.

"லீசியை சந்திக்கலாமா...."

ஜெர்மன் மொழியில் அவன் உதடுகள் உச்சரித்தன. தாயை அழைத்தான் அவ் இளைஞன். முன்னே வந்த லிசி திகைத்துப் போனாள். தன் கண்முன்னே காட்சி அளிக்கும் மதனைக் கண்டாள்.

"லூயிஸ் உள்ளே போ....." உத்தரவிட்டாள்.

"உங்களுக்கு என்ன வேண்டும் மதன். என்ன கேட்டு இங்கே வந்துள்ளீர்கள். உங்களுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை"

வார்த்தைகளை மனச் சாட்சியே இல்லாது உதிர்த்துவிட்டுக் கதவைத் தாளிட்டாள் லீசி.

உடைந்து போனான் மதன். பாறாங்கல் ஒன்று மனதுக்குள் அழுத்தியது. விடை பெற்றாலும் பல தடவை லீசியை சந்திப்பதற்கு முயற்சித்தான். அவளும் ஒவ்வொரு தடவையும் எடுத்தெறிந்து பேசிவிட்டு துணிவாய் நடந்தாள். மனைவியிடமும் வெளிப்படுத்தாது பயித்தியமான மதன். இறுதியாக சமூக நற்பணிமன்ற கோர்ட்டுக்கு முறையிட்டான். அன்று தான் முதல் முறையாக சிந்துவிடம் நடந்தவற்றை விளக்கினான்.

"சிந்து நீ சிந்திய கண்ணீருக்கு விடை கிடைத்துவிட்டது. உன் காத்திருப்புக்குப் பலன் கிடைத்துவிட்டது. உன் மகன் உன்னிடம் வரும் காலம் நெருங்கிவிட்டது"

"என்னப்பா.... என்ன சொல்றீங்கள்! என்ன நடந்தது? பட்டென்று சொல்லிடுங்கள். என்னால் பொறுக்க முடியாது. எனக்கு அந்த சக்தியும் இல்லை. மகன் கிடைச்சிட்டானா? எங்க கண்டனீங்கள்?"

அடுக்கடுக்காய் கேள்விகள் மாலை போட்டன. விழுந்த கேள்வி களுக்கு நடந்தவை அத்தனையும் விளக்கங்கள் ஆகின.

"என்ன தைரியம். என்னமாக் கதைத்தாள். இப்படிச் செய்திட்டாளே?"

"எங்களுடைய பாசத்துக்கு சக்தி இருக்குப்பா. அது என்ர மகனை என்னிடம் கொண்டு சேர்க்கும்"

இரு குடும்பமும் கோர்ட்டுக்கு அழைக்கப்பட்டது. தனி அறையில் லூயிஸ் இருந்தான். ஏன் அழைத்தார்கள்? நான் ஏன் இங்கே? என்னும் எந்த விடயமும் தெரியாது தனி அறையில் லூயிஸ். விசாரணை அறையினுள் மதன், சிந்து. லீசியின் தற்கால கணவன் நால்வரும் நீதிபதியின் முன் நின்று கொண்டிருந்தனர்.

லீசியைக் கண்ட சிந்துவின் கண்கள் நெருப்பைக் கக்கின. தன்னுடன் சிரித்துக் கும்மாளம் இட்டு பல கதைகள் பேசிப் பழகிய லீசி எதிரியாய் உருவெடுத்திருக்கும் மாயத்தை நினைத்துப் பார்த்தாள். பூசி மினுக்கி வந்திருக்கும் ஒரு மாயப் பிசாசாய் தன் கண்முன்னே நிற்கும் லீசியைப் பார்த்து முதல் வாய் திறந்தாள்.

"இப்படிச் செய்து போட்டாயே? எங்களுடைய ஒப்பந்தத்தை குழி தோண்டி புதைத்து விட்டாயே. உன் நிலைமை என்னவோ என்னிடம்

ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே. இப்படி நயவஞ்சகப் பெட்டகமாகப் பழகியிருக்கிறாயே. போதும் உன் வஞ்சனை இனி எங்கள் பிள்ளைய எங்களிடம் கொடுத்துவிடு. உன்னை மன்னித்து விடுகின்றோம்"

"நல்லாய் இருக்கிறது. இத்தனை வருடமும் வயிற்றிலும் மார்பிலும் தூக்கி வளர்த்த பிள்ளை. பார்த்துப் பார்த்து பனி, தண்ணீர் பாதிக்காது பக்குவமாய் வளர்த்த பிள்ளை. இன்று வளர்ந்து அழகாய் என் தோளுக்கு மேல் நிற்கின்றான். சும்மா கூட்டிப்போக விடுவதற்கு நான் என்ன பெற்று எடுக்காது. பிய்த்து எடுத்தேனா? பிள்ளை உங்களுடையது என்பதற்கு என்ன உரிமை உங்களிடம் இருக்கின்றது"

வார்த்தைகளை அளந்து பேசினாள்.

"உனக்கு என்ன மறதி மருந்து தந்தார்களா? இந்தப் பிள்ளைக்கு உயிர் கொடுத்ததே நாங்கள் தான். கரு வளர அத்தனை சத்துக்களையும் தந்ததே நாங்கள் தான். அவன் உடலின் ஒவ்வொரு அங்கங்களையும் தனியே எடுத்துப் பார். அவனைப் போர்த்தியிருக்கும் தோலை மறந்து பார். அத்தனையும் எங்கள் மரபணுக்களால் கட்டப்பட்ட மனிதன். உனக்குள் தயாரிக்கப்பட்ட இயந்திரம். உருவான இடம் சொந்தமா? உருவாக்கியவர்கள் சொந்தமா? எங்களுடைய பிள்ளையை எங்களுக்குத் தந்துவிடு" மதன் மறுமொழி அளித்தான்.

"ஏழு மாதங்கள் உணவு தந்தால், பிள்ளை வளர்ந்து விடுமா? ஒரு கேலிச் சிரிப்பை உதிர்த்தாள்."

"அது தானே நீ வயிற்றிலே தூக்கிக் கொண்டு போய் விட்டாயே"

வளர்ந்த வார்த்தைகள் முடிவில்லாது முளைத்துக் கொண்டே இருந்தன. பிள்ளையை உரிமையாக்க ஒருவருக்கு ஒருவர் காரணங்

களை கடைந்து கடைந்து தந்தனர். இறுதியில் நீதிபதியின் கட்டளையின் பெயரில் லூயிஸ் அழைக்கப்பட்டான்.

உடலுக்குள்ளே இருந்து ஏதோ ஒரு உணர்வு. மதன் தம்பதியினரிடம் இருந்து வெளிப்பட்டது. தங்கள் பல வருடக் கனவு முன்னே காட்சியளிக்க கண்ணீர் மடை திறந்தது. உணர்வுகளின் வெளிப்பாட்டை ஒழிக்காது வெளிப்படுத்தும் சக்தி கண்ணீருக்கு மட்டும்தான் உண்டு. அந்த உப்புத் தண்ணீருக்கு எந்த கடல் தண்ணீரும் சமமாகாது. வார்த்தைகளுக்கு வடிகால் போடலாம். கண்ணீருக்கு அணைக்கட்டு கிடையாது. எதுவுமே புரியாது உள் நுழைந்த லூயிஸை ஓடிச் சென்று கட்டி அணைத்து கண்ணீரைச் சொரிந்தாள் லீசி. பார்த்துக் கொண்டிருந்த மதன் சுதாவிற்கு ஏக்கமும் எரிச்சலும் கூட்டுச்சேர்ந்து வெறுப்பு என்னும் உணர்வை ஊட்டியது. தன் உரிமை பிறர் கைக்குள் சென்று உரிமை கொண்டாடும் உணர்வைப் பார்த்துக் கொண்டிருக்க எப்படி இருக்கும்? அருகே இருக்கும் மகனைக் கட்டி அணைக்க உரிமை அற்றவர்களா நாம் என்னும் தவிப்பு இருவரையும் ஆட்டிப்படைத்தது.

நடந்தவை அத்தனையும் லூயிஸ்க்கு விளக்கப்பட்டது. ஒவ்வொன்றாக வெளிப்படும் போது அவன் கண்கள் விரிந்தன. குழப்ப மூட்டை ஒரேயடியாக அவன் மூளைக்குள் கொண்டு கொட்டப்பட்டது. இவ்விடத்துக் கதாநாயகனாயும் முடிவு தர வேண்டிய பொறுப்பாளி யாயும் ஆனான் லூயிஸ்.

முடிவைச் சொல்லிவிடு லூயிஸ். எங்கே போகப் போகின்றாய். பெற்று வளர்த்தவர்களிடமா? அல்லது நீ உருவாகுவதற்கே காரணமானவர்களிடமா? அவர்கள் உன் தாய் செய்தது நம்பிக்கைத் துரோகம் என்கின்றார்கள். நீ அவர்களுக்கே சொந்தமானவன் என்று இத்தனை நாளும் உன்னைத் தேடி அலைந்துள்ளார்கள். தாய்

பாசத்திற்காய் இருவரும் ஏங்குகின்றார்கள். உன் உறவை எண்ணி உன் தந்தை தவிக்கின்றார். உன் முடிவைச் சொல்லிவிடு.

முதல் முறையாய் வாய் திறந்தான் லூயிஸ். என் அம்மா செய்தது பிழை தான். ஆனால் என்னில் வைத்திருக்கும் பாசத்தினாலேயே செய்தாள். இவர்களை எனக்குத் தெரியாது. இவர்களைப் பார்க்கும்போது பாவமாகத்தான் இருக்கின்றது. அம்மாவை விட்டுப் போக என்னால் முடியாது. ஆனால், அம்மா இத்தனை நாளும் இத்தனையையும் எனக்கு மறைத்தது என்னால் மன்னிக்கவே முடியாத பிழையாக இருக்கின்றது. எனக்கு இருவரும் வேண்டும். உயிர் தந்தவர்களை மதிக்கின்றேன். ஆனால் பெற்று வளர்த்தவர்களுடனேயே வாழ விரும்புகின்றேன். ஆனால் நானே அவர்கள் என்னும்போது அவர்களுடனும் சேர்ந்து வாழ்வேன். காலம் தான் என் எதிர்கால மாற்றத்திற்கு விடை சொல்லும்.

நீதிபதியின் பணிப்பின் பேரில் சிந்து, மதன் அருகே சென்றான் லூயிஸ். ஆசை தீர லூயிசைக் கட்டி அணைத்தனர் இருவரும். சாரை சாரையாய் கண்ணீரை வடித்தனர். லூயிஸை அருகே செல்லவிடாது பல நாள்கள் தடுத்த லீசி இன்று எதுவும் செய்யமுடியாது நின்றாள்.

தொடர்புகள் விட்டுப் போவதில்லை. உயிர் உள்ளவரை காந்தம் போல் எங்கிருந்தாலும் கவர்ந்து இழுத்துவிடும். மன அலைகளுக்கு வலிமை உண்டு. உலகெங்கும் நிறைந்திருக்கும் அலைகளுக்கு மத்தியில் பாச அலைகள் நிச்சயம் பக்கம் வந்தே தீரும். எதிலும் நாட்டம் வைத்தால் வாழ்வின் உச்சி வரை தொடர்ந்து முயற்சியுங்கள் உச்சத்தைத் தொடுவீர்கள் என்னும் உண்மையை சிந்து, மதன் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

"சிந்து இன்னும் எத்தனை காலம் தான் அவளோட எங்கள் மகன் இருக்கப் போறான். எங்களிட்ட வருவான் தானே. உண்மை தெரிந்து விட்டது தானே. பொறுத்திருப்பம். இந்த அளவிற்குக் கைகொடுத்த காலம். எங்களைக் கைவிட்டிடுமா!" என்று கூறிய மதன், நம்பிக்கைப் பிரகாசமிட்ட சிந்துவை அணைத்தான்.

வழி காட்டிய வரம்

Airlanka விமானம் ஒரு மணிநேரம் தாமதமாகத் தரை இறங்க இருக்கின்றது என்னும் அறிவுப்புக் கேட்டு ரவி, தன்னுடைய ஒரு வயது ஒரே மகள் ரம்யாவைத் தோளில் போட்டபடி இருக்கையொன்றில் அமர்ந்தான். இருக்கையில் இருக்கின்றான். ஆனால், அவன் எண்ண அலைகளோ மெல்லெனப் பின்னோக்கி நகர்ந்தன.

அன்று காலை அவசர யுகத்தில் ஆயிரம் துயரச் சுமைகளைச் சுமந்த வண்ணம் மகள் ரம்யாவுக்கு ஆடைகளை மாற்றி அமரச் செய்து விட்டு, அவளுக்குரிய உணவுகளை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான். அப்போது ரெலிபோன் மணி அலறியது. விரைந்து வந்து பதட்டத்துடன் ரிசீவரைக் காதில் வைத்தான். மருத்துவமனைத் தாதியின் குரல் கேட்டவுடன் திடுக்கிட்டு விட்டான்.

"உங்கள் மனைவி உங்களுடன் அவசரமாகக் கதைக்க வேண்டு மென்று துடிக்கின்றார். உடனே மருத்துவமனைக்கு வரமுடியுமா?"

என்று தனது இனிமையான குரலில் கூறிய தாதி அவனுடைய சம்மதத்தைப் பெற்றாள். அவசர அவசரமாக சமயலறையினுள் நுழைந்தான் அடுப்பில் வைக்கப்பட்ட உணவோ எரிந்து மணம் பரப்பிக் கொண்டிருந்தது. அடுப்பை அணைத்தான். அப்படியே எல்லாவற்றையும் போட்டபடி குழந்தையைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனை நோக்கி விரைந்தான்.

குழந்தையோ பசியால் வீறிட்டது. அங்கே கண்கள் குளமாக உயிரைக் கையில் பிடித்தபடி இறுதிப் பயணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். அவன் மனைவி சீதா. அழுது அடம்பிடித்த குழந்தையை வாரி அணைத்தாள். கன்னத்தில் மாறிமாறி முத்தம் கொடுத்தாள். தாயின் அணைப்பில் குழந்தை அழுகையை நிறுத்தியது. மனைவியை அணைத்தபடி மார்பில் அவளைச் சரித்தான் ரவி.

"நான் உயிர் வாழ்வேன் என்னும் மடத்தனமான ஒரு நம்பிக்கையை நீங்கள். இன்னும் வைத்திருக்கின்றீர்களா? மெலிந்த குரலில் அவள் கேள்வி அவனுக்கு பதட்டத்தை ஏற்படுத்தியது."

"எதற்காக இப்படி ஒரு கேள்வி? இப்போது இது அவசியம் தானா? உனக்கு ஒன்றுமில்லை. என் இறுதி மூச்சு இருக்கும் வரை உன்னைக் காப்பாற்றாமல் விட மாட்டேன். இப்படி எல்லாம் உன்னால் எப்படிப் பேசமுடிந்தது. நூறு வருடங்கள் உன்னோடு இணைந்து வாழவேண்டும் என்னும் ஆவலுடன் தான் உன்னைத் திருமணம் செய்தேன். என் நம்பிக்கை வீண் போகாது. தைரியமாக இரு" என்று அவளை ஆறுதல்படுத்த முனைந்தான். ரவி.

"இல்லை என்னால் முடியவில்லை. ஏதோ பயங்கரமான எண்ணமெல்லாம் வந்து என் இதயத்தைப் பிழிந்து எடுக்கின்றது.

வாழவேண்டும் என்ற சிந்தனை என்னை விட்டு மெல்லமெல்ல அகன்று கொண்டிருக்கின்றது. இந்த இரண்டு வருடங்கள் நான் வாழ்ந்த வாழ்க்கையே நூறு வருடங்களுக்குச் சமமான பொன்னான நாள்கள். உங்களுடன் தொடர்ந்து வாழமுடியாத அபாக்கியவாதியாயினும் நான், உங்களை இந்த இரண்டு வருடங்களும் நன்றாக அறிந்து வைத்துள்ளேன். ஆனாலும், எனது உயிர் என்னை விட்டுப் பிரியும் முன் உங்களிடம் ஒரு வரம் வேண்டி நிற்கின்றேன். தருவீர்களா? ஒரு சத்தியம் செய்து தாருங்கள் Please அவன் கையை இறுகப் பற்றினாள்."

"என்ன அப்படி? என்ன கேட்கப்போகின்றாய். என்னால் முடியுமான எதை உனக்காகச் செய்யாமல் விட்டிருக்கின்றேன்?"

"சத்தியம் செய்து தாருங்கள்....." என்று பிடிவாதமாக அவனிட மிருந்து சத்தியவாக்குப் பெற்றாள். சத்தியவாக்குப் பெற்றவள் முகத்தில் கோடி நட்சத்திரங்கள் பிரகாசித்தன.

"என்னை இழக்கப் போகும் என் கண்மணிக்குத் தாய்ப் பாசம் அற்றுப் போதல் கூடாது. தாயாகவும் தந்தையாகவும் அவளை நீங்கள் வளர்ப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஆனாலும், பெண் குழந்தை வளர்ந்த பின் தாயிடம் தன் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்வது போல்த் தந்தையிடம் பகிர்ந்து கொள்ள மாட்டாள். அத்துடன் என்னை இழந்த துயர் உங்கள் மனதில் அழியாத காயத்தை ஏற்படுத்தல் கூடாது. அது காலப்போக்கில் கரைந்து விடும் நினைவாதல் வேண்டும். அதற்கு மறுதாரமாக ஒரு பெண்ணை நீங்கள் திருமணம் செய்தல் வேண்டும். இது எனது இறுதி ஆசை. வருபவள் குழந்தை மீது பாசம் வைப்பாளோ? என்று நீங்கள் சந்தேகம் கொள்ளத் தேவை யில்லை. நம்பிக்கை தான் வாழ்க்கையின் அஸ்திவாரமே. எனக்காக... என் ஏக்கத்தைத் தீர்த்து வைக்க எங்கோ ஒரு பெண் பிறந்திருப்பாள்.

ஒரு பெண்ணுக்கு வாழ்வு அளியுங்கள். இது என் இறுதி ஆசை. இல்லை என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள்..... என் சூக்கும சரீரம் இதற்காக ஏங்கிக் கொண்டிருக்கும். என்ன சொல்லுகின்றீர்கள். சொல்லுங்கள் சொல்லுங்கள்.... "

அவன் கண்கள் குளமாகின. இதயத்தை ஆயிரம் சம்மட்டி கொண்டு தாக்குவது போன்ற வேதனை.

"என்னை விட்டுப் போவதென்றே முடிவெடுத்து விட்டாயா? இப்படி யான ஒரு சோதனை எனக்கு வரவேண்டுமா? நீ இருக்கும் இடத்தில் வேறு ஒரு பெண்ணை வைத்துப் பார்க்க எப்படி என்மனம் இடம் கொடுக்கும் "

அவன் பேசி முடிக்கவில்லை. அவள் மூச்சு நின்று விட்டது. பேச்சும் அடங்கி விட்டது. வாக்குறுதி வாங்கிய அவள் கரம், ரவி கரங்களுக்குள் இறுக்கமாய் அடங்கியிருந்தது. தனது கரங்களை ஒரு தடவை வெறித்துப் பார்த்தான். கண்களின் ஓரம் வடிந்த கண்ணீரை ஆள்காட்டி விரலால் தட்டி விட்டபடி நிமிர்ந்தான் ரவி.

தான் பிறந்த மண்ணில் வேரிற் பழுத்த பலாவாய் கோரிக்கையற்றுச் சீதனக் கொடுமையாலும், அந்தஸ்து வெறியாலும் முற்றிப் பழுத்த பலாவாய் நோக்கியும் நோக்காமலும் பருவம் கடந்து, திருமணம் காண முடியாது இருந்த பேரிளம் பெண் தான் ரதி.

விமானம் மூலம் தரை இறங்கிய அவள், பயணிகளிடையே வந்து கொண்டிருந்தாள்.

சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தனது மனைவியின் ஆசையை நிறைவேற்றவும் அவளை எதிர்கொண்டான் ரவி.

குழந்தையைக் கண்ட அவள் தன் இரு கரங்களையும் குழந்தையை நோக்கி நீட்டினாள். தந்தையையும் அவளையும் மாறிமாறிப் பார்த்த குழந்தை அவளுடைய கையைத் தட்டிவிட்டபடி தந்தையின் தோளில் சாய்ந்தது. குழந்தையின் கன்னத்தை வருடியபடி ஒருதடவை முத்தம் கொடுத்துக் கண்களைச் சிமிட்டியபடி மீண்டும் கைகளை நீட்டினாள். புன்னகை புரிந்த வண்ணம் குழந்தை அவள் கரங்களுக்குத் தாவியது.

அவன் விபரங்கள் முழுவதுமாக அறிந்த ரதி, இனிமேல் உங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கேற்று, உங்கள் குறைகளைத் தீர்க்கும் ஒரு உண்மையான மனைவியாக வாழ்வேன் என்பது போல் குழந்தையைத் தோளில் போட்டபடி புன்முறுவலுடன் ரவியை நோக்கினாள். ரவி தனது இடது கரத்தை இறுகப் பற்றினான். அக்கரத்தினுள் அவள் மனைவியின் கரம் இணைந்தது. மறுகரத்தை எடுத்துத் தன் வாழ்க்கைக்குத் துணைப்போகும் ரதியின் கரங்களைப் பற்றினான். தன் மனைவியின் ஆசை நிறைவேறியது. ஒரு அபலைப் பெண் வாழ்வு பெறப் போகின்றாள். இச்சமுதாயம் அவனைப் பற்றி ஆயிரம் சொல்லட்டும். அவனுடைய மனச்சாட்சி என்றும் நன்றே சொல்லும்.

வாயில்லா ஜீவராசிகள் மௌனம் கலைகின்றன

அந்த நகரத்தின் ஓரத்தில் பச்சைப்பசேலென்று பசுமை படர்ந்திருந்தது அவ்வனம். அவ்வனத்தின் அருகே விளையாட்டு மைதானம் ஒன்று. அங்கு கோடைகாலப் பாடசாலைச் சுற்றுலாவை மேற்கொண்ட குதூகலத்துடன் விளையாடி மகிழும் பிள்ளைச் செல்வங்கள். சூரியனின் கதிர்கள் கண்ட பேரின்பத்தின் துள்ளலில் கையில் உருளும் பந்துடன் உல்லாசமாய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மனிதவாடை மூக்கைத் துளைக்க அந்தப் பிஞ்சுகளின் குரலில் கவரப்பட்ட விலங்குகள் மெல்லென மரங்களின் இடையே ஒட்டி நின்று தமது சலசலப்பிற்கு அஞ்சித் தலைமறைவாகி விடுவார்களே என்று நினைத்து சத்தமின்றி சின்னவர்கள் விளை ஆடலில் (வளரச் செய்யும் ஆட்டம்) மதிமயங்கி நின்றனர்.

திடீரென "மாடு! என்ற ஒரு சத்தம் கேட்டது. சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்த மாடு தன் நாமம் பிரயோகப்படுத்தப்பட்ட சூழ்நிலையை உற்றுநோக்கியது. இரு குழுக்களாகப் பிரிந்த சிறுவர்கள் ஒரு குழுவிடம்

பந்தைப் பறிகொடுத்த சிறுமியை வைத வார்த்தையே தன் சிறப்புப் பெயரென அறிந்து மனம் வருந்தியது அந்த மாடு. அடுத்த ஒரு நிமிடத்தில்"

"ஏய் குரங்கு! எதுக்கு இந்தக் கண்ணாடிப்புடையனிடம் பந்தை எறிந்தாய்?"

திடுக்கிட்ட பாம்பு ஒற்றுமையாய் நாம் இங்கு இணைந்திருக் கின்றோம். இந்த அழகான மனிதர்கள் அதுவும் சிறுவர்கள் எதற்காக எங்களை இப்படி அநாவசியமாகத் திட்டுகிறார்கள் என்று நினைத்த போது அருகில் நின்ற குரங்கும் கண்களிலிருந்த கண்ணீரை வாய் மூடி வடித்தது. மீண்டும்

"இந்தப் பன்றியை விளையாட்டில் சேர்க்கக் கூடாது. நன்றாய் வந்து வாய்த்ததே எங்கள் குழுவில் நா...ய்.... "

கவலையில் மனம் வருந்திய விலங்குகள். நான்கு திசைக்கும் சுற்றி வளைத்து சிறுவர்களைக் குழுமிக் கொண்டன. நடுநடுங்கிய சிறுவர்கள். அச்சத்துடன் சிலையாய் நின்றனர். நடுவே குதித்த மாடு.

"அம்மா...." என்று அழைத்த வண்ணம்

"உங்களைப் போலவே பெற்றவளைப் பாசத்துடன் அம்மா என்றழைக்கும் நாங்கள், நீங்கள் கைப்பந்து கால்ப்பந்து உருட்டி விளையாட தேவையான நிறை உணவுப் பாலை எனது கன்றுக்கும் கொடுக்காமல் உங்களுக்குத் தருகின்றோம். இல்லை... இல்லை என்னைக் கேட்காமலே பெற்றுக் கொள்ளுகின்றீர்கள். மனம் வருந்தாமலே உங்களுக்குத் தருகின்றேன். நான் உங்களுக்குக் கேவலமாய்த் தோன்றும் ஒரு பிராணியா? சொல்லுங்கள் பிள்ளைகளே. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ வீர விளையாட்டு என்று

சொல்லி, எங்களைத் துன்புறுத்துகின்றீர்கள். உங்களுக்கு உடனே இரும்புச்சத்து, புரதம் கிடைக்க வேண்டும் என்பதற்காக எங்கள் வாழ்நாள் முடிவதற்குள்ளேயே அநியாயமாக எங்களைக் கொன்று உண்டு மகிழுகின்றீர்கள். ஏர் பூட்டி உழவு செய்கின்ற போது எங்களால், உங்கள் உணவுக்கு உதவி செய்ய முடிகிறதே என்று உழவுத் தொழிலுக்குத் துணையாக இருக்கின்றோம். என்றாவது ஒருநாள் உழவு செய்ய முடியாது என்று பகிஷ்கரித்திருக்கின்றோமா? உங்களுக்குத் தெரியுமா! நிலநடுக்கம் வரப் போகிறது, பெரும் வெள்ளம் வரப் போகிறது என்று முன்னமே அறிந்து நாம், எங்களைப் பாதுகாப்பது போல் உங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றோம். இத்தனையும் செய்கின்ற போது எம்மை வாழ்த்திச் சொல்லா விட்டாலும் வசைச் சொல்லுக்கு எங்கள் பெயரை உச்சரிக்காதீர்கள் "

என்று மாடு சொல்லிக் கொண்டிருக்கும் போதே பொறுக்க முடியாத நாயும் குறுக்கிட்டு

"வீட்டிற்குக் காவல், மோப்பத்திற்குத் துணை, காவல் நிலையத்தின் வீரன். உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பொருள். ஏன்! இருதய நோயாளிக்கும் துணை என உங்கள் இனத்திற்குத் தொண்டு புரியும் நாங்கள், உங்களுக்குக் கேவலமா? என்று நாயார் தன் திறமைகளை நயமாய் உரைக்க"

"இஸ்... என்ற சத்தத்துடன் அழகான படமெடுத்து வளைந்து வளைந்து ஆடித் தன் திறமைகளை வெளிக்காட்டிய பாம்பும்"

"எங்கள் தோலைப் பயன்படுத்தும் மனிதக் குழந்தைகளே! எங்களைத் தீண்டியவர்களைத் தற்காப்புக்காகத் தீண்டுவோமே தவிர வேறு யாரையும் நாம் வேண்டுமென்றே தீண்டியதில்லை. இந்தப் பெருந்தன்மை படைத்த எங்களையும் உங்கள் வசைச் சொற்களுக்குள்

அடக்கி விட்டீர்களே. உங்கள் காலுக்குள் கிடப்பவர்கள் நாங்கள், என்ன செய்வது மனதில் என் வார்த்தைகளைப் பதித்துக் கொள்ளுங்கள்."

பாம்பு பதுங்கிக் கொள்ளப் பாய்ந்தது குரங்கு. தன் இரு கைகளாலும் நெஞ்சில் அடித்த வண்ணம் துள்ளித் துள்ளிப் பல சாகசங்கள் காட்டி பற்களைக் காட்டிச் சிரித்த வண்ணம்

"என் தலைமுறையே! உங்கள் மூதாதையர் யாரென்று உணரீரோ! இராமனுக்குத் துணைப்போனதும் எம்மினமே. என்பதை அறிவீரோ என்றைக்கு நாம் உங்களைத் துன்புறுத்தினோம்? எங்கள் இனத்தின் வளர்ச்சியில் பூரித்துப் போயிருக்கும் எங்களை உங்கள் கோபத்தின் துணைச் சொல்லாய்ப் பயன்படுத்தி விடுகின்றீர்களே! உணர்ந்து கொள்ளுங்கள். இன்று முதல் எங்களைக் கேவலமாய் எண்ணும் உங்கள் அற்பப் புத்தியை பூண்டோடு அழித்துவிடுங்கள். Bye Bye என்று கூறி குரங்கும் அகன்றது."

தமிழில் மட்டுமல்ல. விலங்குகளிலே பாசமுள்ள ஜேர்மனியர் Blinde Kuh (குருட்டு மாடு) Schweine (பன்றி) Brillen Schlange (கண்ணாடிப்புடையன்) போன்ற பதங்களைக் கோபம் மிகும் போது பயன்படுத்துகின்றார்கள். மிருகங்களும் படைப்பின் ஒரு வடிவங்களே. அவற்றிற்கும் பாசம், அன்பு, கோபம் போன்ற அனைத்து உணர்வுகளும் இருக்கின்றன. அவற்றையும் ஆதரிப்போம். அன்புள்ளவர்களாக வாழ எமது சிறார்களுக்கு அறிவுரை கூறுவோம்.

வாழ்க்கைப் பாடம்

சாளரத்தினூடு தன் பார்வையைச் செலுத்தியவாறே அருகே அமர்ந்திருந்த சௌம்யாவின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் கன்னத்தை ஈரமாக்கியிருப்பதை அறிந்த அவள் தாய் வித்யா, அவளை அணுகி பனி படர்ந்த அழகைக் கண்ட ஆனந்தக் கண்ணீரா? இல்லை ஆழமான இதயம் அழுகின்ற நீரோட்டமா? என்று மனதில் நினைத்தவளாய் தன் மகளைக் கட்டி அணைத்தான்.



"விடுங்கோ அம்மா!"

என்று சௌம்யா தாயாரைத் தள்ளிவிட்டாள். நான்தான் ஏதும் குற்றம் செய்துவிட்டேனோ! என்று

மனதில் நினைத்தவளாய் அவளைச் சீண்டிப்பார்த்தாள். அவளும் சீறினாள். இது விளையாட்டு இல்லை. அவள் மனதால் அழுகின்றாள். என்று புரிந்து கொண்டாள்.

"சௌம்யா அம்மா ஏதாவது பிழை செய்தேனா? இல்லை உனக்கு வேறு ஏதாவது பிரச்சினையா? எதுவாக இருந்தாலும் சொல். அம்மாவைத் தவிர ஒரு பெண்ணுக்கு வேறு யாரும் சரியான வழியைக் காட்டமுடியாது. அழுவதால் எந்தப் பிரச்சினையும் தீரப் போவதில்லை. எதுவாக இருந்தாலும் சொல்" என்றாள்."

"அம்மா என்னுடைய Friend லாராவிடம் எனக்குக் கணிதப் பாடத்தில் குறைவான புள்ளி கிடைத்ததைச் சொல்லிக் கவலைப்பட்டேன். அவளும் அனுதாபமாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு பிறகு 5,6 பிள்ளைகளிடம் அதைப் போய்ச் சொல்லி நக்கலடித்துக் கதைக்கின்றாள். அவள் என்னுடைய Best Friend என்று இவ்வளவு நாளும் நினைத்தேன் அம்மா"

என்று கூறி விம்மி விம்மி அழுதாள்.

பெரியவர்கள்தான் இப்படி என்றால் இந்தச் சிறியவர்களும் இப்படியா? என்று மனதில் நினைத்த வித்யா, மகளை அணைத்தபடி,

"இங்கே பார்! பூமியெங்கும் கொட்டிக் கிடக்கிறது வெள்ளைப் பனி உன் வார்த்தைகளைப் போல அழகாகக் காட்சியளிக்கின்றது. ஆனால், அழுக்குகளும் குப்பைகளும் நிறைந்த பூமியின் மேல் மாசற்ற தன் வெண்பஞ்சுத் தோற்றத்தை வெளிப்படுத்தி அழுக்குகளை மறைத்துக் கிடக்கின்றது. அதுபோலவே நீ நல்லவர்கள் என்று நினைக்கும் மனிதர்கள், மனதுக்குள் எத்தனை அழுக்குகளை வைத்திருக்கின்றார்கள் என்று யாருக்குத் தெரியும். பனி படர்ந்த

பூமியில் பனியை விலக்கி நல்ல நிலத்தை அறிதல் போல நல்லவர்கள் யாரென்று அறிந்தல்லவா நட்பைத் தேடிக் கொள்ள வேண்டும். யாவரும் வெள்ளை உள்ளம் கொண்டவர்கள் போலவே தெரிவார்கள். நூல்கள் பல வெளியிட்டிருப்பார்கள். அதில் பல நல்ல அறிவுரைகள் கூறியிருப்பார்கள். ஆனால், கேவலமான பல காரியங்களைச் செய்வார்கள். மேடையேறிப்பேசுவார்கள். ஆனால், தம்வாழ்க்கையில் பல குப்பைகளை வைத்திருப்பார்கள். அதனாலேயே சிலருடன் புளியம்பழம் போல் ஒட்டியும் ஒட்டாமலும் வாழவேண்டும் என்பார்கள். எதையும் எண்ணி அலட்டிக் கொள்ளாதே."

"வாய்விட்டுப் பேசினால், அலட்டுகின்றாள் என்பார்கள், தேடிப் பழகினால், வேறு ஆளில்லை என்னைத் தேடி வருகின்றாள் என்பார்கள். ஒதுங்கிப் பழகினால், லெவல் அடிக்கின்றாள் என்பார்கள். யதார்த்தம் உரைத்தால் படித்த பெருமையில் பேசுகின்றாள் இல்லையென்றால் வித்துவச்செருக்கு என்பார்கள். இவளுக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணம் கொண்டவள் என்பார்கள். உதவி செய்வார்கள் அதனால், உயர்ந்துவிட்டால், என்னால் உயர்ந்துவிட்டுப் பெருமை காட்டுகின்றாள் என்பார்கள். எழுதிக் கொட்டினால், இவளுக்கு வேற வேலை இல்லை என்பார்கள். அதனால், மனதை அறியும் கருவி கண்டு பிடிக்கும் வரை மனித வாழ்க்கையை அவதானமாகத்தான் வாழவேண்டும்"

"இல்லை அம்மா! அப்படி ஒரு கருவி இருந்தால், மனிதன் நிம்மதியாக வாழவே முடியாது. அதனால், அந்தக் கருவி கண்டுபிடிக்கக் கூடாது. வேறு இனமாக வாழவேண்டும் என்றாள் சௌம்யா."

"பிறந்துவிட்டால், அந்தப் பிறப்பின் இறுதி வரை வாழ்ந்து தான் முடிக்க வேண்டும். ஏன் மனித இனத்தில் மட்டுமே இவ்வாறான

குணமுள்ளவர்கள் இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றாயா? விலங்குகளில் இல்லையா? கொம்பைக் கொண்டு மாடு ஏன் படைக்கப்படுகின்றது? தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகவே. நன்றியுள்ளது நாய். ஆனால், தன் உணவை உண்ண வருகின்ற பிற நாய்களைத் துரத்திவிடுமே. தம்மைப் பாதுகாக்க பிற உயிரினங்கள் ஆயுதங்களுடனேயே பிறக்கின்றன. கடலுக்குள் வாழுகின்ற உயிரினங்களைப் பார். சில மீன்கள் ஒரு வகையான வாயுவை வெளியகற்றுகின்றன. இது எப்போதும் எதிரியைக் குறி பார்த்தே வாழும்."

"சில மீன்கள் வாளுடன் வாழுகின்றன. சில மீன்கள் ஒருவிதமான பசையைக் கக்கும் இதன் மூலம் வேற்று மீன்கள் இப்பசையில் ஒட்டிக் கொள்ளும். இப்படித்தான் வாழ்க்கை முழுவதும் போராட்டம். மனிதனும் மிருகங்களும் போராடியே வாழ வேண்டும். ஏன் எத்தனை செல்களுடன் போராடி முன்னிலைக்கு வந்து எனக்கு நீ மகளாகப் பிறந்திருக்கின்றாய்"

"அப்படியென்றால், என்னதான் செய்வது அம்மா! என்று வினா எழுப்பினாள் சௌம்யா."

"வெள்ளைக் கடதாசியாய் வாழாதே. உன்னில் பல கிறுக்கல்களைக் கீறிவிடுவார்கள். துன்பமோ இன்பமோ அநுபவித்துப் பார். சோர்ந்து கண்ணீர் விட்டால், வாழ்க்கையை வாழவே முடியாது. இதுவே வாழ்க்கை என்ற எண்ணத்தைத் திடகாத்திரமாகக் கொள். பழிப்பவரை எதிர்த்து நில். சட்டை செய்யாதே. உன் எதிர்கால வாழ்க்கையே உன் இலட்சியமாகக் கொள். சுயநலவாதியாய் இரு."

இதைத்தான் வள்ளுவரும்

"தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்"

என்று கூறியிருக்கின்றார். "சுயநலமுள்ளவன் பிறர்க்குத் தீமை செய்யமாட்டான். ஏனென்றால், அது தன்னைப் பாதிக்கும் என்ற காரணத்தை மனதில் கொள்வதனால் மனதைத் தீவினை பால் செலுத்தமாட்டான். உன்னை நீ நேசிக்கப் பழகிக்கொள். உன்னை வளர்த்துக் கொள். இடையில் வருகின்ற இடைஞ்சல்களை எடுத்தெறிந்துவிட்டு நிமிர்ந்து நில். மற்றவர்கள் தருகின்ற நிந்தைக்கு உன் கண்ணில் இருக்கும் கண்ணீர் வீணாகக் கூடாது. நெஞ்சை நிமிர்த்திக் கொள். உன் மனதுக்கு நியாயம் என்று படுவதை எதிர்த்து நின்று கேட்கத் தயங்காதே. சட்டென்று பேசி நியாயம் காண். சிந்தித்துக் கோழையானால், உன்னை ஏறி மிதித்து மேலே போய்க் கொண்டே இருப்பார்கள். நல்ல மனிதர்களைக் காண்பதும் அரிது. அவர்களுடன் பழகுவதும் அரிது. உலகத்தில் எல்லோருக்கும் நல்லவளாய் வாழ உன்னால் முடியாது. நல்ல மனிதர்களைக் கண்டுபிடிக்கவும் உன்னால் முடியாது. அதனால், உன் மனதுக்குச் சரி என்று படும் விடயங்களை மட்டுமே செய். சந்தேகம் ஏற்பட்டால் சரியா என்று மறு பரிசீலனை செய்து பார்த்து திருத்திக் கொள். இப்போது எழுந்து வா சுத்தக் காற்றைச் சுவாசிக்க கால் ஆற மரங்கள் அடர்ந்திருக்கும் பகுதியில் நடந்து வருவோம். காதுக்குள் மெல்லிய இசையைக் கேட்போம். இல்லை குருவிகளின் ரீங்காரத்தை ருசிப்போம். மரங்களின் சல்லாபத்தை ரசிப்போம். இயற்கையின் அற்புதத்தைக் காண்போம்"

என்று நீண்ட பிரச்சாரம் செய்து முடித்தாள் வித்யா. எழுந்த சௌம்யா

"அம்ம்ம்மா....." என்ற வண்ணம் அவளை இறுக்கிப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

"அப்படி என்றால் இந்த மிருகங்கள், மீன்கள் எல்லாவற்றிற்கும் பாதுகாப்புக் கருவிகளை யார் படைத்தார்கள் அம்மா? சௌம்யா அடுத்த கேள்வியைத் தொடுத்தாள். தாய்க்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கின்றது என்று மனதில் நினைத்தபடி"

"அது ஒரு பெரிய Chapter. அவை ஒன்றும் படைக்கப்படவில்லை. தேவை கருதி மெல்ல மெல்ல வளர்ந்தன. மனிதனுக்கு வால் இல்லாது போனது போலவேதான் நடந்தது. இது பற்றி இன்னும் ஒருநாள் விளக்கமாக விளக்குகின்றேன்" என்ற படி தன் மகளின் கவலை தீர்த்த நிம்மதிப் பெருமூச்சுடன் எழுந்தாள் வித்யா.

வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்

உடல் உழைப்புக்கு ஒத்தடம் போடும் படுக்கை. உன்னைக் காத்து விரிந்துள்ளேனென்று வித்யாவிற்கு அழைப்பு விடுத்தது. தொப்பென்று படுக்கையில் விழுந்தாள். இறுக்கக் கண்களை மூடினாள். உடலும் விழியும் அவளுக்கு ஒன்றாக நன்றி கூறின. அவள் உத்தரவு போட்டு அவள் கண்கள் உறங்கி நீண்ட நாட்களாயின. மூடிய கண்களை மெல்லத் திறந்தாள். என்றுமே தன்னோடு ஒட்டிக் கொண்டிருக்கும். அந்த வெள்ளை அங்கி அவளுக்கு அச்சுறுத்தலாகவும் ஆதரவாகவும் அவளைப் பார்த்தது. ஆடைப் பையில் ஒளிந்து கொள்ளும் அந்த வட்டத் தலைக் கெட்டிக்காரன், தலையை மட்டும் வெளியே தொங்கப் போட்டிருந்தான். எத்தனை இதயத் துடிப்புக்களை, இதுவரை இதனோடு இணைந்து இவள் கணக்கிட்டிருப்பாள். ஆனால், இவள் இதயத்தின்

வலிக்கு தைலமிட்டுத் துணைவர துணைவர் யாருமில்லை. அருகே இருந்த நாட்காட்டியில் கண்கள் பதிந்தன. அதுவும் 30 வருடங்கள் அவள் வாழ்ந்த வாழ்க்கையை அத்தாட்சிப்படுத்தியது. நோயாளர் களுக்கு அவள் தெய்வம், அறிவு அவளோடு அளவுகடந்து சொந்தம் கொண்டாடியது. பொறுமைக்கு அவள் இலக்கணம் அதனால்த் தானோ வதுவையும் வணங்கி விடைபெற்றது.

ஆழ்ந்த உறக்கத்தில் ஆடை மாற்றாமல் அசதியாய் தூங்கிப் போனவளை வாசல் அழைப்புமணி திடுக்கிட்டு எழச் செய்தது. நேரத்தைப் பார்த்தாள். 12 மணி காட்டியது. எழுந்து சென்று சாளரத்தினூ டாகத் தன் பார்வையைச் செலுத்தினாள். அங்கு ஆடம்பரக் காரில் வந்திறங்கி, வாசல் கதவருகே அவள் பால்ய சிநேகிதி கையில் கேக் உடன் காத்திருந்தாள். ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்.

"பிறந்தநாள் வாழ்த்துக்கள் வித்யா பிறந்தநாள் வாழ்த்துக்கள்"

நாளைக்கு உனக்கு Full day Duty. அம்மாவப் பார்க்க ஆஸ்பத்திரிக்குத் தான் வரவேண்டும். அதனால் இன்றைக்கு உன்னப் பார்க்க வந்தேன். உனது பிறந்த நாளுக்கு வாழ்த்துச் சொல்ல வந்தேன். என்று கூறியபடி கையிலிருந்த கேக்கை அவளிடம் கொடுத்தாள்.

"கேக்கை வெட்டுடீ 30 வயசாகிற்று மகாராணிக்கு" என்று கட்டளை போட்டாள் விவிதா.

Ausbildung (பல்கலைக்கழகம் செல்லாது, ஏதாவது ஒரு வேலைக் கான கல்வியைக் கற்றல்) முடித்து சிறப்பான ஒரு தொழிலில் இணைந்து கை நிறையப் பணமும், கண்ணிறைந்த கணவனும், கலகலப்பான இரண்டு பிள்ளைச் செல்வங்களும் பெற்று ஒரு பூரண வாழ்வு வாழ்பவள் தான், அவள்.

கேக் வெட்டப்பட்டாயிற்று. தனது நண்பியின் வாயில் ஒரு துண்டை வைத்தாள்.

"தாங்ஸ்டி. நானே என்ர பிறந்தநாள மறந்திட்டன். நாளைக்கு அம்மா ரெலிபோன் அடித்தால்த்தான் ஞாபகம் வரும். நான் என்ன பேஸ்புக் வைத்திருக்கிறனா! ஊரெல்லாம் என் புரொபிள்ல கூப்பிட்டு பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல. இதுக்கெல்லாம் எங்க நேரம் வரப் போகுது. அதுவும் சிலருக்குச் சந்தோசம் தான் என்னடி?" என்றாள் வித்யா.

"இதெல்லாம் என்ன சொந்தமா? ஒட்டிக் கொள்ளும் உறவா. இதெல்லாம் ஒன்றுமில்ல. சும்மா பொழுதுபோக்கு. நண்பர்கள் மாதிரித் தெரியும் நண்பர்கள் இல்ல. கரிசனை மாதிரிக் காட்டுவார்கள். கரிசனை இல்ல. போகிற பாதையில் காண்ற காட்சிகள் மாதிரித்தான் வித்யா. தேவைக்குப் பிரயோசனப்படுத்த வேண்டியதுதான். பொழுது போகல்லயா... இந்த பேஸ்புக்க தோண்ட வேண்டியது. நல்ல கொமண்ட போட வேண்டியது. இதனால பிரயோசனப்படுபவர்கள் பிரயோசனப்படட்டும். வெட்டியா வாழ்பவர்கள் சீரழிந்து போகட்டும். என்னைப் பொறுத்த வரையில அவரவர் பயன்படுத்திறதைப் பொறுத்துத்தான் எந்தப் பொருளும் அமையும். வாழ்க்கையும் கூட அப்படித்தான். எமக்கு எது அவசியமோ அதைத்தான் நாம தேடிப் போக வேண்டும்" என்ற விவிதா. தொடர்ந்தாள்.

"உனக்கு வயதோ 30. இப்படி எத்தனை காலம் வாழப் போகின்றாய். வாழ்க்கை ஒரு முறைதான். அதுவும் வாழத்தான். பெற்றவர் மன விருப்பப்படி மருத்துவத்துறை பயின்றாய். உன் தரத்திற்கு ஒருவரைத் தேடித்தேடி உனது பெற்றோரும் ஓய்ந்து விட்டனர். இப்படி எத்தனை காலம் வாழப் போகின்றாய். உனக்காக நீ வாழ்வது எப்போது?"

தோழியின் வார்த்தைகளின் அனுதாபம், அவள் வாய்ப்பூட்டை உடைத்தது.

"16 வயதில் நான் Ausbildung செய்யப் போயிருந்தேனேயானால், இன்று நானும் உன்னைப்போல் சிறப்பாய் வாழ்ந்திருப்பேன். 7 வருடங்கள் பல்கலைக்கழகத்தில் பயின்றும் என்ன பலனைக் கண்டேன். பருவத்தை இழந்தேன். படிப்புக்கு ஏற்ற பணப்புழக்கமும் அற்ற நிலையில் அல்லவா இன்று நான் வாழ்றன். காதலுக்குப் பச்சைக் கொடியை எனது பெற்றோர் காட்டுகின்ற இப்போது நான் அந்தப் பருவத்தை இழந்து விட்டேன். காதல் என் பெற்றோருக்கு அப்போ கசத்தது. இப்போ இனிக்குது. ஆனால், நானோ அதைப் பற்றிச் சிந்திக்கும் நேரமற்ற சிறைப்பட்சி. நாள்கள் மலர்வதும் மறைவதும் என் எண்ணத்தில் இடம் பிடிக்காமலே நடைபெறுகின்றன. நான் கண் அயர்ந்தால், என் கவலையீனத்திற்குப் பழியாவது ஆருயிர்கள்"

வித்யாவின் விரக்தியான பேச்சுக்கு இடங் கெடுக்காத அவள் தோழியும்

"வித்யா உன்னால பல உயிர்கள் வாழுகின்றன. ஆண்டவனுக்கு அடுத்தபடியான தொழிலில் நீ ஈடுபட்டிருக்கின்றாய். உன் திறமைக்குப் பொருத்தமானதும் இந்தத் தொழிலேதான் " என்றாள்.

"நீ சொல்ர இந்த வார்த்தைகள் எனக்கு விசிறியாகலாம். நிரந்தரத் தீர்வாகாது. எனது பிடித்த துறையை ஒறுத்து இதை ஏற்றும், ஏற்ற வருமானமோ, ஏற்ற வாழ்வோ எதுவும் அற்று வாழவேண்டிய வயதில் வாழ்க்கையைச் சுவைக்க முடியாது வாழும் என்னைப் போன்ற பெண்களைப் பெற்றவர்கள், சிந்திக்க வேண்டியது. ஆசாபாசங்கள் எல்லோருக்கும் உண்டு. வாழ்க்கை வாழ்வதற்கே. சென்ற நாள்கள் திரும்பி வருவதும் இல்லை, நிலையாய் நிற்பதும் இல்லை. பெற்றோர்

திணிப்புக்களை பிள்ளைகளுக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். உலக அறிவு பிள்ளைகளுக்கும் உண்டு என்று நெஞ்சில் நினைக்க வேண்டும்" என்று கூறி ஓரக்கண்ணில் வடியும் கண்ணீரைச் சுண்டு விரலால் சுண்டி விட்டாள் வித்யா.

"சரி சரி விடு பிறந்தநாள் அதுவுமா இந்தக் கதை எதுக்கு. படிக்கிற காலத்தில எத்தனை சந்தர்ப்பங்கள் உனக்கு வந்தது. நீதான் அப்பாக்குக் கெட்ட பெயர். அம்மா பார்ப்பா என்றெல்லாம் கதை அளந்தா. இப்ப அத விட்டுப்போட்டு. நடக்கிற காரியத்தப் பார். உனக்கென்று ஒரு சூர்யா வராமலாவிடப் போறான். இந்த வருஷம் பார் உன்ர கல்யாணத்துக்கு நான் எனக்கு சாரி (Saree) தேடவேணும். உன்ர கண்ணில ஒரு ஹீரோ நிச்சயமாத் தென்படுவான் " என்று சமாளித்தாள் விவிதா.

"போடிபோ உன்ர கதை. இப்பெல்லாம் யாரும் பெடியனக் கண்டால் காதல் வர மாட்டன் என்கிறது. அவன்ட ஸ்ரேரஸ் என்ன? அவன்ட தோற்றம் என்ன? அவன்ட குடும்பம் எப்பிடி என்றெல்லாம் மனம் பார்க்கச் சொல்லுது. சும்மா சூர்யா, ஜீவா என்றெல்லாம் கதைவிடாத. காதலும் ஒரு வயசில தான் வரும்டி. அத நான் கடந்திட்டன். இப்ப அதுக்கெல்லாம் நேரமும் இல்ல. வருத்தக்காரரோட பழகிப் பழகி வாழ்க்கையே வெறுத்துப் போகுது. இந்த வேலையெல்லாம் தியாகிகளுக்குரியது. சும்மா அம்மா சொன்னா, ஆத்தா சொன்னா என்று அவர்கள் விருப்பத்துக்கு எல்லாம் படிக்க வெளிக்கிட்டா. பிள்ளைகள்ட வாழ்க்கைதான் பாழாப் போகும். கடைசியில ஒன்றும் கிடைக்காம. கிடைக்கிறத கட்டிக்க என்று கெஞ்சிக் கொண்டு வருவாங்க. என்னப் பொறுத்தவர பெற்றோருக்காகப் பிள்ளைகள் படிக்கிற எங்கட சனத்திட இந்த கலாசாரத்தை மாத்த வேணும். நான் இப்ப எல்லாப் பிள்ளைகளிட்டயும் அப்பிடித்தான் அறிவுரை சொல்றனான். ஏன்டி அது என்ர அனுபவமும் தானே"

சூடான கோப்பியின் ஆவியைப் பறக்கவிட்டு இருவரும் பேசிய பேச்சில் உண்மையின் தத்துவங்கள் வாயிலிருந்து பறந்தன. வித்யா ஸ்ரேரஸ் பார்த்து திருமணம் இனிமேல் செய்ய முடியாது என்பதை மனதாரப் புரிந்து கொண்ட விவிதா, அவளுக்கு ஏற்ற ஆனால், அவளின் தகுதிக்குக் குறைந்த மணமகனையாவது அவளுக்கு மணம் முடித்து வைக்காவிட்டால் மனநோயாளியாகி விடுவாள் என்பதைப் புரிந்து கொண்டு அவளிடமிருந்து விடைபெற்றாள்.

மொழிக்கலப்பு

கூடலையாய் ஓங்கியும் குறைந்தும் ஓயாது கட்டிடத் தூண்களில் பட்டுத் தெறித்த கரங்கள் இசைத்த தாளக் கச்சேரியில் கண்களில் துளிர்த்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்த வண்ணம் மேடைக்கு வந்தான், சுப்பிரமணியன். துக்கம் மிகும்போது மட்டுமன்றி மகிழ்ச்சி பீரிடும் போதும், வலியின் தாக்கத்தின் போதும் இதயம் முதலில் செய்தி சொல்வது, கண்களுக்குத்தான். உடனே கண்களும் தான் அறிந்த செய்தியை வெளிப்படுத்தி விடும் வாயாகிவிடும்.

இப்போது சுப்பிரமணியன் என்னும் பெயர் இந்துக்கடவுளின் பெயர் என்பது ஐரோப்பியர்கள் நன்கு அறிந்திருந்தனர். அறியச் செய்ததும் அவனில் கொண்ட அபிமானமே. அவனுக்குப் பொன்னாடை போர்த்தவில்லை. ஏனென்றால், இது ஐரோப்பிய அரங்கு. பொன்

னாடைக்கு எங்கே இப்போது புளகாங்கிதம். புகழ் இழந்த போர்வை அல்லவா அது. இரவல் கவிதையில் புகழ் தேடும் கவிஞர்கள் மார்பில், தலைகுனிந்தல்லவா நிற்கின்றது. ஸ்குவிட் என்னும் கடற் பிராணி தன் மேனியில் ஒரு வெளிச்சத்தைக் கொண்டு கடலடியில் திரியுமாம். அதுபோலவே தமது புகழைத் தாமே பரப்பச் செலவு செய்யும் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டதல்லவா இந்நாடு. இவர்களுக்கு மத்தியில் தமிழனாய்த் தமிழிசை மூலம் தமிழை ஐரோப்பியர் புரட்டிப் பார்க்க இசை என்னும் மின்சாரத்தைப் பாய்ச்சியவன், சுப்பிரமணியன். அவன் பாடியது வேற்று மொழிப் பாட்டாக இருந்தாலும் அதில் அரைப்பகுதி தாய் மொழியைக் கரைத்து விட்டான். மொழிக்காப்பாளர் முறைத்தனர். கண்டித்தனர். ஆனால், இன்று உலக அரங்கில் அவன் பாடல் அரங்கேறியபோது உலகம் விழித்தது. அனைத்து இசை கேட்கும் இளையவர்கள் காதுகளில் எல்லாம் காற்றுடன் கலந்து தாலாட்டியது. வாய்களில் எல்லாம் நாவுடன் கலந்து நடனம் புரிந்தது.

உலக அரங்கிலே 2010 ம் ஆண்டிற்கான சிறந்த பாடகன் என்னும் நினைவுச் சின்னம் ஒரு தமிழனின் கரங்களுக்குக் கிடைத்த பெருமையில் கைகளில் தன் இலட்சியப் பரிசை அடக்கமாய்த் தாங்கினான். கைகளில் தொலைவாங்கி தரப்பட்டது. அது சிலர் கைகளில் புதைந்து விட்டால். அடுத்தவர் நேரத்தையும் சலிப்பையும் சேர்த்தே வாங்கிவிடும். அதைப் பறித்தே எடுக்க வேண்டிய சூழ்நிலை பல தமிழ் மேடைகளில் பழக்கமாய்ப் போய்விட்டது. ஆனால், சுப்பிரமணியனோ பரந்த கடலின் நடுவே கப்பலினுள் இருந்த வண்ணம் கரையில் தொலைத்த ஊட்டச்சத்தைத் தேடிக் கொண்டிருப்பவன் போல் கண்களால் வலைவிரித்தான். அவன் கண்கள் ஏக்கத்தையும் சேர்த்தே கண்ணீர் முத்துக்களைச் சொரிந்து கொண்டிருந்தது.

"என் தந்தை எனக்குத் தந்தது. இசை பயிலப் பணம். என் தாய் எனக்குத் தந்தது, ஒத்தழைப்பு. ஆனால். இசைக்கு உரம் போட்டு. அந்நியர் உன் குரல் கேட்டுத் தம்நிலை மறக்க வேண்டும். தமிழின் இனிமை உன் குரல் மூலம் அவர் நாடி நரம்புகளை ஊடறுத்துச் செல்லவேண்டும். தாய்மொழிச் சொற்கள் அந்நியமொழிச் சொற் களுடன் சேரட்டும். தங்கத்துடன் செம்பைக் கலந்து பாவனைக்குக் கொண்டு வா. சாதனை வீரனாய்த் தங்கப் பதக்கம் தாங்கி வா என்று நாளும் எனக்கு ஊக்கம் தந்த மொழி ஆசிரியை இன்று எங்குள்ளாரோ? அவருக்கே இவ் அனைத்துப் புகழும். என்னால் முடியும் என்பதை உணர்த்தியவர் அவர் தானே"

என்று நன்றியறிதலை வள்ளுவப் பிரியனாய் உணர்த்திப் பாதங்களை இருப்பிடம் நோக்கி நகர்த்தினான்.

சாதனை வீரர்கள் உருவாகின்றார்கள். உருவாக்க உந்து சக்தியாக மறைவாக மாசற்ற மனத்துடன் இருப்பவர்கள் மறக்கப்படுகின்றார்கள். இதுவே இன்று மனித தர்மமாகப்படுகின்றது. இது ஒருபுறம் இருக்க, மொழிப்பற்றுப் பாடல்கள் பாடி எமது மொழிப் பெருமையை நாமே புகழ்ந்து கொண்டிருப்பதில்லை பெருமை. முதலில் வேற்று மொழிகளில் எல்லாம் தனது தடத்தை எமது மொழி பதிக்க வேண்டும். எத்தனை மொழிகளுக்குப் புகலிடம் கொடுத்தது எமது தமிழ்மொழி. இப்போது அது அடுத்தவர்களிடம் போய்ச் சேர்ந்து தனது அடையாளத்தைப் பதிப்பது மட்டுமல்ல. அவர்கள் நாவில் நர்த்தனமாடவும் வேண்டும். இதுவே இன்று அந்நியநாட்டிற்குப் படையெடுத்து வந்த தமிழர்களின் கடமையாக இருக்க வேண்டும்.

இம்மகவைப் பெற என்ன தவம் செய்தேன் என உள்ளம் மிக மகிழ்ந்தனர். பெற்றோர். கம்பீரமாய் மலர் செண்டைப் பெற்றாள். இசை ஆசிரியை. ஆனால், அவனை ஊக்கமென்னும் நீர்பாய்ச்சிய தமிழ் ஆசிரியை எங்கே!!!!

பழகிப்பார் பிடிக்கவில்லையா இருக்கிறது இன்னும் ஒன்று

"காலடிக்கும் கன்னாக்காரி நானிருக்கன் don't worry. உனக்கெதுக்கு அச்சம் அச்சம். ஆசைக்கள allow பண்ணு. அச்சங்கள deleat பண்ணு. போய் வரலாம் உச்சம் உச்சம்."

" இன்னும் கொஞ்சம் சத்தமாப் போடு. இன்னும் கொஞ்சம் சத்தமாப் போடு. என்ன இது கொஞ்சமும் உசார் இல்லாம இருக்கு"

சகுந்தலா வாகனத்துள் இருந்தவளாய். முன் இருக்கையில் அமர்ந்து இருக்கும் மகளிடம் பாட்டை சத்தமாய்ப் போடும்படி கரைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"பொறுங்கள் அம்மா. உங்கள் உசாருக்கெல்லாம் பாட்டுப் போட முடியாது. நவி (Navigation) யிட சத்தமும் கேட்குதில்ல. எங்க கொண்டு எங்கள கொல்லப் போறீங்களோ தெரியாது"

மகள் வசந்தி தனது காதலன் சபேஷின் அருகில் இருந்தபடி தாயை அதட்டினாள்.

"பேசாம இரும் சகு. சத்தம் கூட்டினால் நவிகேசன் சத்தம் சரியாக் கேட்காது " ருத்ராவின் வார்த்தைகளைக் கேட்டு

"இல்ல ருத்ரா. பாட்டு உசாரா இருந்தாத்தான் பிரயாண களைப்புத் தெரியாது "

"ஏன் நான் பக்கத்தில் இல்லையா? ருத்ரா சகுந்தலாவைக் கட்டி அணைத்தான்."

முன் இருக்கையில் மகள் வசந்தியும் அவள் காதலன் சபேசும் இருக்க, பின் இருக்கையில் சகுந்தலாவும் அவள் காதலன் ருத்ராவும் இருந்தபடி வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

"வீட்டில் அப்பா என்ன செய்றாரோ தெரியாது. ஒருக்கா டெலிபோன் எடுத்துப் பாருங்கோ அம்மா "

"சும்மா இருக்க மாட்டா.... தொடங்கிட்டியா..... கொஞ்சம் நிம்மதியா இருக்கலாம் என்றுதான் வந்தனான். திரும்பவும் அந்த மனிசன நினைவுபடுத்திறாய். அவர் ஒன்றும் செத்துக் கித்துப் போக மாட்டார். அந்த ஹார்ட் பேசண்ட்டோட என்ன கிடந்து சாகச் சொல்லாத"

"ஏன் அம்மா உங்களுக்குக் ஹார்ட் இல்லையா? உங்களுக்கு வருத்தம் வராதா?"

"இப்ப என்ன செய்யச் சொல்றாய். எனக்கும் வர வேணும் என்று விரும்புறியா? அந்த வருத்தக்காரனோட வீட்டிலேயே கிடக்க வேண்டும் என்றியா? ஆத்திரத்தில் கத்தினாள் சகுந்தலா."

"cool.... cool சகுந்தலா " என்றபடி அவளைச் சாந்தப்படுத்தினான் ருத்ரா.

பேரின்பம் அன்பாகவும் சிறப்பாகவும் மனைவி மகளுடன் வாழ்ந்தவர் தான். காலம் மனிதர் வாழ்வில் தானாகவே சேற்றை அள்ளிப் பூச நோயைக் கொண்டு வந்து சேர்த்துவிடும். நோய் வந்து விட்டால் வலி சினத்தைத் தருவதுதானே இயற்கை. பொறுத்து வாழக் கட்டிய தாலி அச்சப்படுத்திய காலம் கடந்துவிட்டது. வாழும் போது கட்டிய கணவனிடம் பெற்ற சுகம் அனைத்தும், அவன் துன்பப்படும் காலத்தில் மறந்து விடுவதுதான் இக்காலத்தின் நிகழ்வு என்பதாயிற்று. அவனைத் தூக்கி நிமிர்த்த மனம் ஒப்பவில்லையானாலும் வேறு ஒருவனை அணைக்க எப்படி மனம் வருகின்றதோ புரியவில்லை. ஆனால், சகுந்தலாக்கு அந்த மனம் இருக்கிறது.

வீட்டை விட்டு வெளியே போவதுதான் அவளுக்கு பாரிய இன்பம் அதுவும் ருத்ராவுடன் போவது என்றால் கொள்ளைப் பிரியம். சந்தி சிரிப்பது பற்றிய அச்சம் அவளுக்கு இல்லை. இருந்திருந்தால், தனது மகளை இப்படி வளர்த்திருப்பாளா?

எப்படி என்று கேட்கின்றீர்களா?

வசந்தி, சகுந்தலா பேரின்பம் பெற்றெடுத்த ஒரே பெண்பிள்ளை. கல்வி என்பது கொஞ்சம் முயற்சி எடுத்தால், பெற்றுக் கொள்வதற்கு ஐரோப்பிய நாடு வேண்டிய உதவிகளை வழங்கும். அதனால் வசந்தி நன்றாகப் படித்தாள். நல்ல தொழிலும் பெற்றாள். சமுதாயக் கட்டுப்பாடுகள், ஒழுக்க நெறிகள் அவளுக்கு புரியாத புதிர். வாழ்க்கை என்பது ஒருமுறைதான் அதை வாழ்ந்து முடிக்க எப்படியும் வாழலாம் என்னும் இலட்சியத்தை உடையவள். ஆனால், தந்தையில் பாசம் அதிகம் இருந்தாலும் தாயின் போக்கில் பிடிப்பு பற்றிக்கொண்டதற்கு காரணம் கேட்க முடியாது. பிள்ளையைத் தாய் சரியான முறையில் வளர்த்தெடுப்பாள் என்பதில் அதிக நம்பிக்கை கொண்டவர்தான்

பேரின்பம். அதனால், அவர்கள் இருவரும் பேரின்பத்திற்குச் செய்தது நம்பிக்கைத் துரோகம். அவருக்கு மட்டுமா!

"வசந்தி! உனக்கு கணவன் வேணுமென்றால், நான் சொல்வதைக் கேள். உன்ர ஆட்டத்திற்கு எல்லாம் ஆடவேண்டும் என்றால், இலங்கையில் இருந்து ஒருவனை இங்கே எடு. பழகிப் பார். அந்த நேரமே வேறு ஒருவனைத் தேடிப்பிடி. அவனோட பழகிப்பார். எது ஒத்து வருதோ அவனை கல்யாணம் செய். I mean இலங்கையில் இருந்து கூப்பிட்டவனை விட்டுப் போட்டு மற்றவனைக் கல்யாணம் செய். இது ஒன்றும் தவறில்ல. பிடித்தவனைத் தானே கல்யாணம் செய்ய வேணும். கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்று சொல்லியிருக்கின்றார்கள்" இவ்வாறே சகுந்தலா மகளுக்கு புத்தி சொல்லி வளர்த்தாள்.

தாய் சொல்லே மந்திரம் என்று நினைத்த வசந்தியும் ராம் ஐ இலங்கையில் இருந்து ஜேர்மனிக்கு இறக்குமதி செய்தாள். வந்தவனோ காதலி மனம் நிறையக் காதல் சுமந்தவள் என தப்புக் கணக்குப் போட்டான். அன்பாகத்தான் பழகினாள். அளவுக்கதிகமாகக் காதலைக் கொட்டினாள். மதி மயங்கி கண்கெட்ட காதலுக்கு ராமும் அடிமையாகினான். தன் உடலெங்கும் அவள் பெயரைப் பச்சை குத்தினான். அவள் இன்றி ஒரு மணிப் பொழுதைக் கூட அவனால் தாண்ட முடியவில்லை. ஆனால், வசந்தியோ ....

"இங்க பாருங்க ராம். உங்களை நான் இங்கே கூப்பிட்டு எடுத்தது. உங்களுக்கு நல்லதாப் போயிட்டுது. சும்மா உங்களால் இலங்கையில் இருந்து ஜேர்மனிக்கு வரமுடியாது. அந்த உதவியை நான் தான் உங்களுக்குத் தந்திருக்கிறேன். நீங்கள் இங்கே வேலை செய்யக் கூடிய அனைத்து வசதிகளும் இருக்கிறது. எனக்கு ராம்... உங்களை விட வேறு ஒரு பெடியனில் ஆசை ஏற்பட்டுவிட்டது. அவன் இங்கே

பிறந்துள்ளான். எனக்கு அவன் கூட வசதியாகத் தெரிகின்றான். அவனோட பழகிப் பார்க்கிறேன். பிடிக்கவில்லை என்றால் உங்களைத் திருமணம் செய்கிறேன். ok தானே.

"வாழ்க்கையை எப்படி இலகுவாக எடுக்கிறாய். நான் இங்கை வருவதற்காகவா உன்னோடு பழகினேன். நான் உன்னை என் உயிராக அல்லவா நினைத்தேன் "

"Stupid.... சேர்ந்து வாழ மனம் ஒத்துப் போக வேணும். எனக்கு உன்ன விட best தேவை" இப்படிக் கூறித் தான் வசந்தி, ராமை பிரிந்தாள்.

வசந்தியை மறக்க முடியாத வேதனை அவன் வாழ்க்கையை வெறுக்கச் செய்தது. சகுந்தலாவிடம் சொல்லி, வசந்தி மனதை மாற்றலாம் என்று கருதிய ராம், அவள் தாய் சகுந்தலாவிடம் முறையிட்டான்.

"ராம். இந்தக் காலத்துப் பிள்ளைகள் இப்படித்தான் தம்பி. வெள்ளைக்காரப் பிள்ளைகளப் பார் குறைந்தது ஒரு 30 பெடியங்களோட பழகித்தான், பிறகு ஒருவனைக் கல்யாணம் செய்வார்கள். நீர் வேண்டுமென்றால் வேற பெட்டைய பிடியும். ஆனால், கல்யாணம் கட்டிப் போடாதையும். வசந்தி இப்ப புதுப்பெடியனப் பிடித்திருக்கிறாள். உமக்குத் தெரியும்தானே. அவன் அவளுக்கு ஒத்து வரவில்லை என்றால், உம்மோடதான் வாழ்வாள் தம்பி"

"நல்ல தீர்ப்பு சொல்லியிருக்கிறீங்கள். கல்யாணம் என்பதும், காதல் என்பதும் உங்களுக்கு வியாபாரமாய் போய்விட்டது. நல்ல அம்மாவும், நல்ல மகளும் "

என்றபடி ஏக்கம் கொண்ட மனதுடன் நம்பிக்கை துரோகத்தையும் சுயநலத்தையும் எண்ணி கலங்கினான் ராம்.

வீட்டில் தாலி கட்டிய கணவன் தனித்திருக்கத் தன் காதலன் ருத்ராவுடன் தாய் சகுந்தலாவும், இலங்கையில் இருந்து திருமணம் செய்வதற்காக அழைத்தெடுத்த ராமைத் தவிக்க விட்டுத் தன் காதலனுடன் வசந்தியும் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டு டென்மார்க் நோக்கிப் பயணம் செய்தார்கள்.

சுரங்கள் சிந்துகின்றன

மண்டபம் விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது. பட்டாடையில் பெண்கள் பளபளத்தனர். அரங்கு அழகுக் கோலம் காட்டி நின்றது. அத்தனை பேரும் இசையை சுவாசிக்கும் இதயம் படைத்தவர்கள். முன் வரிசையில் சரஸ்வதி போல் வீற்றிருந்தாள். சுரதா. வண்ணப் பட்டாடையில் கட்டம் போட்ட துகில். அதில் இசைக் கருவிகளின் இலச்சினை. வாத்தியங்கள் அத்தனையும் வாரியெடுத்த தேகம். அவள் இதழ்களில் சுரங்கள் வாசம் செய்கின்றன. நாவில் சரஸ்வதி வீணையுடன் வந்து குடிகொண்டிருந்தாள். கச்சேரி களைகட்டியது. இதயங்கள் அத்தனையும் இசையில் சங்கமமாயின. ஆயினும், சுரதாவின் மனதில் ஏற்பட்ட இரணத்தின் வேதனை குறைந்தபாடில்லை. சில அதிகார வேட்கை கொண்ட புல்லுருவிகள் கூறிய வார்த்தைகள் மனதில் ஆழமாகப் பதியப்பட்டிருந்தன. சிறப்பு விருந்தினர் உரை வழங்க மேடைக்கு அழைக்கப்பட்டாள் சுரதா.

ஒலிவாங்கி கைகளில் தரப்பட்டது. வார்த்தைகள் சரமாரியாகப் பொழிந்தன.

"இசையால் வசமான இதயங்கள் அத்தனைக்கும் என் இதய பூர்வமான வணக்கங்கள். சிறப்பு விருந்தினராக மேடைக்கு என்னை அழைத்த போது அப்பெருமையை ஏற்றுக்கொள்ளும் சமுதாயத்தினிடையே தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேனா? என்பது கேள்விக்குறி." மனதில் பட்டதை பட்டென உரைக்கும் ஆளுமையையும் ஒருமைப்பாட்டையும் இந்த இசை எனக்குத் தந்துள்ளது. இசை கற்கும் போதே எமது உள்ளமும் தூய்மை ஆக்கப்படுகின்றது. இசைமீது பக்தியும் ஏற்படுகின்றது. "பெருக்கத்து வேண்டும் பணிவு" என்பது போல் இயல்பாகவே பணிவும் ஏற்பட்டு விடுகின்றது. தேன் தானும் கெடாது. தன்னைச் சேர்ந்தவரையும் கெடுக்காது. இவ்வாறுதான் இசைத்தேன், தன்னை இசைப்பவரையும் இன்புற வைத்து, அதை இரசிப்பவரையும் இன்புற வைக்கும் தன்மை கொண்டது. உலகம் அனைத்தும் இசை மயம். குயிலின் குரல், கடலலையின் ஓசை, நீரோடையின் சலசலப்பு, இவை எல்லாம் இயற்கை எமக்களிக்கும் இசைக்கச்சேரிகள். ஆனால், இலக்கண அமைப்புக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டவை அல்ல. கர்நாடக இசை, முறைப்படி சங்கீத இலக்கணங்களுக்கமைய வரையறுக்கப்பட்டுள்ளது. அதற்காக கர்நாடக இசை கற்றுவிட்டேன், என நான் ஒரு போதும் பெருமைப்பட்டதில்லை. அத்தனை அறிஞர்களும் அடிப்படை அறிவு கொண்டவர்களா? இல்லையா? என ஆராயாமலே இரசிப்பவள் யான். இசை ஒரு பொதுச்சொத்து. இதை இரசிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு. நான் தான் இசைஞானி, எனக்கு வாத்தியங்கள் வாசிப்பவர்கள் தான் இவர்கள் எனக் கலைஞர்களை அடிமைப்படுத்தி, எம்மை நாமே பெருமைப்படுத்திக் கொள்வது கீழ்த்தரமானதல்லவா? கலைஞர்களை

இகழ்ந்து மேடைகளில் முழக்கமிடுவது அநாகரிகமானது அல்லவா. சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் சாதகமாகப் பெருங்கலைஞர்களாக உருவெடுத்தவர்கள், அடிப்படை கர்நாடக இசை அறிவுமில்லாது. ஏனைய கலைஞர்கள் மனதைப் புண்படுத்தல் மன்னிக்க முடியாத குற்றம்.

" போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரித்
தூற்றுவார் தூற்றட்டும், தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன், எவர் வரினும் நில்லேன்! அஞ்சேன் "

மேலும் அனைத்து இசைப்படைப்பாளிகளும் உலகுக்கு இன்பம் தருபவர்கள். எனக்கூறி என் சிற்றுரையை முடித்துக் கொள்கின்றேன்" பார்வையாளர் கரகோஷம் ஓங்கி ஒலித்தது.

நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி தெளிந்த சிந்தையுடன் மெல்லென இருப்பிடம் நோக்கி நகர்ந்தாள். இரண்டு வாரங்கள் தன் மனையாளின் இதயத்திலிருந்த இரணங்களுக்கு இவ் அரங்கு மருந்திட்டது கண்டு, அவள் கணவன் அவள் கரங்களைத் தன் இரு கரங்களால் இறுகப் பற்றிக் கொண்டான்.

எங்கிருந்தோ வந்தான்



நிலைத்து நின்ற கண்கள், நிதானம் இழந்த உணர்வுகள், பேச்சிழந்த வாய், பித்துப் பிடித்ததுபோல் இருக்கையில் இருந்த சிவராம், மெல்லக் கால்களை அசைத்தார். அமைதியாக பூப்பஞ்சணையிலே மலர்ந்த முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்த அவர் மனைவி, ஓயாத அங்கங்களுக்கு ஓய்வு கொடுத்து மீளா உறக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தாள். கடமைகள் முடிந்தன. இனி வரும் காலங்கள் பெற்ற பிள்ளைகளானாலும் ஒட்டி உறவாட முடியுமா! எட்ட நின்றே இன்பங் கண்டுகளித்திருக்க அனுபவங்கள் ஆணையிட, யாருக்கும் சுமையாக காலம் தள்ளும் சுகம் வெறுத்து மீளா உறக்கம் கொண்டு அழகாகத் தூங்கினாள். அருகே வந்தவர் அவள் கரங்களைப் பற்றினார். ஓ... என்று வெடித்தது குரல், கண்களுக்குள் மறைந்திருந்த கண்ணீர் மேகம் உடைத்துக் கொண்டு கொட்டத் தொடங்கியது.

"உன்னை எங்கே நான் கூட்டிக் கொண்டு போகல்ல. எல்லா இடமும் ஒன்றாத்தானே போனோம். இப்ப மட்டும் தனியாப் போக எப்படி நினைச்சனீ. இந்தியாவிற்கு உன்னைக்கு கூட்டிக் கொண்டு போய்க் காட்ட வேண்டும் என்று தீராத ஆசை கொண்டிருந்தேனே.

ஐயோ... உன்னை அனுப்பிட்டு நான் ஏன் இஞ்ச... நிற்கிறன். நான் என்ன செய்வன்... "

வார்த்தைகள் அடங்கவில்லை. அருகே இருந்தவர்கள் அணைத்துக் கொண்டு வெளியே கொண்டு வந்தார்கள். தனது தொழில் நிறுவனத்தில் கூட மாற்றங்கள் வரும் போதெல்லாம் மந்திரிகளின் துணையுடன் மனைவியை விட்டுப் பிரியாது பிரிவின்றி ஒன்றாக வாழ்ந்த தம்பதியினர். இறப்பு ஒன்றுதான் அவர்களைப் பிரிக்கும் என்பது நியதி. அதுவே நடந்தது.

மனைவி தன் அரை உயிரைக் கொண்டு சென்ற உணர்வானது அடுத்தடுத்த வாரங்களில் உடலுக்குள் ஒலித்தது. ஓடிக்கொண்டிருந்த இரத்தம் நிலைகுலைந்தது. செல்களுக்குள் ஒரு தவிப்பு பற்றிக் கொண்டது. அவள் இல்லையா! இனி வரமாட்டாளா! இனி எப்போதும் காணமாட்டோமா! தவியாய்த் தவித்தது மனம்.

"மனைவியோடு எவையும் போம் " என்பதை உடல் உணர்ந்தது. உள்ளத்தால் நொந்து போனார். மெல்ல மெல்ல உள்ளத்து உறுதியை மனைவி கொண்டு சென்று விட்டாள்.

பறந்து செல்லும் சிகரெட் புகை சிவராமின் கருகிப் போன நுரையீரலுக்கு அடையாளமாகியது. இரத்தப் பரிசோதனை நுரை யீரல் புற்றுநோயை அடையாளப்படுத்தியது. உறவுகள் துடித்தது. ஹீமோதெரபி செய்வதற்காக மருத்துவமனை சென்றவர் அன்றுதான் உணர்ந்தார். எமக்குள்ளே இருக்கும் இயந்திரங்களை நாம் தானே கெடுக்கின்றோம். உடலுக்குக் கேடு என்று அறிந்தும் இதை புகைத்துத் தள்ளினேனே என்று மனம் வேதனையடைந்தார்.

அன்று ஒரு ஹீமோதெரபி நாள். உடலுக்குள்ளே உள்ள புற்றுநோய் செல்களை மின்சாரத்தால் சுட்டுப் பொசுக்குகின்றார்கள். இச்சமயம்

நல்ல செல்களும் இறக்கின்றன. இதனால் உடலுக்குள்ளே உயிர் கொண்ட உறுப்புக்கள் வலியால் துடிக்கின்றன. தாங்கமுடியாத வேதனையால் வாய் புலம்புகின்றார் சிவராம்.

"இந்த சனியனை நான் ஏன் குடிச்சன். மூச்சு எடுக்க முடியல்ல. சத்தி எடுத்தெடுத்து தொண்டை புண்ணாகிப் போயிற்று. அரக்கனா இந்த வருத்தம். ஊருக்கெல்லாம் நல்லது செய்தேனே! எத்தனை குடும்பங்கள் என்னால் வாழுகின்றன. கோயிலுக்கெல்லாம் தலைவன் தருமகர்த்தா என்று பெயர் எடுத்தேனே! இந்தப் பொல்லாத வருத்தம் என்னைக் கொல்லாமல் கொல்லுதே!" இந்த சாமி தம்பிரான் எல்லாம் எங்க போயிற்று. விடை தேட முடியாத கேள்விகளுக்கு விடை எங்கே பெறப் போகின்றார். பழைய நினைவுகள் இடையிடையே வந்து அவர் வலியை இன்னும் மிதப்படுத்தும்.

மனைவி சொன்ன பல வார்த்தைகள் மனதுக்குள் புண்ணாய்த் தைத்தன. அன்று கூறினாள். அவள் இதயத்துள் எத்தனை பாரங்களைச் சுமந்திருப்பாள். இன்று என் மனப் பாரங்களை இறக்கி வைக்க முடியவில்லையே. சுற்றும் முற்றும் பார்த்தார். விடுமுறையைக் கழிப்பதற்காக மகனும் மகன் குடும்பமும் சென்று விட்டார்கள்.

அவர்கள் ஏன் எனக்காக அவர்கள் ஆசைகளைத் துறக்க வேண்டும். பெற்றோர் தான் பிள்ளைகளுக்காக தமது விருப்பு வெறுப்புக்களை ஒறுத்து வாழ்கின்றார்கள். இப்போதுதான் எமக்கே இந்த ஞானம் வருகின்றது. காலம் கடந்துவிட்டது. எனக்காகவும் சில விருப்பங்களை நிறைவேற்றி இருக்கலாம். நோயாய் வந்திருக்கும் எமன் தீரா வலியைத் தராது என்னைத் தாமதிக்காது தூக்கிச் சென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும். அப்போதுதான் சிவராம் செய்த புண்ணியம் அவரைத் தலை காத்தது. வருடக்கணக்கில் தலைமறைவாகிப் போன ஒரு திடகாத்திர மனிதனைத் தேடிக் கொண்டிருந்தார். அவன் உடல்

வலிமை உணர்ந்தவர் சிவராம். அவன் இருந்தால், இன்று எனக்கு எத்தனை உதவியாக இருக்கும் என்று மனதால் நினைத்து வாய் விட்டுச் சொன்னார். அடுத்த நாள் அவர் கண்முன்னே வந்து நின்றான் கனகு. என்ன ஆச்சரியம் இவர் நினைத்த எண்ண அலைகள் அவன் மனதுக்குள் புகுந்த ஆச்சரியம் தான் என்ன? அன்று தான் வந்தான். எந்தவித கேள்வியும் இன்றி தந்தையை மெல்லத் தாங்கலாய்த் தூக்கினான். யாருடைய அனுமதியுமின்றி பணிவிடை செய்யத் தொடங்கினான்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிவராமை அருகே இருந்து கவனித்தான். அவர் உடலுக்கும் உயிருக்கும் அவன் வருகை ஒரு ஆறுதலாக இருந்தது. நோயின் பலம் குறைந்தது போன்று உணர்ந்தார். ஒரு நாள் இரவு. அவன் கையை தன் நெஞ்சில் வைத்துத் தடவும் படிப் பணித்தார். சிவராம். அவனும் தடவிக் கொண்டிருந்தான். ஆழ்ந்து உறங்கிப் போன அவர் உடல் குளிர்ந்து போவதை கனகு அவதானித்தான். அவரை உற்றுப் பார்த்தான் எந்தவித சலனமுமின்றி மீளா உறக்கத்தில் உயிரற்ற உடலுடன் உறங்கிக் கொண்டிருந்த சிவராமை அவதானித்தான். நான்கு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி, ஊருக்காகப் பாடுபட்டு, உறவுகளை எல்லாம் அணைத்தெடுத்து வாழ்ந்த அந்த உயிர், அன்று நன்றிக்கடன் பட்டவன் மட்டுமே அருகிருக்க பிரிந்து போனது.

எங்கிருந்தோ வந்தான். கடைசிக்காலத்தில் பணிபுரிந்தான். ஈமக்கிரிகைகள் முடிந்தவுடன் யாரிடமும் கூறாது, மறைந்து போனான். அவன் இன்று எங்கிருக்கின்றான் என்று யாருக்குமே தெரியாது. யார் அவன்? கடவுளா? இல்லை கடவுள் அனுப்பிய தூதுவனா?

கௌசியின் வரிகளை நேசித்தவர் வரிகள்

மீனா கந்தசாமி, கும்பகோணம் கூறியது...

வணக்கம் அம்மா. என் பெயர் மீனா கந்தசாமி. இன்று நான் திருக்குறள் விளக்கம் பற்றிய தெளிவுக்காக இணையத்தில் தேடிக் கொண்டிருந்தபொழுது எதார்த்தமாக உங்கள் வலைப்பூ பக்கத்தை கண்டேன். அனைத்து படைப்புகளும் மிகவும் அருமையாகவும். மீண்டும் மீண்டும் படிக்க தூண்டுபவையாகவும், நல் அறிவுக்கு வித்திடுபவை யாகவும், இளைய சமுதாயத்திற்கு தேவைப்படுபவை பற்றியும் அழகாக எடுத்துரைத்துள்ளீர்கள். தங்களை பாராட்டும் அளவிற்கு வயதோ, அனுபவமோ எனக்கு இல்லை. தங்களை பாராட்டுவதை விட உங்களை இன்று எனக்கு தெரிய வைத்ததற்காக கடவுளுக்கும், இணையத்திற்கும் நூறு முறை நன்றி கூறிவிட்டேன். உங்களின் தொடர்ந்த படைப்புகள் என்னை போன்ற ஆர்வமுள்ள பல இளைய தலைமுறையினருக்கு தேவை. தங்களின் படைப்புகள் என்னையும் தங்களுக்கு செய்தி அனுப்ப வைத்துவிட்டது. நான் நிறைய படைப்பாளிகளின் எழுத்துக் களை ரசித்து படித்திருக்கிறேன். ஆனால் இது தான் முதல் முறை ஒருவருக்கு நான் செய்தி அனுப்புவது. கடவுள் என்றும் உங்களுடன் இருந்து எங்களுக்கு வழிகாட்டட்டும். நன்றி அம்மா.

குறிப்பு: உங்களின் வலைப்பூ cover pic தேடலும், தெரிதலும், தெளிதலும் யாவர்க்கும் சிறப்பே... மிகவும் அருமையான வரிகள்.

Ramani கூறியது...

தங்கள் எழுத்து நடை மிக மிக அருமை. தங்கள் குரலில் பதிவாக்கப்பட்டு கொடுத்திருந்தால் எப்படி இருக்கும் என எண்ணாமல் இருக்க முடியவில்லை. சிக்கலான கேள்வியை எழுப்பிச் சென்றுள்ளீர்கள். பதில் தான் சிக்கமாட்டேன் என்கிறது. மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் நடை கொண்ட அருமையான பதிவு. பதிவிற்கான உட்பொருளும் சொல்லிச் சென்ற விதமும் மிக மிக அற்புதம்.

சக்தி சக்திதாசன் கூறியது...

அன்பினிய கௌரி,

ஆழமான பார்வை கொண்ட அர்த்தமிக்க பதிவு. எழுத்துக்களைத் தூவி சிந்தைச் செடிகளில் பயனுள்ள கருத்து மலர்களை மலர்விக்கும் உங்கள் ஆற்றல் அற்புதமானது. தொடரட்டும் உங்கள் ஆக்கபூர்வமான பணி. வாழ்த்துக்கள்

அன்புடன் - சக்தி

பிளாகர் சீனுவாசன்.கு கூறியது...

அன்பு சகோதரி...

உம் படைப்பை படித்தேன். அடடா ஒரு படைப்பைப் படித்தேன் குடித்தேன் என்று தான் சொல்ல வேண்டும்!

அருமை! வாழ்த்துக்கள்! மழலை உலகம் உம்மால் மேலும் மகத்தானதானது!

பெயர் குறிப்பிடாதோர் கூறியது...

1. தங்கள் எழுத்திலும் தாங்கள் தெரிவு செய்கிற பதிவுக்கான கருவும் வித்தியாசமானதாகவும் சரியானதாகவும் இருக்கிறது. எனவே எல்லா விஷயங்கள் குறித்தும் ஒரு தெளிவான பார்வையோடு இருக்கிறீர்கள் எனத் தங்கள் பதிவினைக் கொண்டே தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது

2. வழக்கம் போல் அருமையான பதிவு. பிற பதிவுகளைப் போல தங்கள் பதிவினைப் போகிற போக்கில் படிக்கிறார் போல படிக்க முடிவதில்லை. தங்கள் எடுத்துக்கொள்கிற விஷயம் மிகவும் கனமானதாகவும் அதற்காக நீங்கள் தருகின்ற விஞ்ஞானபூர்வமான விளக்கங்கள் அவசியம் மனதில் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டியதாக இருப்பதாலும் ஒருமுறைக்கு இருமுறை அவசியம் படிக்கவேண்டியிருப்பதாலும் சிறிது தாமதமாக பின்னூட்டமிட நேர்ந்துவிடுகிறது.

அருமையான பதிவினைத் தந்தமைக்கு மனமார்ந்த நன்றி. தொடர வாழ்த்துக்கள்.

சந்திரகௌரி 1980களின் முற்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவியாகக் கற்றவர். அவர் ஒரு திறமை வாய்ந்த மாணவி என்பதை. ஆரம்பத்திலேயே அவதானித்துக்கொண்டேன். ஜேர்மன் மண்ணில் கலை இலக்கியச் சேவைகளை இயன்றவரை அவர் புரிந்துவருகிறார். புலம்பெயர் எழுத்தாளராக இருந்துகொண்டு. தமது எழுத்தாற்றலையும். பேச்சாற்றலையும். செயலாற்றலையும் சிறப்புற வெளிப்படுத்தி வருகின்றார். சந்திரகௌரியின் இக்கதைத் தொகுதி. அவர் வாசகர்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பிய பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகிறது. ஒருவகையில் புலம்பெயர்ந்தோரின் ஐரோப்பிய வாழ்வியல் தொடர்பான அவரது உள்ளக்குமுறல்களின் வெளிப்பாடாக இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கதைகள் அமைந்துள்ளன என்றும் கூறலாம். இந்நூலைப் படிக்கப்போகும் வாசகரைப் பொறுத்தவரை, அவர்களுக்குப் புலம் பெயர்ந்தோரின் ஐரோப்பிய வாழ்வியல் பற்றிய ஒரு வெட்டுமுகத்தோற்றத்தையும். தரிசனத்தையும் இக்கதைகள் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

- பேராசிரியர் துரை. மனோகரன். எம்.ஏ.பிஎச்.டி



இத்தனை கதைகளினூடும் மிகுந்த சமுதாய அக்கறையும் தார்மீகக் கோபங்களும் கொண்ட தலைப்பாகை கட்டிய கண்ணாடி அணிந்த கணீரென்ற குரலுக்குச் சொந்தக்காரியான ஒரு பாரதியை நான் கண்டேன். அவரின் எழுத்துகளில் ஒரு ஆளுமை தெரிகிறது. சில கதைகளில் சிறுகதைக்கும் பத்தியெழுத்துக்கும் இடையில் ஒரு நூல்வேலி போட்டு கவனமாக நடந்து சென்றுள்ளார்.

இயற்கை வர்ணனைகளும் அதனை வாழ்வியலுடன் இணைத்துச் செல்லும் பாங்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவர் இயற்கையுடன் இணைந்து திரிந்தமைக்குச் சான்று. அதுவே புலம் பெயர்ந்த நாட்டின் இலைகளின் துளிர்ப்புகளையும் உதிர்வுகளையும் தனது கதைகளுக்குள் வசனக் கவிதை போல நடைபோட கைகொடுத்துள்ளது என உறுதியாக நம்புகின்றேன்.

- எழுத்தாளர் வி.ஜீவகுமாரன்

ISBN 978-955-7377-49-0

PRINT @ ANDRA PRINTERS +94 21 222 8929